
# வரலாறு

## தரம் 10



கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# தமிழ் அரிச்சுவடி

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |
| ஆய்த எழுத்து ஃ | | | | | | | | | | | | |

# வரலாறு

# தரம் 10

EPD

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

முதலாம் பதிப்பு - 2011
இரண்டாம் பதிப்பு - 2012
மூன்றாம் பதிப்பு - 2013

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே

உங்களுக்குக் கிடைத்திருக்கும் இப்பாடநூலுக்காக
அரசினால் ரூபா 262.00 செலவிடப்பட்டுள்ளது.

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக
அத்துருகிரிய, இல 164/4 பக்மீகஸ்வெவ வீதி, போரவில் அமைந்துள்ள
ரத்ன அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ வள வயல் நதிமலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம் தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

# அதிமேதகு சனாதிபதி அவர்களின் செய்தி

அன்பான பிள்ளைகளே!

நாம் அன்று சுதந்திரம் பெறும்போது எம்மைவிடவும் பின்னடைந்திருந்த பல நாடுகள் இன்று எம்மைப் பின்தள்ளி நீண்ட தூரம் முன்னேறிச் சென்றுவிட்டன. எனினும், இன்று நாம் அந்த நாடுகளைப் பின்பற்றவோ அந்த அபிவிருத்திகளின் சாயலைக் கொண்டு செயற்படவோ தயாராக வேண்டியதில்லை. அதே போன்று கைவிட்டுப்போன மரபுரிமைகளைப் பற்றிப் பேசிப் பேசித் தவிக்கவும் வேண்டியதில்லை. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அனைத்தையும் பின்தள்ளிச் சென்று உலகுக்கு அவர்கள் அடையாத அபிவிருத்தியொன்று தொடர்பான புதிய வழிகளைக் காட்டுவதேயாகும்.

அன்பான பிள்ளைகளே! நாம் இப்போது உங்களது எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதில் ஈடுபட்டுள்ளோம்.

மஹிந்த ராஜபக்ஷ
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி

(2010.08.15 ஆம் திகதியன்று அம்பாந்தோட்டை, மாகம்புர சர்வதேச துறைமுகத்திற்கு நீர்நிரப்பும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வின்போது சனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி).

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

அன்பான பிள்ளைகளே,

எங்கள் தாய்நாட்டின் பெறுமதிமிக்க வளம் நீங்களே. கல்வியினூடாகவே உங்கள் பெறுமதி மெருகூட்டப்படுகிறது. இப்பணியை நிறைவேற்றுவதில் தொடர்ந்து அர்ப்பணிப்புடனுள்ள எமது நோக்கம், மிகச் சிறந்தவற்றை உங்களுக்கு வழங்குவதே.

அரசுக்கு மக்களால் செலுத்தப்படும் வரியைத் திரட்டிப் பெறப்படும் தேசியச் செல்வத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட இந்நூலை உங்களுக்கு நன்கொடையாக அளிப்பது, அறிவுத் திறன்களும் நற்பண்புகளும் நிறைந்த ஒருவராக உங்களை ஆக்கும் எதிர்பார்ப்பிலேயேயாகும். இதனூடாக ஒளிபெறும் நீங்கள் தேசியச் செல்வத்திற்கு வளமூட்டுவீர்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இதயமற்ற, வன்மையான பாறையிலிருந்து கருணையையும் அன்பையும் வெளிப்படுத்துகின்ற சிலைகளை வடித்தவர்களும் கண்ணாடிச் சுவரின் மீது இலக்கிய நயமுள்ள வாசகங்களை எழுதியவர்களுமாகிய பெருமைமிக்க மூதாதையரின் வழிவந்த உங்களில் ஆக்கச் சிந்தனையை ஏற்படுத்த இந்நூல் கைகொடுக்கும்.

இந்நூலை உங்களுக்கு வழங்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய சகலருக்கும் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பந்துல குணவர்தன
கல்வி அமைச்சர்

## முன்னுரை

எப்பொழுதும் மாற்றமுறும் சமூகத்தில் வாழும் நீங்கள் பன்மைச் சமூகப் பிரவாகத்திற்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கத் தயாராவது மிக இன்றியமையாததாகும். இதற்கு அவசியமான அறிவையும் ஆற்றல்களையும் விருத்தி செய்யும் செயற்பாட்டில் நூல்களின் பங்களிப்பு அளப்பரியதாகும்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் வழங்கப்படுகின்ற இந்நூலானது உங்கள் முன்னேற்றத்திற்கு மட்டுமன்றி நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிக்கும் என்பதில் சந்தேகமில்லை. கல்வி என்னும் கடலைக் கடப்பதற்கு இதனை ஓர் ஓடமாகப் பயன்படுத்தி வெற்றி இலக்கை அடையப் போகும் நீங்கள், சிந்தனையாற்றலும் நடுநிலை ஆளுமையுமுடைய பூரண பிரசையாக வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

இந்த அரிய பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட எழுத்தாளர் குழு உறுப்பினர்களுக்கும் பதிப்பாசிரியர்களுக்கும் சரவை பார்த்து ஒத்துழைப்பு நல்கியோருக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

**திஸ்ஸ ஹேவாவிதான**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
"இசுருபாய"
பத்தரமுல்ல
*2013.05.23*

**கண்காணிப்பும் மேற்பார்வையும் (2013)**

திரு.திஸ்ஸ ஹேவாவிதான - கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**வழிகாட்டல்**

திருமதி.கே.வீ. நந்தனி ஸ்ரீயாலதா - ஆணையாளர் (அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**இணைப்பாக்கம்**

திருமதி. அ. குலரத்தினம் - உதவி ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**எழுத்தாளர் குழு**

திருமதி ஈ.எம். சீலவத்தி மெனிக்கே - கலைமானி பட்டப்பின் டிப்ளோமா
ஆசிரிய ஆலோசகர், குளியாப்பிட்டி கல்வி வலயம்

திரு.சமன்சஞ்சீவி பத்திரண - கலைமணி(வரலாறு) (கௌரவம்), சட்டத்தரணி
பட்டப்பின் கல்வி டிப்ளோமா, உபவிரிவுரியாளர்
வரலாற்றுத்துறை, களனி பல்கலைக்கழகம்

திரு.டி.எஸ். ஜயசிங்க - B.Ed. பட்டபின் கல்வி டிப்ளோமா
முகாமையாளர், ஆசிரியர் கற்கை மத்திய நிலையம்
ஹொரணை

**ஆலோசனைக் குழு**

கலாநிதி ஏ.எச்.எம்.எச். அபேரத்ன - சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
களினி பல்கலைக்கழகம்,

திருமதி ஜே.எம்.சுதர்மாவத்தி - கலைமானி(கௌரவம்)
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
களினி பல்கலைக்கழகம்,

**மொழிபெயர்ப்பாளர் குழு**

அருட்சகோதரி மேரி டொனேட்டா - புனித அந்தோனியார் தேசிய பாடசாலை, வத்தளை

திரு. யு. எல். எஸ். மரிக்கார் - ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி,
உடத்தலவின்ன, கண்டி

திரு. யு.எல்.எம். பசீர் - ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர், வலயக்
கல்விப் பணிமனை, வத்தேகம

திருமதி. எஸ்.பாலசுப்ரமணியம் - ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி பணிமனை,
பண்டாரவளை

## பொருளடக்கம்


| அத்தியாயம் | பக்கம் |
|---|---|
| 1. வரலாற்றுக்கு ஓர் அறிமுகம் | 1 |
| 2. இந்தியாவின் வரலாற்று ரீதியான வளர்ச்சி | 17 |
| 3. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து பொலன்னறுவைக்கால இறுதிவரை இலங்கையின் வரலாறு | 32 |
| 4. நீர்வள நாகரீகத்தில் எழுச்சியும் வீழ்ச்சியும் | 54 |
| 5. 13 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 15 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இலங்கை | 85 |
| 6. மத்தியகால ஆசியா | 99 |
| 7. மத்தியகால ஐரோப்பாவின் அரசியல், பொருளாதார, கலாசார வளர்ச்சி | 111 |
| 8. ஐரோப்பியரின் ஆதிக்கப் பரம்பல் | 133 |
| 9. இலங்கையரும் மேற்கத்தியரும் | 140 |
| 10. கைத்தொழிற் புரட்சி | 155 |
| 11. ஐரோப்பாவின் புதிய அரசியல் சிந்தனையில் ஏற்பட்ட வளர்ச்சி | 170 |



# 1 வரலாற்றுக்கு ஓர் அறிமுகம்

**இந்த அலகின்மூலம் வரலாறு என்றால் என்னவென்பதைப் புரிந்து கொள்வதுடன் வரலாற்றைக் கற்பதனால் அடையக் கூடிய பயன்கள், வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் மூலாதாரங்கள் என்பன பற்றியும் தெளிவுபெறுவோம்.**

வரலாறு என்பது :

- ★ கடந்த காலத்திற்கும் நிகழ் காலத்திற்கும் இடையே நடைபெறும் முடிவற்ற பேச்சு வார்த்தையாகும்.
- ★ மனித சமுதாய வாழ்க்கையின் பதிவுக் குறிப்புகளே வரலாறு.
- ★ மலர்ந்து விரிந்துவரும் மனித சுதந்திரத்தின் கதையாகும்.

மனிதனால் செய்யப்பட்ட எல்லா செயற்பாடுகளும் வரலாற்றுப் பாடப்பரப்பினுள் அடங்கும். அரசியல், பொருளாதாரம், சட்டம் எனும் துறைகள் மாத்திரமன்றி விஞ்ஞான வளர்ச்சியும் கலை, இலக்கிய அம்சங்களும் அதனுள் அடங்கும்.




உரு 1.1 இறந்தகால, நிகழ்கால உரையாடல்




தேசப்படம் 1.1 இலங்கையில் குடியேற்றப்பரம்பல்

இலங்கையின் ஆரம்ப காலக் குடியிருப்புக்கள் நதிப்பள்ளத்தாக்குகளை அடிப்படையாகக் கொண்டே உருவாகின. ஆரியர் தமது சீவனோபாயத் தொழிலாக விவசாயத்தை மேற்கொண்டமையே அதற்குக் காரணமாகும். எனவே அவர்கள் விவசாயத்திற்குத் தேவையான வளமான மண், நீர் வளம், சமவெளியான நிலம் என்பவற்றைக் குடியிருப்புக்களை அமைக்கும் போது கவனத்தில் கொண்டனர்.



இலவச விநியோகத்திற்காக

ஒவ்வொரு பாடமும் பற்றிய விசேட முறைகள் மற்றும் விளக்கமான அறிவு என்பவற்றுக்குப் பதிலாக சாதாரண அறிமுகம், பிரவேசம் என்பவற்றை வரலாறுப் பாடத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். 'வரலாறு என்பது பல அறிவுத் துறைகள் கூடி வாழும் இல்லம்' அல்லது வரலாறு என்பது 'ஒரு தனித்த பொருளல்ல; மாறாக எல்லாவித பொருள்கள் பற்றிய இயல்புகளும் துறைகளும் வாழுகின்ற ஒரு மாளிகை' என்று ஜீ. எம். திரவிலியன் எனும் வரலாற்றாசிரியர் கூறியுள்ளார்.

★ வரலாறு மற்றும் புவியியல் பாடங்களுக்கிடையிலான தொடர்பு:- இலங்கையில் ஆரியர் குடியிருப்புக்கள் தோன்றியமை தொடர்பிலான முன்னைய விடயங்களை ஆராயும் போது அது பற்றிய புவியியல் பின்னணியும் ஆராயப்படுகின்றது. மற்றுமோர் உதாரணமாக கண்டி இராச்சியத்தின் சுயாதீனமான நிலைப்பாட்டிற்குக் காரணமே அதன் புவியியல் அமைப்பாகும் என்பதைச் சுட்டிக் காட்டலாம்.

★ வரலாறு மற்றும் அரசியல் விஞ்ஞானம் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகள்:- வரலாறு முற்கால அரசியலாகும். நிகழ்கால அரசியலின் எதிர்கால வரலாறாகும். இது இரு பாடங்களுக்கிடையிலான நெருங்கிய தொடர்பாகும்.

★ அதே போன்று வரலாற்றுப் பாடத்தினூடாக ஒவ்வொரு காலத்திற்குமுரிய பொருளாதார, சமூக, கலாசார அம்சங்கள் பற்றியும் கவனஞ் செலுத்தப்படுகின்றது. அந்த வகையில் வரலாறு என்பது அனைத்து பாடங்களும் உள்ளடங்கிய தொகுதி போன்றதாகும் எனும் அறிமுகம் மிகவும் பொருத்தமானதாகும்.

**செயற்பாடு :**

★ *வரலாறு என்பதற்கான வரைவிலக்கணங்களைத் தொகுத்து எழுதுக.*
★ *வரலாறு என்றால் என்ன? என்பதற்கான பொதுவான வரைவிலக்கணம் ஒன்றை எழுதுங்கள்.*

## வரலாற்றைக் கற்பதன் பயன்கள்

வரலாற்றுப் பாடத்தின் மூலம் தாம் வாழும் சமூகம், நாடு, உலகம் என்பன பற்றிக் கற்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அந்த அறிவினைப் பெற்றுக் கொள்ளாமல் இன்றைய சமூகத்தில் நல்லதொரு பிரசையாக வாழ்வது கடினமான செயலாகும். எனவே தமது கலாசாரம், நாடு, உலகம் பற்றிய சரியான தெளிவுடன் வாழ்வதற்கான ஆற்றல் வரலாற்றைக் கற்பதன் மூலம் கிடைக்கின்றது.

"தான் வாழும் சமூகம் பற்றி அறியாத, உலகில் தனது சமூகத்திற்கும் தனக்கும் உரிய இடம் பற்றிய விளக்கம் இல்லாத மனிதன் வாக்குரிமை இருந்த போதிலும் சுதந்திர பிரசையாகமாட்டான்." - இலண்டன் கல்விக்கான மத்திய ஆலோசனை சபையின் 'எமது எதிர்காலத்தின் சரிபாதி' எனும் அறிக்கையிலிருந்து பெறப்பட்டது.

"நிகழ்காலமும் எதிர்காலமும் நிச்சயமாக இறந்த காலத்திலிருந்து கட்டியெழுப்பப் படுவதுடன் அதன் அடையாளங்களையும் ஆங்காங்கே காணமுடியும். அதனை மறந்து செயற்படுவது அத்திவாரமின்றி கட்டடமொன்றைக் கட்டுவதற்கு ஒப்பானதாகும்" - ஜவஹர்லால் நேரு

"நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வதற்கான திறவுகோலாக இறந்த காலத்தைப் தெரிந்து கொள்ள வேண்டும்." - ஈ.எச்.கார்

மேற்கூறப்பட்ட கூற்றுக்களை நோக்கும்போது எந்தவொரு விடயத்தினதும் நிகழ்கால நிலை, அண்மைய அல்லது இறந்த காலத்தின் விளைவுகளாகும். இன்றைய சமூகவமைப்பானது முறைப்படியான உலக நடைமுறையின் மாற்றங்கள் பலவற்றினதும் பிரதிபலனாகும். நிகழ்காலத்தைப் போன்றே எதிர்காலத்தையும் கட்டியெழுப்புவதன் அடிப்படையாக இறந்த காலத்தின் நிகழ்வுகளும் கூற்றுக்களும் உள்ளன. அதன்படி இறந்த காலத்தை சிறப்பாக அறிந்து கொள்வதன் மூலம் நிகழ்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படையை அமைத்துக் கொள்ளலாம். ஆயினும் வரலாற்றியலாளருக்கு சோதிடர்களைப் போல எதிர்காலத்தைப் பற்றிக் கூறமுடியாது.


உதாரணம்:-

| | | |
|---|---|---|
| எதிர்வு கூறல் | :- | நீங்கள் 40 வயதில் இலங்கையின் ஜனாதிபதியாவீர்கள் |
| வரலாற்றியலாளர் | :- | நீங்கள் சிரமத்துடனும் உற்சாகத்துடனும் தடைகளை வெற்றி கொண்டு செயற்படுவீர்களாயின் நாட்டின் தலைவராகலாம். அவ்வாறு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு தலைமைத்துவத்தை பெற்றுக் கொண்டோர் பற்றிய தகவல்கள் பல உள்ளன.<br>உதாரணமாக முதலாம் விஜயபாகு, ஆபிரகாம் லிங்கன், நெல்சன் மண்டேலா |



இலவச விநியோகத்திற்காக

1. தாம் வாழும் சமூகம் மற்றும் உலகம் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெறுதல்
2. இறந்த காலத்தின் ஊடாக நிகழ்காலத்தை விளங்கி எதிர்காலத்தைக் கட்டியெழுப் புதல்.
3. நாட்டின் எதிர்காலத் தலைமையை ஏற்பதற்குத் தயாராகும் மாணவர்களுக்கு அரசியல் நிகழ்வுகள் மற்றும் நடப்புகள் தொடர்பான புரிந்துணர்வை வழங்குதல்.



உரு 1.2 வரலாறு என்னும் மரத்தின் பயன்கள்.

4. தேசியதனித்துவத்தை அறிந்து கொள்ளல்
5. ஏனைய கலாசாரங்களை மதித்தல்
6. பல்வேறு கருத்துக்களைச் சகித்தல்
7. தேசிய ஒற்றுமையைக் கட்டி யெழுப்புதல்
8. காலம்மற்றும்சந்தர்ப்பம்பற்றிய கருத்து வளர்ச்சியடைதல்
9. தர்க்க ரீதியான சிந்தனைகள் வளர்ச்சி யடைதல்

வரலாற்றுப் பாடம் புராதன கால மன்னர்கள், தலைவர்கள் அவர்களின் நிர்வாக முறைகள் என்பன பற்றிக் கவனஞ் செலுத்துகிறது. ஏனைய எல்லாப் பாடங்களையும் விட இன்றைய உலகின் அரசியல் நிகழ்வுகள் மற்றும் அரசியல் அதிகாரம் பற்றிக் கற்பதற்கு வரலாற்றுப் பாடம் பெரிதும் உதவுகின்றது. அவ்வாறாயின் நாளைய நிர்வாகத்தை கொண்டு நடாத்தப் போகின்ற நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்கவிருக்கின்ற இன்றைய மாணவர்கள் தம்மை தயார்படுத்துவதற்கு வரலாறு வழிகாட்டியாக அமைகின்றது.

உதாரணம்:-
மிகச் சிறந்த அரசியல்வாதியாகப் போற்றப்படும் இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு, தனது நாட்டின் சுயாதீனம், அதிகாரம், புகழ் என்பனவற்றைப் பாதுகாத்துக் கொண்ட பிரித்தானிய பிரதமரான வின்சன்ட் சேர்சில் என்போர் திறமையான வரலாற்றியலாளர்களாவர்.

வரலாற்றைக் கற்பதன் மூலம் தாய் நாட்டின் தனித்துவத்தை அறிந்து கொள்ள முடியும். அப்போது தேசியத்துவம் வளர்ச்சியடையும். அது நாட்டின் எதிர்கால வளர்ச்சிப் போக்கிற்கும் உதவும். நாட்டின் சரியான வரலாற்றைக் கற்பதனால் இன ஐக்கியம் வளர்ச்சியடையும். வேறுநாடுகளின் வரலாற்றையும் கலாசாரத்தையும் கற்பதனூடாக அவற்றின் பெறுமதியை உணர்ந்து செயற்படுவதற்கான திறமை உண்டாகும்.

மனித வரலாற்றின் நோக்கங்கள், அனுபவங்கள், பிரச்சினைகள், வெற்றிகள் பற்றிய தகவல்களை வரலாற்றின் மூலம் அறியலாம். எனவே மனித செயற்பாடுகள் பற்றி அறிந்துகொள்வதன் மூலம் தன்னைப்பற்றித் தெளிவாகப் புரிந்துக்கொள்வதற்கும் வரலாறு வழிவகுக்கின்றது. அதேபோன்று வேறுபட்ட கருத்துக்களுக்கு இடமளித்தல், அதனை சகித்தல், ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல் அந்நியோன்யமான கௌவரவத்தை வளர்த்தல் முதலிய நற்பண்புகளையும் வரலாற்றுப் பாடத்தின் மூலம் வளர்த்துக் கொள்ள முடியும்.

எமது நாட்டு சனத்தொகையில் உள்ளடங்கும் பல்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களும் நாட்டின் நலனுக்காக இன, மத பேதமின்றி செயற்பட்ட முறைகள் இன்றைய சந்ததியினருக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். உதாரணமாக, இலங்கையின் சுதந்திர இயக்கம் பற்றிய தலைப்பின் கீழ் இன ஐக்கியம் கட்டி எழுப்பப்பட்டமையை எடுத்துக் காட்டலாம்.

காலம், இடம் என்பனவின்றி வரலாறு இல்லை. புராதன வரலாற்றை எழுதும் போது இவ்விரு அம்சங்களைப் பற்றி அக்கறை செலுத்தப்பட்டமையை மகாவம்சம் முதலிய வரலாற்றுக் கதைகளை ஆய்வு செய்வதன் மூலம் அறிய முடிகிறது.

உதாரணம்
அசோக மன்னனின் முடிசூட்டு விழாவானது புத்தபெருமான் பரிநிர்வாணமடைந்து 218 வருடங்களின் பின்னர் இடம்பெற்றதாக தீபவம்சம், மாகாவம்சம் எனும் நூல்களில் கூறப்பட்டுள்ளது. இது இலங்கை, இந்திய வரலாறு பற்றிய கால நிர்ணயத்துக்குப் பெரிதும் துணைபுரிகின்றது.

★ வரலாற்றில் இவ்வாறான அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஆண்டுகளைத் தொடர்புபடுத்தி பௌத்த வருடம், கிறிஸ்தவ வருடம், நூற்றாண்டு முதலிய ஆண்டு முறைகளைக் குறிப்பிடும் வழக்கம் இருந்து வருகிறது. இயேசுநாதரின் பிறப்பை அடிப்படையாக கொண்டு கிறிஸ்தவ வருடம் கணிக்கப்பட்டுள்ளது. இன்று பரவலாகப் பயன்படுத்தப்படும் இவ்வாண்டு முறைகளுக்கேற்ப யாதாயினும் ஒரு நிகழ்வு இடம்பெற்றமை தொடர்பில் கி.மு, கி.பி. என்று குறிப்பிடுவது வழக்கமாயுள்ளது.

★ இடம் என்பது பௌதிகச் சூழலாகும். ஒரு நாட்டின் வரலாற்றில் பௌதிகச் சூழல் மற்றும் புவியியல் அம்சங்கள் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. அதற்கேற்ப நாட்டின் அமைவிடம், காலநிலை, ஆறுகள், சமுத்திரங்கள், மலைகள் ஆகியன பற்றி வரலாற்றுப் பாடத்தில் தேசப்படங்கள் மூலம் கற்றலானது இடம் பற்றிய விளக்கத்தைப் பெறத் துணையாக அமைகின்றது.

★ எந்தவொரு இறந்த கால நிகழ்வினதும் சந்தர்ப்ப சூழ்நிலையின் உண்மைத் தன்மையை தேடியறிவதன் மூலம் நிரூபிக்க முடிந்தால் மாத்திரமே அதனை வரலாற்று நிகழ்வாக ஏற்றுக்கொள்ள முடியும்.

எனவே எந்தவொரு விடயத்தையும் கேள்விப்பட்டவுடன் ஏற்றுக்கொள்ளாது, அது பற்றித் தேடியறிந்து உண்மையை புரிந்துகொள்ளுமாற்றல் வரலாற்றைக் கற்ற ஒருவரிடம் காணப்படும். இப்பண்பானது விளம்பரங்களால் ஏமாறாது வாழ்க்கையை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்குப் பெருந்துணை புரியும். அதுமாத்திரமல்ல, தர்க்க ரீதியாகச் சிந்திக்குமாற்றலின் மூலம் தமக்குத் தேவையானதை மாத்திரம் தேர்ந்தெடுப்பதுடன் தேவையற்றதைப் புறந்தள்ளும் ஆற்றலும் அவரிடம் வளர்ச்சியுறும்.


இலவச விநியோகத்திற்காக

அதாவது உண்மைக்கும் பொய்ப் பிரசாரத்திற்கும் இடையிலான வேறுபாட்டைப் புரிந்துகொள்ள முடியும்.

புரதான இலங்கையின் வரலாற்றை அறிந்துகொள்வதற்கு இலக்கியம் மற்றும் தொல்பொருள் மூலாதாரங்கள் பலவும் காணப்படுகின்றன. 2500 வருடங்களுக்கும் மேலான எழுத்து மூல தொடர் வரலாறு இருப்பது இலங்கையரின் அதிர்ஷ்டமாகும்.

**செயற்பாடு :**

★ *வரலாற்றைக் கற்பதன் மூலம் நாம் அடையக்கூடிய நன்மைகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.*

## வரலாற்று மூலாதாரங்கள்

குறிப்பிட்டதொரு காலத்தின் அல்லது தேசத்தின் வரலாற்றை மிகச்சரியாக அறிந்து கொள்வதற்காக அப்போது எஞ்சியுள்ள அதற்குரிய மூலாதாரங்களை ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும். இம்மூலாதாரங்களை இலக்கிய மூலாதாரங்கள் என்றும் தொல்பொருள் மூலாதாரங்கள் என்றும் இரு பிரிவுகளுள் அடக்கலாம்.


## இலக்கிய மூலாதாரங்கள்

இதனை உள்நாட்டு இலக்கிய மூலாதாரம், வெளிநாட்டு இலக்கிய மூலாதாரம் என இரு வகைப்படுத்தலாம். இலங்கை வரலாற்றை அறிய உதவும் உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்கள் சில வருமாறு:- தீபவம்சம், மகாவம்சம், மகாவம்சத்தின் இரண்டாம் பாகம், தாதுவம்சம், போதிவம்சம்.

### a) சுதேச இலக்கிய மூலாதாரம்

இலங்கை வரலாற்றில் முதலாவது எழுதப்பட்ட இலக்கிய மூலாதாரமாக தீபவம்சத்தைக் கூறலாம். இது கி.பி ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்னர் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. இந்நூலில் மகாசேன மன்னன் வரையிலான தகவல்கள் அடங்கியுள்ளன.

கி.பி 6ஆம் நூற்றாண்டளவில் மகாவிகாரை பிக்குவான மகாநாம தேரர் அவர்களால் எழுதப்பட்ட மகாவம்சம் என்பது தீபவம்சம் எனும் நூலை விடச் சிறந்ததாக அமைந்தது. தீபவம்சத்தில் காணப்பட்ட பல குறைபாடுகளை நீக்கி இலங்கையின் 2500 வருடகாலத்துக்கு தொடர்ச்சியான எழுத்து மூலமான வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்கு மகாவம்சம் பெரிதும் துணைபுரிகிறது. அதுவரை காலமும் நிலவி வந்த அற நூல்கள் மற்றும் ஜாதகக் கதை நூல்கள் என்பவற்றைப் பயன்படுத்தியே அது எழுதப்பட்டது. மகாவம்சத்தில் கூறப்படும் அதிகமான விடயங்கள் கல்வெட்டுக்களிலும் காணப்படுவதனால் வரலாற்று மூலாதாரங்களில் மகாவம்சம் சிறப்பிடம் பெறுவதற்குக் காரணமாய் அமைகிறது. இந்நூலில் லௌகீக விடயங்கள் அடங்கியுள்ள போதிலும் நூலாசிரியர் சமய வரலாற்றைக் கூறுவதிலேயே தனது கவனத்தைச் செலுத்தியுள்ளமை


இலங்கை வரலாற்றைக் கற்பதற்கான வரலாற்று மூலாதாரங்கள்
இலக்கிய மூலாதாரம்
தொல்பொருள் மூலாதாரம்
உள்நாட்டு இலக்கியம்
வெளிநாட்டு இலக்கியம்
உரைநடை இலக்கியம்
செய்யுள் இலக்கியம்
பரம்பரைக் கதைகள்
அட்டுவா
நிகண்டு
உபதேசம்
வைத்தியம்
சட்டம்
கலை
கல்வி
அறிக்கை
கதை
மகாகாவியம்
தூது காவியம்
சீகிரிகீதம்
புகழ்க்கதை
உபதேசம்
போர்க்கவிதை
தர்மகவிதை
நாட்டார் பாடல்
நூல்கள்
தேச சஞ்சார அறிக்கைகள்
தேசப்படங்கள்
நாட்குறிப்புக்கள்
நாணயம்
தங்கம்
வெள்ளி
செப்பு
சிதைவுகள்
கல்வெட்டு
குகைக்கல்வெட்டு
குன்றுக்கல்வெட்டு
தூண்கல்வெட்டு
சுவர்கல்வெட்டு
சமய சார்பு
சமய சார்பற்றவை
கட்டடங்கள்
கட்டடங்களின் பகுதிகள்
விகாரை
போதிமனை
ஆராமை
சிலைமனை
போயாமனை
பிக்குமார் வாசஸ்தலம்
தானசாலை
அரசமாளிகை
நந்தவனம்
பொய்கை
அரச சபை
வைத்தியசாலை
தெரு
பாலம்
குளம்
கால்வாய்
அம்பலம்
வாஹல்கட சந்திரவட்டக்கல் காவற்கல் கொறவக்கல் கலைநிர்மாணங்கள்
ஓவியக்கலை
சிற்பக்கலை (சிலை)
செதுக்கல் கலை (கருங்கல், மரம், உலோகம், சிலை)

தெரியவருகின்றது. எனவே பழைய அரசியல் நிர்வாகம் மற்றும் பொருளாதார அமைப்பு என்பன பற்றியெல்லாம் இந்நூலில் விரிவாகக் கூறப்படவில்லை. மகாவம்சத்தின் முதலாம் பாகம் மகாசேன மன்னனின் ஆட்சிக்காலத்துடன் முடிவடைகின்றது. அவ்வாறு அது முடிவடைந்த இடத்திலிருந்து மகாவம்சம் பாகம், பாகமாக தொடர்ந்தும் எழுதப்பட்டு வந்துள்ளது. இவ்வாறு மகாவம்சத்தின் இரண்டாம் பாகம் எழுதப்பட்டுள்ளது. சிலர் அதனை ''சூளவம்சம்'' என்று குறிப்பிட்டாலும் நூலாசிரியர் அப்பெயரால் அந்நூலைக் குறிப்பிடவில்லை. எனவே அது மகாவம்சத்தின் இரண்டாம் பாகமாகும். ஆயினும் இந்நூலானது மகாவம்சம் எழுதி முடிக்கப்பட்டு பல நூற்றாண்டுகளின் பின்னால் எழுதப்பட்டமையால் அதனை மகாவம்சம் என்று ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. மகாவம்சத்தின் பின்னர் தொடர்ச்சியான எழுத்து மூல வரலாற்றை அறிந்து கொள்வதற்கு இந்நூல் பாரிய பயனளிப்பதாகவுள்ளது.

இந்தியாவில் நிலவிய பௌத்த சமயம், இலங்கைக்கு பௌத்த சமயம் கொண்டுவரப்பட்டமை என்பன தொடர்பான விபரங்கள் அடங்கிய 'சமந்தபாசதிகாவ' எனும் நூலும் இலங்கை வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் ஒரு நூலாகும். அது 'வினயபிடகம்' எனும் பாளி மொழி நூலுக்கான விளக்க நூலாகும். மேலும் அனுராதபுரத்திலுள்ள புனித வெள்ளரசுமரத்தின் வரலாற்றைக் கூறும் 'மகாபோதிவம்சம்' புனித தந்ததாதுவின் வரலாற்றைக் கூறும் பாளி மொழியிலான 'தாது வம்சம்' என்பவற்றுடன் தலதாசிறித, தூபவம்சம், தாதுவம்சம், பூஜாவலிய, நிகாயசங்கிரஹய, ராஜரத்னாகரய, ராஜாவலிய எனும் சிங்கள மொழியிலான நூல்களும் முக்கியமான இலக்கிய வரலாற்று மூலாதாரங்களாகும்.

மேற்படி நூல்கள் தவிர இலங்கையின் தலைநகரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒவ்வொரு காலத்தினதும் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார விபரங்கள் அடங்கிய இலக்கிய நூல்கள் பலவும் எழுதப்பட்டுள்ளன. அவ்வாறான மூலாதாரங்கள் சிலவற்றை பின்வரும் அட்டவணையில் பார்ப்போம்.

| காலம் / யுகம் | எழுதப்பட்ட நூல்கள் |
|---|---|
| அனுராதபுரக் காலம் | தம்பியா அட்டுவா கற்றபதய, ஹெரணசிக, சிகவலந்தவினிச, சியபஸ்லகர |
| பொலன்னறுவை காலம் | முவதெவ்தாவத, சசதாவத, தர்ம பிரதீபிகாவ, ரசவாஹினிய |
| தம்பதெனியா காலம் | சத்தர்மரத்னாவலிய, பூஜாவலிய |
| குருணாகல் காலம் | ஜாதகக் கதை நூல், சிங்கள போதிவம்சம், நிகாயசங்கிரஹய |
| கோட்டைக் காலம் | தூது இலக்கியங்கள், குத்தில காவியம் |

மேற்படி நூல்கள் குறிப்பிட்டதொரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டமையால் அதில் அடங்கியுள்ள விடயங்களை அவதானமாகக் கையாள வேண்டும். பெரும்பாலும் பிரதான இலக்கிய மூலாதாரங்களில் கூறப்பட்டுள்ளவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இந்நூல்களை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## b) வெளிநாட்டு இலக்கிய மூலாதாரம்

வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்களின் பெறுமதியானது அதிலடங்கியுள்ள வர்த்தகம் மற்றும் சர்வதேசத் தொடர்புகள் சம்பந்தமான தரவுகளின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. இலங்கை ஆதிகாலந்தொட்டே இந்தியா, சீனா, பர்மா, மலாயா, பாரசீகம், அரேபியா, கிரேக்கம், உரோம் எனும் மேலைத்தேச, கீழைத்தேச நாடுகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தது. எனவே இலங்கையைப் பற்றி வெளிநாட்டவர்கள் எழுதிவைத்துள்ள பல்வேறு குறிப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இலங்கை பற்றிய முக்கியமான விபரங்களை உள்ளடக்கிய நூலாக அரிஸ்டோட்டில் எழுதிய 'டிமுண்டோ' எனும் நூலைக் குறிப்பிடலாம். இந்நூலில் இலங்கைக்கும் வடமேல் இந்தியாவுக்கும் இடையில் நடைபெற்ற வர்த்தகத்தொடர்புகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. மற்றுமொரு கிரேக்க நாட்டவரான மெகஸ்தனீஸ் எழுதிய 'இண்டிகா' எனும் நூலிலும் இலங்கை பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளன. (மெகஸ்தனீஸ் என்பவர் சந்திரகுப்த மன்னனின் அரசவையிலிருந்த கிரேக்க நாட்டுத் தூதுவராவார்.) உரோம் நாட்டவரான பிளினியின் 'நெச்சுராலிஸ் ஹிஸ்டோரியா' எனும் நூலில் இலங்கை பற்றிய பொருளாதார விடயங்கள் அடங்கியுள்ளன. பெரிப்லஸ் மாரிஸ் என்பவரால் முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ''பெரிப்லஸ் ஒப் எரித்திரியன் சீ '' எனும் நூலில் இலங்கையில் முத்து, மாணிக்கம், பருத்தித்துணி எனும் வர்த்தகப் பொருட்கள் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை பற்றி சரியான குறிப்புகளைத் தந்த எழுத்தாளராக கி.பி இரண்டாம் நூற்றாண்டில் அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த தொலமி என்பவரைக் குறிப்பிடலாம். அவர் 'பூகோள சாஸ்திரப் பிரவேசம்' எனும் தனது நூலில் இலங்கையைத் தப்றபேன் எனும் பெயரில் குறிப்பிட்டுள்ளதுடன் எமது நாட்டின் அமைவிடம் நாட்டினுள் அமைந்த இடங்கள், அவற்றின் பெயர்கள் இலங்கையின் வடிவம் என்பன பற்றியும் மிகச் சரியான விபரங்களை உள்ளடக்கியுள்ளார்.

கி.பி 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உரோம் நாட்டைச் சேர்ந்த பிரபல வரலாற்றியலாளரான புரோகோபியபஸ் என்பவர் எழுதியுள்ள ''பாரசீக யுத்தம்'' எனும் நூலில் இலங்கை வர்த்தக மத்திய நிலையமாகத் திகழ்ந்ததாக குறிப்பிட்டுள்ளார். இதே விடயத்தை கொஸ்மஸ் என்பவர் எழுதிய ''டொபோ கிறபியா கிறிஸ்டியானா'' எனும் நூலிலும் காணமுடிகின்றது.

கி.பி 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரேபியரான சுலைமான் என்பவர் இலங்கையை ''செரன்டீப்'' எனும் பெயரால் குறிப்பிட்டுள்ளார். இவரிடம் விபரங்களைப் பெற்று அபூசைத் எனும் எழுத்தாளர் எழுதிய ''சில் சிலாத் அல் தவாரிங்'' எனும்

நூலிலும் இலங்கை பற்றிய விடயங்கள் அடங்கியுள்ளன. அராபிய இனத்தவரும் தேசசஞ்சாரியுமான இபின்பதூதா என்பவர் இலங்கைக்கும் அரேபியாவுக்குமிடையில் நடைபெற்ற வர்த்தகம் பற்றிய குறிப்புக்களை எழுதியுள்ளார்.



தேசப்படம் 1.2 தொலமியின் இலங்கைப்படம்

இலங்கை பற்றி எழுதியுள்ள சீன நாட்டவர்களுள் பாஹியன், ஹியுங்சாங் எனும் இரு பௌத்த பிக்குகளும் முக்கிய இடம் வகிக்கின்றனர். இலங்கையின் மகாயான பௌத்தத்தின் செல்வாக்கு, மகாவிகாரை, அபயகிரி விகாரைகளின் விபரங்கள் என்பன பாஹியன் பிக்குவால் எழுதப்பட்டுள்ளது. இலங்கை பற்றிய குறிப்புக்களை எழுதியுள்ள சீன இனத்தவர்களாக ஹூ - ஏ- சோ மற்றும் சா - ஓ - ஜூ - குவா என்பவர்களைக் குறிப்பிடலாம். தீபவம்சம் தவிர இலங்கைப் பிக்குணிகள் பற்றிய குறிப்பிடத்தக்களவு விடயங்களை சீன எழுத்தாளர்களின் நூல்களிலிருந்தே பெற்றுக்கொள்ள முடிகிறது.

இந்திய நூல்களுள் கௌடில்யரின் ''அர்த்தசாஸ்திரம்'' எனும் நூலில் தாமிரபரணி மற்றும் 'பாரசமுத்திரம்' எனும் பெயர்களால் இலங்கை குறிப்பிடப்பட்டுள்ளது. மகாபாரதம், மணிமேகலை, ராஜதரங்கணி எனும் நூல்களில் இலங்கையின் இரத்தினக்கற்கள், துணிவகைகள், நீர்ப்பாசன பொறிமுறை என்பன பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. இராமாயணம், இலங்காவதார சூத்திரம் எனும் நூல்களில் இலங்கை பற்றிய குறிப்புகள் காணப்படுகினறன. திவ்வியபிரபந்தம், ஸ்கந்தபுராணம், சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, பட்டினப்பாலை முதலிய தமிழ் நூல்களிலும் இலங்கை பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளன.

மேற்குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு நூல்களில் குவேரோஸ், நொக்ஸ் எனும் தேச சஞ்சாரியரால் எழுதப்பட்ட நூல்களில் அடங்கியுள்ளதைப் போன்று நிறைவான விளக்கம் காணப்படாத போதிலும் வர்த்தகம் தொடர்பான விபரங்கள் அடங்கியுள்ளமையால் அவை முக்கியத்துவம் பெறுகின்றன.

## தொல்பொருள் மூலாதாரங்கள்

தொல்பொருள் மூலாதாரங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம் அவையாவன கல்வெட்டுக்கள், நாணயங்கள், சிதைவுகள் என்பனவாகும்.

### a) கல்வெட்டுக்கள்

கல்வெட்டுக்களை குகைக்கல்வெட்டு, குன்றுக்கல்வெட்டு, தூண்கல்வெட்டு, சுவர்க் கல்வெட்டு என்று வகைப்படுத்தலாம். இலங்கையில் மகிந்த தேரரின் வருகையின்

பின்னரே கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டன. அதன் பின்னரே இலங்கையில் ஓர் எழுத்து வரிவடிவம் அறிமுகமானது. இலங்கையின் ஆரம்பகால கல்வெட்டுக்கள் ''பிராமிய'' எழுத்து வடிவிலே எழுதப்பட்டுள்ளன.

**குகைக்கல்வெட்டு**

இலங்கையின் பல்வேறு இடங்களிலும் பௌத்த பிக்குகள் வசித்த குகைகளின் கற்பீலிகளுக்கு மேல் இவை எழுதப்பட்டிருந்தன.

உதாரணம்:- மிகிந்தலை, வெஸ்ஸகிரிய, சிதுல்பவ்வ, ரிட்டிகல

**குன்றுக்கல்வெட்டு**

கற்பாறைகளின் மேல் பொறிக்கப்பட்டிருக்கும்

உதாரணம்:-கடலாதெனிய இருமொழிக்கல்வெட்டு, அலவல அமுணக்கல்வெட்டு, மடவளைக் கல்வெட்டு.

**சுவர்க்கல்வெட்டு**

உதாரணம்:- பொலன்னறுவை கல்பொத்த (கல்புத்தகம்), மிகிந்தலை சுவர்க்கல்வெட்டு, தோணிகல கல்வெட்டு

**தூண்கல்வெட்டு**

உதாரணம்:- பதுளை தூண்கல்வெட்டு, கட்டுகஹகல்கே கல்வெட்டு



உரு 1.3 புராதனக் கல்வெட்டு

வரலாற்று மூலாதாரங்களுள் கல்வெட்டுக்கள் முக்கிய இடம்பெறுகின்றன. இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பெரும்பாலும் கல்வெட்டுக்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றன. அதே போன்று கல்வெட்டுகளில் குறிப்பிட்ட நிகழ்வின் சமகாலத்திலே எழுதப்பட்டுள்ளமை அதன் சிறப்புக்கு காரணமாகும்.

உதாரணம்:-துட்டகைமுனு மன்னனின் படைத்தளபதிகள் பத்துப்பேர் பற்றி மகாவம்சம் குறிப்பிடும் விபரங்கள் சிதுல்பவ்வ மற்றும் சங்கபால விகாரைக் கல்வெட்டுக்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆரம்பகால கல்வெட்டுக்கள் மிகவும் குறுகிய அமைப்பிலேயே அமைந்திருந்தன. குறிப்பிட்ட நபரொருவரால் பௌத்தபிக்குகளுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புகள் பற்றியே அவற்றில் குறிப்பிடப்பட்டிருந்தன. கி.பி இரண்டாம் நூற்றாண்டின் பின்னர் எழுதப்பட்ட குன்றுக் கல்வெட்டுக்களிலும் தூண் கல்வெட்டுக்களிலும் நீண்ட விபரங்கள் அடங்கியுள்ளன. கி.பி 8ஆம் நூற்றாண்டின் பின்னர் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் அரசர்களை வர்ணிப்பதாக அமைந்துள்ளன.

இக்கல்வெட்டுக்களின் மூலம் சிங்கள எழுத்துக்களின் வளர்ச்சி, பல்வேறு அடையாளங்கள், சிங்கள இலக்கணம், அரசர்களின் பெயர்கள், பட்டங்கள் என்பவற்றுடன் பிரதேச ஆட்சியாளர்கள், இளவரசர்கள், பிராமணர்கள், பருமக, கமிக, கபதி முதலிய பிரதானிகள் பற்றிய விபரங்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் அரச அதிகாரிகள், அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகம், தொழில்கள் மற்றும் பொருளாதாரநிலை, நிலத்தை அனுபவித்த முறை, வரி அறவிடப்பட்ட முறை என்பன பற்றி இலக்கிய மூலாதாரங்களில் காணப்படாத பல்வேறு விடயங்களையும் கல்வெட்டுக்கள் மூலம் நாமறிந்துகொள்ள முடிகின்றது.

உதாரணம்:- அக்காலத்தில் நிலவிய வர்த்தகம் பற்றி பதுளை தூண்கல்வெட்டு மூலம் அறியமுடிகின்றமை.

சமய வரலாறு பற்றிய விபரங்களும் கல்வெட்டுக்கள் மூலம் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. அதாவது பிக்கு, பிக்குணி, உபாசக (பக்தன்), உபாசிகா (பக்தை) ஆகிய பௌத்த சமயத்திலே அடங்கும் நான்கு பிரிவினர் பற்றிய விபரங்களும் வேறு சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் என்பன பற்றியும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவை தவிர விகாரை, ஆராமை நிர்வாகம், அவற்றுக்குரிய நிலபுலன்கள், வணக்க வழிபாட்டு முறைகள், சிறப்புரிமைகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன.

உதாரணம்: ஆராமை (ஆரணிய) நிருவாகம் பற்றி மிகிந்தலை சுவர்க்கல்வெட்டு, அபயகிரி சமஸ்கிருத கல்வெட்டு, களுதிய பொகுன (பொய்கை) கல்வெட்டு என்பன கூறுகின்றன.

கல்வெட்டுக்களின் பரம்பலானது குடியேற்றங்களின் பரம்பலையும் பௌத்த சமயத்தின் பரம்பலையும் அறிந்துக்கொள்ள உதவுவதாக அமைந்துள்ளது. அதேபோன்று அரசர்களின் ஆட்சி நிருவாக அதிகாரம் எவ்வளவு தூரம் பரவியிருந்தது. என்பதை அறிந்து கொள்வதற்கும் கல்வெட்டுக்கள் உதவுகின்றன.

உதாரணம்:- வல்லிபுரம் பொற்சாசனம் எனும் வரலாற்று ஆவணத்தின் மூலம் வசப மன்னனின் ஆட்சி அதிகாரம் இலங்கையின் வடபகுதியிலும் பரவலடைந்திருந்தமையை அறிந்துகொள்ளலாம்.

குறுநில மன்னர்கள், பிரதேச ஆட்சியாளர்கள் பற்றி இலக்கிய மூலாதாரங்களான நூல்கள் கூறாத பல விபரங்களை கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகின்றது. குசலான்கந்த, ஹென்னன்னேகல, பம்பரகல, யடஹலென ஆகிய கல்வெட்டுக்களில் இவ்வாறான விடயங்கள் அடங்கியுள்ளன. கதுறுவெவக்கல்வெட்டில் ஐந்து அமைச்சர் பரம்பரை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று வர்த்தகம் மற்றும் நீதிநடவடிக்கைகள் பற்றியும் கல்வெட்டுக்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

உதாரணம்:-

கொடவாய தூண் கல்வெட்டு :- துறைமுக வரி அறவிடப்பட்டமை பற்றியது.


பதுளை தூண் கல்வெட்டு :- வர்த்தக சந்தை ஒன்றின் நிருவாகம் பற்றியது.

பெரிமியன்குளம் கல்வெட்டு :- வர்த்தக தரங்கள் மற்றும் கைத்தொழில்கள் பற்றியது.

சித்துல்பவ்வ கல்வெட்டு :- நீதிமன்றத்தின் மூலம் பெறப்படும் வருமானம் அப்பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரைக்குரியது என்பது பற்றியது.

காலத்தை நிர்ணயிப்பதற்கு கல்வெட்டுக்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. கல்வெட்டுக்களின் மூலம் தொடரான இலக்கிய வரலாற்றை அறிந்துகொள்ள முடியாத போதிலும் அதனால் வரலாற்றுக்கான பாரிய பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## b) நாணய மூலாதாரம்




*உரு1.4 புராதன நாணயங்கள்*

*நாணயம்*
1. *பிடரிமயிர் இல்லாத சிங்க உருவமுள்ள வட்ட வடிவிலான செப்பு நாணயம்*
2. *கசாபண அல்லது புராண (வெள்ளி நாணயம்)*
3. *வட்ட வடிவ செப்பு நாணயம் (மரம் மற்றும் சுவஸ்திகா இலச்சினையுடன்)*
4. *நீளமான செப்புத்தகடு (தேவதை ஒன்றின் முழு உருவமுடன்)*
5. *யானை மற்றும் சுவஸ்டிகா இலட்சினையுடனான பெரிய வட்டவடிவிலான செப்பு நாணயம்*
6. *சதுர வடிவிலான பௌத்த சக்கரவர்த்தி உருவத்தைக் கொண்ட செப்பு நாணயம்.*
7. *முக்கோண வடிவிலான செப்பு நாணயம்*
8. *இந்து உரோம தங்க நாணயம்*
9. *சூரிய, சந்திர உருவங்களைக் கொண்ட மத்திய காலத்துக்குரிய தங்க நாணயம்*
10. *சங்கு மற்றும் மல்லிகைப் பூ உருவம் கொண்ட தங்க நாணயம்*
11. *இராஜ ராஜசோழனின் இலங்கைக்குரிய தங்க நாணயம்*
12. *முதலாம் விஜயபாகு மன்னனின் தங்க நாணயம்.*
13. *முதலாம் பாராக்கிரமபாகு மன்னனின் வெள்ளி நாணயம்.*
14. *யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்தியின் செப்பு நாணயம்.*
15. *ஆறாம் பராக்கிரமபாகுவின் செப்பு நாணயம்.*

தொல்பொருள் மூலாதாரங்களுள் மற்றுமொரு பிரிவு நாணயங்களாகும்.இதன் மூலம் குறிப்பிட்ட காலத்தின் பொருளாதார வளர்ச்சி, தொழினுட்ப வளர்ச்சி என்பன பற்றி அறியலாம். தங்கம், வெள்ளி, செப்பு நாணயங்கள் என்பன அவை வெளியிடப்பட்ட காலத்தின் பொருளாதார நிலையை வெளிக்காட்டுகின்றன.

முத்திரை (இலச்சினை) பொறிக்கப்பட்ட நாணயம், புராண தரண எனப்பட்ட நாணயங்கள், யானை மற்றும் சுவஸ்திகா இலச்சினை பொறிக்கப்பட்ட நாணயம், இலட்சுமி உருவம் பொறிக்கப்பட்ட நாணயம், தம்பதெனிய செப்பு நாணயம், தங்க நாணயம், அரை வட்டவடிவிலான தங்க நாணயம், லரின் (V.O.C நாணயம்) போன்ற நாணயங்கள் புராதன காலந்தொட்டே பல்வேறு காலகட்டங்களில் இந்நாட்டில் புழக்கத்தில் இருந்துள்ளன.

வெளிநாட்டு நாணயங்கள் சிலவும் இலங்கையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உரோம நாணயங்கள், இந்திய நாணயங்கள், சீன நாணயங்கள் என்பன அவற்றுள் முக்கியமானவை. அதே போன்று மகா பராக்கிரமபாகு மன்னனின் கால நாணயங்கள் தென்னிந்தியாவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

நாணயங்களைப் பற்றிய ஆய்வு நாணய விஞ்ஞானம் எனப்படுகிறது. நாணயப்பரம்பல், அபிவிருத்தி, பல்வேறு நாணயங்கள் வெளியிடப்படல், உலோக விஞ்ஞானம், நாணயத்தின் பணப் பெறுமதி எனும் பிரிவுகள் என்பன நாணய விஞ்ஞானத்தில் அடங்கும். பல்வேறு உலோகங்களிலும் நாணயங்கள் வெளியிடப்பட்டமையால் அக்காலத்தவரின் உலோகங்கள் கைத்தொழில் பற்றி அறிவைப் பறை சாற்றுவதுடன் புரதான தொழினுட்ப அறிவையும் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. அத்துடன் வரலாற்றுக்குரிய கால நிர்ணயத்தை தீர்மானிப்பதற்கும் மேற்கொள்வதற்கும் நாணயங்கள் பெரிதும் உதவுகின்றன.



இலவச விநியோகத்திற்காக

## (c) சிதைவுகள்

புராதனக் கட்டடங்களின் எஞ்சியுள்ள பகுதிகள் சிதைவுகள் எனப்படுகின்றன. இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வரலாற்றுப் பெறுமதிமிக்க சிதைவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.
உதாரணம்:- அனுராதபுரம், பொலன்னறுவை, யாப்பஹுவ நகரங்களின் வரலாற்று வளர்ச்சியை அறிந்துகொள்வதற்கு சிதைவுகள் உதவுகின்றன. கிராமங்களும் நகரங்களும் நாட்டில் பரவியிருந்த விதத்தையும் சிதைவுகள் மூலம் அறிய முடிகின்றது.

எமது முன்னோர் எவ்வாறான தொழினுட்பங்களைப் பயன்படுத்தி, எவ்வாறான கட்டடங்களை அமைத்துள்ளனர் என்பதை அறிந்து கொள்வதற்கு உதவும் மூலாதாரமாக சிதைவுகள் காணப்படுகின்றன. நீர்ப்பாசன முகாமைத்துவம் மற்றும் சூழல் முகாமைத்துவம் என்பவற்றை மேற்கொண்ட விதத்தையும் சிதைவுகள் மூலமே அறியக் கூடியதாகவுள்ளது.

இலங்கையில் காணப்படும் சிதைவுகளுள் சீகிரியாவுக்கு முக்கிய இடமுண்டு. பாதுகாப்பான கோட்டை என்ற வகையில் சீகிரியாவின் கட்டட நிர்மாணம், நீரகழிகள், பூங்காக்கள், குன்றின் மேலமைந்த அரசமாளிகை, சுவரோவியங்கள், நீராடும் பொய்கைகள் என்பன காண்போரை வியக்க வைக்கும். அங்கு தொழினுட்ப பிரயோகம், சிறப்பான திட்டமிடல், அழகியல் இரசனை, பூங்காக்களின் நிர்மாணம் என்பன உயர்தரத்தில் காணப்படுகின்றன. எனவே சீகிரியாவை உலகின் எட்டாவது அதிசயமாகவும் சிலர் குறிப்பிடுகின்றனர்.

சிலை, செதுக்கல், ஓவியம் என்பன கலாசார வரலாற்றைப் பிரதிபலிக்கும் உயிரோட்டமான அம்சங்களாகும். மனிதனால் மதிக்கப்பட்ட அம்சங்களாகும், சமய நம்பிக்கைகள், ஆடையணிகலன்கள் என்பன பற்றி அறிந்துகொள்வதற்கு சிதைவுகள் முக்கிய சான்றுகளாக அமைந்துள்ளன.

சிலைகளும் செதுக்கல்களும் உருவாக்கப்பட்டுள்ள மூலப்பொருட்களை ஆராயும் போது அன்றைய காலகட்டத்தில் காணப்பட்ட பாறை வகைகள் அவற்றில் நிர்மாணங்களைச் செய்யும் போது மேற்கொண்ட தொழினுட்ப முறைகள் என்பவற்றை அறிந்துகொள்ள முடியும்.

வெளிநாட்டுத் தொடர்புகள் பற்றி அறிந்து கொள்ளவும் சிதைவுகள் உபயோகிக்கப்படுகின்றன.



உரு 1.5 சீகிரியக் குன்று

பாதுகாப்பானதொரு கோட்டையை அமைத்து, எதிரிகளின் படையெடுப்பை முறியடித்தமை.



உரு 1.6 சீகிரிய பூங்கா

நீர்ப்பூங்காக்களின் நிர்மாணம். இது அழகுக்காக அமைக்கப் பட்டதுடன், சிறப்பாகவும் அமைக்கப்பட்டுள்ளது.



உரு 1.6 சீகிரிய ஓவியம்

சீகிரியக் குன்றின் உட்குழிவான சுவர்களில் வரையப்பட்டுள்ள இவ்வோவியம் இந்தியாவின் அஜந்தா குகை ஓவியங்களைப் ஒத்திருப்பதிலிருந்து இரு நாட்டு உறவுகளையும் வெளிப் படுத்துகின்றன.



உரு 1.9
வெண்கலத்திலான நடராஜர் சிலை



உரு 1.8
மிகிந்தலை கண்டக சைத்திய செதுக்கல்

## சாராம்சம்

- ★ மானிட வரலாற்றின் கதையே வரலாறு எனப்படுகின்றது.
- ★ எல்லாப் பாடங்களினதும் தொகுதி வரலாறாகும்.
- ★ உலகம் பற்றிய அறிவு, நிகழ்காலத்தைப் புரிந்து கொள்ளல், இன ஐக்கியத்தை மேம்படுத்தல், மாற்றுக் கலாசாரங்களுக்கு மதிப்பளித்தல், தர்க்க ரீதியான அறிவின் வளர்ச்சி என்பன வரலாற்றைக் கற்பதன் மூலம் நாமடையும் பயன்களாகும்.
- ★ இலக்கிய மூலாதாரங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், சிதைவுகள் எனும் மூலாதாரங்கள் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு உதவுகின்றன.
- ★ 2500 வருடங்களுக்கும் மேற்பட்ட தொடர்ச்சியான எழுத்து மூல வரலாறு இலங்கைக்குண்டு.



இலவச விநியோகத்திற்காக

## செயற்பாடு :

★ இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்கள் பற்றி அட்டவணை ஒன்று அமைக்குக

★ "வரலாற்று மூலாதாரங்களின் முக்கியத்துவம்" எனும் தலைப்பில் அறிக்கை ஒன்று தயாரிக்குக.

## பயிற்சி :

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. வரலாறு என்றால் என்ன?
2. வரலாற்று மூலாதாரங்கள் என்றால் என்ன?
3. வரலாற்றைக் கற்பதன் மூலம் நாமடையும் பயன்கள் நான்கைக் குறிப்பிடுக.



# 2 இந்தியாவின் வரலாற்று ரீதியான வளர்ச்சி

***இந்தியாவின் வரலாற்று ரீதியான வளர்ச்சியை அங்கு நிலவிய ஆரியக் குடியேற்றம், 16 பாரிய குடியேற்றங்கள், மௌரியப் பேரரசின் பரவலுக்கு உதவிய மன்னர்கள், குப்தப் பேரரசின் பரவல், அதன் பண்பாடுகள் என்பவற்றினூடாக இந்த அத்தியாயத்தில் கற்போம்.***

## இந்தியாவில் ஆரியக் குடியேற்றங்கள்

சிந்துவெளி நாகரிகம் வீழ்ச்சியுற்ற பின்னர் இந்தியாவில் இடம் பெற்ற முக்கியமான வரலாற்று நிகழ்ச்சியாக விளங்குவது ஆரியரின் வருகையாகும். இந்த மக்கள் கி.மு. 1500 ஆம் ஆண்டுகளை அண்மித்த காலத்தில் இந்தியாவுக்கு வந்து குடியேற்றங்களை அமைத்ததாகப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

ஆரியரின் பூர்வீக இடம் பற்றி வரலாற்றாய்வாளர்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. பலரின் கருத்துப்படி ஆரியரின் பூர்வீக இடம் மத்திய ஆசியாவில் அமைந்த ஸ்டெப்ஸ் புல் நிலமாகும். இங்கு வாழ்ந்த மக்களில் ஒரு பகுதியினர் ஐரோப்பாவை நோக்கியும் மற்றைய பகுதியினர் இந்தியாவையும் ஈரானையும் நோக்கியும் குடிபெயர்ந்தனர். மத்திய ஆசியாவிலிருந்து கைபர் கணவாய் வழியாக இந்தியாவுக்கு வந்த ஆரியர் இந்தியாவில் சிந்துநதிப் பள்ளத்தாக்கை அண்மித்த தற்போதைய பஞ்சாப் பிரதேசத்தில் முதன்முதலில் குடியேறினர்.



உரு 2.1 கைபர் கணவாய்

ஆரியரின் குடிப்பெயர்வு, குடிப்பரம்பல் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ளத் துணைபுரியும் சாதனங்கள் வேத நூல்கள் (இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்), பிராமணங்கள், உபநிடதங்கள், புராணங்கள் என்பனவும் மகாபாரதம் போன்ற வீரகாவியங் களுமாகும். ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்து குடியேறிய காலம் முந்திய வேத காலம் (இருக்கு வேதகாலம்) என்றும், அவர்கள் இந்தியாவில் பரவத் தொடங்கிய பின்னரான காலம் பிந்திய வேதகாலம் என்றும் கூறப்படுகிறது.



இலவச விநியோகத்திற்காக

இருக்கு வேதத்திற்கு அமைய ஆரியர்கள் ஆரம்பத்தில் பஞ்சாப் பிரதேசத்தில் குடியேறிய பின்னர், சில குழுக்கள் கங்கை, யமுனை நதிப் பகுதியின் மேற்குப் பகுதிகளில் (தற்போதைய டில்லியை அண்மித்த பகுதி) வியாபித்தனர் எனத் தெரிகிறது. அவர்கள் கி.மு. 7 ஆம் நூற்றாண்டாகும் போது கங்கை, யமுனை சமவெளி வழியாக வட இந்தியா முழுவதும் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர்.

சில குழுக்கள் விந்திய மலைத் தொடரைக் கடந்து, டெக்கான் மேட்டுநிலப் பகுதியில் குடியேறினர். கி.மு 6 ஆம், 5 ஆம் நூற்றாண்டளவில் சில ஆரியக் குழுக்கள் தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் வந்து குடியேற்றங்களை அமைத்துள்ளனர்.

இந்தியாவில் ஆரியர் குடியேற்றங்களை அமைக்கும்போது அங்கிருந்த சுதேச மக்களுடன் மோத வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன. இவ்வாறு குடியேற்றங்களை அமைத்த ஆரியரின் நிர்வாக அமைப்பு, பொருளாதார முறை, சமூக ஒழுங்கமைப்பு, சமயம், தத்துவம் என்பன பற்றிய விடயங்களைக் கண்டறிவோம்.

## நிர்வாக அமைப்பு

- ★ கோத்திரங்களாக ஒழுங்கமைப்பட்டிருந்தது.
- ★ சப்த சிந்து பிரதேசத்தில் குடியேற்றங்கள் அமைத்ததன் பின்னர் கிராமங்கள் உருவாகின.
- ★ கிராமத் தலைவன் காமினி எனப்பட்டான்.
- ★ கிராமங்கள் பல சேர்ந்து அரசு (இராச்சியம்) உருவாகியது. அதன் தலைவன் "ராஜன்" எனப்பட்டான்.
- ★ அரச அலுவலரிடையே புரோகிதர், சேனாதிபதி போன்ற பதவிகள் இருந்தன.
- ★ கிராம மக்கள் செலுத்த வேண்டிய வரியைச் சேகரிக்கும் பொறுப்பு கிராமினியிடம் ஒப்படைக்கப்பட்டது.
- ★ நிர்வாக வேலையை எளிதாக்கும் பொருட்டு சபை (சபா), சங்கம் (சமிதி) என்ற அமைப்புக்கள் தோன்றின.
- ★ சிறிய நிர்வாக அலகு கிராமமாகும்.
- ★ நகர நிர்வாகம் தொடர்பாக நகரப் பிரதானிகள் இருந்தனர்.
- ★ நகர நிர்வாகத்தின் பொருட்டு மண்டலமொன்றிற்கு 5 உறுப்பினர்கள் என்ற முறையில் 6 அல்லது 7 மண்டலங்கள் இருந்தன.

## சமய நிலை

- ★ கடவுளை வழிபடும் முறை இருந்தது.
- ★ அனைத்து வேதகாலக் கடவுளரும் இயற்கை சக்திகளாக இருந்தனர். (இந்திரன், வருணன், அக்கினி போன்ற கடவுளர்) அக்கினி நெருப்புக்கு அதிபதியாகவும் வருணன் மழை, செழிப்பு என்பனவற்றிற்கு அதிபதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.
- ★ பிரம்மணீயக் கொள்கை வளர்ச்சி அடைந்தது.

★ கடுமையான தவம் அனுஷ்டித்து உண்மையைத் தேடிச்சென்ற முனிவர்கள் பிற்காலத்தில் அதாவது பிந்திய வேதகாலத்தில் இருந்தமை தெரிகிறது.
★ உண்மையைத் தேடி அறிய முற்பட்டதால் பௌத்த மதமும் சமண மதமும் தோன்றின.

## பொருளாதார முறை

### விவசாயம்

★ ஆரம்ப காலங்களில் கிராமங்களில் வாழ்ந்த ஆரியர் மந்தை மேய்த்தலில் அதிக ஆர்வம் காட்டினர்.
★ பசுவை ஆரியர்கள் புனிதமாகக் கருதினர்.
★ நிலையான குடியேற்றங்களை அமைத்ததின் பின்னர் விவசாயத்திற்குப் பழக்கப்பட்டனர்.

### கைத்தொழில்

★ பட்டுத்துணி, பருத்தித்துணி என்பன உற்பத்தி செய்யப்பட்டன.
★ துணிக்குச் சாயமூட்டுதல், அலங்காரத் தையல் வேலைகள் என்பனவற்றை அறிந்திருந்தனர்.
★ வீடுகள் கட்டவும் வீட்டுத் தளபாடங்கள் செய்யவும் தச்சர்கள் இருந்தனர்.
★ இரும்பைப் பயன்படுத்தி விவசாய உபகரணங்கள், வாள், ஈட்டி போன்ற ஆயுதங்களைச் செய்தனர்.

### தொழில்

★ பொற்கொல்லர், குயவர், வர்த்தகர், குருமார் ஆகியோர் இருந்தனர்.

### வர்த்தகம்

★ தரை வழியாகவும் நீர் வழியாகவும் வர்த்தகம் நடைபெற்றது.
★ பொருட்களைக் கொண்டு செல்வதற்கு வண்டிகள், வள்ளங்கள் என்பன பயன்படுத்தப்பட்டன.
★ பண்டமாற்று மூலம் வர்த்தகம் நடைபெற்றது.
★ தூர நாடுகளுடனும் வர்த்தகம் நடைபெற்றது.

### சமூகம்


★ பிரதான சமூக அலகு குடும்பமாகும்
★ குடும்பத் தலைவன் தந்தையாவான் (தந்தை வழிச் சமூகம்)
★ ஆரியர், ஆரியர் அல்லாதோர் என்று இரு மக்கள் பிரிவினர் இருந்தனர்.
★ பிந்திய வேத காலத்தில் வர்ணப்பாகுபாடும் (சாதிப் பிரிவினை) தோன்றியது. முக்கிய வர்ணப் பிரிவுகள் நான்காகும். (பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்)
★ இறைச்சி, பால், நெய், தயிர், மரக்கறி, அரிசி, பார்லி, எள் என்பன உணவாகக் கொள்ளப்பட்டன. இலைகளைச்சாறு பிழிந்து தயாரிக்கப்பட்ட "சோம பானம்" மக்களால் அதிகம் விரும்பப்பட்டது.


இலவச விநியோகத்திற்காக

- ★ பருத்தி, உரோமம், தோல் என்பவற்றால் தயாரிக்கப்பட்ட உடைகள் பயன்படுத்தப்பட்டன.
- ★ ஆண், பெண் இருபாலாரும் ஆபரணங்கள் அணிந்தனர்.
- ★ நாடகம், வீணை வாசித்தல், சங்கீதம் ஆகிய அழகியற் கலைகள் வளர்ச்சி யுற்றிருந்தன.
- ★ மல்யுத்தம், சூதாட்டம் போன்ற விளையாட்டுக்கள் காணப்பட்டன.

## பதினாறு பெருங்குடியிருப்புகள்

வடஇந்தியாவில் ஆரியக் குடியிருப்புக்கள் வியாபிக்கத் தொடங்கியதுடன் சிறு அரசுகள் தோற்றம் பெற்றன. கி.மு. 6 ஆம் நூற்றாண்டளவில் அவைகளில் 16 அரசுகள் எழுச்சி அடைந்தன. இவ்வாறு எழுச்சி அடைந்த 16 அரசுகளும் அங்கம், மகதம், காசி, கோசலம், வஜ்ஜி, மல்லா, சேதி, வத்சயம், மத்சியா, பாஞ்சாலம், குரு, சூரசேனம், அசாக்கா, அவந்தி, காந்தாரம், காம்போஜம் எனப் பெயர் பெற்றிருந்தன.




தேசப்படம் 2.1
பதினாறு பெருங்குடியிருப்புக்கள்

இந்த அரசுகளின் நிர்வாக முறை ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தன. உதாரணமாக அரசுகளில் குடி, சங்க என்ற ஆட்சிமுறைகள் நிலவின. இந்த பதினாறு அரசுகளில் மகதம், கோசலம், வத்சயம் , அவந்தி என்பன அரசியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்று விளங்கின. வஜ்ஜி, மல்லா என்பன குடி அரசுகளாக இருந்தன. இவைகளில் செல்வந்த வர்க்கத்தினரின் ஆதிக்கம் காணப்பட்டது. வஜ்ஜி, மல்லா ஆகிய அரசுகளுக்கு வடமேற்கே கோசல அரசும், தென்கிழக்கே மகத அரசும் அமைந்திருந்தன. முக்கிய முடியரசான கோசலம், மகதம் ஆகிய இரண்டிலும் மகதம் சிறப்பாகப் பிற்காலத்தில் எழுச்சியுற்றது.

**செயற்பாடு :**

- ★ இந்திய தேசப்படமொன்றில் பதினாறு பெருங்குடியேற்றங்களையும் குறித்துப் பெயரிடுக.

## மகத அரசின் எழுச்சி

ஏனைய முடியரசுகளுக்கு மேலாக மகதத்தை உயர்த்துவதற்கு முயன்ற முதல் ஆட்சியாளன் பிம்பிசாரன் ஆவான். அவன் பின்பற்றிய திருமணத் தொடர்புகளினால் தன் அதிகாரத்தைப் பல பிரதேசங்களில் நிலைகொள்ளச் செய்தான். கோசல மன்னனின் சகோதரியைத் திருமணம் செய்ததன் மூலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காசியைப் பெற்றுக் கொண்டமை இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.




தேசப்படம் 2.2 மகதப்பேரரசு

பிம்பிசாரன் போர்க் கொள்கையைக் கடைப்பிடித்து மகத அரசின் பிரதேசங்களைத் தன் அரசுடன் இணைத்துக் கொண்டான். பிரம்மதத்த மன்னனுடன் போரிட்டு அங்க தேசத்தைக் கைப்பற்றியமை இதற்கு எடுத்துக்காட்டாகும்.

பிம்பிசார மன்னன் புத்தரினதும் மகாவீரரதும் ஆதரவாளனாக விளங்கினான். மகதம் பல்வேறு சமயப் பிரிவினருக்கும் திறந்துவிடப்பட்ட பிரதேசமாக விளங்கியது. இவ்வாறு சமயப் பொறையைக் கடைப்பிடித்தமையும் மகதத்தின் எழுச்சிக்குக் காரணமாக அமைந்தது.

மகதத்தின் தலைநகர் இராஜகிருகம் ஆகும். பிம்பிசார மன்னனின் பின்னர் அவனது மகன் அஜாசத்ரு அரசனானான். அவன் பாடலிபுத்திரத்திற்குத் (பட்னா) தலைநகரை மாற்றினான். லிச்சவி உட்பட அனைத்து குடி அரசுகளின் அதிகாரங்களையும் கோசல அரசு உட்பட பல அரசுகளையும் மகதத்தின் கீழ்க் கொண்டு வருவதில் இவன் வெற்றி கண்டான்.

வடஇந்தியாவில் முக்கிய அரசாக விளங்கிய மகதம், நந்தர்களின் ஆட்சியின் கீழ் மேலும் வளர்ச்சியுற்றது. இதன் ஆரம்ப ஆட்சியாளன் மகா பத்மநந்தன் என்பவனாவான். நந்தர் பரம்பரையின் முக்கியமான இறுதி ஆட்சியாளனான தனநந்தனின் காலத்தில் வட இந்தியாவில் பரந்த நிலப்பரப்பில் பரவியிருந்த ஒரு பேரரசாக மகதம் விளங்கியது.


இலவச விநியோகத்திற்காக

கிரேக்க இனத்தவனான பேரரசன் மகா அலெக்சாந்தர் பஞ்சாப் உட்பட வடமேற்கு இந்தியாவை ஆக்கிரமித்தபோதிலும், கங்கை - யமுனைச் சமவெளியை ஆக்கிரமிக்க முடியாமைக்கு மகத அரசு பலம் வாய்ந்ததாக இருந்தமையே காரணம் எனக் கூறப்படுகிறது. அத்தோடு மகதத்தின் அதிகாரம் மௌரிய அரச வம்சத்திற்கு உரிமையானதுடன் அதன் முதல் ஆட்சியாளனாக விளங்கியவன் சந்திரகுப்தமௌரிய மன்னனாவான்.

**செயற்பாடு :**

★ *மகதப் பேரரசின் பரம்பலை இந்திய தேசப்படத்தில் குறித்து காட்டுக. மகதப் பேரரசுக்கு உட்பட்ட அரசுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.*

## மௌரியப் பேரரசு

வட இந்தியாவில் மௌரிய அரச பரம்பரையின் ஆரம்ப ஆட்சியாளன் சந்திரகுப்த மௌரியன் ஆவான். (கி.மு 324 - 300) அவனது மகன் பிந்துசாரனின் காலத்திலும் பிந்துசாரனின் மகன் அசோகனது காலத்திலும் மௌரியப் பேரரசு மேலும் வளர்ச்சியடைந்தது.

சந்திரகுப்த மன்னன் ஆட்சிக்கு வந்த சிறிது காலத்தில் இந்தியாவின் வடமேற்குப் பிரதேசத்தை வெளிநாட்டவரின் ஆதிக்கத்திலிருந்து மீட்பதற்கு முன்வந்தான். அவன் சிந்து நதியின் மேற்குப் பகுதியில் இருந்த வடமேற்கு இந்தியாவை வெற்றி கொள்ளும் முகமாக செலியுகஸ் நிகேடருடன் நடாத்திய போரில் வெற்றி பெற்றான். மேற்கில் பாரசீகப் பேரரசு வரையிலும வடக்கில் இமயமலை வரையிலும் தெற்கே கிருஷ்ணா துங்கபத்ரா ஆகிய பிரதேசங்கள் வரையிலும் மௌரியப் பேரரசு பரவியிருந்தமையைக் கல்வெட்டுக்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. பரந்த பேரரசைக் கட்டியெழுப்பிய சந்திரகுப்தமௌரிய மன்னன் அதனை ஆட்சி செய்யும் பொருட்டுத் திறமை வாய்ந்த அதிகாரிகளை நியமித்தான்.

சந்திரகுப்த மன்னனின் பின்னர் அவனது மகன் பிந்துசாரன் (கி.மு 300 - 273 வரை) அரசனானான். தனது தந்தையின் காலத்தில் இருந்த பரந்த பேரரசை அவ்வாறே தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல பிந்துசாரனால் முடியுமானதாக இருந்தது.


பிந்துசாரனின் பின்னர் அசோகன் (கி.மு 273 - 236 வரை) மௌரியப் பேரரசின் அரசனானான். கல்வெட்டுக்களில் இவன் "தேவானம்பிய பியதசி" என அழைக்கப்பட்டான்.

அசோக மன்னன் தனது ஆட்சியின் ஆரம்பத்தில் போர் மூலம் தனது அரசை விரிவாக்கம் செய்ய முயன்றான். அசோக மன்னனைப் பற்றி அறிவதற்குப் பௌத்த, ஜைன சூத்திரங்களும் அசோகக் கல்வெட்டுக்களும் முக்கிய சாதனங்களாக

விளங்குகின்றன. இக்காலத்தில் கிழக்கு தக்கணத்தில் அமைந்துள்ள கலிங்க தேசத்தைக் கைப்பற்றுவதற்குக் கடும் சமரில் ஈடுபட்டான். மகதத்தின் அரசனாகி 13 ஆவது ஆண்டில் நிகழ்ந்த இந்தக் கலிங்க யுத்தம் அவனது தனிப்பட்ட வாழ்வில் மட்டுமன்றி ஆட்சி நிர்வாகத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

## அசோகப் பேரரசு

அசோகனது காலத்தில் மௌரியப் பேரரசு பரந்த பிரதேசத்தில் பரவி இருந்தது. முன்பிருந்த பிரதேசங்களுடன் கலிங்கத்தை ஒன்றிணைத்தமை அசோகப் பேரரசனின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்றது. அவனது பாறைக் கல்வெட்டுக்கள் அமைந்திருக்கும் இடங்களுக்கு அமைய அசோகப் பேரரசின் எல்லையையும் கல்வெட்டுகள் அமைந்திருக்கும் இடங்களுக்கு அமைய சுதந்திர அரசு இருந்த பிரதேசங்களையும் தூண் கல்வெட்டுகளுக்கு அமைய அரசன் சுற்றுலா சென்ற இடங்களையும் அறிந்து கொள்ளலாம் எனப் பேராசிரியர் பண்டர்கார் குறிப்பிடுகிறார். இதனடிப்படையில் காவேரி நதிக்குத் தெற்கே சிறு நிலப்பரப்பு தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் அனைத்தும் அசோக மன்னனின் கீழ் இருந்ததாகத் தெரிகிறது. இந்தப் பேரரசின் தலைநகர் பாடலிபுத்திரமாகும். கலிங்க யுத்தத்தால் மனமுடைந்த அசோக மன்னன் பௌத்த சமயத்திற்கு மாறியதாகக் கூறப்படுகிறது. இதன்பின்னர் 'திக் விஜயக்' கொள்கைகளைத் தவிர்த்துத் 'தர்ம விஜயக் கொள்கையை' மேற்கொண்டதாகக் கல்வெட்டுக்களும் தூண் கல்வெட்டுக்களும் கூறுகின்றன. உல்லாசப் பயணங்களுக்குப் பதிலாகத் தர்ம யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சர்களுக்கு "தர்ம மகா மாத்ரா" பதவி வழங்கப்பட்டது.




தேசப்படம் 2.3 அசோகப் பேரரசு

***என் பிள்ளைகளோ, பேரப்பிள்ளைகளோ, புதிய திக்விஜயங்களை மேற்கொள்ளா திருப்பார்களாக. அவர்களுக்கு வெற்றி வேண்டுமாயின் பொறுமையுடன் சிறு தண்டனைகளை மேற்கொள்வார்களாக. தர்மவிஜயம் உண்மையான விஜயம் எனக் கொள்வார்களாக.***

-13 வது பாறைக் கல்வெட்டு-



இலவச விநியோகத்திற்காக

"நாட்டு மக்கள் அனைவரும் எனது பிள்ளைகள். அவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பது எனது மேலான கடமையாகும்.

மேற்கூறப்பட்ட வாசகங்கள் அசோகக் கல்வெட்டுக்களில் காணப்படுவதைக் கொண்டு அசோக மன்னன் அமைதியான, நல்லாட்சி செலுத்தியதை அறியக்கூடியதாக உள்ளது.

## அசோக மன்னனின் பணிகள்.

- ★ பெருந்தெருக்கள் வசதிகளை மேம்படுத்துதல்.
- ★ ஓய்வுக்கான மண்டபங்கள், கிணறுகள், குளங்கள் என்பன அமைத்தல்.
- ★ நிழலின் பொருட்டு வீதியின் இரு மருங்கிலும் மரங்களை நாட்டுதல்.
- ★ மனிதர்களுக்குப் போலவே மிருகங்களுக்கும் வைத்தியசாலைகள் அமைத்தல்.
- ★ தர்ம மகாமாத்ராக்கள் என்ற பெயருடைய அதிகாரிகள் நியமிக்கப்படல்.
- ★ சோழதேசம், பாண்டியதேசம், தம்பபண்ணி, சிரியா, எகிப்து ஆகிய நாடுகளுடன் நெருங்கிய தொடர்பை கொண்டிருத்தல்.
- ★ மூன்றாவது பௌத்த மகா நாட்டைக் கூட்டுதல்.
- ★ சாஞ்சி தூபி உட்பட பல தூபிகளை அமைத்தல்.
- ★ பிரம்மணீய, ஆஜீவர், ஜைன மதங்களையும், அம்மதங்களின் மதத் தலைவர் களையும் மதித்ததுடன், அவர்களுக்கு ஆதரவும் வழங்குதல்.
- ★ சமயத் தூதுவர்களை ஒன்பது நாடுகளுக்கு அனுப்புதல்.

## மௌரிய நிர்வாகத்தின் பண்புகள்



உரு 2.2 சாஞ்சி தூபி

- ★ அரசனே நிர்வாகத்தில் பிரதானியாக இருந்தமை
- ★ சட்டம், அதிகாரம், நீதித்துறை, ஆயுதப்படை போன்றவற்றின் முழு அதிகாரமும் அரசனிடம் இருந்தது. இது மத்திய மயப்பட்ட நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டாகும்
- ★ நிர்வாகத்தில் அரசனுக்கு அறிவுரை வழங்கவும், உதவவும் அமைச்சரவை இருந்தது.
- ★ அரசனுக்கு உதவுவதற்கு அதிகாரிகளும் இருந்தனர்.
- ★ இளவரசர், புரோகிதர், அமைச்சர், சேனாதிபதி அதிகாரிகள் உட்பட வரி வசூலிப்போர், எழுதுவினைஞர் போன்றோர் இவற்றில் முக்கியமானோராவர்.
- ★ பிரதேச நிர்வாகம் - அரச குடும்பத்தின் இளவரசர்களால் அல்லது அமைச்சர்களால் மேற்கொள்ளப்பட்டது. நாடு இராஷ்டிரங்களாகவும், (மாவட்டங்கள்) இராஷ்டிரங்கள் பத்து ஊர்களாகவும், நூறு ஊர்களாகவும், நாற்பது ஊர்களாகவும், இருபது ஊர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஆட்சி அதிகாரம் பரவலாக்கப்பட்டிருந்தமை இதிலிருந்து தெளிவாகிறது.
- ★ கைத்தொழில், வெளிநாட்டு நடவடிக்கை, பிறப்பு இறப்பு, உற்பத்தி நடவடிக்கை, வருமானம் வர்த்தக நடவடிக்கைகள் என்பன ஆறு மண்டலங்களிடம் (வாரியங்கள்) ஒப்படைக்கப்பட்டிருந்தன.

★ நீதித்துறை செயற்பாடு அரசனைச் சார்ந்ததாக இருந்த போதிலும் அதனை செயற்படுத்தும் அதிகாரம் பல்வேறு நிலையிலிருந்த அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கிராம மட்டத்திலிருந்து அரசன் வரையிலும் நீதித்துறை அதிகாரம் பரவலாக்கப்பட்டிருந்தது.

## மௌரியர் காலத்தின் பண்பாடு

### சமயம்

★ இந்து, பௌத்த, ஜைன மதங்கள் இருந்ததுடன், சமயப்பொறைக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது.

★ அசோக மன்னனின் காலத்தில் மூன்றாவது பௌத்த மகாநாடு நடத்தப்பட்டமை முக்கிய சமய நிகழ்வாகும்.

★ இந்தியாவினுள்ளும், வெளிநாடுகளிலும் சமயம் பரப்பப்பட்டது.

உதாரணம்: காஷ்மீர், காந்தாரம், மகாராஷ்டிரம், சுவர்ணபூமி, இலங்கை, கிரேக்க குடியேற்றமான யோனக்க

### மொழியும் இலக்கியமும்

★ பிராகிருதம், மகத மொழி, சமஸ்கிருதம் போன்ற மொழிகள் வளர்ச்சியடைந்திருந்தன.

★ சமஸ்கிருத, பிராகிருத மொழிகளில் இலக்கிய நூல்கள் எழுதப்பட்டன. உ-ம் வேத நூல்கள்

★ மௌரிய அரசவையில் மகத மொழி பயன்படுத்தப்பட்டது.

### கலை நுட்பங்களும் கட்டடக் கலையும்

★ தூபிகள் அமைத்தல். (அசோக மன்னன் ஏராளமான (84 000) விகாரைகள், தூபிகளை அமைத்ததாக மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது) சாஞ்சி தூபி அதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

★ குகைகள் அமைக்கப்பட்டன (பாராபர் மலையடியில் உள்ள குகை).

★ அசோகப்பெருந்தூண் (அசோக மன்னனின் ஆணைகள், தர்ம போதனைகள் தொடர்ப்பாகக் கூறப்படும் சாரணாத், ரம்மின்தை போன்ற இடங்களில் காணப்படும் தூண்கள் இதற்கு எடுத்துக்காட்டாகும்).



உரு 2.3
அசோக தூண்

### செதுக்கல் கலை

★ மாடு, சிங்கம், யானை போன்ற மிருகங்களின் உருவங்கள் அசோகத் தூண்களின் உச்சியில் பொறிக்கப்பட்டிருந்தன.

★ லௌரிய நந்த நகர், சாரணாத் தூண்களில் சிங்க உருவ அலங்காரம் காணப்பட்டது.


இலவச விநியோகத்திற்காக

**செயற்பாடு :**

★ மௌரியப்பேரரசுதொடர்பாகப்பின்வரும்விடயங்களின்கீழ்தகவல்களைத் தொகுக்குக. தேவையான இடங்களில் தேசப்படங்கள், படங்கள் என்பனவற்றை உள்ளடக்குக. மௌரியர் காலத்தின் முக்கிய அரசர்கள், அது பேரரசாக வளர்ச்சியடைந்த விதம், நிர்வாக நடவடிக்கைகள், சமய நடவடிக்கைகள், மொழி, இலக்கியம், கட்டடக்கலை, செதுக்கல்கலை.

## அசோகப் பேரசரின் பின் இந்தியா

அசோகப் பேரரசரின் பின் மௌரியப் பேரரசு படிப்படியே வீழ்ச்சியடைந்தது. அதற்கான காரணங்களுள் சில வருமாறு :


★ வட மேற்காக வந்த வெளிநாட்டு ஆக்கிரமிப்பு
★ பிரதேச ஆட்சியாளர்களின் பலம் பெருகுதல்
★ அசோக மன்னனின் பின் வந்த ஆட்சியாளர்களில் பரந்த பேரரசை நிர்வகிக்கக்கூடிய ஆட்சியாளர் இல்லாமை
★ போர் காரணமாகப் பொருளாதாரம் வீழ்ச்சியுறல்
★ அரச சபையினுள் இருந்த உட்பூசல்

மௌரியப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்னர் பல வெளிநாட்டு ஆட்சியாளர்கள் இந்தியாவின் சில பிரதேசங்களில் ஆட்சியைக் கைப்பற்றியதுடன், வடமேற்கு இந்தியாவை அடிப்படையாக வைத்து குஷாணர்கள் ஆட்சிக்கு வந்தனர். அவர்கள் சீனப் பகுதியிலிருந்து வடமேற்கு இந்தியாவுக்கு வந்த யூச்சி கோத்திரத்தினராவர். இந்த அரச பரம்பரையில் முக்கிய ஆட்சியாளராக விளங்கியவர் கனிஷ்க மன்னராவார். (கி.மு. முதலாவது நூற்றாண்டு) இந்த மன்னன் மகாயான புத்த சமயத்துக்கு சிறப்பாக ஆதரவு வழங்கினான். நான்காம் பௌத்த மகாநாட்டிற்குத் தலைமை வகித்தவனும் கனிஷ்க மன்னனேயாவான். புத்தர் சிலைகளை செதுக்கும் முறை இந்த மன்னனின் காலத்திலேயே ஆரம்பமானதாகக் கூறப்படுகிறது.

### குப்தப் பேரரசு

குப்தர் காலத்தின் ஆரம்ப மன்னனாக முதலாவது சந்திரகுப்தன் அறிமுகமாகிறான். குமார தேவி என்ற லிச்சவி இளவரசியைத் திருமணம் செய்த பின்னர் பரந்த பிரதேசத்தைத் தனக்கு உரியதாக்கி மகா இராஜாதிராஜாவாக முதலாவது சந்திரகுப்த மன்னன் முடிசூடினான்.

இதன் பின்னர் முதலாவது சந்திரகுப்த மன்னனின் மகன் சமுத்திர குப்தன் அரசனானான் (கி.பி. 320 - 380). அவனது ஆட்சிப் பரப்பு தொடர்பான முக்கிய மூலாதாரமாக விளங்குவது அலகபாத் கல்வெட்டாகும். அது அசோகப் பேரரசனின் அலகபாத் தூணில் பொறிக்கப்பட்டுள்ளது.



தேசப்படம் 2.4 குப்தப் பேரரசு

சமுத்திரகுப்த மன்னனின் ஆட்சி மத்திய பிரதேசத்தின் கிழக்கிலும், தெற்கே ஒரிசா வரையிலும் பரவியிருந்தது. இது தவிர கிழக்குக் கரை பிரதேசத்தினூடாக பல்லவ அரசு வரை பரவி இருந்தது. அவன் வடக்கிலும் வடமேற்கு இந்தியாவிலும் பரந்த பிரதேசம் ஒன்றைத் தன் பேரரசுடன் இணைத்தான்.

சமுத்திரகுப்த மன்னன் கவிஞனாகவும் இசைக்கலைஞனாகவும் விளங்கினான். இந்து சமயத்தவனான அவன் பிராமணர்களுக்கு பசுக்களைத் தானமாக வழங்கினான். அஸ்வமேத யாகம் நிகழ்த்தினான். சமுத்திரகுப்த மன்னனால் வெளியிடப்பட்ட நாணயம் அவனது அதிகாரம், அரசியல் ஆதிக்கம், பொருளாதார வளர்ச்சி என்பனவற்றை எடுத்துக்காட்டுகிறது. குப்தர் காலத்தில் இருந்த மிகப் பலம் வாய்ந்த ஆட்சியாளனாக சமுத்திரகுப்த மன்னனைக் கருத இடமுண்டு.

இவன் மாகாணங்களில் இருந்த அவமுக்தாவின் நீலராஜன், வேங்கியின் ஹஸ்திவர்மன், காஞ்சியின் விஷ்ணு கோபன் போன்ற அரசர்களைத் தோற்கடித்ததாக மூலாதாரங்களால் உறுதிப்படுத்தப்படுகிறது. சமுத்திரகுப்த மன்னனின் பின் அவனது மகன் இரண்டாம் சந்திரகுப்தன் அரசனானான். குப்தப் பேரரசின் முக்கிய விரிவாக்கம் இந்த மன்னனின் காலத்திலேயே நிகழ்ந்தது. இரண்டாம் சந்திரகுப்தன் மேற்கு இந்தியாவிலிருந்த சத்ரபர்களைத் தோற்கடித்ததால் அரசியலைப் போன்றே பொருளாதாரத் துறையிலும் வளர்ச்சி ஏற்பட்டது. இதனால் வங்காள விரிகுடாவிலிருந்து அரபிக் கடல் வரையிலான துறைமுகங்களைக் கட்டுப்படுத்த குப்தப் பேரரசிற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. கலை, கட்டடக் கலை, சிற்பம், இலக்கியம் போன்ற துறைகளுக்கு பெருமளவு ஆதரவு வழங்கிய அவனது அரச சபையில் நவரத்தினங்கள் என்று சிறப்பிக்கப்படும் ஒன்பது அறிஞர்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்துகுஷ் மலைத்தொடருக்கு அப்பால் போரிட்டு வெற்றி கொண்டதால் இந்தியாவுக்கு வெளியிலும் பேரரசின் எல்லையை விஸ்தரிக்க இரண்டாம் சந்திரகுப்தனால் முடிந்தது. அவன் விவாகத் தொடர்புகள் மூலம் நாடுகளை இணைத்ததையும் காணக்கூடியதாக உள்ளது.



இலவச விநியோகத்திற்காக

சந்திரகுப்த மன்னனின் பின் குமாரகுப்தன், ஸ்கந்த குப்தன் முதலான அரசர்கள் முறையே ஆட்சிக்கு வந்ததுடன் ஸ்கந்த குப்தனின் ஆட்சிக் காலத்தின் பின்னர் குப்த பேரரசு வீழ்ச்சியடைந்தது. யசோதர்மன் போன்ற பிரதேசத் தலைவர்களின் எழுச்சியும் அரச குடும்பத்தில் நிலவிய குழப்ப நிலையும் குப்த அரசின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது.

குப்தர் கால நிர்வாகம், சமூக நிலை, பொருளாதார நிலை, கலாசார நடவடிக்கைகள் என்பன பற்றி இனி ஆராய்வோம்.

### நிர்வாக முறை

- ★ "மகா ராஜாதிராஜா" என்ற பட்டப் பெயரை குப்த அரசர்கள் பயன்படுத்தினர்.
- ★ ஆட்சியாளன் முதலில் அரசன் எனவும் பேரரசன் எனவும் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.
- ★ அமைச்சர்கள் நிர்வாகத்தின் உயர் அதிகாரிகளாக விளங்கினர்.
- ★ படைத் தலைவன் ஒருவன் இருந்ததுடன் மகாதண்டநாயகர், படைகளுக்குப் பொறுப்பான சேனாதிபதி போன்றோரும் இருந்தனர்.
- ★ மத்திய நிர்வாகம், பிரதேச நிர்வாகம் தொடர்பான அதிகாரிகளாக இராஜமத்தியர், ஆயுக்தர் ஆகியோர் இருந்தனர். ஆயுக்தர் நகர நிர்வாகத்திலும் திறை சேரி நிர்வாகத்திலும் ஈடுபட்டனர்.
- ★ பிரதேச நிர்வாக அலகு "புக்தி" என்ற பெயரால் அழைக்கப்பட்டது.
- ★ நீதி தொடர்பான செயற்பாடுகளில் அரசன் பங்குபற்றினான். அமைச்சர்கள் நடுவர்கள் (நீதிபதிகள்), புரோகிதர்கள் என்போர் அரசனுக்கு உதவினர்.

### பொருளாதார நிலை

- ★ நதிகளை அண்மித்த பகுதிகளில் விவசாயம் செய்யப்பட்டது.
- ★ பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழிலாகப் புடைவைக் கைத்தொழில் விளங்கியது (பட்டு, பருத்தி, உரோமம்).
- ★ யானைத் தந்தம், தங்கம், வெள்ளி, செம்பு போன்றவற்றால் செய்யப்பட்ட ஆபரணங்கள் அணியப்பட்டன.
- ★ கைத்தொழில், வர்த்தகம், சிற்பம் என்பன இக்காலத்தில் ஒழுங்கமைப்பட்ட நிலையில் இருந்தன.

### சமூக நிலை

- ★ பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வர்ணங்கள் இருந்தன.
- ★ தத்தமது கோத்திரங்களுக்குள்ளேயே திருமணங்கள் நடைபெற்றன.

### சமயம், தத்துவம்

- ★ இந்து சமயம் வளர்ச்சியடைந்தது.
- ★ விஷ்ணு வழிபாடும் சிவன் வழிபாடும் நிலவியது.
- ★ புராணங்கள் முக்கிய சமய இலக்கியங்களாக விளங்கின.
- ★ விஷ்ணுவின் அவதாரக்கோட்பாடு பரவியது.
- ★ இலக்குமி வழிபாடு சிறப்புற்று விளங்கியது.
- ★ சக்தி வழிபாடு, கணபதி வழிபாடு என்பன மக்களால் விரும்பி மேற்கொள்ளப்பட்டன.
- ★ மகாயான பௌத்தம் வளர்ச்சியடைந்தது.
- ★ இக்காலத்தில் தக்கணத்தில் சமண சமயம் பரவியது.

### கல்வி நிலை

- ★ பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய முப்பிரிவினருக்கு மட்டுமே கல்வியைப் பெறும் உரிமை இருந்தது.
- ★ பிராமணர்களுக்கு மட்டுமே கற்கவும் கற்பிக்கவும் உரிமை இருந்தது.
- ★ பிராமணரது கல்வி குருகுலக் கல்வியாக விளங்கியது.
- ★ பௌத்த ஆராமைக் கல்வி நிலவியதாக பாளியிலுள்ள அட்டகதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ★ உலகில் புகழ்பெற்ற பௌத்த உயர் கல்வி நிலையங்களாக விளங்கிய கல்வி நிறுவனங்கள் ( நாலந்த, வலஹி பல்கலைக்கழகங்கள்) இக்காலத்தில் வளர்ச்சி அடைந்தன.
- ★ பரந்த விடயப் பரப்புடன் (கலைத்திட்டம்) கல்வியைப் பெறக்கூடியதாக இருந்தது.
- ★ இலக்கணத்தைப் பிழையின்றி கற்றல் கல்வியின் அடிப்படையாக அமைந்தது.
- ★ சாதாரண மக்களுக்கான கல்வி முறையும் இந்தியாவில் இருந்தது.



உரு 2.4 சிவன்

### இலக்கியம்

- ★ சமஸ்கிருத இலக்கியம் வளர்ச்சியுற்றது.
- ★ புராண நூல்களைப் பின்பற்றி எழுதப்பட்ட உப புராண நூல்கள் 18 இருந்தன.
- ★ உலகின் சிறந்த இலக்கியப் படைப்புக்களில் ஒன்றான சகுந்தலை என்ற நாடகம் இக்காலத்தில் எழுதப்பட்டது.
- ★ நவரத்தினங்கள் என்றழைக்கப்பட்ட ஒன்பது அறிஞர்கள் இக்காலத்தில் வாழ்ந்தனர்.
- ★ தர்ம சாஸ்திர நூல்கள் தோன்றின.
- ★ காளிதாசர் எழுதிய மேக தூதம், இரகுவம்சம், குமாரசம்பவம் என்பனவும் இக்காலத்தனவாகும்.
- ★ நாடகம், வர்ணனைகள், தத்துவம், கணிதம், தர்க்கநூல்கள் என்பன எழுதப்பட்டன.



உரு 2.5 பார்வதி



இலவச விநியோகத்திற்காக

### சிற்பக் கலை

★ மதுரா மரபு முறையான சிற்பங்கள் செதுக்கப்படல் (உதாரணம் : சாரணாத் புத்தர் சிலை)

★ இந்துக் கடவுளரின் சிலைகளைச் செதுக்குதல். (சிவன், பார்வதி சிலைகள்)

### கட்டடக்கலை

★ சமயக் கட்டடங்கள் அமைத்தல் இக்காலத்தில் வளர்ச்சி அடைந்தது.

★ செங்கல், கற்றூண்களைப் பயன்படுத்தி கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

★ பௌத்த சமயக் கட்டடங்களின் பிரதான அங்கங்களான ஆராமை, விகாரை, சைத்தியங்கள் அமைத்தல் என்பன இக்காலத்தில் வளர்ச்சியுற்றது.
உதாரணம்: அஜந்தா, எல்லோரா போன்ற குகை விகாரைகள் அமைத்தமை

★ அலங்கார செதுக்கல் வேலைகள் செய்யப்பட்டமை.
உதாரணம் : அஜந்தா குகைகளுக்கு 150 மைல் தொலைவில் வடமேற்கே அமைந்துள்ள பாக் குகைக் கோயில்

★ பௌத்த தூபி, ஆராமைத் தொகுதி என்பன இக்காலத்தில் வளர்ச்சி அடைந்தன (புத்தகாயா, நாலந்த).

### சித்திரக்கலை

★ இக்காலத்துக்குரிய வாத்சல்யரின் காமசூத்திரத்தில் காணப்படும் சித்திரங்கள் ஒன்றாகக் காட்டப்பட்டுள்ளது.

★ இக்காலத்தைச் சேர்ந்த அஜந்தா, எல்லோரா குகை ஓவியங்கள் பிரசித்தி பெற்றவை.



உரு 2.6 அஜந்தா ஓவியம்

## சாராம்சம்

- ★ சிந்து நதியை அண்மித்த பஞ்சாப் பிரதேசத்தில் முதன் முதல் ஆரியக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன.
- ★ கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தென் இந்தியாவிலும் இலங்கையிலும் ஆரியக் குடியேற்றங்கள் பரவின.
- ★ வேத நூல்கள், உபநிடதங்கள், புராணங்கள், மகாபாரதம் என்பன இக்காலத்தைப் பற்றி அறிய உதவும் மூலாதாரங்களாகும்.
- ★ வேத காலத்தில் முடியாட்சியும் கண (குடியாட்சி) அரசுகளும் இருந்தன.
- ★ நாடோடி இடையர்களாக வாழ்ந்த ஆரியர்கள் விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் என்பனவற்றுக்குப் பழக்கப்பட்டனர்.
- ★ தந்தை வழி சமுதாயம் இருந்தது.
- ★ 16 பெருங்குடியேற்றங்கள் உருவாகின. அவற்றில் நான்கு பலம் வாய்ந்ததாக இருந்தன (மகதம், கோசலம், வத்ச, அவந்தி).
- ★ இவற்றில் மகத அரசு பலம் வாய்ந்த அரசாக எழுச்சியுற்றது.
- ★ நந்தர்களின் கீழ் மகதம் வலுவடைந்தது.
- ★ மௌரியப் பேரரசு வளர்ச்சியடைந்தது.
- ★ அசோகப் பேரரசன் மௌரியப் பேரரசின் முக்கிய ஆட்சியாளனாக விளங்கினான்.
- ★ மக்கள் மனதைக் கவர்ந்த மன்னனாக சிறப்புப் பெற்றான்.
- ★ மௌரியர் காலத்தில் முறையான நிர்வாக அமைப்பு இருந்தது.
- ★ பண்பாட்டு வளர்ச்சி ஏற்பட்டது.
- ★ பௌத்த மதத்தைப் போல் ஏனைய மதங்கள் மீதும் சமயப் பொறை கடைப்பிடிக்கப்பட்டது.
- ★ முதலாம் சந்திரகுப்தன், சமுத்திர குப்தன், இரண்டாம் சந்திரகுப்தன் ஆகியோரின் கீழ் குப்தப் பேரரசு எழுச்சியுற்றது.
- ★ குப்தர் காலத்தில் கலாசாரம் மிகச் சிறந்த முறையில் வளர்ச்சியுற்றது.

## பயிற்சி :

1. ஆரியக் குடியிருப்புக்கள் பரவிய பிரதேசங்களை இந்திய தேசப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
2. பதினாறு பெருங் குடியேற்றங்களைப் பெயரிடுக.
3. அசோக மன்னனால் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் ஐந்தினைத் தருக.
4. குப்தர் காலத்தில் இருந்த நிர்வாக அதிகாரிகளின் பெயர்களைத் தருக.
5. குப்தர் காலப் பண்பாடு தொடர்பாகப் பின்வரும் விடயங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.
   இலக்கியம், கட்டடக் கலை, சிற்பக் கலை, சித்திரக் கலை




இலவச விநியோகத்திற்காக



# 3 வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து பொலன்னறுவைக்கால இறுதிவரை இலங்கையின் வரலாறு

**இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றியும் ஆரியர் குடியேற்றங்களின் பரம்பலில் இருந்து பொலன்னறுவைக் காலத்தின் இறுதி வரையிலான அரசியல் வரலாற்றில் இடம்பெற்ற முக்கிய சந்தர்ப்பங்கள் தொடர்பான தகவல்கள் பற்றியும் இவ்வலகில் கற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிட்டுகின்றது.**

## வரலாற்றுக்கு முற்பட்ட காலம்



தேசப்படம் 3.1 இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால வாழ்விடங்கள்

1.ஆனையிறவு
2.பூநகரி
3.பரந்தன்
4.இரணை மடு
5.முல்லைத்தீவு
6.வெல்லன் குளம்
7.மாங்குளம்
8.முருங்கன்
9.நச்சியார வெள்ளச்சிமலை
10.திருக்கோணமலை
11.குதிரைமலை
12.மோதரகம் ஆறு
13.மரிச்சுக்கட்டி
14.வில்பத்து
15.அனுராதபுரம்
16.பந்தன் குழி
17.பொம்பரிப்பு
18.கலா ஓயா
19.வணத்த வில்லு
20.கந்தன் காடு
21.திருக்கோணமடு
22.அரனகல்லு
23.பொலன்னறுவை
24.மகாவலிகங்கை
25.பாலாவி
26.புத்தளம்
27.ஆணைமடு
28.ஆண்டிகம
29.பள்ளம
30.பங்கதெனிய
31.கலாவத்த
32.கண்டி
33.தனிகல
34.பேராதனை
35.நில்கல
36.ஹேனபெத்த
37.பிபில
38.கம்பளை
39.மடுல்சீம
40.நாவலபிட்டி
41.பூண்டுலோயா
42.பொத்துவில்
43.கித்துல்கல
44.பியகம
45.அவிசாவளை
46.பெலிலென குகை
47.வெளிமட
48.களனி
49.மல்வானை
50.இராவணன் எல்ல
51.பட்டதொம்பலேன
52.தம்புல்ல
53.ஹங்வெல்ல
54.ஹெட்டஹேத்த
55.நுவரெலியா
56.நோர்வுட்
57.பண்டாரவளை
58.திக்ஓயா
59.மஸ்கெலியா
60.சிவனொளிபாதமலை
61.பட்டதொடலேன
62.எஹெலியகொட
63.லேகம
64.குவும்பிகல
65.பம்பரகஸ்தலாவ
66.ஒக்கம்பிட்டிய
67.ஹோட்டன் சமவெளி
68.பொகந்தலாவ

## வரலாற்றுக்கு முற்பட்ட காலம்



உரு 3.1 இரத்தினபுரியில் இரத்தினக்கல் அகழ்வு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட கல் ஆயுதங்கள்

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது எழுத்து மூல வரலாறு ஆரம்பமாவதற்கு முற்பட்ட காலமாகும். இந்நாட்டில் விஜயனின் வருகைக்கு முற்பட்ட காலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலமாகும். இலங்கையில் ஆவணப்படுத்தப்பட்ட வரலாறு காணப்படுவது கி.மு 6ஆம் நூற்றாண்டு அளவிலாகும். இருப்பினும் அதற்கு முன்பிருந்தே இலங்கையில் மக்கள் வாழ்ந்தார்கள் என்பது தொல்பொருள் சான்றுகளிலிருந்து அறியக் கூடியதாக உள்ளது. ஆவணப்படுத்தப்பட்ட ஆதாரங்கள் இன்றி தொல்பொருள் சான்றுகளை மட்டும் ஆதாரமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட வரலாற்றுக்குரிய காலமே வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என அழைக்கப்படுகின்றது.

இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய மக்கள் வாழ்ந்ததாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பல இடங்கள் காணப்படுகின்றன. இரத்தினபுரிப் பிரதேசத்தின் வண்டல் மண் படைகளுக்கிடையில் காணப்பட்ட பளிங்குக்கல், செம்மஞ்சள் கற்களால் தயாரிக்கப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்கு உரித்தான கல்லாயுதங்களும் வானர மனிதனுடையது எனக் கருதக்கூடிய பற்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை மிகப் பண்டைய வரலாற்றுக்கு முற்பட்ட மக்களுக்குச் சொந்தமானவையெனக் கருதமுடியும். இவற்றை பழைய கற்காலத்துக்குரிய பொருட்கள் எனக் குறிப்பிடலாம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்கு உரிய தொல்பொருட்கள் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. புலத்சிங்கள, பாகியன்கலகுகை, குருவிட்டைக்கு அருகிலுள்ள பட்டதொம்ப குகை, கேகாலைக்கு அருகில் உள்ள அத்தனகொடையில் அமைந்துள்ள அலுனெ, பெல்லன்பதி பெல்லச, கித்துல்கல பெலிபெல்லஸ்ஸ ஆகிய இடங்கள் இவற்றுள் சிலவாகும். வரலாற்றுக்கு முற்பட்ட கால மனித எச்சங்கள் பாகியன் கல, பட்டதொம்பக் குகை, பெல்லன் பதி பெல்லச ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. நில்கல, பெலிகல்கே இராவணன் எல்ல ஆகிய குகைகளில் மனிதனுடைய எலும்புத் துண்டுகள் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மக்களுடைய வாழ்க்கை முறை

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதனுடைய வாழ்க்கை முறைபற்றிக் கற்கும் போது அவர்கள் பயன்படுத்திய உணவு, இருப்பிடம், அவர்களுடைய வேலைகளை நிறைவேற்றிக்கொள்வதற்குப் பயன்படுத்திய ஆயுதங்கள் என்பன தொடர்பாகக் கவனம் செலுத்துதல் அவசியமாகும்.




இலவச விநியோகத்திற்காக

அவர்களுடைய இருப்பிடம் அளவில் சிறியதாக காணப்பட்டது. இதிலிருந்து ஒன்று அல்லது இரண்டு குடும்பங்கள் இவ்வீடுகளில் வசித்து இருக்கலாம் எனக் கருதமுடிகிறது. கித்துல்கல அகழ்வின் போது கண்டெடுக்கப்பட்ட உணவு சமைப்பதற்கு பயன்படுத்திய அடுப்பு சற்று சிறியதாகக் காணப்படுவது இவற்றிற்கு சான்று பகர்கின்றன. அது அதிக எண்ணிக்கையிலான குடும்பம் பயன்படுத்துவதற்கு போதுமானதல்ல என்பதை விளக்குகின்றது. உணவு வழங்குதல் இலகுவாக அமைய குடும்ப எண்ணிக்கையை குறைவாக வைத்திருப்பது வசதியாக அமைந்தது. கித்துல்கல அகழ்வின் போது ஒரு கட்டடத்தின் இடிபாடு கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நிர்மாணிப்பு 12500 வருடங்களுக்கு முற்பட்டது என நம்பப்படுகிறது.



உரு 3.2 பலாங்கொடை மனிதனின் கற்பனை உருவம்



உரு 3.3 சிறிய கல்லாயுதங்கள்

பலாங்கொடை மனிதன் முள்ளம் பன்றி, அணில், குரங்கு ஆகிய சிறிய விலங்கினங்களை அதிகளவு உணவாக பயன்படுத்தினான். காட்டுப்பன்றி, மரை போன்ற பெரிய விலங்கினங்களின் இறைச்சியையும் அரிதாக உணவிற்காகப் பயன்படுத்தினான். நீரிலும், மரத்திலும் உள்ள நத்தை வகைகள் உணவில் பிரதான இடத்தினை வகித்தன என்பது கிடைக்கப் பெற்ற ஓடுகளில் இருந்து அறியக் கூடியதாயுள்ளது. தாவர உணவு வகைகளுள் காட்டு வாழை, கெக்குனு விதை, ஆசனிப்பலா விதை என்பனவும், வள்ளிக்கிழங்கு போன்றனவும் உணவிற்காகப் பயன்படுத்தப்பட்டன. இற்றைக்கு 27000 வருடங்களுக்கு முன்பும் உப்பு பயன்படுத்தப்பட்டது என்பதற்கு பெலி குகையிலிருந்து சான்று கிடைத்துள்ளது. பட்டதொம்ப குகை போன்ற நாட்டின் உட்பகுதியில் அமைந்துள்ள இடங்களில் கடற் சிப்பிகளின் ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது கடற்கரைப் பிரதேசத்துடன் தொடர்புகள் பேணப்பட்டன என்பதனைத் தெளிவுபடுத்துகின்றது.

கித்துல்கல பெலி குகை, பட்டதொம்ப குகை, பாகியன்கல குகை, என்பனவற்றில் அக்காலத்தில் இடம்பெற்ற இறந்தவர்களுக்கான மரணச் சடங்கு சம்பிரதாயங்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன. ஒருவர் இறக்க நேரிடும் போது உடலை அப்புறப்படுத்திய பின் அதன் எலும்புகளை எடுத்துச் சென்று ஆழமற்ற குழிகளைத் தோண்டிப் புதைத்து வைத்ததனை அறிய முடிகின்றது. இந்த மண்டையோடுகள் சேற்றுக் கல்லினால் நிறந்தீட்டப்பட்டிருந்தன. பலாங்கொடை மனிதனால் பயன்படுத்தப்பட்ட கேத்திர கணித முறையில் அமைந்த கல்லாயுதங்கள் அகழ்வின் போது கண்டெடுக்கப்பட்டுள்ளன. யாதேனும் கேத்திரக் கணித வடிவத்தைப் பெறும் நோக்குடன் ஆயுதங்களின் ஓரங்கள் மெதுவாக சீவப்பட்ட கல்லாயுதங்கள் சிறிய கல்லாயுதங்கள் என அழைக்கப்பட்டன. ஆயுதங்களை வடிவமைத்தமையால்

அவை கூர்மையுள்ளனவாக இருந்தன. இவற்றை கல்லாயுதங்கள் என வரையறை செய்யலாம். இவை பெரும்பாலும் 2 சென்ரிமீற்றர் அளவைக் கொண்டவை.சில 4.5 சென்ரி மீற்றர் அளவினதாகும்.

மத்திய கற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கல்லினாலான கோடரி, அம்மி, உரல், உலக்கை போன்ற உபகரணங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக பயன்படுத்தப்பட்டனவாகும்.

## ஆரியக் குடியேற்றங்கள் அமைக்கப்படுதல்

### விஜயனின் வருகை


இலங்கையில் ஆரியக் குடியேற்றங்களின் அமைவிடம் தொடர்பாக தொல் பொருள், இலக்கியம் ஆகிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாவம்சம், தீபவம்சம் ஆகிய கர்ண பரம்பரைக் கதைகள் இவற்றுள் பிரதானமானவை. பாகியனின் அறிக்கையிலும் ஹியுங் சாங் என்பவரது அறிக்கையிலும் இலங்கையின் குடியிருப்புகள் தொடர்பான தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ''வலாகஸ்ஸ'' ஜாதகக்கதையும் இலங்கைக்குக் குடிபெயர்ந்தவர்கள் பற்றிய தகவலை வழங்கும் மூலாதாரமாகும்.

கர்ண பரம்பரைக் கதைகளுக்கு ஏற்ப கி.மு 6ஆம் நூற்றாண்டின் நடு அரைப்பகுதியில் முதன்முதலாக இந்தியாவிலிருந்து இடம்பெயர்ந்த மக்கட் குழு இலங்கைக்கு வருகை தந்ததாகத் தகவல்கள் உள்ளன. விஜயன் உள்ளிட்ட குழுவினரே இலங்கைக்கு வந்த முதலாவது குழுவினராகக் கருதப்படுகின்றனர். அவர்கள் ஆரியர் சமூகத்தில் இருந்து வருகை தந்தமையால் அவர்கள் அமைத்த குடியேற்றம் ஆரியக் குடியேற்றம் எனப் பெயர் பெற்றது.

மகாவம்சத்தின்படி விஜயன் இந்தியாவின் லாடா நாட்டின் சிங்கபுரத்தை ஆட்சி செய்த சிங்கபாகு அரசனின் மகனாவான். விஜயன் தனது இளமைக் காலத்தில் துர்நடத்தையும் துர்ப்பழக்கவழக்கங்களும் கொண்டிருந்தமையால் அவனுடைய நடத்தை செயற்பாடு தொடர்பாக மக்கள் மன்னனிடம் முறையிட்டனர். இதனால் விஜயன் உள்ளிட்ட 700 பேர் கொண்ட குழுவினரை மன்னன் நாடு கடத்தியதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இக்குழுவினர் வட இந்தியாவின் லாடா நாட்டிலிருந்து பாருக்கச்ச, சுப்பாரக ஆகிய துறைமுகங்களைக் கடந்து இலங்கையின் வடமேற்குக் கடற்கரையில் மல்வத்து ஓயாவிற்கும் கலா ஓயாவிற்கும் இடையிலான கரையோரத்தில் வந்திறங்கியதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அவர்கள் இந்த இடத்தை தம்பபண்ணி என்று அழைத்தனர்.

மகாவம்சத்திற்கு ஏற்ப இக்குழுவினர் இலங்கைக்கு வருகை தந்தது புத்தர் பெருமான் பரிநிர்வாணம் அடைந்த போயா தினத்திலாகும். புத்தர்பெருமான்

பரிநிர்வாணம் அடைய முன்பு இந்திரனை அழைத்து எதிர்காலத்தில் இலங்கையில் பௌத்த சமயம் நிலைக்கப் போவதாகவும் அதனால் விஜயனையும் அவனது தோழர்களையும் இலங்கையையும் பாதுகாக்கும்படி அவனுக்குக் கூறியதாகவும் அந்தப் பொறுப்பை இந்திரன், உப்புல் தெய்வத்திடம் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உப்புல் தெய்வம் நாடோடித்துறவி ஒருவர் போல வேடமிட்டு வந்து அவர்களுக்குப் பிரித் நூலைக் கட்டி பிரித் பாராயணம் செய்யப்பட்ட நீரைத் தலையில் தெளித்து பாதுகாப்பு வழங்கியதாகவும் மகாவம்சம் கூறுகின்றது.



தேசப்படம் 3.2 இலங்கை இந்தியாவிற்கு அண்மையில் அமைந்தள்ளமை

இலங்கைக்கு வந்த குழுவினர் குவேனியைச் சந்தித்ததாகவும் அவள் தன்னுடைய மாய சக்தியால் விஜயனுடைய குழுவினரை ஒரு பொய்கையில் சிறை செய்ததாகவும் கூறப்படுகின்றது. இறுதியில் அக் குழுவினரை விடுவிக்கச் சென்ற இளவரசன் விஜயன் அக் குழுவினரை மீட்டதுடன் அவர்களுக்கு இலங்கை இராச்சியத்தை வழங்க குவேணி சம்மதித்ததாகவும் மகாவம்சம் கூறுகின்றது.

அதன் பின் குவேனியினால் வழங்கப்பட்ட அரிசியினால் சமைக்கப்பட்ட சோற்றை இக்குழுவினர் உண்டதாகவும், குவேனியால் கைப்பற்றப்பட்ட வியாபாரக் கப்பலில் இருந்து பெறப்பட்ட அரிசியில் இருந்தே இந்த உணவு சமைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.


அன்று இரவு கிரிசவத்துபுற நகரில் விழா ஒன்று நடைபெற்ற வேளை இயக்கர் குலத்தவர்கள் அங்கு ஒன்றுகூடியிருந்ததாகவும் குவேனியின் உதவியுடன் அக்குலத்தினரை விஜயன் தோற்கடித்து இலங்கை இராச்சியத்தைப் பெற்றுக் கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடியேற்றங்களை அமைத்துக் கொண்ட பின்னர் விஜயன் முடிசூட்டிக் கொள்ள வேண்டுமென அமைச்சர்கள் கருதினர். இதற்காக இளவரசன் விஜயனின் விருப்பப்படி இந்தியாவின் மதுராபுரித்தில் இருந்து இளவரசியைக் அழைத்து வந்தனர். முடிசூடிக் கொண்ட விஜய மன்னன் தம்பபண்ணியைத் தனது தலைநகராகக் கொண்டு 38 வருடங்கள் ஆட்சி செய்தான். இவனுடைய அமைச்சர்களும் அனுராத, உபதிஸ்ஸ, உருவெல, விஜித என்ற குடியேற்றங்களை அமைத்தனர்.

## ஆரியக் குடியேற்றங்களின் பரம்பல்

இந்நாட்டில் ஆரியர் குடியேற்றங்களை அமைத்தமை ஒரே தடவையில் நடந்த நிகழ்ச்சியன்று. குடியேற்றங்களை அமைத்தல், பரம்பல் என்பன காலத்துக்குக் காலம் வருகை தந்த இந்திய குடிப்பெயர்வுக் குழுவினரினால் ஏற்பட்டதாக கர்ணப் பரம்பரைக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களிலிருந்து அறியக் கூடியதாய் உள்ளது.

கி.மு 6ஆம் நூற்றாண்டு முதல் இருந்து இந்தியாவில் இருந்து இந்நாட்டிற்கு வருகை தந்த பல குழுவினரைப் பற்றி வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இளவரசன் விஜயன் உட்பட்ட குழுவினர், இளவரசன் விஜயனின் அரசியாக மதுராபுரியில் இருந்து அழைத்து வரப்பட்ட இளவரசி உள்ளிட்ட குழுவினர், பண்டுவாசுதேவன் உள்ளிட்ட குழுவினர், பத்தகச்சனா உள்ளிட்ட குழுவினர், அவளுடைய சகோதரர் உள்ளிட்ட குழுவினர், ஆகியோர் குடியேற்றங்களின் ஆரம்பத்திற்கும் பரம்பலுக்கும் பங்களிப்புச் செய்த பிரதான குடிப்பெயர்வினரெனக் குறிப்பிடலாம்.




*தேசப்படம் 3.3 ஆரியக் குடியேற்றங்களின் பரம்பல்*

இக்குழுவினர் இலங்கையின் வடமேற்கு, கிழக்கு கரைகளில் அமைந்துள்ள துறைமுகங்களில் கரையிறங்கியதுடன், அவர்கள் தமது நிரந்தரக் குடியிருப்புக்களை அமைக்க உலர்வலயத்தைச் சேர்ந்த ஆற்றங்கரைப் பிரதேசங்களைத் தெரிவு செய்தனர். இதற்கான காரணம் அவர்களுக்கு நன்கு பழக்கப்பட்ட விவசாயத் தொழிலை மேற்கொள்வதற்கு ஏற்றதான பௌதிகக் காரணிகள் அப்பிரதேசங்களில் காணப்பட்டமையாகும். சமவெளிப் பிரதேசம் நீர்வசதி, விவசாயத்திற்குப் பொருத்தமான காலநிலை என்பவற்றினை இப்பிரதேசம் கொண்டிருந்தமையால் இப்பிரதேசத்தினைத் தமது குடியிருப்புக்களை அமைப்பதற்குத் தெரிவு செய்தனர்.

விஜயன் உட்பட்ட குழுவினர் இலங்கையின் வடமேற்குக் கரையோரமாகத் தரையிறங்கி அவர்களுடைய குடியிருப்புக்களைக் கதம்ப நதி, கம்பீர நதி, கோண நதி என்பவற்றின் கரைகளில் அமைத்துக் கொண்டனர். மகாவம்சத்திற்கேற்ப இளவரசன் விஜயனால் தம்பபண்ணி குடியிருப்பும் அமைக்கப்பட்டது. அனுராத அமைச்சரால் அனுராதகாமமும், உபதிஸ்ஸ அமைச்சரால் உபதிஸ்ஸ காமமும், உஜ்ஜேனி, உருவெல ஆகிய ஏனைய அமைச்சர்கள் தத்தம் பெயர்களால் குடியிருப்புக்களையும் அமைத்துக் கொண்டனர். இக்குடியிருப்புக்கள் அனைத்தும் மல்வத்து ஓயா, (கதம்ப நதி) கலா ஓயா (கோண நதி) ஆகிய ஆறுகளின் அருகில் அமைக்கப்பட்டிருந்தன.

இதன் பிறகு இளவரசன் விஜயனின் பட்டத்து இராணியாக்க மதுராபுரியில் இருந்து அழைத்து வரப்பட்ட இளவரசி உள்ளடங்கிய குழுவினரும் இங்கு வந்து குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர்.

பண்டுவாசுதேவ அரசனுடைய பட்டத்து இராணியான பத்த கச்சானா உட்பட்ட குழுவினர் இலங்கையின் கிழக்கு கரையில் அமைந்துள்ள கோகர்ணம் (திருகோணமலை) துறைமுகத்தில் கரையிறங்கினர். அவளுடைய சகோதரர்களும் குழுவினரும் இத்துறைமுகத்தினூடாகவே இலங்கையில் குடியேறினர். இந்த இளவரசர்கள் விஜித்தகாமம், ராமகோண, தீக காம, ரோகண ஆகிய குடியேற்றங்களை இலங்கையின் கிழக்கு, தென் கிழக்கு திசைகளில் அமைத்துக் கொண்டனர்.

மேற்குப் பிரதேசத்தில் களனி கங்கையின் கரையில் கல்யாணி என்ற குடியிருப்பும் உருவாகியது. தென்கிழக்குப் பிரதேசத்தில் கிரிந்தி நதிக் கரையில் மகா காமம் என்ற குடியிருப்பும், கபரகந்த நதிக் கரையில் காச்சரகாமம் ஆகிய குடியிருப்புகளும் அமைக்கப்பட்டன. இக்குடியேற்றங்கள் வரலாற்றுக்கு முற்பட்டகால குடியேற்றங்கள் எனக் கருதப்படுகின்றன. ஆரம்ப காலக் குடியேற்றங்கள் நதிக் கரைகளில் அமைக்கப்பட்டதுடன் சனத்தொகை அதிகரிப்புடன் குடியேற்றங்கள் உள்நாடு நோக்கியும் பரவலடைந்தது.

## ஆரியரின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார முறைகள்

ஆரியர்கள் இந்நாட்டில் அமைத்த முதலாவது குடியிருப்பு காமம் (கிராமம்) என அழைக்கப்பட்டது. அனுராத காமம், உபதிஸ்ஸ காமம் ஆகிய குடியிருப்புகள் இதற்கு உதாரணங்களாகும். ஆரியக் குடியிருப்புகள் அமைக்கப்பட்ட பிரதேசங்களின் ஆட்சியாளர் ''காமினி'' என்ற பெயரைப் பெற்றிருந்தார். காலப்போக்கில் காமினிகளுள் பலம் வாய்ந்த ஆட்சியாளன் அரசன் என்ற பெயரால் அழைக்கப்பட்டான்.

ஆரியர்கள் இந்தியாவில் இருந்து வந்து இங்கு குடியிருப்புக்களை அமைத்துக் கொண்ட காலத்தில் விவசாயம், விலங்கு வேளாண்மை, வியாபாரம் போன்ற நடவடிக்கைகள் இந்தியாவில் நிலவின. ஆரியர்கள் இலங்கைக்கு வருகை தந்த பின்பும் அப்பொருளாதார நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டனர். ஆரியர்கள் வாழ்ந்த பிரதேசத்தின் புவியியல் பின்னணியை ஆராய்ந்து பார்க்கும் போது விவசாயத்துக்குப் பொருத்தமான பிரதேசத்தை தெரிவு செய்துள்ளமை தெளிவாகின்றது. பத்தகச்சனாவுடன் வருகை தந்த அவனுடைய சகோதரனான அனுராத என்ற பெயருடையவன் குளம் ஒன்றைக் கட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆரியர்கள் இந்நாட்டிற்கு வந்தபோது வைதீக சமயம் இந்திரன், சூரியன் ஆகிய தேவர்களை வழிபடும் முறைகள் என்பன இந்தியாவில் காணப்பட்டன. அவர்கள் இந்தியாவில் நிலவிய ஜைன சமயம் பற்றியும் அறிந்திருந்தனர். இந்த வழிபாட்டு முறைகள் இலங்கையிலும் பரவி இருக்கலாம். அத்துடன் பௌத்த சமயம் தொடர்பாகவும் அறிந்திருக்கலாம்.

**பயிற்சி :**

1 வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நான்கு இடங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
2 வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய மனிதன் உணவுக்குப் பயன்படுத்திய தாவர உணவு வகைகள் யாவை?
3 ஆரியர் குடியிருப்புக்களின் பரம்பல் தொடர்பான பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| குடியிருப்புக்கள் | அருகிலமைந்த நதியின் பண்டைய காலப் பெயர் | அந்நதியின் தற்போதைய பெயர் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

**செயற்பாடு :**

1 இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர் தொடர்பான தகவல்களைப் பெறக் கூடிய இடங்களைத் தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுக
2 ஆரியர் குடியிருப்புக்களை அமைப்பதற்கு ஆதாரமாயமைந்த ஆறுகளையும் அதற்கு அருகில் அமைந்துள்ள குடியிருப்புகளையும் தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுக.


இலவச விநியோகத்திற்காக

## பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சி வரையிலான அரசியல் வரலாறு

**அரசுரிமை தாபித்தல்** வம்சக் கதைகள், கல்வெட்டுக்கள் ஆகிய வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிடப்படும் தகவல்களுக்கு ஏற்ப அரச பதவி இலங்கையின் முக்கிய அரசியல் முறையாகியது. பௌத்த சமயத்தின் செல்வாக்குடன் மக்கள் சம்மதத்துடன் மக்களின் பாதுகாப்பிற்கும் நலன் பேணலுக்கும் உதவும் பதவியாக அரசன் என்ற பதவி சமூகத்தின் அங்கீகாரத்திற்கு உள்ளாகியது.

இலங்கையின் ஆரம்ப ஆரியர் குடியேற்றங்களின் ஆட்சியாளன் காமினி என்ற பெயரால் அழைக்கப்பட்டான். அத்துடன் ''அரசன்'' என்ற விருதுப் பெயரையும் இந்நாட்டின் ஆட்சியாளர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

முதன் முதலாக இளவரசன் பண்டுகாபயன் மகாவலி கங்கையின் அருகில் குடியேற்றங்களின் ஆதிக்கத்தை உறுதி செய்தபின் மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள குடியிருப்புக்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு அனுராதபுரத்தின் அரசனாக முடி சூட்டிக்கொண்டான். பண்டுகாபய அரசன் சுயாதீனமாகக் காணப்பட்ட இந்தக் குடியிருப்புக்களை ஒன்றிணைத்து அனுராதபுரத்தின் அரசனானமை அரசியல் வரலாற்றில் முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகின்றது. இவன் அனுராதபுரத்தினை நகரத்துக்குரிய அனைத்து அம்சங்களும் கொண்ட முழுமையான நகரமாக உருவாக்கினான்.அவன் இலங்கையின் கிராமிய எல்லைகளை வரையறுத்ததாகவும் மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தேவநம்பியதீசன் மன்னனுடைய அரசாட்சிக் காலம் வரை இந்தியாவில் காணப்பட்ட முடிசூட்டு விழாவைப் போன்ற முடிசூட்டு விழா இலங்கையில் காணப்பட்டதாகத் தகவல் கிடைக்கவில்லை. அசோகச் சக்கரவர்த்தியினால் முடிசூட்டு விழாவின் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்ட பொருட்களை (அரச சின்னங்களைப்) பயன்படுத்தி இரண்டாவது முறையாக தேவநம்பியதீசன் முறைப்படி முடிசூட்டு விழாவை நடத்தினான். அத்துடன் அசோக மன்னன் விரும்பிய ''தேவநம்பிய'' என்ற பட்டப் பெயரையும் சூட்டிக் கொண்டான். அதன் பின் ஆட்சியாளரை அழைப்பதற்கு மகாராஜா என்ற பெயரும் பயன்படுத்தப்பட்டது. முடிசூட்டு விழாவை நடத்துவதற்கு அரசி ஒருவர் இருத்தல் வேண்டும். அரசனின் முதன்மை இராணிக்குப் பட்டத்து இராணி என்ற பெயர் வழங்கப்பட்டது. அனுராதபுரத்தில் இருந்த முதன்மை அரசன் மகாராஜா என அழைக்கப்பட்டான். பிரதேச ஆட்சியாளர்கள் அரசன் என்ற பெயரினால் அழைக்கப்பட்டனர்.

44 வருடங்கள் அனுராதபுரத்தை ஆட்சி செய்த எல்லாளனைத் தோற்கடித்து உருகுணை இராச்சியத்தையும் அனுராதபுரத்தையும் இணைத்துக் கொண்டு துட்டகைமுனு அரசன் இலங்கையை ஒன்றிணைத்தான். இது ஒரே அரசனின் கீழ் இலங்கைத் தீவு முழுவதும் ஆட்சி செய்யப்பட்டமைக்கு உதாரணம் ஆகும்.

பௌத்த சமயத்தின் செல்வாக்கினால் பத்து அரச தர்மத்திற்கு (தசராஜதர்ம) ஏற்ப நாட்டை ஆட்சி செய்வது அரசனுடைய பொறுப்பாகக் கருதப்பட்டது. பிக்குகளின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதும் அரசாட்சியில் முக்கியமானதாகக் கருதப்பட்டது. அரசனுடைய முக்கிய பொறுப்பு உலகம், சாசனம் ஆகிய இரண்டையும் பாதுகாத்தல் ஆகும். இங்கு உலகம் என்பது மக்களையும், சாசனம் என்பது பௌத்த குருமார்களையும் குறிக்கின்றது. மக்களைப் பாதுகாத்தல், குளங்களை அமைத்தல், பௌத்தத்தை பாதுகாப்பதற்கு விகாரைகளை அமைத்தல் என்பன அரசனுடைய முக்கிய கடமைகளாகக் கருதப்பட்டன.

முன்பிருந்த அரசர்கள் பின்பற்றிய ஆட்சிமுறைச் சட்டத்திட்டங்களுக்கு அமைய நாட்டை ஆட்சி செய்வதற்கு அரசர்கள் முயற்சி செய்தனர். இதற்கேற்ப ''முன்னைய பழக்க வழக்கங்கள்'' ஆட்சி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு ஒழுங்கு முறையாகப் பரவிய அரசாட்சி முறையானது பெரும்பாலும் மக்களின் அங்கீகாரமுடைய ஆட்சிமுறையாகக் காணப்பட்டது. நாட்டின் பாதுகாப்பைத் திட்டமிடல், பொருளாதார சமயத் தேவைகளை நிறைவேற்றல் என்பன அரசனால் நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான கடமையாகவும் பொறுப்பாகவும் கருதப்பட்டன.

அரசாட்சியின் போது அமைச்சர்களும் முக்கிய இடத்ததைப் பெற்றிருந்தனர். வம்சக்கதைகளில் ''அமைச்சர்'', "அமெத்த", "அமெதி" என்ற பெயர்கள் அவர்களை அழைப்பதற்கு பயன்படுத்தப்பட்டன.

அரசுரிமை தொடர்பில் சகோதரனிடம் இருந்து சகோதரன் அல்லது தந்தையிடமிருந்து மகன் அரசுரிமையைப் பெற்றுக் கொள்ளுதல் அங்கீகரிக்கப்பட்டதாக விளங்கியது.

### பண்டுகாபய அரசனும் அவனது வழித்தோன்றல்களும்

அரசன் பண்டுகாபயன் தொடர்பான விளக்கங்கள் மகாவம்சம் , தீபவம்சம் ஆகிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. பண்டுகாபயனுடைய தந்தை தீககாமினியாகும். இவர் பத்தகச்சானாவின் ஒரு சகோதரருடைய மகன் ஆவார். பண்டுகாபய இளவரசனின் தாயார் உன்மாத சித்திராவாகும் இதன்படி இளவரசன் பண்டுகாபயன் ஆரம்ப ஆரியர் குழுவின் பரம்பரையைச் சேர்ந்தவனாவான்.

இளவரசன் பண்டுகாபயன் தாயின் சகோதரர்கள் பலருடனும் போர் செய்து அவர்களைத் தோற்கடித்து அனுராதபுரத்தின் அரசனானான். ஆரியக் குடியேற்றங்கள் பலவற்றை ஒன்றிணைத்து ஒற்றையாட்சி உருவாகுவதற்கு இவர் ஆற்றிய சேவை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அனுராதபுரத்தை ஆட்சியின் மத்திய நிலையமாகத் தெரிவு செய்த இவனே அனுராதபுர இராச்சியத்தின் ஆரம்ப ஆட்சியாளனாவான். ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாக முறை அரசன் பண்டுகாபயனால் ஏற்படுத்தப்பட்டது. அனுராதபுர நகரம், வீதிகள், இறந்தவர்களை அடக்கம் செய்யும் மயான பூமி ஆகிய

அம்சங்களைக் கொண்ட திட்டமிடப்பட்ட நகரமாக அமைக்கப்பட்டது. இவ்வரசன் தனது ஆட்சியின் பத்தாவது ஆண்டில் நாட்டின் கிராமங்களின் எல்லைகளை வகுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ''நகரகுத்திகன்'' என்ற பதவியும் நகர பரிபாலனத்திற்காக ஏற்படுத்தப்பட்டது. இப்பதவிக்கு அபய இளவரசன் நியமிக்கப்பட்டான். 70 ஆண்டு காலம் பண்டுகாபயன் நாட்டை ஆட்சி செய்தான்.

பண்டுகாபயனுக்கு பின் அவனுடைய மகன் மூத்தசிவன் அரசன் ஆனான். பின்னர் அவனது புதல்வனான திஸ்ஸ (தீசன்) அரசனானான். இந்த அரசனின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் மௌரியப் பேரரசுடன் நட்புறவு நிலவியது. இளவரசன் திஸ்ஸ ஆட்சிக்கு வந்த பின்னர் இந்தியாவின் அசோகசக்கரவர்த்தியிடம் பல்வேறு அன்பளிப்பு பொருட்களுடன் தூதுக் குழுவை அனுப்பியதுடன் தீசனின் முடிசூட்டு விழாவைச் சம்பிரதாய முறைப்படி நடாத்துவதற்குத் தேவையான அரச சின்னங்களை இந்த தூதுவர்களிடம் அசோக மன்னன் அனுப்பி வைத்தார். சத்திரியர்களின் முடிசூட்டு விழா வைபவம் தேவநம்பியதீசன் மன்னனின் காலத்திலேயே ஆரம்பமானது. அன்று முதலே ''தேவநம்பிய'' என்ற பட்டப் பெயரும் தீசனுக்குப் பயன்படுத்தப்பட்டது.

மகிந்ததேரர் உள்ளிட்ட குழுவினர் இலங்கைக்கு வருகை தந்தமை, இலங்கையில் புத்த சாசனம் அமைக்கப்பட்டமை, பிக்குணி சங்கமித்தை இலங்கைக்கு வருகை தந்தமை, அதன் பின்பு புத்தசாசனத்தை அமைத்தமை, புனித வெள்ளரச மரக்கிளையை நாட்டியமை என்பன தேவநம்பியதீசனுடைய காலத்தில் இடம் பெற்ற முக்கிய சமய நிகழ்ச்சிகளாகும். இலங்கைக் கலாசாரத்தில் புத்துணர்வு ஏற்படுவதற்கு இவை காரணமாகின.

தேவநம்பியதீச மன்னனுக்குப் பின் அவனுடைய சகோதரன் இளவரசன் உத்திய அரசனானான். அவனின் மரணத்தின் பின்னர் அவனுடைய சகோதரன் மகாசிவனும் அதன் பின் சூரதிஸ்ஸ இளவரசனும் அரசனாகினர். சூரதிஸ்ஸ மன்னனுடைய காலத்தில் சேன, குத்திகன் ஆகிய இரு தென்னிந்திய குதிரை வியாபாரிகள் இலங்கையைக் கைப்பற்றி 22 வருடங்கள் ஆட்சி செய்தனர்.


இந்த ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து இளவரசன் அசேலன் நாட்டைக் கைப்பற்றி 10 வருடங்கள் ஆட்சி செய்தான். அசேலனுடைய காலத்தில் எல்லாளன் என்ற சோழ மன்னன் இலங்கையை ஆக்கிரமித்து அனுராதபுர ஆட்சியைக் கைப்பற்றினான். எல்லாள மன்னன் 44 வருடங்கள் ஆட்சி செய்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. அரசன் எல்லாளன் நீதியான ஆட்சியாளன் என மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எல்லாளன் அனுராபுரத்தை ஆட்சி செய்த காலத்தில் கிரிந்தி ஓயா நதிக் கரையில் மாகமத்தை (மகாகாமம்) தலைநகராகக் கொண்டு மன்னன் காவந்தீசன் உருகுணையை ஆட்சி செய்தான். அம்மன்னனின் மனைவி விகாரமகாதேவியாவார். இவர்கள் இருவருக்கும் கைமுனு, திஸ்ஸ என இரு புதல்வர்கள் இருந்தனர். இளவரசன் கைமுனு இளமைக் காலம் தொட்டு சோழர்களிடம் இருந்து நாட்டை மீட்க வேண்டும் என்ற எண்ணத்துடன் காணப்பட்டான்.

காவந்திசன் அரசனுக்குப் பின் உருகுணைக்கு அரசனான கைமுனு எல்லாளனைத் தோற்கடித்து இலங்கை முழுவதையும் தனது ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான்.

எல்லாளனைத் தோற்கடித்த பின் சோழருக்கு எதிராக இன்னுமொரு படையெடுப்பை மேற்கொள்ள துட்டகை முனுவுக்கு நேர்ந்தது.

விஜித்தபுர போரின் போது தோல்வி அடைந்த எல்லாள மன்னன் உதவி கேட்டு இந்தியாவுக்கு அனுப்பிய செய்திக்கு விடையாக பல்லூகனுடைய தலைமையில் இந்தியாவிலிருந்து வந்த படையுடன் துட்டகைமுனு மோத வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்தப் போரில் துட்டகைமுனு வெற்றி அடைந்தான்.




தேசப்படம் 3.4 - துட்டகைமுனு அரசனின் படைகள் பயணம் செய்த பாதையை காட்டும் படம்

அந்நியரிடம் இருந்து நாட்டை மீட்டு முழு நாட்டையும் ஒன்று படுத்தி ஆட்சி செய்த ஆட்சியாளனாக துட்டகைமுனு அரசன் முக்கிய இடத்தை வகிக்கின்றான்.

கி.மு 161 தொடக்கம் 137 வரையில் 24 வருடங்கள் இலங்கையை ஆட்சி செய்த இம்மன்னன் இக்காலப்பகுதியில் பௌத்த சமய வளர்ச்சிக்காகப் பெரும் பணியாற்றினான். அனுராதபுரத்தில் மிரிசவெட்டி, ருவன்வெலிசாய, லோவமகாபாய ஆகிய சமய வழிபாட்டிடங்கள் இவனால் கட்டுவிக்கப்பட்டன.

அனுராதபுரக் காலத்து அரசர்களுள் வலகம்பா மன்னன் செய்த அரசியல் சேவையும் மிக முக்கியமானதாகும்.

கி.மு 109 தொடக்கம் 103 வரையான காலத்தில் கல்லாட நாகன் ஆட்சி செய்தான்.இவனது காலத்தில் மகாரத்தக்க என்ற சேனாதிபதி அரசுரிமையைப் பறித்துக் கொண்டான்.ஆட்சியைப் பறித்துக்கொண்ட போதிலும் இவன் மிகக் குறைவாக அதாவது 5 நாட்கள் மட்டுமே ஆட்சி செய்தான். சத்தாதிஸ்ஸ மன்னனின் இளைய புதல்வனான வட்டகாமினி (வலகம்பா) மகாரத்தக சேனாதிபதியைத் தோற்கடித்து கி.மு 103இல் அரசனானான். தமது பரம்பரைக்கு சொந்தமான அரசுரிமையை மீண்டும் பெற்றுக் கொள்வதில் இவன் வெற்றி பெற்றான்.



இலவச விநியோகத்திற்காக

வலகம்பா மன்னன் ஆட்சிக்கு வரும் போது அரசியலில் ஒரு குழப்ப நிலை நிலவியது. உருகுணை இராச்சியத்தின் நகுல கிராமத்தில் தீய அல்லது திஸ்ஸ என்ற பிராமணன் கிளர்ச்சியை ஏற்படுத்தினான். நாட்டில் இவ்வாறான நிலைமைகள் நிலவுகையில் தென்னிந்தியாவிலிருந்து வந்த ஏழு பேரைக் கொண்ட குழுவினர் இலங்கையை ஆக்கிரமித்துக்கொண்டனர். இவ்வாறான ஆக்கிரமிப்பாளர்களில் ஒருவர் சோமாதேவியையும் இன்னொருவர் பாத்திர தாதுவையும் எடுத்துக்கொண்டு மீண்டும் இந்தியாவிற்கு சென்றனர். தாடியன், புலகத்தன், பாஹியன், பனையமாரன், பிளையமாரன் ஆகியோர் ஒருவரையொருவர் கொன்று 14 வருடம் அனுராதபுரத்தை ஆட்சி செய்தனர்.

அரசன் பாதுகாப்பிற்காக மலையரட்டைக்குச் சென்று ஒளிந்தான். அப்போது குப்பிகல மகாதிஸ்ஸ என்ற பிக்கு அரசருக்கு உதவி செய்தார். பெரும் இன்னல்களுக்கு மத்தியில் பௌத்த பிக்குகளினதும் மலைய தேசத்தின் ''தனசீவ'' என்ற பிரதேச ஆட்சியாளரின் உதவியுடனும் படைகளைத் திரட்டிக் கொண்டு கி.மு 89 இல் வலகம்பா மன்னன் ஆட்சியை மீண்டும் பெற்றுக் கொண்டான். அரசாட்சிக்கு வந்தவுடன் வலகம்பா அபயகிரி விகாரையை அமைத்து ஒளிந்திருக்கும் போது தமக்கு உதவி வழங்கிய மகாதிஸ்ஸ பிக்குவிற்கு அர்ப்பணித்தான். இது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட (பிக்கு ஒருவருக்கு செய்த) முதலாவது தனிப்பட்ட விகாரை அர்ப்பணமாகும். அபயகிரி விகாரையை இவ்வாறு அர்ப்பணம் செய்தமை பௌத்த சமயத்தில் முதலாவது பிரிவினைக்கு (நிகாய பேதம்) அடிப்படையாகியது.

இது வரை பரம்பரை பரம்பரையாக பேணப்பட்டு வந்த திரிபிடகம் மாத்தளை அலுவிகாரையில் நூல்வடிவம் பெற்றது இவ்வரசனுடைய காலத்திலாகும். வலகம்பா மன்னன் எதிரிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாத்து கி.மு 89 தொடக்கம் 77 வரை ஆட்சி செய்தான்.

அனுராதபுரக் கால அரசியல் வரலாற்றை கற்கையில் வசப மன்னன் ஆட்சிக்கு வந்தமை இன்னொரு புதிய அரச பரம்பரையை உருவாக்கியமையால் மிக முக்கிய இடம் வகிக்கின்றது. வசப மன்னன் இலம்பகர்ணவம்சத்தின் முதல் ஆட்சியாளனாவான். வசப மன்னனுடன் ஆரம்பமான இலம்பகர்ண வம்சம் 370 வருடங்களுக்கு அதிகமாக நின்று நிலைத்தது. வசப மன்னன் கி.பி 65 தொடக்கம் 109 வரை 44 வருடங்கள் நாட்டினை ஆட்சி செய்தான். வசப மன்னனுடைய ஆட்சிக் காலத்துக்குரிய கல்வெட்டுக்கள் வடக்கில் யாழ்பாண தீபகற்பத்திலும் தெற்கில் சித்துள் பவ்வ, திஸ்ஸமகாராம ஆகிய இடங்களிலும், கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் மேற்கில் குருணாகல் மாவட்டத்திலும் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை வசப மன்னனின் ஆட்சி இலங்கை முழுவதிலும் பரவியிருந்தமைக்கு சான்றுகளாகின்றன.

குளங்கள், நீர்ப்பாசனக் கால்வாய்கள் பலவற்றை அமைத்து விவசாய அபிவிருத்திக்கும் விகாரைகள் முதலியவற்றை அமைத்து புத்த சாசனத்தின் வளர்ச்சிக்கும் இவ்வரசன் பெரும் பணியாற்றியுள்ளான்.

கி.பி 276 தொடக்கம் 303 வரை இலங்கையை ஆட்சி செய்த மகாசேனன் ஆட்சிக் காலம் வரலாற்று ரீதியாக முக்கியமானது. இவன் கோத்தாபய மன்னனுடைய இளைய புதல்வன் ஆவான். இவனுக்குத் தென்னிந்தியாவில் இருந்து வந்த சங்கமித்திர என்ற வைத்துல்ய வாத (மாகாயானம்) பிக்கு கலைகளை கற்பித்தார். இப்பிக்குவின் ஆதிக்கத்தினால் மகாசேன மன்னன் மகாயான பௌத்தத்தைப் பரப்புவதற்கு அனுசரணை வழங்கினார். அரச அனுசரணை கிடைத்தமையால் மகாயான பௌத்தம் பரவ ஏதுவாகியது.

அத்துடன் மகாவிகாரைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அரசைத் தூண்டி விடுவதற்கு சங்கமித்திர பிக்கு முற்பட்டார். மகாவிகாரை பிக்குகளுக்கு தானம் கொடுப்பவர்களுக்கு தண்டனை வழங்கவும் கட்டளையிடப்பட்டது. இதனால் மகாவிகாரை பிக்குகள், உருகுணை, மலய பிரதேசங்களுக்குச் சென்றமையால் அனுராதபுர மக்களுக்கு வழிகாட்டுவதற்கு எவரும் இருக்கவில்லை. இதனால் அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்தனர்.

மேகவர்ணாபய என்ற அமைச்சர் இக்கிளர்ச்சிக்கு தலைமை தாங்கினார். பின் மேகவர்ணாபயனுக்கும் அரசனுக்கும் இடையில் ஏற்பட்ட கலந்துரையாடலின் விளைவாக கிளர்ச்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன் பின் அரசன் மகாவிகாரையை புனருத்தாரணம் செய்தார்.

மகாசேன மன்னன் மகாவிகாரை எல்லையினுள் ஜேத்தவனராம என்ற விகாரையை அமைத்து சாகலிக என்ற சமயப் பிரிவினருக்கு கையளித்தார். இவ்வாறு அமைக்கப்பட்ட ஜேத்தவனராம இலங்கையின் மிக பெரிய தூபியாகும்.

சமய ரீதியாக ஏற்பட்ட இந்நிலைமை இலங்கையின் அரசியலிலும் தாக்கத்தை ஏற்படுத்தி கிளர்ச்சி போன்றவை ஏற்படுவதற்கு ஏதுவாகியது. இவ்வாறான நிலைமைகள் இருந்த போதும் இவ்வரசன் மின்னேரியா, மாகல்ல, குருளுவாவி ஆகிய குளங்களை அமைத்து விவசாய விருத்திக்கு பங்களிப்புச் செய்தான். ஜேத்தவனராமை, மின்னேரியா விகாரை, கோகண்ண விகாரை, கலன்தக விகாரை என்பன இவனால் கட்டப்பட்டவையாகும்.

மகாசேன மன்னனால் விவசாயத்திற்கு செய்யப்பட்ட முக்கிய சேவையாக விளங்குவது மின்னேரியக் குளத்தை அமைத்து அப்பிரதேசத்தை விருத்தி செய்தமையாகும். இதனால் இவன் ''மின்னேரியாத் தெய்வம்''என அழைக்கப்பட்டான்.

மித்சென் மன்னனுடைய காலத்தில் மீண்டும் தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர் சிலர் இலங்கையை ஆக்கிரமித்து ஆட்சியைக் கைப்பற்றினர். பண்டுபாரித்த, குட்டபாரிந்த, திரிதர, தாடிகன், பீடிகன் என்ற பெயர்களுடைய இவர்கள் முறையே 27 வருடங்கள் அனுராதபுரத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர்.

இத்தென்னிந்திய ஆட்சியாளர்களைத் தோற்கடித்து இராசரட்டையை மீண்டும் இளவரசன் தாதுசேனன் கைப்பற்றினான். இவன் மௌரிய அரச வம்சத்தைச் சேர்ந்தவன். இளமைக் காலத்தில் எதிரிகளிடமிருந்து பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வதற்காக தனது மாமனாகிய பௌத்த பிக்குவுடன் அனுராதபுர விகாரையொன்றில் துறவியாக இருந்ததாகக் கூறப்படுகின்றது. எதிரிகளுக்கு அருகில் வசிப்பது அவ்வளவு பாதுகாப்பானதல்ல என்பதால் கலா ஓயாவின் வலது பக்க விகாரைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். பின் துறவு வாழ்வை விட்டு படை திரட்டும் வேலையில் ஈடுபட்டான். திராவிட ஆட்சியாளரைத் தோற்கடித்து கி.பி 459இல் அரசனாகினான். திராவிடர்களைத் தோற்கடித்து இலங்கையில் ஆட்சியை நிறுவியமை இவர் செய்த பாரிய அரசியல் சேவையாகும். கலா வாவியை அமைத்ததுடன் யோதஎல கால்வாய் என்ற ஜயகங்கைக் கால்வாயை அமைத்ததன் மூலம் விவசாய வளர்ச்சிக்குப் பாரிய சேவையாற்றியுள்ளான்.

தாதுசேன மன்னன் தனது இரண்டாவது மனைவியின் மகன் காசியப்பனால் மரணமடைந்தான் என்று வரலாறு கூறுகின்றது. காசியப்பன் ''மிகார'' என்ற சேனாதிபதியின் ஆலோசனைப்படி செயற்பட்டதாகக் கூறப்படுகின்றது. மிகாரன், தாதுசேன மன்னனின் மருமகனாக இருந்ததுடன் இவன் அரசனுடன் வெறுப்புணர்வைக் கொண்டவனாகக் காணப்பட்டான். காசியப்பன் ஆட்சிப்பலத்தைப் பெற்றுக் கொண்டபோது ஆட்சிக்கு சட்ட பூர்வமாக உரித்துடைய பட்டத்து இராணியின் மகன் முகலன் இராச்சியத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் படை திரட்டுவதற்கு இந்தியாவிற்குச் சென்றான். சகோதரனிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டுத் தனது ஆட்சியின் மத்திய நிலையமாக அனுராதபுரத்தில் இருந்து சற்றுத் தூரத்தில் காணபட்ட சீகிரியக் குன்றைத் தெரிவு செய்தான்.

காசியப்ப மன்னன் அங்கு கோட்டையை அமைத்து குன்றின் உச்சியில் அரசமாளிகை, மற்றும் கட்டடங்கள் என்பவற்றை நிர்மாணித்தான். இவற்றின் சிதைவுகளை இன்றும் காணக் கூடியதாக உள்ளது.

அரச சபை மண்டபம், நீர்ப் பூங்கா, சுவர் ஓவியம், கண்ணாடிச் சுவர் ஆகியவை இவற்றுள் முக்கியமானவை. சீகிரிய இராசதானி கோட்டை போன்றவற்றுடன் கலையம்சங்களிலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

கி.பி 477 தொடக்கம் 495 வரையிலான 18 வருடங்கள் காசியப்பனின் ஆட்சிக் காலமாகக் கருதப்படுகின்றது.

கி.பி 495இல் இளவரசன் முகலன் சேனையுடன் வந்து காசியப்பனைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான்.

அனுராதபுரக் கால அரசர்களுள் முதலாம் அக்போ அரசனும் முக்கியமானவன்

ஆகும். இவன் நீர்ப்பாசனத் துறையை விருத்தி செய்து விவசாயத்திற்கு பாரிய சேவையாற்றியுள்ளான். இவனது ஆட்சிக் காலம் கி.பி 575 - 608 வரையுமாகும்.இது அமைதியும் செழிப்பும் நிறைந்த காலமாகும். முதலாம் அக்போவைத் தொடர்ந்து இரண்டாம் அக்போ அரசனானான். (கி.பி 608 தொடக்கம் கி.பி 618 வரை) இவ்வரசன் குளங்களை அமைத்து விவசாயத்தை மேம்படுத்தினான். கந்தளாய், கிரித்தளை வாவி என்பன இவனுடைய ஆட்சிக்காலத்தில் நிறைவு பெற்ற நீர்ப்பாசன அமைப்புகளாகக் குறிப்பிடலாம். வலாகஸ்ஸ வாவி இவனுடைய காலத்தில் புனரமைப்புச் செய்யப்பட்டது.

இவனுடைய ஆட்சிக் காலத்தில் கலிங்க தேசத்து அரசன் தனது மனைவியுடனும் அமைச்சனுடனும் பாதுகாப்புத் தேடி இலங்கைக்கு வந்திருந்தான். இதிலிருந்து இவ்வரசன் கலிங்க தேசத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தமை தெரிய வருகின்றது.


அனுராதபுரக் காலத்தின் இறுதி அரைப்பகுதியில் ஆட்சிக்கு வந்த அரசர்களுள் நான்காம் மகிந்தனை சிரேஷ்ட ஆட்சியாளன் எனக் குறிப்பிடலாம். கி.பி 956 - 972 வரையான காலம் இம்மன்னனுடைய காலமாகும். இவனுடைய பட்டத்து இராணியாக கலிங்க தேச அரச குமாரி விளங்கினாள். நான்காம் தப்புள, மூன்றாம் உதயன், மூன்றாம் சேனன், நான்காம் உதயன் ஆகிய அரசர்களின் கீழ் முப்பது வருடங்கள் உருகுணைப் பிரதேசத்தை ஆட்சி செய்தான். நான்காம் சேன மன்னனின் ஆட்சிக் காலத்தில் இவன் யுவ ராஜாவாகவும் விளங்கினான். இம்மன்னன் ஆட்சிக்கு வந்ததும் கிளர்ச்சி ஒன்று ஏற்பட்டபோதிலும் மன்னனால் அது அடக்கப்பட்டது. இவனின் ஆட்சிக் காலத்தில் பராந்தகன் என்ற சோழ மன்னனின் ஆக்கிரமிப்பிற்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. மூன்றாம் கிருஷ்ணன் என்ற இராஷ்டிரகூட அரசன் வட பிரதேசத்தை ஆக்கிரமிப்பிற்கு உட்படுத்தினான். இவ்வாறான படையெடுப்புக்களை முறியடித்து அதிகாரத்தை நிலைநாட்டுவதில் மன்னன் வெற்றி கண்டான்.

அனுராதபுரத்தின் இறுதி அரசனாக ஐந்தாம் மகிந்தன் கி.பி 982 தொடக்கம் 1017 வரை ஆட்சி செய்தான். இவன் திறமையான மன்னன் அல்ல. மக்களிடம் வரி அறவிடக்கூட முடியாதவனாக இருந்தான். கூலிப்படையினருக்கு சம்பளம் வழங்க முடியாமையால் அவர்கள் அரச மாளிகையைச் சுற்றி வளைத்து சம்பளம் வழங்குமாறு வற்புறுத்தினர். இதனால் இவன் கி.பி 992 இல் உருகுணைக்குத் தப்பி ஓடினான். இதனால் இராசரட்டைப் பிரதேசத்தில் குழப்ப நிலை உருவானது.

கி.பி 993 இல் முதலாம் இராஜராஜ சோழ மன்னன் இலங்கையை ஆக்கிரமித்தான். சோழர்கள் நாட்டின் இராசரட்டை பிரதேசத்தைத் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்து மும்முடிச் சோழ மண்டலம் என்று பெயர் சூட்டினர். பொலன்னறுவையை ஆட்சி மையமாகத் தெரிவு செய்து ஜனநாத மங்களம், ஜனநாதபுரம் என்ற பெயர்களால் அதனை அழைத்தனர்.

## பொலன்னறுவைக் கால முக்கிய ஆட்சியாளர்கள்

கி.பி 1017இல் முதலாம் இராஜேந்திரன் இலங்கையை ஆக்கிரமித்து அரசன் மகிந்தனைச் சிறைப்பிடித்து சோழ நாட்டிற்குக் கொண்டு சென்றான். கி.பி 1029இல் அரசன் மகிந்தன் அங்கு இறந்தான். கி.பி 1018 - 1070 வரை இராசரட்டைப் பிரதேசத்தைக் கைப்பற்றி சோழர் ஆட்சி செய்தனர். அவர்களை விரட்டி விட்டு இலங்கையை மீண்டும் சோழர்களிடம் இருந்து மீட்டு எடுத்தவன் முதலாம் விஜயபாகு ஆவான். இவன் இளமைக் காலத்தில் கித்திக் குமரன் அல்லது கீர்த்தி எனப்பட்ட பெயரால் அழைக்கப்பட்டான். இவனது தந்தையார் பெயர் மகாசாமி மொகல்லான தாய் லோகிதா தேவியாகும். கீர்த்தி குமாரனுக்குப் புத்தராஜன் என்னும் புதல்னா எனப்பட்ட சேனாதிபதி பாதுகாப்பு வழங்கினான். கீர்த்தி, புத்தராஜனின் உதவியுடன் கேசதாது காசியப்பனைத் தோற்கடித்து கி.பி 1055இல் கதிர்காமத்தை நிர்வாக மையமாகக் கொண்டு முதலாம் விஜயபாகு என்ற பெயருடன் உருகுணையின் ஆட்சியாளனானான்.




தேசப்படம் 3.5 விஜயபாகுவின் சேனைகள் பயணம் செய்த பாதையைக் காட்டும் படம்

சோழர்கள் விஜயபாகுவை அடக்கும் பொருட்டு உருகுணையை ஆக்கிரமித்தனர். இச்சந்தர்ப்பத்தில் அரசன் எதிரிகளுக்கு முகம் கொடுக்காது, தமது படைகளின் பலம் அழிவதைத் தவிர்ப்பதற்காக நிர்வாக மையத்தை வேறு இடத்திற்கு மாற்றினான். சோழர்கள் மீண்டும் விஜயபாகுவிற்கு எதிராக ஆக்கிரமிப்பை மேற்கொண்டனர். இவ்வேளையில் விஜயபாகுவின் வீரர்களான ரவி தேவ, சல ஆகிய இருவரும் சோழர்கள் பக்கம் சேர்ந்தனர். அரசன் பலுட்ட கிரி என்ற இடத்திற்குப் பின்வாங்கினான். பின் மீண்டும் சோழர்களைத் தோற்கடித்து பொலன்னறுவையைத் தற்காலிகமாக கைப்பற்றினான். இருப்பினும் சோழர்களுக்கு மீண்டும் உதவிச் சேனை கிடைத்தமையால் முதலாம் விஜயபாகு மன்னன் வாகிரிகலையை நோக்கிப் பின்வாங்கவேண்டியேற்பட்டது.

விஜயபாகு மீண்டும் சேனையை ஒழுங்கமைத்து உருகுணையில் மகாநாககூல என்னும் இடத்தில் இருந்து மூன்று வழிகளில் சேனைகளை அனுப்பி கி.பி 1070இல் மீண்டும் பொலன்னறுவையைக் கைப்பற்றி நாட்டை ஒன்றிணைத்தான்.

கி.பி 1017 தொடக்கம் - 1070 வரை நிலவிய சோழர் ஆட்சியில் இருந்து பொலன்னறுவையைக் கைப்பற்றியமை அரசன் முதலாம் விஜயபாகுவினால்

மேற்கொள்ளப்பட்ட பிரதான அரசியல் சேவையாகும். மகாவம்சத்தின் இரண்டாம் பகுதி, பனாக்கடுவ செப்பேடு, அம்பகமுவ கல்வெட்டு என்பன இவ்வரசன் பற்றிய தகவல்களை வெளியிடும் பிரதான மூலங்களாகும். நீர்ப்பாசனத்தைப் புனருத்தாரணம் செய்து நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பியதுடன் புத்தசாசன வளர்ச்சிக்காக இவ்வரசனால் பாரிய சேவையாற்றப்பட்டது. இவ்வரசன் சோழர்களின் அச்சுறுத்தலுக்கு உட்பட்டமையால் கலிங்க தேசத்துடனும் பாண்டிய தேசத்துடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டான். திரிலோக சுந்தரி என்ற பெயருடைய கலிங்க இளவரசியைத் திருமணம் செய்து கொண்டான். தனது சகோதரியான மித்தா இளவரசியை பாண்டிய இளவரசனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். பர்மாவுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டமையால் அரசனுக்கு உதவும் பொருட்டு பர்மாவில் இருந்து வியாபாரப் பொருட்களை ஏற்றிக் கொண்டு கப்பல்கள் இங்கு வந்தன. முதலாம் விஜயபாகுவிற்கு பின் அவனால் ஒன்றிணைக்கப்பட்ட நாடு மீண்டும் பிரிவினைக்கு உள்ளாகியது. இவ்வாறு பிரிவினைக்கு உள்ளாகிய நாட்டை மீண்டும் ஒன்று படுத்திய அரசன் மகாபராக்கிரமபாகுவான். கி.பி 1153 - கி.பி 1186 வரை) மகாவம்சத்தின் இரண்டாம் பகுதி தெவனகல கல்வெட்டு, கல்விகாரை சுவர்க்கல்வெட்டு, சங்கமுவிகாரைக் கல்வெட்டு என்பன இந்த அரசன் தொடர்பான தகவல்களை வெளியிடும் பிரதான மூலங்களாகும்.

கீர்த்தி ஸ்ரீ மேகன் என்ற பெயருடைய சிறிய தந்தையின் உதவியுடன் இளவரசன் மகாபராக்கிரமபாகு தக்கண தேசத்தின் ஆட்சியாளனானான். இதன் தலைநகரமாக பராக்கிரமபுரம் விளங்கியது. இது இன்றைய பண்டுவஸ்நுவர பிரதேசமாகும். இதன் பின் இவன் மலையரட்டை என்று அழைக்கப்பட்ட பிரதேசத்தையும் தனது ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான். இதற்கிடையில் பொலன்னறுவையையும் தாக்கினான். பொலன்னறுவையைக் கைப்பற்ற எண்ணியிருந்த இரண்டாம் கஜபாகு மன்னுடனும் உருகுணு மன்னனுடனும் முதலாம் பராக்கிரமபாகு மோத வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு பராக்கிரமபாகுவிற்கும் கஜபாகுவிற்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினைக்கு மத்தியில் இருவருக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டதென கூறப்படுவதுடன் சங்கமு விகாரை கல்வெட்டு இதனை மேலும் நிரூபிப்பதாக உள்ளது. இவ்வொப்பந்தப்படி இரண்டாம் கஜபாகு மன்னனின் மரணத்தின் பின் பொலன்னறுவையின் சிம்மாசனம் அரசன் பராக்கிரமபாகுவிற்கு உரியதாக இருந்தபோதிலும் மானாபரணன் இடையில் குறுக்கிட்டமையால் அவனைத் தோற்கடித்து பொலன்னறுவை இராச்சியத்தைப் பெற வேண்டிய நிலை பராக்கிரமபாகுவிற்கு ஏற்பட்டது.

மானாபரணனுக்குப் பின் உருகுணை சுகலாதேவியின் கீழ் ஆட்சி செய்யப்பட்டது. தந்ததாது, பாத்திரதாது என்பவை சுகலாதேவியின் கீழ் இருந்தமையால் தனது ஆட்சியை உறுதி செய்து கொள்வதற்குப் பராக்கிரமபாகுவிற்குத் தடையாக அமைந்தது. இதனால் உருகுணையை ஆக்கிரமித்து சுகலாதேவியைத் தோற்கடித்து தந்ததாதுவையும் பாத்திரதாதுவையும் பெற்றுக்கொண்டதுடன், அரசாட்சியையும் பராக்கிரமபாகு உறுதிப்படுத்திக் கொண்டான்.

பராக்கிரமபாகு பர்மாவை ஆக்கிரமித்துக் கைப்பற்றி வெற்றிபெற்றதுடன் பாண்டிய நாட்டில் சிம்மாசனம் தொடர்பாக ஏற்பட்ட போராட்டத்தில் பராக்கிரம

பாண்டியனின் வேண்டுகோளின்படி பராக்கிரமபாகு படைகளை அனுப்பி வைத்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. விவசாயத்தின் பொருட்டு இவ்வரசனால் பாரிய சேவையாற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. மூன்று சமயப் பிரிவினரையும் ஒற்றுமைப்படுத்தி விகாரை அமைத்து புத்த சாசனத்தின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டான்.

முதலாம் பராக்கிரமபாகுவிற்குப் பின் ஆட்சி உரிமையைப் பெற மகன் அல்லது சகோதரன் இன்மையால் அவனது தங்கையின் மகன் இரண்டாம் விஜயபாகு அரசனானான். அவனுடைய ஆட்சிக்காலம் ஒரு வருடம் மாத்திரமே நிலைத்தது. அதன் பின் ஆறாம் மகிந்தன் அரசனானான். இவனுடைய ஆட்சிக்காலம் ஐந்து நாட்கள் மட்டும் நிலைத்தது.

கி.பி 1187இல் அரசன் நிஸ்ஸங்கமல்லன் அரசனானதுடன். கி.பி 1196 வரையில் அவன் ஆட்சி புரிந்தான். அவன் கலிங்க வம்சத்தைச் சேர்ந்தவன்.

முதலாம் பராக்கிரமபாகுவினால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் ஐக்கியத்தை மேலும் இவனால் நிலைநிறுத்திக் கொள்ளக் கூடியதாக இருந்தது. கலிங்க வம்சத்தினருக்கு அரசாட்சியில் உள்ள உரிமையைக் கல்பொத கல்வெட்டு உட்பட கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ளான். அதிக அளவிலான கல்வெட்டுக்களை அமைத்தது இவ்வரசனேயாவான். அவனுடைய நீண்ட கல்வெட்டு ''கல்பொத'' கல்வெட்டாகும்.

தொலைதூர இடங்களிலிருந்து வருகின்ற மக்களுடன் தொடர்பை வைத்துக்கொள்ள இவ்வரசன் முயற்சி எடுத்துள்ளான். உருகுணை, மாயா, மிஹிட்டி பிரதேசங்களுக்கு சுற்றுப் பயணம் செய்ததாகக் குறிப்பிடப்படுவது இதனைத் தெளிவுபடுத்துகின்றது. அத்துடன் களனி மகியங்கனை ஆகிய பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்கும் வழிபாட்டிற்காகச் சென்றதாகக் குறிப்பிடப்படுகின்றது.

அரசன் நிஸ்ஸங்கமல்லன் மக்களுக்கு வரிச்சலுகைகளை வழங்கியும் பெற்றுத் தந்தும் சொத்துக்களை அன்பளிப்பாக வழங்கியும் உதவினான். இம்மன்னன் ''துலாபாரக்''கொடைகளை வழங்கினான். துலாபாரம் என்பது ஒருவரது நிறைக்கு சமமாக வழங்கப்படும் கொடுப்பனவு ஆகும். அரசனுடைய மனைவியினதும் பிள்ளைகளினதும் நிறைக்கு சமமாக துலாபாரம் வழங்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இவ்வரசன் பாண்டிய நாட்டை ஆக்கிமித்ததாகவும் கூறப்பட்டது.

## தென் இந்திய ஆக்கிரமிப்பு

அனுராதபுரக்காலத்தின் ஆரம்பத்தில் இருந்தே இடையிடையே தென்னிந்தியாவின் ஆக்கிரமிப்புக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை இருந்தது. இலங்கையின் ஆட்சி துறையில் குழப்பம் காணப்பட்ட வேளையிலும் பலவீனமான ஆட்சியாளர் ஆட்சிக்கு வந்த போதும் தென்னிந்திய ஆக்கிரமிப்புக்கள் இடம்பெற்றன.

மகாவம்சத்திற்கு ஏற்ப முதன்முதலாக தென்னிந்திய ஆக்கிரமிப்பு நிகழ்ந்தது சூரதிஸ்ஸ மன்னனுடைய காலத்திலாகும். இவ்வாக்கிரமிப்பு சேனன், குத்திகன் ஆகிய இரு குதிரை வியாபாரிகளால் மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் அனுராதபுரத்தைக் கைப்பற்றி 22 வருடங்கள் ஆட்சி செய்தனர்.

இந்த ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நாடு அசேல மன்னனால் மீட்கப்பட்டது. அவனுடைய ஆட்சிக் காலத்தில் நாடு சோழரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியது. இது எல்லாளனால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பாகும்.எல்லாளன் 44 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவன் நீதி வழுவாத மன்னன் என மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகின்றது. கி.மு 161இல் துட்டகைமுனு அரசன் எல்லாளனைத் தோற்கடித்து அனுராதபுர இராச்சியத்தைக் கைப்பற்றி முழு இலங்கையையும் ஒன்றுபடுத்தி வலகம்பா மன்னன் ஆட்சிக்கு வந்த பின் புலகத்தன் உட்பட ஏழு தென்னிந்தியத் தலைவர்கள் சேனையுடன் வந்து ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினர். அவர்களுள் ஐவர் 14 வருடங்கள் அனுராபுரத்தை ஆட்சி செய்தனர். 14 வருடங்களுக்குப் பின் வலகம்பா மன்னன் கி.மு 89இல் மீண்டும் ஆட்சியைப் பெற்றுக் கொண்டான். அவர்களுள் இருவர் பாத்திரதாதுவையும், சோமாதேவியையும் கைப்பற்றிச் சென்றனர்.

''மித்தசேனன்'' அரசனுடைய ஆட்சிக் காலத்தில் பண்டுபாரிந்த, குட்டபாரிந்த, திரிதரன், தாடியன், பீடியன் ஆகிய தென்னிந்தியர் இலங்கையை ஆக்கிரமித்தனர். இவர்கள் 27 வருடங்கள் ஆட்சி செய்த பின் மன்னன் தாதுசேனனால் நாடு மீட்கப்பட்டு ஐக்கியப்படுத்தப்பட்டது.

முதலாம் சேனனின் காலத்தில் பாண்டிய நாட்டில் இருந்து வந்த ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் இலங்கையை ஆக்கிரமித்த பொழுதிலும் அவன் செல்வத்தை சூறையாடித் திரும்பிச் சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான்காம் மகிந்தனுடைய காலத்தில் இந்தியாவின் இராஷ்டிர கூட மன்னனான மூன்றாம் கிருஸ்ணன் அனுராதபுர இராச்சியத்தை ஆக்கிரமித்தான். கி.பி 993இல் முதலாம் இராஜராஜன் என்ற சோழ அரசன் இலங்கையை ஆக்கிரமித்தான். அப்போது இங்கு காணப்பட குழப்பமான அரசியல் நிலைமையால் இலகுவாக அவனால் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது.

கி.பி 1017இல் முதலாம் இராஜேந்திரன் உருகுணையைக் கைப்பற்றி ஐந்தாம் மகிந்தனைக் கைதியாக இந்தியாவிற்கு அழைத்துச் சென்றான். இவர்கள் பொலன்னறுவையை ஆட்சி மையமாக (தலைநகராக) தெரிவு செய்தனர். அன்று முதல் பொலன்னறுவை இலங்கையின் தலைநகராக மாறியது. கி.பி 1070இல் முதலாம் விஜயபாகு மன்னனால் சோழர்களிடம் இருந்து பொலன்னறுவை கைப்பற்றப்பட்டது. நிஸ்ஸங்கமல்லனின் பின் பொலன்னறுவை இராச்சியத்தின் பிரதானமான ஆட்சியாளர் எவரும் உருவாகவில்லை. அரசியலில் உறுதியற்றதன்மை ஏற்பட்டது. இதனால் படை வீரர்கள் பலம் பெற்றனர். இவர்கள் அரசனின் பலத்தைக்

குறைத்தனர். இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொண்டு கி.பி 1215இல் கலிங்க மாகன் பொலன்னறுவையின் இறுதி மன்னன் பராக்கிரம பாண்டியனைத் தோற்கடித்து ஆட்சியைப் பெற்றுக் கொண்டான்.

கலிங்க மாகனால் அரசுரிமை உடைய இளவரசர்கள் கொல்லப்பட்டதுடன், பிக்குகளுக்கும் பிரபுகளுக்கும் இவனால் அதிக துன்பம் ஏற்பட்டதாகவும் நூல்கள், விகாரைகள் என்பவற்றை அழித்ததாகவும் பூஜாவலி, மகாவம்சத்திள் மூன்றாம் பகுதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சாராம்சம்

- ★ வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் தொடர்பான தொல்பொருளியல் சான்றுகள் நாட்டின் பல பகுதிகளிலும் கிடைக்கப் பெற்றுள்ளன.
- ★ கி.மு 6ஆம் நூற்றாண்டு தொடக்கம் தொடர்ச்சியாக ஆரியக் குடிப்பெயர்வுகள் இடம் பெற்றன.
- ★ நதிக்கரைகளின் சமவெளிப் பகுதிகளில் இக்குடியிருப்புகள் பரம்பலடைந்தது.
- ★ ஆரியருடைய அரசியல், பொருளாதாரம், சமூகம், கலாசாரத்தின் விசேடப் பண்புகள்.
- ★ அனுராதபுர இராச்சியத்தின் ஆரம்பம் தொடக்கம் பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சி வரை உள்ள அரசர்களும் முக்கிய அரசியல் நிகழ்வுகளும்
- ★ அனுராதபுரக் காலத்தில் இருந்து பொலன்னறுவை காலத்தின் இறுதி வரை எற்பட்ட தென்னிந்திய படையெடுப்புகள்.

### செயற்பாடு :

இலங்கை வரலாற்றின் முக்கிய அரசர்கள் சிலரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. பண்டுகாபயன்
2. துட்டகைமுனு
3. தேவநம்பியதீசன்
4. முதலாம் விஜயபாகு
5. வலகம்பா

மேற் கூறிய அரசர்கள் தொடர்பாக கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் தகவல்களைத் திரட்டுக.

1. அரச பலத்தைப் பெற்றுக் கொண்ட விதம்
2. முகம் கொடுத்த சவால்கள்
3. சமயப் பணிகள்

**பயிற்சி :**

கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| காலம் | இலங்கையை ஆட்சி செய்த அரசர்களும் ஆட்சிக் காலமும் | ஆக்கிரமிப்பாளரின் பெயர்/ ஆக்கிரமிப்புக் குழுவின் பெயர் |
|---|---|---|
| பொலன்னறுவைக் காலம் | 1 ...............<br>2 ............... | 1 ...............<br>2 ............... |
| அநுராதபுரக் காலம் | 1 ...............<br>2 ............... | 1 ...............<br>2 ............... |

| மூலாதாரங்கள் | நிறுவப்பட்ட அரசுகளும் காலமும் |
|---|---|
| கல்பொத்தக் கல்வெட்டு | |
| பனாக்கடுவ செப்பேடு | |
| கல்விகாரைக் கல்வெட்டு | |
| அம்பகமு கல்வெட்டு | |
| தெவனகல கல்வெட்டு | |




# 4 நீர்வளநாகரிகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்

**இந்த அலகின் மூலம் நீர் வள நாகரிகத்தின் ஆரம்பத்தில் நீர்ப்பாசன தொழினுட்பம், நிர்வாகக் கட்டமைப்பு, பொருளாதார முறை, வெளிநாட்டுத் தொடர்புகள், கலாசாரம் என்னும் அம்சங்களின் வளர்ச்சியின் இயல்பு மற்றும் நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சி என்பன பற்றிய தகவல்களை அறிந்து கொள்வோம்**

இலங்கை நாகரிகம் நீர் நிலைகளை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பமாகி வளர்ச்சியடைந்தமையால் நீர்வள நாகரிகம் எனப்படுகின்றது. கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய ஆரியர்களாலே இந்நாகரிகம் உருவானது என்பதை நாம் ஏற்கனவே அறிவோம். அவர்கள் நதிக்கரைகளில் தமது குடியேற்றங்களை அமைத்துக் கொண்டதுடன் நதியின் நீரைப்பெற்று விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். காலப்போக்கில் விவசாய நடவடிக்கைகளுக்காக நீரைச் சேமித்து வைக்க வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டது. எனவே நீர்ப்பாசன அமைப்பொன்றைக் கட்டியெழுப்புவதற்கு அவர்கள் முன்வந்தனர்.

**நீர்ப்பாசன முறையொன்றின் தேவைக்கான காரணங்கள்**

- ★ மக்களின் பிரதான சீவனோபாயமாக நெற்செய்கை விளங்கியமை.
- ★ ஆற்று நீர் நெற்செய்கைக்குப் போதாமை
- ★ மழை வீழ்ச்சி வருடத்தில் பருவகாலங்களில் மாத்திரம் கிடைத்தமை
- ★ கிடைக்கப்பெற்ற மழை வீழ்ச்சி போதியதாக இன்மை.
- ★ சனத்தொகை அதிகரிப்பினால் விவசாய நிலங்கள் விஸ்தரிக்கப்பட்டமை.



**நீர்ப்பாசனத் தொகுதியொன்றின் தோற்றத்திற்கு வித்திட்ட பௌதிகக் காரணிகள்**

★ உலர் வலயத்திற்கு பொருத்தமான புவியியல் அமைப்பு காணப்பட்டமை.
  - **தொடரலை வடிவிலான நில அமைப்பு**
  - **அதனூடே ஓடும் ஆறுகள் காணப்பட்டமை**

★ உலர்வலயச் சமவெளியின் நிலச்சரிவுக்கேற்ப கால்வாய்களை நிர்மாணிக்க முடிந்தமை

★ சமவெளியூடாக ஆறுகள் பாயும் போது பின்னிய ஆறுகள், மியாந்தர் வளைவுகள் என்பன தோன்றுவதால் ஆற்றின் வேகம் குறைவடைந்து காணப்பட்டமை. (இது சிற்றணைக்கட்டுகளை அமைப்பதற்கும் ஏதுவாக அமைந்தது.)

★ எச்சக் குன்றுகளும் அதனோடு இணைந்த சுவடுகளும் காணப்பட்டமை. (குளக்கட்டை நிர்மாணிக்க ஏதுவாயமைந்தது)

**நீர்ப்பாசன அமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும்.**

| நிர்மாணப் பணியில் ஈடுபட்டோர் | நீர்ப்பாசன அமைப்பு | வளர்ச்சியின் இயல்பு |
|---|---|---|
| கிராமத் தலைவர்கள் (பருகம) | சிறிய குளங்களை அமைத்தல் (கிராமக் குளங்கள்) | கிராமத்தில் உள்ள குடும்பங்களுக்கு மாத்திரம் விவசாய நடவடிக்கைகளுக்கு போதுமானது. |
| பண்டுகாபய மன்னன் | அபயவாவி, (பவசக்குளம்), ஜயவாவி, காமினி வாவி | அரச அனுசரணை கிடைத்தமை. (அபய வாவி மட்டுமே தற்போது கண்டறியப்பட்டுள்ளது). |
| தேவநம்பியதீச மன்னன். | திசா வாவி | அரச அனுசரணை கிடைத்தமை. |
| சத்தா திஸ்ஸ மன்னன் | 18 குளங்களை அமைத்ததாக வம்சக் கதைகள் குறிப்பிடுகின்றன. | |
| வசப மன்னன் | 11 குளங்களையும் 12 கால்வாய்களையும் அமைத்தமை. உ-ம் :- மகாவிலச்சிய, மனாகட்டிய குளங்கள், எலஹர கால்வாய்கள் | பாரிய குளங்கள் நிர்மாணிப்பின் ஆரம்பம், சுரங்கவழி நீர்ப்பாசனத்தை அமைத்தல், கால்வாய்களின் மூலம் குளங்களுக்கு நீர் வழங்கல். |
| மகாசேன மன்னன் | 16 குளங்களை அமைத்தமை. எலஹர கால்வாயை விஸ்தரித்தமை. உ-ம்:- மின்னேரியா குளம், குருளு வாவி, மகாகண தரா வாவி. | எலஹர, மின்னேரியா, கவுடுளு எனும் ஒன்றிணைந்த நீர்ப்பாசன அமைப்பின் உருவாக்கம். |

| | | |
|---|---|---|
| தாதுசேன மன்னன் | 18 குளங்களையும், ஒரு கால்வாயை யும் அமைத்தமை. உ-ம் கலாவாவி, மாததுகம குளம், மெத்த கட்டிய வாவி மற்றும் யோத கால்வாய் (ஜயகங்கை) | ஜயகங்கை கால்வாய் மூலம் கலாவாவி நீரை அனுராத புரத்தில் அமைந்த குளங்க ளுக்கு வழங்கியமை. சில குளங்களை இணைத்துப் பாரிய குளங்களை உருவாக்கியமை. |
| இரண்டாம் முகலன் | பதவியா குளம், பத்பஹன் குளம் (நாச்சியா தீவுக் குளம்) | பாரிய குளங்கள் நிர்மாணித் தல். |
| முதலாம் அக்போ மன்னன் | சிறிவட்டமானக வாவி, குறுந்துவாவி என்பவற்றுடன் மினிப்பே அணையும் கால்வாயும் | நீர்ப்பாசன அமைப்பின் சிறந்த நிர்மாணமான மினிப்பே அணை, கால்வாய் என்பன உருவாதல். |
| இரண்டாம் அக்போ மன்னன் | கந்தளாய்க்குளம், கிரித்தலவாவி | கந்தளாய்க்குளம் பாரிய நீர்த் தேக்கமாக அமைதல். |
| முதலாம் விஜயபாகு மன்னன் | எலஹர கால்வாய், மஹா கல்கடவல வாவி, மஹா கணதரா வாவி, பத்பஹன் குளம் என்பவற்றை புனர் நிர்மாணித்தல் | அனுராதபுர யுகத்தின் இறுதியில் சிதைவடைந்து போன நீர்ப் பாசன அமைப்புகளைப் புனர் நிர்மாணம் செய்தல். |
| முதலாம் பராக்கிரமபாகு மன்னன் | அரசனாவதற்கு முன்னரே தெதறு ஓயாவின் குறுக்கே அணைகட்டியமை, பண்டாவாவியை விஸ்தரித்தமை அரசனான பின்னர் பராக்கிரம சமுத்திரம் எனும் குளத்தையும் அங்கமடில்ல (ஆகாச கங்கை) எனும் கால் வாயையும் அமைத்தமை. | சிறிய குளங்களை இணைத்து பாரிய குளங்களை உருவாக் குதல். அனுராதபுர, பொலன் னறுவை காலத்தின் நீர் பாசனத்துறை வளர்ச்சியின் உச்சக்கட்டம், நீர்ப்பாசனத்துறை வரலாற்றின் பொற்காலம். |
| நிஸங்கமல்ல மன்னன் | நிஸ்ஸங்க சமுத்திரம் எனும் குளத்தை நிர்மாணித்ததாகக் குறிப்பிடப்படுகிறது. | |

**செயற்பாடு :**

- ★ *அனுராதபுர யுகத்திலும் பொலன்னறுவை யுகத்திலும் நிர்மாணிக்கப்பட்ட குளங்கள், கால்வாய்கள், அணைகள் பற்றி அறிக்கையொன்று தயாரிக்க.*
- ★ *நீர்வள நாகரிகத்தின் நீர்ப்பாசன அமைப்பை இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துக் காட்டுக.*

## நீர்வள நாகரிகத்தில் நீர்ப்பாசனத்துறை குளங்களும் கால்வாய்களும்.

பாய்ந்தோடும் ஓடையை அல்லது நதியை மறித்து அணைக்கட்டொன்றைக் கட்டுவதன் மூலம் குளம் உருவாக்கப்பட்டது. குளத்திற்கான நேரடி நீரேந்து பிரதேசம் தவிர்ந்த, வெளிவாரியான பகுதிகளிலிருந்தும் நீரைப் பெற்றுக்கொண்ட


சந்தர்ப்பங்களையும் காண முடிகின்றது. குளம் அமைந்துள்ள பகுதிக்கு சமீபமாக அமைந்திருந்த ஓடை அல்லது நதியின் மூலமும் குளத்துக்கான நீர் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்கள் பலவற்றை புராதன நீர்ப்பாசனத் துறையில் நாம் அவதானிக்கலாம்.

| | |
|---|---|
| மாகல்ல வாவி | - தெதுறு ஓயாவின் ரிதிபெந்தி கால்வாய் மூலம் நீரைப் பெற்றுக்கொண்டது. |
| தப்போ வாவி | - மீஓயாவின் மூலம் நீரைப் பெற்றுக்கொண்டது. |
| பராக்கிரம சமுத்திரம் | - அம்பன் கங்கை மூலம் நீரைப் பெற்றுக் கொண்டது. |




தேசப்படம் 4.1 புராதன இராசரட்டையின் நீர்ப்பாசனக் கட்டமைவு

ஆற்றின் பொருத்தமான இடத்தில் உயரம் குறைவான சிற்றணைகளைக் கட்டி, ஆற்றின் போக்கை இயல்பாக விட்டு ஒரு சிறு திசை திருப்பம் மூலம் கால்வாய் ஊடாக நீரைத் தேவையான இடத்திற்குக் கொண்டு செல்லல் மற்றுமொரு முறையாகக் காணப்பட்டது.





உரு 4.1 குளத்தின் பிரதான கூறுகள்.

உதாரணம்

★ அம்பன் கங்கைக்குக் குறுக்காக அங்கமடில்ல எனுமிடத்தில் அணைகட்டி ஆகாச கங்கை என்ற கால்வாய் மூலம் பாராக்கிரம சமுத்திரத்திற்கு நீர் வழங்கப்பட்டமை.

★ எலஹர எனுமிடத்தில் அம்பன் கங்கைக்கு குறுக்கே அணை கட்டி எலஹர கால்வாய் மூலம் கவுடுளு, மின்னேரியா, கந்தளாய் எனும் குளங்களுக்கு நீர் வழங்கப்பட்டமை.

★ மகாவலி கங்கைக்கு குறுக்காக மினிப்பே எனுமிடத்தில் அமைக்கப்பட்ட அணையின் மூலம் மினிப்பே கால்வாய் ஊடாக மேட்டு நிலங்களுக்கு நீர்ப்பாசனம் வழங்கப்பட்டமை.




உரு 4.2 குளக்கட்டு குவாட்சைட் பாறைகளின் மேல் அமைக்கப்படுதல்.

பிரதான குளத்தில் சேறும் வண்டலும் சேர்வதைத் தடுக்கும் முகமாக சிறிய குளங்களை அமைத்தலும் அதற்கான ஒரு கால்வாயை அமைத்தலும் புராதன நீர்ப்பாசன தொழினுட்பத்தின் மற்றுமொரு பண்பாகும். கால்வாய்களை அமைக்கும் போது சிறு குளங்களின் மூலம் நீரை வழிந்தோடச்செய்தல் இதன் சிறப்பம்சமாகும். இதனால் பிரதான குளத்தில் சேறு படிவது தவிர்க்கப்படும்.

உதாரணமாக எலஹர கால்வாய் மூலம் மின்னேரிய மற்றும் கிரித்தல குளங்களுக்கு நீர் வழங்கும் செயற்பாட்டின் போது சிறு குளங்களுக்கு ஊடாகவும் கால்வாய்கள் அமைக்கப்பட்டன.

★ ஒரு குளத்திலிருந்து மற்றொரு குளத்துக்கு நீரை வழங்குவதற்கும் கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. உதாரணம்: கலா வாவியிலிருந்து ஜயகங்கை கால்வாய் மூலம் திசாவாவிக்கு நீர் கொண்டு செல்லப்பட்டமை.

★ குளத்து நீரைப்பெற்று செய்கை பண்ணக்கூடிய வயல்நிலங்களுக்கு நீரைக்கொண்டு செல்வதற்கும் கால்வாய்கள் அமைக்கப்பட்டன. இக்கால்வாய்கள் மூலம் நீர் வயலுக்கு பாய்ச்சப்பட்டது. வயலிலிருந்து வெளியேற்றப்பட்ட கழியோடை நீரானது மீண்டும் பிரதான கால்வாயை அடையும் வண்ணம் கால்வாய்த் தொகுதி அமைக்கப்பட்டிருந்தது. கால்வாய்கள் அனைத்தும் போல நிலத்தின் சாய்வைப் பயன்படுத்தி சிறப்பாக நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

## நீர்ப்பாசனத் தொழினுட்பம்

### (1) குளக்கட்டு

குளம் ஒன்றின் முக்கியமான பகுதி குளக்கட்டாகும். பாய்ந்தோடும் நீரை குறுக்கே மறித்துக் குளக்கட்டை அமைப்பதற்கு இரு எச்சக்குன்றுகளின் பாறைச் சுவடுகளைப் பயன்படுத்தியுள்ளமையைக் காணமுடிகின்றது.

மேலும் குளத்து நீர் தேங்கிநிற்கும் மேட்டு நிலத்தின் பாறை அமைப்பு பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளமையும் அறியக்கூடியதாகவுள்ளது.

உதாரணமாக :- மின்னேரியாக் குளத்தின் குளக்கட்டானது குவாட்சைட் பாறை பரந்துள்ள அமைப்பிலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

குளக்கட்டு அமைக்கப்பட்ட பாறைத் தொடரானது குளத்தின் கீழ்ப்பகுதியிலும் பரந்துள்ளவாறான நிலையிலேயே குளக்கட்டின் அமைப்பு தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்வமைப்பானது குளத்துநீர் கசிந்து செல்லாது பாதுகாத்துள்ளது.


சமவுயரக் கோடுகளின் பரவலுக்கு ஏற்பவும் குளக்கட்டுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. உ-ம்:- பராக்கிரம சமுத்திரத்தின் குளக்கட்டு

எச்சக் குன்றுகளோ பாறைத் தொடர்களோ இல்லாதவிடத்தில் நிலத்தின் அமைப்புக்கேற்ப குளக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

உ-ம்:- மன்னார் மாவட்டத்தில் உள்ள இராட்சதக் குளத்தின் குளக்கட்டானது ஏழு (7) மைல் நீளத்தில் அரைவட்ட வடிவில் அமைக்கப்பட்டுள்ளமை.

### (2) அலைதாங்கி :-

மண்ணினால் அமைக்கப்பட்ட குளக்கட்டானது நீரினால் அரிக்கப்படாமல் இருப்பதற்காக குளக்கட்டின் உட்புறத்தே கருங்கற்களைப் பரவி அமைக்கப்படுவது அலைதாங்கியாகும். இதன் மூலம் குளத்தில் எழும் நீரலையினால் குளக்கட்டு அரிப்பெடுக்காமல் பாதுகாக்கப்பட்டது.



உரு 4.3 பாறை அமைப்பு

### (3) கலிங்கல் (மடைக்கதவு):-

குளத்து நீரை வயலுக்கு வழங்குவதற்காக, கால்வாய்க்கு நீரைத் திறந்து விடுவதற்காகவே கலிங்கல் (மடைக்கதவு) அமைக்கப்பட்டது. புராதன குளங்களில் இது மிகவும் நுணுக்கமான முறையில் நீர் கசியா வண்ணம் கருங்கல்லினாலே அமைக்கப் பட்டிருந்தமை சிறப்பம்சமாகும்.


குளத்து நீரின் வேகத்தால் கால்வாய் அரித்துச் செல்லப்படுவதை தடுக்குமுகமாக கலிங்கலின் குளத்தின் துவாரம் சிறியதாகவும் கால்வாய்ப் பக்கமான துவாரம் பெரிதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.



உரு 4.4 கலிங்கல் (மடைக்கதவு)

ஈரக்கலிங்கல், உயர்கலிங்கல் என மடைக்கதவு இருவகைப்படும். அதாவது குளத்தில் நீர்மட்டம் கூடியிருக்கும் போது கால்வாய்க்கு நீரை விநியோகிப்பதற்கு ஏதுவான வகையில் நீரின் மேல் மட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் துவாரம் உயர் கலிங்கல் எனப்படும். குளத்தின் நீர்மட்டம் குறைந்திருக்கும் போது நீரை விநியோகிப்பதற்கும், குளத்தில் சேரும் சேற்றை அகற்றுவதற்கும் குளக்கட்டின் அடிப்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் வாயில் ஈரக்கலிங்கல் எனப்படும்.

### 4) கலிங்கல் தொட்டி:-



உரு 4.5 கலிங்கல் தொட்டி

பாரியதொரு குளத்திலிருந்து குளக்கட்டின் ஊடாக கால்வாய்க்கு நீரை வழங்கும் போது குளக்கட்டைப் பாதுகாக்கும் வகையில் கலிங்கல் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. சதுர வடிவிலான கிணறு ஒன்றின் வடிவில் அமைக்கப்பட்டுள்ள கலிங்கல்தொட்டி என்பது இலங்கைக்கு நீர்ப்பாசன தொழினுட்பத்தின் உயர் தரமான நிர்மாணமாகும். தேவையான நேரத்தில், தேவையானளவு நீரைக் கால்வாய்க்கு வழங்குவதற்குரிய நீர்க்கட்டுப்பாட்டு உபகரணமொன்று கலிங்கல்தொட்டியினுள் உள்ளது. இது 'மொஹல' என அழைக்கப்படும். கருங்கற்களை மிகவும் நுணுக்கமான வகையில் இணைத்து நீர் கசியா வண்ணம் இது அமைக்கப்பட்டுள்ளது.

### (5) வான் கதவு (சுருங்கை)

மழைக்காலத்தில் சேரும் குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்ட உறுதியான நிர்மாணமாக இதனைக் கூறலாம். பெரும்பாலும் குளக்கட்டின் அந்தத்தில் குளக்கட்டின் உயரத்தை விட தாழ்வான உயரத்தில், கருங்கற் பாறையைக் கொண்ட இடத்தில் சுருங்கை அமைக்கப்பட்டிருக்கும். மேலதிக நீர் இதனூடாக வெளியேற்றப்படுவதனால் குளக்கட்டானது உடைப்பெடுக்காமல் பாதுகாக்கப்படுகின்றது. இவ்வாறு வெளியேற்றப்படும் நீரானது வயல் நிலங்களை மூழ்கடித்து விடாமல் பிரதான நதியைச் சேரும் வகையில் அல்லது வேறு குளங்களைச் சென்றடையும் வகையில் கால்வாய் வெட்டப்பட்டிருக்கும்.

### (6) உள்வான் கதவு

மேலதிக நீரை குளமொன்றுக்குக் கொண்டுவரும் போது, உள்வான் கதவு திறக்கப்படும். இது வான்கதவைப் போன்றதொரு உறுதியான தீர்மானமல்ல. தண்ணீர் பிரவாகத்தினோடு வரும் வண்டலும் சேறும் குளத்தில் படிவதை உள்வரும் வான் கதவு தடுக்கும். இதனூடாக குளத்துக்குக் கொண்டு வரப்படும் மேலதிக நீரை நிறுத்திய பின்னர் உள்வரும் வான்கதவுக்கு வெளியே சேர்ந்துள்ள சேற்றை அகற்ற முடியும்.

### (7) உயர் அணை (போட்டா அணை)

குளம் ஆரம்பிக்கும் இடத்தில் மேட்டு நிலத்தினதும் மலைக்குன்றுகளினதும் அடிவாரத்தின் நெடுகிலும் இரண்டு(2) அல்லது மூன்று (3) அடி உயரத்துக்கு மண்ணால் அமைக்கப்படுவது உயர் அணை அல்லது போட்டா அணை எனப்படும். இதன் மூலம் குளத்தில் சேரும் வண்டலும், சேறும் தடுக்கப்படும். அத்துடன் மேட்டு நிலத்தின் அடிவாரத்தை ஈரமாக வைத்திருக்கவும் முடிகிறது. எனவே மரங்கள் செழித்து வளர்வதற்கு ஏற்ற சூழல் ஒன்று இங்கு உருவாகின்றது.

### (8) கலிங்கற்கட்டு

குளத்தின் வான்கதவுக்கு முன்னால், குளத்தினுள்ளே குளக்கட்டுக்கு நேராக குளத்தின் குறுக்கே அமைக்கப்பட்டிருக்கும் உயரம் குறைவான கருங்கல்லால் கட்டப்படும் அணையே கலிங்கற்கட்டு எனப்படுகின்றது. இது வான் கதவு மட்டத்தைவிடத் தாழ்வாக அமைக்கப்பட்டிருக்கும். குளத்தின் நீர்மட்டம் கூடியிருக்கும் போது இது நீரினுள் மூழ்கிக் காணப்படும். வான் கதவு உடைப்பெடுக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் குளத்துநீர் முழுமையாக வெளியேறாமல் பாதுகாத்தலே கலிங்கற் கட்டு அமைக்கப்படுவதன் நோக்கமாகும். இது போன்றதொரு அணை பராக்கிரம சமுத்திரத்தில் காணப்படுகின்றது.

### (9) நீரேந்து பிரதேசம்:-

குளத்தின் நீர்மட்டம் உச்ச அளவில் பரந்து காணப்படும். குளத்தைச் சூழ அமைந்துள்ள பகுதியே நீரேந்து பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் குளிர்மையான தாவரங்கள் பரவலாகக் காணப்படும். பல்வேறு புல்லினங்களும் மருதம், புங்கை, இலுப்பை முதலிய மரங்களும் செழித்து வளர்ந்திருக்கும். எனவே இங்கு காட்டு விலங்குகளும் கூட்டம் கூட்டமாகக் காணப்படும்.

### (10) சிறு குளங்கள்:-

மலைச் சரிவுகளிலிருந்து ஊற்றெடுக்கும் பிரதான நதியின் கிளையாறுகளுக்குக் குறுக்காக அமைக்கப்படும் சிறிய அணைக்கட்டுகள் மூலம் சிறு குளங்கள் உருவாகும். இவற்றுக்கு கலிங்கல் (வான்கதவு) இருக்காது. கருங்கல்லினால் உருவாக்கப்பட்ட சிறு இடைவெளி மூலம் பிரதான குளத்துக்கு நீர் வழங்கப்படும்.சிறு குளங்களில் சேறும் வண்டலும் படிவதால் பிரதான குளத்தில் அவை சேர்வது தடுக்கப்படுகிறது. மழைக்காலங்களில் பிரதான குளத்தில் மேலதிக நீர் சேர்வதையும் இச் சிறு குளங்கள் தடுக்கின்றன. இங்கு நீர் சேமித்து வைக்கப்படுவதனால் குளத்தின் மேல் பகுதியில் மரங்கள் செழித்து வளர்வதுடன் ஊற்றுநீரும் அதிகரிக்கின்றது. அத்துடன் பிரதான குளத்தில் நீர் குறைவடையும் போது சிறுகுளங்களில் சேமிக்கப்பட்ட நீர் பிரதான குளத்துக்கு வழங்கப்படும்.



உரு 4.6 சிறு குளங்கள்:

**கால்வாய்களுடன் தொடர்பான தொழினுட்பம்:**


மிகவும் சாய்வான ஒரு பிரதேசத்தினூடாக கால்வாயை அமைக்கும் போது நீரின் வேகத்தைக் குறைப்பதற்காக கருங்கல்லினால் அத்திவாரம் அமைத்தல் மற்றும் சிறிய கற்றூண்களை கால்வாயின் உள் பகுதிகளில் இடையிடையே பொருத்துதல்.
உ-ம் : எலஹர அணையிலிருந்து மின்னேரியா குளத்துக்கு நீரைக்கொண்டு செல்லும் எலஹர கால்வாய்.

- ★ கால்வாயின் நீரினளவு கூடும் சந்தர்ப்பங்களில் மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக கருங்கல்லினால் வான் கதவை அமைத்தல்.
- ★ நிலத்தின் சரிவைப் பயன்படுத்தி நீளமான கால்வாய்களை நிர்மாணித்தல்.
- ★ சுரங்கவழி நீர்ப்பாசன தொழினுட்பம்:- குழாய்கள் மூலம் குளத்து நீரை பொய்கை, பூங்கா என்பவற்றுக்கு விநியோகித்தல்.
  உ-ம் :- திசாவாவி நீரை ரன்மசு உயன பூங்காவிற்கும் குட்டம் பொய்கைக்கும் விநியோகித்தமை.
- ★ கால்வாயில் நுட்பமான சாய்வைக் கையாண்டு நீண்ட தூரத்துக்கு நீரைக்கொண்டு செல்லல்.
  உ-ம்:- கலாவாவியிலிருந்து திசாவாவிக்கு நீரைக்கொண்டு செல்லும் ஜயகங்கைக் கால்வாய் ஒரு கிலோ மீற்றருக்கு 95 மில்லி மீற்றர் சாய்வைக் கொண்டது.
- ★ கால்வாய்களை நிர்மாணிக்கும் பணியில் நிலத்தை அகழும் சந்தர்ப்பங்களில் நீரை உறிஞ்சும் தன்மை, கால்வாய் கட்டுக்களை உறுதியாகப் பேணல், வெள்ளப்பெருக்கின் போது மண்ணரிப்பைத் தடுத்தல் என்பன கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது.
- ★ உலர்வலயம் முழுவதையும் உள்ளடக்கும் வகையில் கால்வாய்கள் அமைக்கப்பட்டமை.
- ★ ஆறுகள் பின்னிச் செல்லும் போது ஆற்றின் வேகம் குறைகின்றது என்பதை அறிந்திருந்த நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவ்விடத்தில் தடையொன்றை ஏற்படுத்துவதன் மூலம் மேலெழும் நீரை கால்வாய் மூலம் தாழ் நிலத்திற்குக் கொண்டு செல்லல்.

**செயற்பாடு :**

- ★ *குளம் மற்றும் கால்வாய் நிர்மாணத்தின் போது பயன்படுத்தப்பட்ட தொழினுட்ப அம்சங்களை உள்ளடக்கி குளமொன்றின் மாதிரியை அமைக்க.*

## நிர்வாக கட்டமைப்பு :-




## மத்திய நிர்வாகம்:-

மத்திய நிர்வாகம் என்பது நாட்டின் அரசனாலே மேற்கொள்ளப்பட்டது. அரச உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக முடிசூட்டு விழா நடாத்தப்பட்டது. தனது அரச வம்சத்துக்குப் பொருத்தமான பட்டத்து இராணியுடன் நாட்டு மக்களின் முன்னிலையிலேயே முடிசூட்டு விழா நிகழ்த்தப்பட்டது. மௌரிய அரச வம்ச மரபுப்படி இலங்கையில் தேவநம்பிய தீச மன்னனால் முதலாவது முடிசூட்டு விழா நடாத்தப்பட்டது. மேலும் மன்னனால் நாட்டு மக்களுக்காற்றப்படவேண்டிய பணிகள் பற்றி மூலாதாரங்களில் காணப்படுகின்றன.

- ★ நாட்டு மக்களைப் பாதுகாத்தல்
- ★ விவசாயத்துக்குத் தேவையான நீரைப் பெற்றுத் தருதல்
- ★ பௌத்த சமயத்தையும் கலாசாரத்தையும் பாதுகாத்தலும் வளர்த்தலும்.

அரசன், தனது ஆட்சி நடவடிக்கைகளின் போது பௌத்த குருமாரினதும் புரோகிதர், சேனாதிபதி, அமைச்சர்களினதும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டான். பௌத்த சமயத்துக்கேற்ப பத்து அரச தர்மங்களைக் கவனத்திற் கொண்டு ஆட்சி செய்தல் அரசனின் கடமையாகும்.

அனுராதபுரக்காலத்தில் சில சந்தர்ப்பங்களின் போது மன்னன் போதி சத்துவராக மதிக்கப்பட்டதுடன் பொலன்னறுவைக் காலத்தின் போது மனித வடிவிலிருக்கும் தெய்வமாக மன்னன் மதிக்கப்பட்டதற்கான சந்தர்ப்பங்களைக் காண முடிகின்றது.

அரச உரிமையானது சகோதரனிடமிருந்து சகோதரனுக்கு அல்லது தந்தையிடமிருந்து மகனுக்கு உரியதாயிருந்தது.கடைசிச் சகோதரனின் பின்னர் ஆட்சியுரிமையானது மூத்த சகோதரனின் மகனுக்கு உரித்தானது. மன்னன் இராசரட்டையை தனது ஆட்சி மத்திய நிலையமாகக் கொண்டிருந்த அதே வேளை மாயாரட்டையில் (தக்கிண தேசத்தில்) 'மாபா' என்று பதவி அரசனின் தம்பிக்கும், உருகுணரட்டையில் 'ஏபா' எனும் பதவி மன்னனின் மகனுக்கும் வழங்கப்பட்டன. அவர்கள் அப்பிராந்தியங்களில் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அரசன் இறந்த பின்னர் அப்பதவியானது மாயரட்டையில் 'மாபா' பதவி வகித்த இளவரசனுக்கே வழங்கப்பட்டது. உறுகுணுரட்டையிலிருந்து 'ஏபா' பதவி வகித்த இளவரசன் 'மாபா'


இலவச விநியோகத்திற்காக

பதவிக்கு அமர்த்தப்படுவான். சட்ட ரீதியான பட்டத்து இராணியின் பிள்ளைகளுக்கு மட்டுமே அரசுரிமை உரித்தாக விளங்கியது.

**அரச அதிகாரிகள்**

அரசனின் ஆட்சி நிர்வாகத்தில் அவனுக்கு உதவியாக பல அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். இப்பதவிகளுள் சேனாதிபதி எனும் பதவியே முக்கியம் வாய்ந்தது. எனவே மன்னனின் நெருங்கிய உதவியாளன் ஒருவனே சேனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டான். அவனுக்கு உதவியாகப் பல தளபதிகளும் நியமிக்கப்பட்டனர்.
ஐத்தக்காஹக, அசிக்காஹக, அமைச்சர், புரோகிதர், படகாரிக (பொருளாளர்), மஹலேனா (செயலாளர்), வெதனா எனும் பல பதவிகளை வகித்தோரும் அரசவையில் காணப்பட்டனர். இவர்கள் அனைவரினதும் ஆலோசனைப்படியே மன்னன் தனது ஆட்சி நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தான். பிற்காலத்தில் 'வேலைக்கார படை' எனும் கூலிப்படையினரையும் போர் நடிவடிக்கைகளின் போது அரசர்கள் ஈடுபடுத்தியுள்ளனர்.

**செயற்பாடு :**

★ *நீர்வள நாகரிக நிர்வாகத்தில் பணியாற்றிய அரச அதிகாரிகளின் பதவிப்பெயர்கள், அவர்களுக்குரிய கடமைகள் என்பவற்றை அட்டவணைப் படுத்துக.*

**பிரதேச நிர்வாகம்:-**

மத்திய ஆட்சி நிலையமான இராசரட்டை தவிர நிர்வாக நடவடிக்கையினை இலகுபடுத்தும் வகையில் நாடு பின்வருமாறு 4 பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

★ உத்தர பஸ்ஸ (வடக்கு)
★ தக்கிண பஸ்ஸ (தெற்கு)
★ பாச்சீன பஸ்ஸ (கிழக்கு)
★ பஸ்சிம பஸ்ஸ (மேற்கு)

அனுராதபுரக் காலத்தின் இறுதிப் பகுதியில் இராசரட்டை, உருகுணுரட்டை, மலையரட்டை, தக்கிணதேசம் என்று நாடு பல நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இலங்கையின் தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் உறுகுணுரட்டைக்குரியதாக விளங்கின.

பொலன்னறுவைக் காலத்தின் போது இராசரட்டை, தக்கிண தேசம், தொலஸ்தஹஸ் ரட்டை, அட்டதஹஸ் ரட்டை எனும் நான்கு அலகுகளாக நாடு காணப்பட்டது.

ஆரம்ப காலத்தில் யாழ் குடா நாடு நாகதீபம் எனும் பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. வசப மன்னனின் காலத்தில் 'இஸிகிரி' எனும் அமைச்சர் வட பகுதிக்கான பிரதேச ஆட்சியாளராக செயற்பட்டார் என்று குறிப்பிடப்படுகின்றது.

## கிராம நிர்வாகம்:-

பண்டுகாபய மன்னன் காலந்தொட்டு பொலன்னறுவைக்காலத்தின் முடிவு வரை கிராம நிர்வாகம் முறையாக மேற்கொள்ளப்பட்டதாக மூலாதாரங்கள் குறிப்பிடுகின்றன. பண்டுகாபய மன்னன் நாடு முழுதும் இருந்த கிராமங்களுக்கு நிர்வாக எல்லைகளை வகுத்ததாக வம்சக் கதை நூல்கள் குறிப்பிடுகின்றன. கிராமங்கள் நிர்வாகக் கட்டமைப்பின் சிறிய அலகாகவும் அதே வேளை முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்பட்டது. கிராமத்தில் சமாதானம், நீதி என்பவற்றைப் பேணுவதற்காக கிராமசபை என்னும் அமைப்புமுறை காணப்பட்டது. அதன் தலைவர் கமிக, பருமக, கிராம போஜக எனும் பல பெயர்களால் குறிப்பிடப்படுகின்றார்.



தேசப்படம் :
4.2 பிரதேச நிர்வாக அலகுகள்

### கிராமத் தலைவருக்குரிய கடமைகள்:-

★ கிராமத்தில் சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டல்
★ கிராமவாசிகளின் பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
★ கிராமத்தில் வரி சேகரித்தல்
★ கிராமவாசிகளுடன் நல்லுறவைப் பேணும் வகையில் நடந்துகொள்ளுதல்
★ கிராம நிர்வாக விடயங்கள் தொடர்பாக அரசனுக்கு பொறுப்புச் சொல்ல கடமைப்படுதல்.
★ கிராமத்தில் நீதியை நிலைநாட்டல்.


கிராம ஆட்சியில் ஜனநாயக இயல்புகள் தெளிவாகத் தெரிகின்ற அம்சமாகும். பல்வேறு சேவைகளிலும் ஈடுபட்டோருக்கு கிராமங்களையும், நிலங்களையும் மன்னன் வழங்கினான். குற்றவாளிகள் கிராமங்களில் தலைமறைவாக இருப்பின் அவர்களைப் பிடித்து ஒப்படைப்பது கிராமவாசிகளின் கடமையாகக் காணப்பட்டது. மேலும் விகாரைகளுக்கும் மன்னன் நிலபுலன்களை தானஞ் செய்தான்.


இலவச விநியோகத்திற்காக

**செயற்பாடு :**

★ *நீர்வள நாகரிகத்தின் நிர்வாக நடவடிக்கைகளைப் பரவலாக்கியமை அரசனின் ஆட்சி நடவடிக்கைகளை இலகுவாக்கியது என்பது பற்றி சமூக விஞ்ஞான சங்கத்தில் ஆற்றப்பட வேண்டிய உரை ஒன்றுக்கான தகவல்களை அறிக்கைப்படுத்துக.*

## நீர்வள நாகரிகத்தின் பொருளாதார அமைப்பு




*தேசப்படம் 4.3 பொலன்னறுவைக் காலத்தில் இலங்கையின் நிர்வாக அலகுகள்*

அனுராதபுரத்தின் ஆரம்ப காலந்தொட்டு நீர்வளநாகரிகம் நிலவிய காலம் முழுதும் படிப்படியாக வளர்ச்சி கண்டு, துரித முன்னேற்றம் அடைந்த நீர்ப்பாசனத் துறையானது பொருளாதார நடவடிக்கையின் அடிப்படை அம்சமாக விளங்கியது. அடிப்படையில் நீர்வள நாகரிக பொருளாதார நடவடிக்கைகளின் அடிப்படையாக அமைந்தது விவசாயமாகும். விவசாயத்திலும் நெற்செய்கையே முதலிடம் பெற்றது. ஏனெனில் இன்று போலவே அன்றும் நாட்டு மக்களின் பிரதான உணவாகக் காணப்பட்டது நெல்லரிசிச் சோறாகும். எனவே நெல்லைப் பெற்றுக்கொள்வதற்காக வருடத்தில் இரண்டு அல்லது மூன்று போகங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறிமேகவர்ண மன்னனின் காலத்துக்குரிய தோணிகல கல்வெட்டில் 'பிட்டடஹச'(பெரும் போகம்), 'மதஹச' (சிறுபோகம்),'அகலஹச' (இடைப் போகம்) எனும் மூன்று போகங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளமையானது மேற்படி கூற்றை உறுதிப்படுத்துகின்றது. ஆண்டு முழுவதும் குளம் மூலம் நீர்ப்பாசனம் பெற்றுக்கொள்ளக்கூடிய பகுதிகளில் மாத்திரம் மூன்று போகம் செய்கை பண்ணப்பட்டதுடன் நீர்வளநாகரிகத்துக்குரிய நிலப்பிரதேசம் யாவும் பசுமையான வயல் வெளியாகவே காட்சியளித்தது.

நெற்செய்கைக்குத் தேவையான உழைப்பு, 'அ(ந்)த' முறை (பிறரின் நிலத்தில் விவசாயம் செய்தல்),'அத்தம்'முறை (சிரமப் பரிமாற்றம்), கூலி கொடுக்கும் முறை எனும் அடிப்படைகளில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நெல் தவிர கடுகு, தினை, பயறு, எள், கரும்பு, பருத்தி, மா, தென்னை முதலிய பயிர்களும் பயிரிடப்பட்டன. சேனைப் பயிர்ச்செய்கையும் அக்காலத்தில் முக்கிய இடம் வகித்தது. உலர் வலயமும் நாட்டின் உள்ளார்ந்த பிரதேசங்களும் சேனைப்பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டன.

கரைநெல், உளுந்து,பயறு, சாமை முதலிய தானியங்களும் கத்தரிக்காய், சுரைக்காய், வெள்ளரிக்காய், பூசனிக்காய் முதலிய காய்கறி வகைகளும் சேனைகளில் பயிரிடப்பட்டன.

நெசவுத் தொழிலுக்குத் தேவையான பருத்தி வெற்றிகரமாகப் பயிரிடப்பட்டதுடன் கரும்புச் செய்கையும் முன்னேற்றங் கண்டிருந்தது. விவசாயத்துக்குப் பயன்படுத்தப்பட்ட நிலங்கள் தவிர வீட்டுத் தோட்டங்களில் பலா, தென்னை, மா முதலிய மரங்களும் வளர்க்கப்பட்டன. மலைப்பாங்கான பகுதிகளில் இஞ்சி, மஞ்சள், மிளகு முதலியவற்றுடன் கிழங்கு வகைகளும் பயிரிடப்பட்டன.

**செயற்பாடு :**

★ *நீர்வள நாகரிகத்தில் விவசாய நடவடிக்கைகளைச் சித்திரிக்கும் வகையில் படங்களுடனான அறிக்கையொன்றைத் தயாரிக்குக.*

## கைத்தொழில்

நீர்வள நாகரிகத்தில் நிலவிய சுயதேவைப்பூர்த்தியான ஒரு பொருளாதார முறையின் கீழ் விவசாய நடவடிக்கைகளுடன் இணைந்ததான கைத்தொழில்கள் பலவும் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. நெற்பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்ட கலப்பை, நுகத்தடி, மட்டப்பலகை, கத்தி, அரிவாள்,மண்வெட்டி எனும் உபகரணங்கள் பற்றி 'அட்டுவா' எனும் கதைகளிலும் 'சத்தர்மரத்னாவலிய' எனும் நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே அக்காலத்தில் தச்சுத் தொழிலும் உலோகக் கைத்தொழிலும் வளர்ச்சி கண்டிருந்ததாகக் கருதமுடியும். படை வீரர்களுக்குத் தேவையான ஆயுதங்கள், அலங்காரமான புத்தர் சிலைகள், தெய்வச்சிலைகள், விளக்குகள் என்பன உலோகக் கைத்தொழிலை அடிப்படையாக வைத்தே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பருத்திப் பஞ்சிலிருந்து நூல்நூற்றல், புடைவை நெய்தல் எனும் நெசவுக் கைத்தொழிலும் மட்பாண்டத் கைத்தொழிலும் உயர்மட்டத்தில் காணப்பட்டதாக அறிய முடிகின்றது. அதே போன்று கரும்புப் பயிர்ச்செய்கையை அடிப்படையாகக் கொண்டு கருப்பஞ்சாறு பிழியும் இயந்திரம் மற்றும் கருப்பம் பாணியிலிருந்து கருப்பட்டி (சர்க்கரை) தயாரித்தல் என்பனபற்றியும் இலக்கியங்கள் மூலம் அறியமுடிகின்றது.

கட்டட நிர்மாணங்களின்போது கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமையால் அவை தொடர்பான கைத்தொழில்களும் வளர்ச்சியடைந்திருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

இரத்தினக்கற்களால் ஆபரணங்கள் தயாரிக்கப்பட்டதிலிருந்து சுரங்கக்கைத்தொழிலும் வளர்ச்சி கண்டிருந்ததாகக் கருதலாம்.

அக்காலத்தில் பல்வேறு கலைகளும் பல்வேறு தராதரங்களின் அடிப்படையில் அமைப்பு ரீதியில் மேற்கொள்ளப்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. உயர்தரத்தில் அமைந்த கைத்தொழில் நிர்மாணங்கள் அரசனால் பாராட்டப்பட்டதுடன் அக்கலைஞர்களுக்குப் பரிசுகளும் பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

**செயற்பாடு :**

★ *நீர்வள நாகரிகத்தில் நிலவிய கைத்தொழில்கள் பற்றி மூலாதாரங்களில் காணப்படும் விடயங்களைத் திரட்டி கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.*

| கைத்தொழில் | விபரமடங்கியுள்ள மூலாதாரம் | மூலாதாரத்தில் அடங்கியுள்ள விடயங்கள் |
|---|---|---|
| | | |

## வர்த்தகம்

நீர்வள நாகரிகப் பொருளாதார அமைப்பின் மற்றுமொரு அம்சமாக வர்த்தகம் காணப்பட்டது. இவ்வர்த்தகமானது உள்நாட்டில் நிகழ்ந்ததைப் போன்றே வெளிநாடுகளுடனும் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

### உள்நாட்டு வர்த்தகம்:-

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களும் நாட்டின் பல்வேறு இடங்களிலும் வைத்து விற்பனை செய்யப்படும் முறையானது ஆரம்பகாலத்திலிருந்தே நிலவி வந்துள்ளமையை அறிய முடிகின்றது. அது பெரும்பாலும் பண்டமாற்று அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. 'கஹவணு', 'மஸ்ஸ' (மசுரன்) எனும் நாணயங்களின் பெயர்களும் இடம் பெறுவதனால் பணப்புழக்கமும் ஓரளவுக்கு இருந்துள்ளமை தெரிய வருகின்றது. உள்நாட்டில் காணப்பட்ட சந்தைகள் 'பதிய' எனும் பெயரால் குறிப்பிடப்பட்டன. மகியங்கனைக்கு அருகில் அமைந்திருந்த 'ஹோபிட்டி-கமுவ பதிய' இதற்குச் சிறந்த உதாரணமாகும். வர்த்தக சந்தை நிர்வாகிகள் 'பதிலத்தன்' எனும் பெயரால் அழைக்கப்பட்டனர். வர்த்தக நகரங்கள், 'நிகம', நியமத்தன', நியம்கம்' எனும் பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. உள்நாட்டு வர்த்தகத்தில் உப்பு, இஞ்சி,

ஆடை, ஆபரணங்கள், நறுமணப்பொருட்கள் என்பவற்றுடன் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட விலையுயர்ந்த துணிவகைகள், பீங்கான் பொருட்கள் என்பன இடம்பிடித்திருந்தன. இவை தவிர வெளிநாட்டு வர்த்தகத்துக்கான பொருட்களை உள்நாட்டில் கொள்வனவு செய்தலும் வியாபாரிகளினால் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

தூரப்பிரதேசக் கிராமங்களில் பொருட்களைக் 'காவு'களில் கொண்டு சென்று விற்பனை செய்யும் வியாபாரிகளும் காணப்பட்டனர். உள்நாட்டு வியாபாரம் தொடர்பாக வர்த்தக சபைகள் உருவாக்கப்பட்டிருந்ததாக பதுளை தூண் கல்வெட்டின் மூலம் தெரிய வருகின்றது. இதன்படி சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட வர்த்தக முறையொன்று நிலவியதாக அறியமுடிகின்றது.

வியாபாரச் சந்தைகளுக்கான வரிகளை விதித்தல், சந்தைகளில் நிகழும் ஊழல்களைத் தேடியறிதல் முதலிய நடவடிக்கைகள் அரசனால் மேற்கொள்ளப்பட்டதாக பதுளை தூண் கல்வெட்டின் மூலம் அறிய முடிகின்றது. உப்பு, முத்து, இரத்தினம் மற்றும் யானை வர்த்தகம் தொடர்பாக அரசன் தனியுரிமை பெற்றிருந்தான்.

### வெளிநாட்டு வர்த்தகம்

பிரதான நதிகள் கடலில் கலக்கும் இடங்களில் காணப்பட்ட ஓடத்துறைகளை அடிப்படையாகக் கொண்டு வர்த்தகத்துறைமுகங்கள் வளர்ச்சியடைந்து காணப்பட்டன. அவை 'பட்டுன்கம்' (பட்டணம்) எனும் பெயரால் குறிப்பிடப்பட்டன. மகாதித்த, சூகரதித்த, ஜம்புகோளதித்த, கோகண்ணதித்த என்பன அவ்வாறான பட்டணங்களிற் சிலவாகும். மகாதித்த துறைமுகப் பகுதியில் வெளிநாட்டு நாணயங்களும், சீன மட்பாண்டங்களின் சிதைவுகளும் தொல்பொருட்களாகக் கிடைத்ததைக் கொண்டு வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சியடைந்திருந்ததை அறியமுடிகின்றது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட வர்த்தகப்பொருட்களில் யானை, யானைத்தந்தம், முத்து, மாணிக்கம், சங்கு, கடலாமை ஓடு, பருத்தித்துணி என்பன பிரதான இடம் பெற்றன.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுள் தங்கம், வெள்ளி, செப்பு, வெண்கலம், கண்ணாடி, பீங்கான் பொருட்கள், உயர்ரகத்துணிகள், குதிரைகள் என்பன பிரதான இடம்பெற்றன.

இந்தியா, கிரேக்கம், உரோம், சீனா, அரேபியா ஆகிய நாடுகளுடன் இலங்கை வெளிநாட்டு வர்த்தகத்தை மேற்கொண்டமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அதன்படி நீர்வள நாகரிகத்தின் ஆரம்பத்தில் நிலவிய வெளிநாட்டு வர்த்தகம் பொலன்னறுவைக்காலத்தில் மிகவும் வளர்ச்சி கண்டிருந்தது.

**செயற்பாடு :**

★ *"நீர்வள நாகரிகத்தின் வர்த்தக நடிவடிக்கைகள்" எனும் தலைப்பில் அறிக்கை ஒன்று தயாரிக்க.*


இலவச விநியோகத்திற்காக

## பௌத்த சமயம்

அசோக மன்னனின் தர்மதூதுக்குழுக்களை அனுப்பும் திட்டத்தினாலும் தேவநம்பிய திஸ்ஸ மன்னனுடன் அசோக மன்னன் நட்புறவு கொண்டிருந்ததன் விளைவாகவும் மகிந்த தேரரால் இலங்கைக்கு பௌத்த சமயம் கொண்டு வரப்பட்டது. அன்றைய ஆட்சியாளனான திஸ்ஸ மன்னனால் பௌத்த சமயம் ஏற்றுக்கொள்ளப்பட்டமையானது இலங்கையில் பௌத்த சமயத்தின் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து அரச குடும்பத்தினரும் அரச பிரதானிகளும் பௌத்த சமயத்தைத் தழுவினர். அவர்களைப் பின்பற்றி பொதுமக்களும் பௌத்த சமயத்தை ஏற்றுக் கொண்டமை அதன் பரவலுக்குக் காரணமாயமைந்தது.

மகிந்த தேரர் தலைமையிலான பிக்குமாரை மிகிந்தலையிலிருந்து அனுராதபுரத்துக்கு எழுந்தருளச் செய்தல், அவர்களுக்கு 'மகாமெவ்னா' என்னும் மகாமேக நந்தவனத்தை அர்ப்பணஞ் செய்தமை எனும் நிகழ்வுகளின் பின்னர் அங்கு மகாவிகாரையை அமைப்பதற்கான எல்லை குறிக்கப்பட்டது. பிற்காலத்தில் மகாவிகாரை தேரவாத பௌத்த சமயத்தின் மத்திய நிலையமாகத் திகழ்ந்தது.

மக்களின் வணக்க வழிபாட்டுக்காக தேவநம்பிய திஸ்ஸ மன்னன் புத்தர் பெருமானின் புனித தாதுக்களைப் பிரதிஷ்டை செய்து தூபராமை விகாரையைக் கட்டினான். இது இலங்கை வரலாற்றில் கட்டப்பட்ட முதல் தூபியாகக் கொள்ளப்படுகிறது.

மகாவிகாரையினதும் தேரவாத பௌத்த சமயத்தினதும் பொற்காலமாகக் கருதப்படுவது துட்டகைமுனு மன்னனின் ஆட்சிக்காலமாகும். ருவன்வெலிசாய, மிரிசவெட்டிய முதலிய விகாரைகளை அமைப்பதற்கு இம்மன்னனே அனுசரணை வழங்கினான். அத்துடன் பௌத்த பிக்குமார் வசிப்பதற்காக ஒன்பது மாடிகளைக் கொண்ட 'லோவமஹாபாய' எனும் ஆயிரங்கால் மண்டபத்தையும் துட்டகைமுனு மன்னனே நிர்மாணித்ததாக மூலதாரங்கள் கூறுகின்றன.

பௌத்த சமயத்தின் வளர்ச்சியைப் போலவே அச்சமயத்தைப் பாதுகாப்பதற்கும் சிங்கள மன்னர்கள் நடிவடிக்கைகளை மேற்கொண்டனர். வாய்மொழிக்கதையாக அதுவரை காலமும் செவிவழியாகப் பேணப்பட்டு வந்த திரிபிடகம் மாத்தளை அலுவிகாரையில் வைத்து நூல்வடிவில் கொடுக்கப்பட்டது. வலகம்பா மன்னனின் காலத்தில் நிகழ்ந்த இந்த பாரிய பணிக்கு தலைமைத்துவம் வழங்கியவர் ஒரு குடியிருப்புக்குப் பொறுப்பான பிரதானியாவார். மகாநாம மன்னனின் ஆட்சிக்காலத்தில் சிஹல 'அட்டகதா' எனும் சமயக் கதைகளை பாளி மொழியில் மொழிபெயர்க்கும் பணியானது புத்தகோச தேரரின் தலைமையில் நிகழ்ந்தமையானது சமயத்தைப் பாதுகாப்பதற்கு அரச அனுசரணை கிடைக்கப்பெற்ற மற்றுமொரு சந்தர்ப்பமாகும்.

பௌத்த சமயத்தில் ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களின் தகவல்களைத் தேடியறிவோம்.

வலகம்பா மன்னன் அனுராதபுரத்தைக் கைவிட்டு மலைநாட்டுக்குத் தப்பியோடி, தமிழ் ஆக்கிரமிப்பாளர்களைத் துரத்தியடிப்பதற்காகப் படை திரட்டினான். அக்காலத்தில் 'குப்பிகலதிஸ்ஸ' எனும் தேரர் மன்னனுக்கு உதவியாக இருந்தார். அதற்குப் பிரதியுபகாரமாக மன்னன் அபயகிரி விகாரையை அமைத்து அத்தேரருக்கு தானஞ் செய்தான். இதனால் கோபமடைந்த மகாவிகாரை பிக்குகள், பொதுமக்களுடன் நெருக்கமான உறவு வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் அவரை மகாவிகாரையிலிருந்து வெளியேற்றினர். எனவே 500 பிக்குகளுடன் குப்பிகலதிஸ்ஸ தேரர் அபயகிரி விகாரையை வாசஸ்தலமாக்கிக் கொண்டார். இந்நிகழ்வினால் பௌத்த பிக்குகளிடையே பேதமேற்பட்டதுடன் அபயகிரிவிகாரை தனியானதொரு பௌத்த மத்திய நிலையமாக வளர்ச்சி கண்டது. எனவே பௌத்த சமயத்தில் 'நிகாய' எனும் பிரிவுகள் தோன்றுவதற்குக் காரணமாயிற்று. ஜேத்தவனாராம விகாரையும் தேரவாதக் கருத்துக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தது. மேலும் அக்காலகட்டத்தில் இந்தியாவில் வளர்ச்சி கண்ட மகாயான பௌத்த சமயமும் இலங்கையினுள் வேகமாகப் ஊடுருவிப் பரவியது.

வோஹாரிக திஸ்ஸ மன்னனின் ஆட்சிக் காலத்தில் வைதுல்யவாதி எனும் பௌத்த சமயப்பிரிவு பற்றிய சர்ச்சை எழுந்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கோதாபய மன்னன், 'வைதுல்யவாதி' பிக்குமார்களை நாட்டை விட்டு வெளியேற்றினான் என்பதிலிருந்து தேரவாத பௌத்த சமயத்தைப் பாதுகாப்பதற்காக அரச அனுசரணை கிடைக்கப் பெற்றுள்ளமையை அறிந்து கொள்ள முடிகின்றது.

ஆயினும் மகாசேன மன்னன் ஆட்சிபீடமேறிய பின்னர் மீண்டும் வைதுல்ய வாதம் தலைதூக்கியமையை அறிய முடிகின்றது. சோழ நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த சங்கமித்திர தேரரின் தூண்டுதலால் மகாசேன மன்னன் மகாவிகாரைக்கு எதிராகச் செயற்பட்டான். அதனையடுத்து இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் மகாயானக் கருத்துக்கள் பரவியதுடன் அப்பிரிவுக்குரிய விகாரைகளும் தோற்றம் பெறலாயிற்று. புதுறுவகல எனுமிடத்தில் காணப்படும் போதிசத்துவர் உருவம் இதற்குத் தக்கசான்றாகும். மகாயான பௌத்த சமயப்பிரிவினரின் நம்பிக்கை கொள்ளும் 'அவலோகிதேஸ்வர' போதிசத்துவரின் உருவம் குஸ்டராஜகல, புதுறுவகல எனுமிடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இராசரட்டையிலும் ஏனைய பிரதேசங்களிலும் மகாயான பௌத்தம் பரவிய போதிலும், பொதுவாக இலங்கையில் தேரவாத பௌத்தமே முக்கியத்துவம் பெற்று வந்துள்ளமையை அறிய முடிகின்றது. இன்று இலங்கையில் எஞ்சியிருக்கின்ற பௌத்த இலக்கிய மூலாதாரங்கள் அனைத்தும் தேரவாத பௌத்த நூல்களேயாகும்.

பொலன்னறுவைக் காலத்திலும் பௌத்த சமயத்திற்கு அரச அனுசரணை கிடைக்கப்பெற்றுள்ளமையை வம்சக்கதைகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இக்காலகட்டத்திலும் மகாவிகாரை, அபயகிரி, ஜேத்தவனாராம எனும்


இலவச விநியோகத்திற்காக

மூன்று பௌத்த நிலையங்கள் காணப்பட்டன. பௌத்த பிக்குமாரிடையே நிலவிய இவ்வபிப்பிராய பேதங்களை இல்லாதொழிக்கும் நோக்குடன் பௌத்த சங்கத்தை மறுசீரமைப்பதற்கு பாரிய பணியை மகாபராக்கிரமபாகு மன்னன் முன்னெடுத்தமையும் அறியக்கூடியதாயுள்ளது. அதற்காக அவன், திம்புலாகல மகா காசியப்பப தேரரின் தலைமையில் ஒரு நீதிமன்ற சபையை அமைத்தான். அதில் ஒவ்வொரு நிகாயப்பிரிவு பிக்குமாரினதும் ஒழுக்கம், ஒழுக்கயீனம் பற்றி விசாரணை செய்யப்பட்டது. மகாவம்சம் குறிப்பிடுவதன்படி அபயகிரி மற்றும் ஜேத்தவன பிக்குமார் ஒழுக்கயீனர்களாகக் காணப்பட்டனர். அவ்வாறு ஒழுக்கமற்ற பிக்குமாரின் காவியுடை களையப்பட்டு அவர்களுக்கு அரசாங்கத்துறையில் பதவிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இன்னும் சில பிக்குமார் 'சாமணேரர்' எனும் நிலைக்கு கீழிறக்கப்பட்டனர். இவ்வாறு கி.பி 1165 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட நிகாயகளுக்கிடையிலான ஒற்றுமை காரணமாக பௌத்த சமயப் பிரிவினைகளுக்கு இலங்கையில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அதன் பின்னர் பௌத்த பிக்குமார் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட திட்டங்கள் 'பொலன்னறுவ கதிகாவத' எனும் ஒழுக்கநெறிக்கோவையாக கல்விகாரையில் ஒரு சுவர்க் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டது.

**செயற்பாடு :**

★ *நீர்வள நாகரிகத்தில் பௌத்த சமயத்துக்கு அரச அனுசரணை கிடைத்த சந்தர்ப்பங்களை அட்டவணைப்படுத்துக.*

## இந்து சமயமும் ஏனைய சமயங்களும்:-


உரு 4.7 இந்து சமய உற்சவமொன்று

இலங்கையில் பௌத்த சமயம் அறிமுகப் படுத்தப்படமுன்னர் மக்கள் கற்களையும் மரங்களையும் வணங்கி வந்ததுடன் நெருப்பு, மழை, காற்று, முதலிய இயற்கைப் பொருட்களுக்குப் பூஜைகள் செய்துவந்தனர். இறந்தவர்களையும் நாகத்தையும் வழிபட்டமை புராதன இலங்கையரிடம் காணப்பட்டது போல இன்றும் காணப்படு கின்றது.

மகிந்த தேரர் இலங்கைக்கு வந்த காலத்தில் இங்கு பிராமணசமயம் (பிரமன், இந்திரன், சூரியன் முதலிய கடவுளரை வணங்குதல்) காணப்பட்டதுடன் வைரவர், சமன் முதலிய கடவுளருக்கும் பூஜைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நம்பிக்கையைக் கடைப்பிடிப்பதற்கு எவ்விதத் தடையுமின்மையால் சில சமூகப் பிரிவினரிடம் பிரம்மணீய சமயமும், தெய்வங்களை வழிபடும் முறையும் காணப்பட்டன. பண்டுகாபயன், வலகம்பா, மகாசேன மன்னர்களின் காலத்திற்குரிய பிரம்மணீய சமயம் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குடியேற்றக் குழுவினராகவும் ஆக்கிரமிப்பாளராகவும் இலங்கைக்கு அடிக்கடி வந்த இந்தியர், கரையோரத் துறைமுகப் பகுதிகளில் இந்துக் கோயில்களைக் கட்டினர். மகாசேன மன்னன் அவ்வாறான கோயில்கள் பலவற்றையும் அழித்ததாக மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அனுராதபுரக்காலத்தின் இறுதிப்பகுதியில் இங்கு கட்டப்பட்ட சில இந்துக் கோயில்களின் சிதைவுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக மன்னார் (திருக்கேதீஸ்வரம்), திருகோணமலை (திருக்கோணேஸ்வரம்) போன்ற சிவாலயங்கள் கி.பி 13 ஆம் நூற்றாண்டில் மிகவும் பிரசித்தி பெற்ற தலங்களாகத் திகழ்ந்துள்ளமையை சுட்டிக் காட்டலாம். பொலன்னறுவை சோழராதிக்கத்தின் கீழ் வந்த பின்னர் அங்கும் பல சிவாலயங்கள் கட்டப்பட்டன.

பொலன்னறுவைக் கால சந்திரவட்டக் கல்லில் எருதின் உருவம் நீக்கப்பட்டமையானது இந்து சமயத்தின் செல்வாக்கை எடுத்துக்காட்டுகின்றது. இந்து சமயத்துடன் தொடர்பான வெண்கலச் சிலைகளும் பொலன்னறுவையில் கண்டெடுக்கப்பட்டுள்ளமையானது இந்து சமய செல்வாக்கை மேலும் தெளிவுபடுத்துகிறது. இக்காலப்பகுதிக்குரிய சிவன், கணபதி, விஷ்ணு சிலைகளுடன் பார்வதிதேவியின் சிலைகளும் கிடைத்துள்ளன.

## மக்களின் வாழ்க்கை முறை:-

பௌத்த சமயம் மக்களின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டமையால் மக்களிடையே சமாதான சகவாழ்வு கட்டியெழுப்பப்பட்டது. அக்காலத்தில் நிலவிய விவசாயப் பொருளாதாரத்துக்கேற்ப வாழ்க்கைக் கோலம் அமைந்திருந்தது. பௌத்த சமயத்தின் பரவலுடன் சகல மக்களும் ஓரே தரத்தைச் சேர்ந்த பொது சமூகமாகக் கருதப்பட்டதுடன் அங்கு பிக்கு, பிக்குணி, உபாசக (பக்தன்), உபாசிகா (பக்தை) எனும் பிரிவினர் காணப்பட்டனர். புத்தர் பெருமானின் போதனைக்கேற்ப சமாதான சகவாழ்வுடன் கூடிய சமூகமொன்று உருவானது.

அனுராதபுரக் காலத்தில் தந்தை வழிச் சமூகவமைப்பே காணப்பட்டது. ஆயினும் பெண்களுக்கு சுயமாக செயற்படுவதற்கான சுதந்திரம் காணப்பட்டது. புராதன சமூகத்தில் பல்வேறு விதமான சீவனோபாயக் கைத்தொழில்கள் மேற்கொள்ளப்பட்டன. விவசாயிகள், வியாபாரிகள், பொற்கொல்லர் எனும் தொழில்ரீதியானவர்களாக அவர்கள் காணப்பட்டனர். பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் எனும் குலமுறையில் வேணர், நேசாதர், இரதகாரர், புக்குசர், சண்டாளர் எனும் ஐவகை சாதியினரும் பற்றிய தகவல்கள் கிடைத்த போதிலும் இந்தியாவைப் போன்று தீவிரமான சாதிப்பிரிவினை இங்கு காணப்படவில்லை. அதற்குக் காரணம் பௌத்த சமயத்தின் செல்வாக்காகும்.

அனுராதபுரக் காலத்தை விட பொலன்னறுவைக்கால சமூகவமைப்பு ஓரளவு மாற்றமுற்றது. தென்னிந்திய செல்வாக்கு காரணமாக சமூகம் பல வம்சங்களாகவும்

குலங்களாகவும் பிரிந்து காணப்பட்டது. அரச வம்சம், பிராமணவம்சம், வர்த்தக சமூகம், விவசாயசமூகம் என்று பிரதான நான்கு குலத்தினர் பொலன்னறுவைக்காலம் முதல் பரவலடைவதைக் காணமுடிகின்றது. திருமணத்தொடர்புகள் ஒரே குலத்தினரிடையே மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் மாற்றுக் குலத்தவரிடையேயும் திருமண உறவுகள் நிகழ்ந்துள்ளன.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கைக்கோலம் பொலன்னறுவைக் காலத்தில் மிகவும் சிறப்பாகத் திகழ்ந்துள்ளமையை அறிய முடிகின்றது. முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலம் இதற்கு சிறந்த உதாரணமாகும். இக்காலத்தில் விவசாயம் தவிர்ந்த வேறு தொழில்களை சீவனோபாயமாக மேற்கொண்ட வகுப்பினரும் வாழ்ந்துள்ளனர்.

மேலும் இக்காலப்பகுதியில் பந்தாட்டம், நீர்விளையாட்டு, ஊஞ்சலாடுதல் முதலிய விளையாட்டுக்கள் சமூகத்தில் காணப்பட்டதாக இலக்கிய மூலாதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. குருகுலம் அல்லது பிரிவெனா எனும் கல்வி நிலையங்களும் காணப்பட்டன. பிக்கு மாணவர்களுக்குப் போன்றே பொது சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கல்வி கற்கும் வாய்ப்புகள் காணப்பட்டன. பெண்களும் கூட இக்காலப்பகுதியில் கல்வியறிவைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையில் ஓய்வு நேரம் அதிகமாகக் கிடைத்தமையால் மக்கள் இலக்கியம் மற்றும் கலைகளின் பக்கம் தமது கவனத்தைத் திருப்பியுள்ளனர். எனவே புத்த சமயத்தையும் விவசாயத்தையும் பின்னணியாகக் கொண்ட கலாசார அமைப்பொன்று நீர்வளநாகரித்தில் தோன்றி வளர்ந்தது.

**செயற்பாடு :**

★ *நீர்வள நாகரிக சமூகவலையமைப்பில் தெளிவாகக் காணப்பட்ட பண்புகளை அட்டவணைப்படுத்துக*

## கலைகளும் கட்டட நிர்மாணமும்

இலங்கையில் பௌத்த சமயத்தின் பரவலுடன் கலைகளும் வளர்ச்சி கண்டன. ஆரம்பத்தில் கற்குகைகளிலும் வன ஆரணியங்களிலும் வாழ்ந்த பௌத்த பிக்குகளுக்கு ஆராமைகள் அமைத்து தானஞ் செய்யப்பட்டது. பௌத்த மக்களின் வணக்க வழிபாட்டிற்காக விகாரைகளும், தூபிமனைகளும் அமைக்கப்பட்டமையால் கட்டடக்கலை இங்கு வளர்ச்சி கண்டது.

விகாரை நிர்மாணங்களில் இலங்கையின் முதல் படைப்பாக தூபாராம விளங்குகின்றது. காலப்போக்கில் ருவன்வெலிசாய, மிரிசவெட்டி, அபயகிரி, ஜேத்தவனாராம ஆகிய விகாரைகளும் கட்டப்பட்டன. விகாரைகளைக் கட்டும்போது

உறுதிவாய்ந்ததும் பலம் வாய்ந்ததுமான பரவலான அத்திவாரத்தை இடுதல், கோளவடிவிலான கோளாகாரகர்ப்பத்தை அமைத்தல் என்பன புராதன கட்டடக் கலைஞர்கள் கையாண்ட தொழினுட்ப அம்சங்களாகும். இதற்காக பயன்படுத்தப்பட்ட அளவீட்டு முறைகளும் கேத்திரகணித அறிவும் மிகவும் உயர்மட்டத்தில் காணப்பட்டதை அறிய முடிகின்றது. விகாரையின் 'வாகல்கட' எனும் பகுதி மிகவும் அழகான செதுக்கல் வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

### வட்டதாதுமனை (வட்டதாகெய)


சிறிய விகாரைகளைச் சுற்றி தூண்களை எழுப்பி வட்ட வடிவிலான கூரையை அமைத்து உருவாக்கப்படும் கட்டடங்கள் தூபிமனை அல்லது வட்டதாது மனை எனப்பட்டது. இதற்கு உதாரணமாக தூபராம மற்றும் மெதிரிகிரிய தாது கோபம் என்பவற்றைக் கூறலாம். மேலும் இத்தூண்கள் கருங்கல்லினால் அல்லது மரத்தினால் ஆனதுடன் அவை செதுக்கல் கலை மூலம் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

### ஆராமைக் கட்டடங்கள்:-

புத்த பிக்குகள் வசிப்பதற்காக ஆராமைகள் அமைக்கப்பட்டன. அனுராதபுரத்தில் காணப்படும் மகாவிகாரை, அபயகிரிவிகாரை, ஜேத்தவனாராம கட்டடத்தொகுதிகள் இதற்கு சிறந்த உதாரணமாகும். அத்துடன் துட்டகைமுனு மன்னன் 'லோவமகாபாய' எனும் ஒன்பது மாடிகளைக் கொண்ட ஆயிரங்கால் மண்டபத்தைக் கட்டி அதனை பிக்குமார் வசிப்பதற்காக அர்ப்பணஞ் செய்தான் என்று மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போயமனை, போதிமனை, தானசாலை, தியான மண்டபம், மருத்துவசாலை என்பனவும் கட்டடக்கலையின் சிறந்த படைப்புக்களாகும்.

### சிலைகளும் செதுக்கல் கலையும்:-



*உரு 4.8 அனுராதபுரக்கால சந்திரவட்டக்கல்*




*உரு 4.9 பொலன்னறுவைக்கால சந்திரவட்டக்கல்*

செதுக்கல் கலைப்படைப்புக்களுள் சந்திரவட்டக்கல், கொறவக்கல், காவற்கல் என்பன முக்கியம் பெறுகின்றன. சந்திரவட்டக்கல் என்பது அரைவட்ட வடிவிலான கருங்கல்லின் செதுக்கப்பட்ட ஒரு படிவரிசையின் முதல் படிக்கல்லாகும்.

மலர்ந்த தாமரைப் பூவின் பாதி உருவம் சந்திரவட்டக்கல்லின் நடுவே செதுக்கப்பட்டுள்ளது. அதனைச் சுற்றிவர பூங்கொடி உருவமும் அதனையடுத்து அன்னப்பறவைகளின் வரிசையொன்றும் அதனையடுத்து சிங்கம், யானை, குதிரை,

எருது எனும் மிருகங்களின் வரிசையும் முடிவில் பூவிதழ் அல்லது தீச்சுடர் உருவமும் செதுக்கப்பட்டுள்ளன. இந்து மக்களின் வணக்கத்துக்குப் பாத்திரமான ஒரு மிருகமாக எருது கருதப்படுவதால் பொலன்னறுவைக்கால சந்திரவட்டக்கல்லில் எருதின் உருவம் செதுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இசுறுமுனிய விகாரையில் காணப்படும் குதிரைத்தலையும் மனிதனும், இசுறுமுனிய காதலர் சோடி, நீராடும் யானைகள் என்பவற்றுடன் அங்கு காணப்படும் செதுக்கல் கலைப்படைப்புகள் உயர் தரத்திலான நிர்மாணங்களாக விளங்குகின்றன.



*உரு: 4.10 கொறவக்கல்*



*உரு: 4.11 காவற்கல்*



*உரு: 4.12 இசுறுமுனி காதலர் சோடி*



*உரு: 4.13 குதிரைத்தலையும் மனிதனும்.*



*உரு: 4.14 சமாதிச்சிலை*

அனுராதபுரக் காலத்திற்குரிய புத்தர் சிலைகளுள் அதிகளவில் காணப்படுவது அமர்ந்த நிலையில் உள்ள தியானச் சிலைகளாகும். புத்தர் பெருமானின் இரு கால்களும் ஒன்றுடனொன்று குறுக்காக மடித்து வைக்கப்பட்டு, இடது பாதம் வலது பாதத்தின் மேல் வைக்கப்பட்டு, இடது கைக்கு மேலாக வலது கையை மடியின் மீது வைத்து சாந்தமான உணர்ச்சி வெளிப்பாட்டுடன் தியானநிலையில் ஆசனத்தின் மேல் அமர்ந்திருக்கும் வடிவில் இச்சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அனுராதபுர 'குட்டம் பொக்குன' எனும் இரட்டைத்தடாகத்தின் அருகே காணப்படும் சமாதிச்சிலை இதற்குச் சிறந்த உதாரணமாகும்.



உரு:4.15 கல்விகாரை சயனச்சிலை

ஒரே நோக்கத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள இக்கருங்கற் சிலைகளில் புத்தர் பெருமானிடம் காணப்பட்ட கருணை, அன்பு எனும் உயர் பண்புகளைக் காண முடிவது சிறப்பம்சமாகும்.



உரு: 4.16 அவுக்கன நிற்கும் சிலை

நிற்கும் சிலைக்கு உதாரணமாக கலாவாவிக்கு அண்மையில் காணப்படும் அவுக்கன சிலையைக் குறிப்பிடலாம். புத்தர் பெருமானின் பண்புகளை வெளிப்படுத்தும் வகையில் இச்சிலை வடிக்கப்பட்டுள்ளது. காவியுடையின் மடிப்புக் கோடுகளை கருங்கல்லில் கூட மிக நுட்பமான முறையில் அமைத்திருப்பதிலிருந்து அக்காலக்கலைஞர்களின் திறமையை நாமறிந்துகொள்ள முடிகின்றது.

கருங்கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ள புத்தர்பெருமானின் உறக்க நிலையைக் காட்டும் சயனச் சிலைகளும் காணப்படுகின்றன. பொலன்னறுவை கல்விகாரையில் காணப்படும் சயனச்சிலை இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

சஸ்ஸேறுவ, புதுறுவகல, மாளிகாவில முதலிய இடங்களில் காணப்படும் புத்தர் சிலைகளும் அக்காலத்தின் கலைப்படைப்புகளின் உயர் நிர்மாணப்பண்புகளை வெளிக்காட்டுகின்றன.



உரு: 4.17 நடராஜர் சிலை



உரு: 4.18 முதலாம் இலக்க சிவன் கோயில்



உரு: 4.19 இரண்டாம் இலக்க சிவன் கோயில்



இலவச விநியோகத்திற்காக

பொலன்னறுவைக் காலத்தில் இந்து சமய கடவுள்களின் உருவங்கள் பல்வேறு உலோகங்களினாலும் வார்க்கப்பட்டுள்ளன. சிவன், விஷ்ணு பிள்ளையார் சிலைகள் அவற்றுள் முக்கியமானவை. இவை அக்காலகட்ட உலோகக் கைத்தொழில் வளர்ச்சியைக் காட்டுவதாக அமைந்துள்ளன.

இந்து சமயக் கட்டடக்கலை பற்றியும் இக்காலகட்டத்துக்குரிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. சோழர் கட்டடக்கலைப் பண்புகளுடன் கட்டப்பட்ட சிவாலயங்களை பொலன்னறுவையில் இன்றும் காணமுடிகின்றது.



உரு: 4.20 நிஸ்ஸங்கலதா மண்டபம்

பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்பட்ட நிஸ்ஸங்கலதா மண்டபம் மிகவும் சிரேஷ்டமானதொரு படைப்பாகும். அரசவை மண்டபமாகத் திகழ்ந்த இக்கட்டடத்தில் சிம்மாசனம் கருங்கல்லில் செதுக்கப்பட்ட சிங்க உருவில் காணப்படுகின்றது. அரச அதிகாரிகளின் ஆசனங்களுக்குப்பின்னால் அமைந்த கற்றூண்களில் அவர்களின் பதவிப்பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அன்றைய கால அரசவையொன்றின் பண்புகளை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.



உரு: 4.21 சத்மஹல் பிரசாதய
(ஏழடுக்கு மாளிகை)

பொலன்னறுவையில் காணப்படும் 'சத்மஹல் பிரசாதய' எனும் ஏழடுக்கு மாளிகையும் சிறந்ததொரு கட்டடக்கலைப் படைப்பாகும். இங்கு ஒவ்வொரு மாடிச் சுவர்களிலும் அரை வட்ட வடிவில் குடைந்தெடுக்கப்பட்ட சுவர்களில் தெய்வ உருவங்கள் காணப்படுகின்றன. இது பெரும்பாலும் ஒரு தூபியின் வடிவத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.



உரு: 4.22 தாமரை வடிவத் தடாகம்

அனுராதபுர காலத்தில் போன்றே பொலன்னறுவைக் காலத்திலும் கட்டடக்கலைஞர்கள் நகர நிர்மாணத்திலும் கவனஞ் செலுத்தியுள்ளனர். குளங்களிலிருந்து நீரைப் பெற்றுக்கொள்ளும் பொய்கைகளும் தடாகங்களும் மேற்படி நகரங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அனுராதபுரத்தில் காணப்படும் 'குட்டம் பொய்கை' எனும் இரட்டைப் பொய்கையும் பொலன்னறுவையில் காணப்படும் 'நெலும் பொகுன' எனும் தாமரை வடிவிலான தடாகமும் இதற்குச் சிறந்த உதாரணங்களாகும்.



உரு:4.23 குட்டம் பொய்கை (இரட்டைத் தடாகம்)

கலைகளுள் ஓவியக்கலையும் முக்கிய இடம் வகித்தது. இலங்கையின் ஓவியங்களில் சிகிரியா ஓவியங்கள் உலகப்புகழ் பெற்றவையாகும். கி.பி 5 ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கருதப்படும் இவ்வோவியங்கள் சிகிரியாக்குன்றின் குழிவான சுவர்களில் வரையப்பட்டுள்ளன. தாமரை, அல்லி, செண்பகப்பூக்களைச் சூடியுள்ளவாறும் பூக்களைக் கைகளில் ஏந்தியுள்ளவாறுமான பெண்களைச் சித்திரிக்கும் இவ் ஓவியங்கள் காசியப்ப மன்னனின் காலத்தில் வரையப்பட்டவையாகும். இந்தியாவின் குப்தர் காலத்துக்குரிய அஜந்தா குகை ஓவியங்களைத் தழுவியே சிகிரியா ஓவியங்கள் வரையப்பட்டுள்ளதாக சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பொலன்னறுவைக் காலத்துக்குரிய ஓவியங்களை லங்கா திலக சிலைமனை, திவங்க சிலைமனை என்பவற்றுள் காணலாம். லங்காதிலக சிலைமனையின் சுவர் முழுவதும் ஓவியங்கள் வரையப்பட்டிருந்ததாக நம்பப்படுகின்றது. ஆயினும் இன்று ஒரு கதவு நிலையின் மேல் அரை வட்டத்தில் காணப்படும் ஓர் ஓவியம் மாத்திரமே எஞ்சியுள்ளது. அத்துடன் கல்விகாரையின் வித்தியாதரக் குகையில் காணப்படும் ஓவியமும் முக்கியம் வாய்ந்ததாகும்.

**செயற்பாடு :**

★ *நீர் வள நாகரிகத்தில் கட்டடக்கலை மற்றும் கலை நிர்மாணங்களின் படங்களை உள்ளடக்கும் வகையில் சிறு நூலொன்றைத் தயாரிக்கவும்.*

### கல்விநிலை:-

நீர்வள நாகரிகத்தில் இங்கு வாழ்ந்த பௌத்த துறவியர், துறவியரல்லாத பண்டிதர்களால் எழுதப்பட்டுள்ள நூல்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது இந்நாட்டின் கல்விநிலை உயர்மட்டத்தில் திகழ்ந்துள்ளமையை எம்மால் உணர முடிகின்றது. அக்காலத்தில் வாழ்ந்த பிள்ளைகள் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்காக குருகுலத்திற்கு அல்லது கல்விநிலையமொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். கல்விநிலையங்களாகப் பன்சலைகளும் பிரிவெனாக்களும் காணப்பட்டன. துறவு நிலை மாணக்கருக்குப் போலவே பொது மாணக்கருக்கும் கல்விகற்பதற்கான வாய்ப்புகள் காணப்பட்டன. கற்றல் முறைகளாக ஆசிரியர் சொல்வதை செவிமடுத்தல் மற்றும் மனனஞ் செய்தல் என்பன காணப்பட்டன. ஆரம்பத்தில் மணலில் விரலால் எழுதப் பயிற்றுவித்து பின்னர் பனையோலையில் எழுத்தாணிகொண்டு எழுதப் பயிற்றுவிக்கப்பட்டது. இக்காலக்கல்வித்திட்டத்தில் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. கணிதம், தர்க்கவியல், இலக்கணம், வானியல், வில்வித்தை என்பன அவற்றுள் சிலவாகும். கல்வியைப் போதிக்கும் மொழிகளாக பாளி, சமஸ்கிருதம், சிங்களம் என்பன காணப்பட்டன.

## மொழியும் இலக்கியமும்:-

பாளி இலக்கியம், சமஸ்கிருத இலக்கியம், சிங்கள இலக்கியம் என்பன இங்கு முக்கியத்துவம் பெற்றன. சிங்கள மொழியின் மூலமொழிகளான பாளி, சமஸ்கிருதம் எனும் மொழிகளைக் கற்பது கற்றோரிடம் பிரபலமடைந்திருந்தது.

### பாளி இலக்கியம்:-

புத்தகோச தேரரால் 'ஹெல' மொழியில் எழுதப்பட்ட 'அட்டுவா' எனும் நூல் பாளி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. இத்தேரருடன் இன்னும் பல பண்டிதர்களும் இணைந்து எழுதிய 'அட்டகதா' எனும் இலக்கியமும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். புத்தகோச தேரரால் இன்னும் பல நூல்களும் பாளி மொழியில் எழுதப்பட்டுள்ளன. 'அட்டகதா' மற்றும் 'திரிபீடகம்' எனும் நூல்களை முழுமையாகக் கற்று புத்த சமயம் பற்றி சுருக்கமாக எழுதப்பட்ட நூல்களாக அப் பாளிநூல்கள் காணப்பட்டன.

### சமஸ்கிருத இலக்கியம்:-

சாராணர்த்த சங்கிரஹய, ஜானகிஹரண என்பன சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட நூல்களாகும். கி.பி 7 ஆம் நூற்றாண்டாகும் போது கீழைத்தேச நாடுகளின் தொடர்பு மொழியாகக் காணப்பட்டது 'சகு' எனும் மொழியாகும்.

### சிங்கள இலக்கியம்:-

புத்த சமயம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் அதனை சிங்கள மக்களுக்கு இலகுவாகப் புரியவைப்பதற்காக 'ஹெலட்டுவா' எனும் பெயரில் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. மகா அட்டுவா, மகாபச்சரி அட்டுவா, குறுந்தி அட்டுவா எனும் பெயர்களில் எழுதப்பட்ட இந்நூல்கள் சிங்கள இலக்கியத்தில் முக்கியம் பெறுகின்றன. ஆயினும் இந்நூல்களை இன்று காணமுடியாதுள்ளது.

ஐந்தாம் காசியப்ப மன்னனால் எழுதப்பட்ட 'தம்பியா அட்டுவா கற்றபதய' எனும் நூல், தம்மபதக் கதைகளில் வரும் கடினமான வசனங்களுக்கு சிங்களத்தில் எழுதப்பட்ட விளக்கவுரையாகும். சிகவலந்த, சிகவலந்த வினிச எனும் இரு நூல்களும் ஹெல மொழியில் எழுதப்பட்டவையாகும். நான்காம் சேன மன்னனால் எழுதப்பட்ட 'சியபஸ்லகர' என்பதும் மற்றுமொரு முக்கிய நூலாகும். பபிரிய, கசுப்தொட்ட ஏபா முதலிய 12 மகா கவிகள் முதலாம் அக்போ மன்னனின் காலத்தில் வாழ்ந்ததாக 'நிகாய சங்கிரஹய' எனும் நூல் குறிப்பிடுவதிலிருந்து அக்காலகட்டத்தின் இலக்கிய வளர்ச்சியை அறிந்து கொள்ள முடியும். பொலன்னறுவைக்காலத்தில் எழுதப்பட்ட சசந்தாவத, முவதெவ்தாவத, அமாவதுற, புத்சரண, சிங்கள தூபவம்சம் எனும் நூல்களும் சிங்கள இலக்கியத்தினுள் அடங்கும்.

பொலன்னறுவைக்காலத்தில் புகழடைந்திருந்த உரைநடை இலக்கியமாக 'சன்ன' எனும் இலக்கிய வடிவம் காணப்பட்டது. அபிதம்மத்த சங்கிறஹ சன்னய, மேகதூத சன்னய, ஜானகிஹரண சன்னய, சசந்தா சன்னய முதலியன அவ்வாறான

நூல்களுட் சிலவாகும். இக்காலத்தில் 'கற்றபதய' எனும் விளக்கவுரை நூல்களும் எழுதப்பட்டன. அதாவது மகாபோதிவங்ச கற்றபதய , ஜாதக அட்டுவா கற்றபதய என்பன அவற்றுள் சிலவாகும்.

**செயற்பாடு :**

★ *நீர்வள நாகரிகத்தில் மொழி, இலக்கிய வளர்ச்சி காணப்பட்டமைக்கான உதாரணங்களை அட்டவணைப்படுத்துக.*

## வெளிநாட்டுத் தொடர்புகள்:-

இலங்கை வெளிநாடுகளுடன் தொடர்புகளை மேற்கொள்வதில் அதன் அமைவிடம் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. அவ்வகையில் கீழ்வரும் விடயங்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்.

★ கீழைத்தேச, மேலைத்தேச கடல்மார்க்க பட்டுவீதியின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இலங்கை அமைந்திருந்தமை.

★ தென்மேல், வடகீழ் காற்றுக்குரிய நீரோட்டங்களுக்கு அருகில் இலங்கை அமைந்திருந்தமை.

★ இலங்கையைச் சுற்றிவர அமைந்திருந்த இயற்கைத் துறைமுகங்கள்

மேற்படி அம்சங்களின் செல்வாக்குக்குக் காரணமாக இலங்கையுடன் பல்வேறு நாடுகளும் பல்வேறு வகையில் தொடர்புகளை வைத்திருந்தன. கீழ்வரும் எண்ணக்கரு விளக்கப்படத்தின் மூலம் அவ்வாறான வெளிநாட்டுத் தொடர்புகளை அறிந்து கொள்வோம்.

**செயற்பாடு :**

★ *வரலாற்று மூலாதாரங்களைப் படித்து, நீரவள நாகரிகம் நிலவிய காலப்பகுதியில் இலங்கையுடன் வெவ்வேறு விதங்களிலும் தொடர்புபட்ட நாடுகளையும் முறைகளையும் அட்டவணைப்படுத்துக. (எண்ணக்கரு விளக்கப்படத்தில் கூறப்பட்ட தகவல்களை விட மேலதிக தகவல்களைச் சேகரிக்கவும்.)*

## நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சி

கி.மு 6 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 13 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை இலங்கையில் நிலவிய நீர்வள நாகரிகமானது கி.பி 1215ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கலிங்க மாகனின் ஆக்கிரமிப்போடு வீழ்ச்சிக்குள்ளானது. அனுராதபுரம், பொலன்னறுவைப் பகுதிகளில் காணப்பட்ட விகாரைகளும் நீர்ப்பாசனத் தொகுதியும் அழிவுற்றன. நீர்ப்பாசன புனரமைப்பு நடவடிக்கைககள் மேற்கொள்ளப்படாமையால்

வயல் நிலங்கள் பாழடைந்தன. உலர்வலயம் பெருங்காடாக மாறியது. சீரழிந்து போன நீர்ப்பாசனக் கட்டமைப்பை தொடர்ந்து வந்த மன்னர்களால் பேணமுடியாமற் போனது.

- வெளிநாட்டுத் தொடர்பு
  - அரசியல் தொடர்பு
    - குடிப்பெயர்வு → விஜயனும் தோழர்களும் முதற் கொண்டு வருகை தந்த குடியேற்றக் குழுக்கள்.
    - ஆக்கிரமிப்பு → வலகம்பா மன்னனின் காலத்தில் பூலகத்த குழுவினரின் ஆக்கிரமிப்பு. மித்தசேன காலத்தில் பண்டு மற்றும் பாரிந்த ஆக்கிரமிப்பு.
    - திருமணம் → விஜயன் -மதுராபுரி இளவரசி. பண்டுவாசுதேவன் -பக்தகச்சனா நான்காம் மகிந்தன் கலிங்க இளவரசி
    - நட்பு → அசோகன் - தேவநம்பியதிஸ்ஸ உரோம் குளோடியஸ் மன்னன்- பாதிகாபய மன்னன்.
    - அரசியல் உதவி → அபயநாக மன்னன், சிறிநாக மன்னன், 3ம் அக்போ மன்னன் } தென்னிந்திய உதவியுடன் ஆட்சியமைத்தல்
    - சிறைக் கைதிகள் → கஜபாகு மன்னனின் தந்தையின் படை தென்னிந்தியாவில் கைதிகளாதல். மகாபராக்கிரமபாகு தமிழ் கைதிகளை கொண்டு வருதல்.
  - கலாசாரத் தொடர்பு
    - பௌத்தம் → கி.மு 247 இல் இங்கு பௌத்த சமயம் அறிமுகமாதல், பிக்குனி சாசனம் அமைக்கப்படுதல்.
    - இந்து → பொலன்னறுவையில் இந்துசமயக் கோயில்கள், சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டமை.
    - இஸ்லாம் → அரேபியத் தொடர்புகள் காரணமாக இலங்கையில் இஸ்லாமியர் குடியேறுதல்.
    - சிற்பம் → குப்த கலை மரபில் - சமாதிசிலைஅமராவதி
    - செதுக்கல் → செதுக்கல்- அவுக்கன சிலை
    - ஓவியம் → அஜந்தா ஓவியம் - சீகிரி ஓவியம்
    - எழுத்து → பிராமிய எழுத்து வடிவில் சிங்கள அரிச்சுவடி.

மாகனின் ஆக்கிரமிப்பின் பின்னர் இராசரட்டைப் பிரதேசம் முழுதும் அவனது ஆட்சியின் கீழ் வந்தமையால் அப்பிரதேச மக்கள் தமது இருப்பிடங்களைக் கைவிட்டு மலைநாட்டுக்கும், தென்பிரதேசத்துக்கும் புலம் பெயர்ந்தனர். பிக்குமாரின் ஒரு பகுதியினர் வெளிநாடுகளுக்கும் புலம் பெயர்ந்தனர். எனவே இராசரட்டையின் பொருளாதாரக் கட்டமைவு சிதைவடைந்தது. சீரழிந்து போன நீர்ப்பாசனத் தொகுதிகள் குட்டைகளாகவும் வயல்நிலங்கள் காடுகளாகவும் மாற அங்கு மலேரியா முதலிய ஆட்கொல்லி நோய்கள் பரவின.

மேலும் பொலன்னறுவைக் காலத்தின் இறுதியில் அங்கு ஏற்பட்ட சிம்மாசன உரிமைப் போராட்டமும் நாட்டின் மத்திய ஆட்சிமுறை பலவீனமடையக் காரணமாயமைந்தது. எனவே நீர்வள நாகரிகம் வீழ்ச்சியடைந்தது.

### சாராம்சம்

- ★ நீர்ப்பாசனத் துறையில் உயர் தொழினுட்பம் பிரயோகிக்கப்பட்டது.
- ★ நீர்ப்பாசனத் துறையின் வளர்ச்சிக்கு அரச அனுசரணை கிடைத்தது.
- ★ அரசனே நிர்வாகத்துறையின் தலைவராக இருந்ததுடன் முறையான ஆட்சிமுறை நிலவியது.
- ★ பிரதேச ஆட்சி, கிராமஆட்சி, என்ற வகையில் அதிகாரப்பரவலாக்கல் காணப்பட்டது.
- ★ பொருளாதார நடவடிக்கைகளில் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் முக்கியத்துவம் பெற்றன.
- ★ இக்காலப் பகுதிகளில் பௌத்த சமயம் பிரதான சமயமாகக் காணப்பட்டதுடன் இந்து சமயமும் முக்கியத்துவம் பெற்றது.
- ★ அனுராதபுர காலத்தில் பரவிய மகாயான பௌத்த கருத்துக்கள் காரணமாக பௌத்த சமயத்தில் பிளவுகள் ஏற்பட வழிவகுக்கப்பட்டது.
- ★ தந்தை வழிச் சமூக அமைப்பு காணப்பட்டது.
- ★ பந்தாட்டம், ஊஞ்சலாட்டம், நீர்விளையாட்டு முதலிய விளையாட்டுகள் காணப்பட்டன.
- ★ கட்டடக்கலை, சிற்பக்கலை, செதுக்கல்கலை, ஓவியக்கலை என்பனவும் வளர்ச்சி கண்டிருந்தன.
- ★ பிரிவெனாக்களை அடிப்படையாகக்கொண்டு கல்விமுறை வளர்ச்சி கண்டது.


இலவச விநியோகத்திற்காக

★ சிங்கள, பாளி, சமஸ்கிருத மொழியிலான இலக்கியங்கள் வளர்ச்சி கண்டன.

★ வெளிநாடுகளுடன் அரசியல், கலாசாரத் தொடர்புகள் மேற்கொள்ளப் பட்டன.

★ வெளிநாட்டுத் தொடர்புகளை மேற்கொள்ள இலங்கையின் அமைவிடம் காரணமாயமைந்தது.

★ பலவீனமான மன்னர்கள், கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு என்பவற்றால் நீர்வள நாகரிகம் வீழ்ச்சியடைந்தது.

**செயற்பாடு :**

★ நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாயமைந்த கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பினால் ஏற்பட்ட சீரழிவுகளைத் தேடியறிக.

**பயிற்சி :**

1. புராதன குளத்தொகுதியின் படத்தை வரைந்து அதன் பகுதிகளைப் பெயரிடுக?
2 நீர்ப்பாசனத் துறைக்கு சேவையாற்றிய இரு மன்னர்களைக் குறிப்பிட்டு அவர்களால் ஆற்றப்பட்ட மும்மூன்று சேவைகளைக் குறிப்பிடுக.
3 நீர்வள நாகரிகத்தின் மத்திய நிர்வாகம், பிரதேசநிர்வாகம், கிராமநிர்வாகம் என்பவற்றில் காணப்பட்ட மும்மூன்று பண்புகளைத் தருக
4 அக்காலத்தில் வளர்ச்சி கண்டிருந்த கைத்தொழில்களைப் பெயரிடுக.
5 நீர்வள நாகரிகம் சுயதேவைப்பூர்த்தியான ஒரு பொருளாதார முறையைக் கொண்டிருந்தது என்பதற்கான இரண்டு உதாரணங்களைத் தருக.
6 இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தின் ஏற்றுமதி, இறக்குமதிப்பொருட்களை அட்டவணைப்படுத்துக.
7 இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்புகளை அரசியல் தொடர்புகள், கலாசாரத் தொடர்புகள் என்றவாறு அட்டவணைப்படுத்துக.
8 நீர்வள நாகரிகத்தில் எழுதப்பட்ட பாளி, சிங்களமொழியிலான நூல்களைப் பட்டியல் இடுக.
9 நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைக் குறிப்பிடுக.

# 5 13ஆம் நூற்றாண்டு தொடக்கம் 15 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இலங்கை

*மத்தியகால இலங்கையின் முக்கியமான வரலாற்று நிகழ்வுகளின் கீழ் இலங்கையின் அரசியல் நிலை, இராசதானிகள் இடம் பெயர்ந்த முறை, மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் பொருளாதாரம், சமயம், கலை, இலக்கியம், கட்டடக்கலை பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக இவ்வலகினைக் கற்போம்*

## அரசியல் வரலாறு

**பொலன்னறுவை ஆட்சியின் வீழ்ச்சிக்கு வழிகோலிய காரணிகள்**

- ★ வலிமையற்ற அரசர்கள் ஆட்சிக்கு வந்தமை
- ★ மகாபராக்கிரமபாகுவின் வெளிநாட்டுக் கொள்கை
- ★ கொள்ளை நோய் பரவியமை
- ★ கலிங்க - பாண்டிய வம்சத்திற்கிடையிலான பிரச்சினை
- ★ பொருளாதார வீழ்ச்சி

இக்காரணிகளுள் பொலன்னறுவையின் வீழ்ச்சியுடன் நெருங்கிய தொடர்புடைய காரணியாக அமைவது மாகனுடைய ஆக்கிரமிப்பும் அவனுடைய கொடூரமான நடவடிக்கைகளும் ஆகும். மாகனுடைய ஆக்கிரமிப்பால் துன்பத்திற்குள்ளான பொதுமக்களும் பிக்குகளும் பாதுகாப்புத் தேடி உருகுணை பிரதேசத்திற்கும் மலையரட்டைக்கும் குடிபெயர்ந்தனர். இவர்களுள் சிலர் தென்மேற்கு நோக்கி குடிபெயர்ந்து காடுகள், மலைகள் என்பவற்றால் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களைத் தலைநகரங்களாகத் தெரிவு செய்து அதனைச் சூழவுள்ள பிரதேசங்களை ஆட்சி செய்தனர். அவ்வாறு நிர்வாக மையங்களாகத் (தலைநகர்) தெரிவு செய்த சில இடங்கள் கீழே தரப்பட்டுள்ளன.


- ★ யாப்பகூவ - சுப தளபதி
- ★ கோவிந்தமலை - புவனேகபாகு
- ★ மினிப்பே - சங்க தளபதி
- ★ தம்பதெனிய - 3 ஆம் விஜயபாகு

மாகனிடம் காணப்பட்ட விசேட படையணிகள் காரணமாக இத்தலைவர்களுக்கு இராசரட்டையைக் கைப்பற்றுவது கடினமான செயலாகக் காணப்பட்டாலும் அதற்காக கடும் முயற்சி மேற்கொண்டமையையும் அறிய முடிகிறது. இருப்பினும் பிரதேசத் தலைவர்கள் என்ற விதத்தில் மக்களையும் பௌத்த சமயத்தையும் பாதுகாப்பதற்கு அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் பாராட்டத்தக்கன.


இலவச விநியோகத்திற்காக

## தம்பதெனிய இராசதானிக் காலம் (கி.பி 1232 - 1270 வரை)

பிரதேசத் தலைவனாக உருவாகிய 3ஆம் விஜயபாகு கி.பி 1232 ஆம் ஆண்டில் தம்பதெனியவை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்தான். மாயரட்டையை ஐக்கியப்படுத்தி அங்கு அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு 3ஆம் விஜயபாகு மன்னனால் முடிந்தது. மாகனுடைய ஆக்கிரமிப்பால் கொத்மலைக்கு எடுத்துச் சென்று பாதுகாப்பாக நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த புத்த பெருமானுடைய தந்ததாது, பாத்திரதாது என்பனவற்றை எடுத்து வந்து கேகாலை மாவட்டத்திலுள்ள பெலிகல மலையில் தலதா மாளிகை ஒன்றை அமைத்து அங்கு பிரதிஷ்டை செய்ததாக பூஜாவலிய என்ற நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. புனித தந்ததாதுவைப் பெற்றுக் கொண்டதன் மூலம் தனது ஆட்சியை உறுதிப்படுத்திக் கொண்டான்.



தேசப்படம் 5.1 - இராசதானி தென்மேற்கு நோக்கிப் பரவியமை

### 3ஆம் விஜயபாகு மன்னனின் பணிகள்

- ★ பெலிகலையில் தலதா மாளிகையை அமைத்தமை
- ★ பாதுகாப்புத் தேடி வெளியூர்களுக்குச் சென்ற பிக்குகளை மீள அழைத்துக் கொண்டமை
- ★ தம்பதெனியாவில் விஜய சுந்தர ராமய என்ற பெயரில் விகாரை ஒன்றை அமைத்தமை
- ★ உபசம்பதா சடங்குகளை மீண்டும் நடத்தி பௌத்த பிக்குகள் சங்கத்தில் சீர்திருத்தத்தை மேற்கொண்டமை
- ★ களனி விகாரையை மறுசீரமைத்தமை
- ★ பண்டைய பௌத்த நூல்களை மீண்டும் எழுதுவித்தமை
- ★ வத்தளையில் விஜயபாகு விகாரையை அமைத்தமை
- ★ 3ஆம் விஜயபாகுவின் 4 வருடகால ஆட்சியின் பின்னர் 2ஆம் பராக்கிரமாகு தம்பதெனியா இராச்சியத்தின் அரசனானான்.


## 2 ஆம் பராக்கிரமபாகு (கி.பி 1236 - 1270) வரை

இவன் பெலிகலையில் இருந்த தந்ததாதுவை தம்பதெனியாவில் பிரதிஷ்டை செய்து உன்னதமான தலதா வழிபாட்டை மேற்கொண்டு மாகனிடம் இருந்து நாட்டை மீட்பதாக மக்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தான். மொழி, சமயம் தொடர்பாகப் பாண்டித்தியம் பெற்றுக் காணப்பட்டதனால் இரண்டாம் பராக்கிரமபாகு அரசன் "கலிகால சாகித்திய சர்வக்ஞ (சகலகலா) பண்டித" என்ற பட்டப் பெயரையும் பெற்றான். இரண்டாம் பராக்கிரமபாகு மூன்று ஆக்கிரமிப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது.

1. மாகனுடன் நடந்த யுத்தம்:
2. சந்திபானுவின் முதலாவது படையெடுப்பு
3. சந்திரபானுவின் இரண்டாவது படையெடுப்பு

சந்திரபானுவின் முதலாவது படையெடுப்பு, இரண்டாவது பராக்கிரமபாகுவின் 11ஆம் வருட ஆட்சிக் காலத்தில் இடம் பெற்றது(கி.பி 1247). சந்திரபானு மலாயாவில் இருந்து வந்ததாகக் கூறப்படுகின்றது. பராக்கிரமபாகுவின் மருமகனான வீரபாகு இளவரசன் இப்போரிற்குத் தலைமை தாங்கினான். போரில் தோல்வியைத் தழுவிய சந்திரபானு தப்பியோடினான்.

மாகனுடைய ஆட்சியில் இருந்த இராசரட்டையை மீட்டெடுத்தல், மன்னன் பராக்கிரமபாகுவின் அடுத்த முயற்சியாகக் காணப்பட்டது. இதற்காகத் தென்னிந்தியாவில் இருந்து பாண்டிய மன்னனுடைய உதவியைப்பெற்றுக் கொண்டான். பாண்டியப் படையும் இரண்டாம் பராக்கிரமபாகுவின் படையும் இணைந்து கிழக்கிலும் மேற்கிலும் பொலன்னறுவையைச் சுற்றிவளைத்து கி.பி. 1255 இல் மாகனைத் தோற்கடித்தன. முதலாம் படையெடுப்பில் தோல்வியடைந்த சந்திரபானு மீண்டும் இலங்கை மீது படையெடுத்தான் இந்த ஆக்கிரமிப்பை பாண்டிய மன்னனின் உதவியைப்பெற்று இரண்டாம் பராக்கிரமபாகு கி.பி. 1261 இல் சந்திரபானுவைக் கொன்றான். இதற்குக் கைமாறாக பாண்டிய அரசன் ஜாவகனின் மகனை வட இலங்கையின் பிரதிநிதியாக நியமித்ததாகக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.



உரு 5.1 தம்பதெனிய இராசதானி

## இரண்டாம் பராக்கிரமபாகுவின் பணிகள்

★ பிக்குகளின் ஒழுக்க நெறிக்கோவையை (தம்பதெனிய கதிகாவத்தையை) எழுதுவித்தமை.
★ உபசம்பதா சடங்கினை நடாத்தியமை
★ வெளிநாடுகளில் இருந்து ஒழுக்க தர்மமுடைய பிக்குகளை அழைப்பித்தமை
★ கவ்சிலுமின, விசுத்தி மார்க்க சன்னய ஆகிய நூல்களை எழுதியமை.

இரண்டாம் பராக்கிரமபாகு அரசனின் பின் போசத்விஜயபாகு, 4ஆம் விஜயபாகு என்ற பெயரில் கி.பி 1271 இல் அரசனானான். அரண்மனையில் நிகழ்ந்த சதித் திட்டத்தினால் அவன் கொல்லப்பட்டான். அதன்பின் 1ஆம் புவனேகபாகு அரசனானான். அவன் சிறிது காலத்தில் யாப்பகூவ கோட்டைக்குச் சென்று அங்கிருந்து ஆட்சி செய்தான்.

**செயற்பாடு :**

★ வெளிநாட்டு ஆதிக்கத்தில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு தம்பதெனிய அரசர்கள் மேற்கொண்ட கடும் முயற்சிகள் பற்றிய தகவல்களைத் தொகுத்து சொற்பொழிவொன்றை நிகழ்த்துக.

## யாப்பகூவ இராசதானி



உரு 5.2 யாப்பகூவ இராசதானி

1 ஆம் புவனேகபாகு கி.பி 1272 இல் யாப்பகூவ இராசதானியின் அரசனானான். போசத் விஜயபாகுவிற்குப் பக்க பலமாக இருந்த வன்னிய தலைவனிடம் இருந்தும் வடக்கின் ஆட்சியாளனிடம் இருந்தும் இவ்விராச்சியத்திற்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டன. இந்த அச்சுறுத்தல்களை இவன் இலகுவாக முறியடித்தான். வருடாந்த உபசம்பதா சடங்கை நடாத்திய இம்மன்னன் கி.பி.1284 இல் இறந்தான். இதற்கிடையில் குலசேகரம் என்ற பாண்டிய அரசனுடைய பிரதிநிதியான ஆரியச் சக்கரவர்த்தி பெரிய படைகளுடன் வந்து யாப்பகூவவைக் கைப்பற்றி தந்ததாதுவையும் எடுத்துச் சென்றதாக மகாவம்சத்தின் 2ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.பி.1284 இல் 1ஆம் புவனேகபாகு அரசனின் இறப்புடன் பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. 3ஆம் பராக்கிரமபாகு பாண்டிய நாட்டிற்குச்சென்று தந்த தாதுவையும் பாத்திர தாதுவையும் பெற்று. கி.பி. 1287இல் பொலன்னறுவையின் அரசனானான். 3ஆம் பராக்கிரமபாகுவைத் தோற்கடித்த 2ஆம் புவனேகபாகு இளவரசன் கி.பி.1292 இல் யாப்பகூவவின் அரசனானான். 7 வருடம் ஆட்சி செய்த பின்னர் இவன் குருணாகலையைத் தனது இராசதானியாகத் தெரிவு செய்தான்.

## குருணாகல் இராசதானி (கி.பி 1300 - 1341)

கி.பி 1300 இல் இரண்டாம் புவனேகபாகு அரசன் தனது ஆட்சிக்காலத்தில் இராசதானியை குருணாகலைக்கு மாற்றினான். அவனுடைய இறப்பிற்குப் பின் அவனுடைய மகன் 4ஆம் பராக்கிரமபாகு கி.பி 1302 இல் அரசனானான். குருணாகல் காலத்தை பிரகாசிக்கச் செய்த சிறந்த அரசனாக இவன் முக்கியத்துவம் பெறுகிறான். பௌத்த சமயத்திற்கும் இலக்கியத்திற்கும் இவ்வரசன் செய்த சேவை அளப்பரியதாகும்.

### 4ஆம் பராக்கிரமபாகு மன்னனின் பணிகள்

- ★ குருணாகலில் தலதாமாளிகையை அமைத்தமை
- ★ தந்ததாதுவை பாதுகாப்பதற்கும் அதனைப் பராமரிப்பதற்கும் கிராமங்களைத் தானம் செய்தமை.
- ★ 'தலதா சிரித்த' என்ற நூலை எழுதியமை
- ★ ஜாதகக் கதை நூலை சிங்களத்தில் மொழிபெயர்க்க ஆதரவு வழங்கியமை
- ★ வீதாகம ஸ்ரீ கணானந்த பிரிவெனா, தொட்டகமுவ விஜயபா பிரிவெனா என்பவற்றுக்கு ஆதரவு வழங்குதல்.
- ★ கண்டி அஸ்கிரிய பீடத்தை ஆரம்பித்தமை
- ★ சிங்கள போதிவங்ச அநாகத்த வங்ச ஆகிய நூல்களை எழுதியமை 4 ஆம் பராக்கிரமபாகுவின் இறுதி அரசாட்சிக் காலம் கி.பி 1326 என கருதப்படுகின்ற பொழுதிலும் இது தொடர்பாக சரியான தகவல் கிடைக்கபெறவில்லை. அதன் பின்னர் 3ஆம் புவனேகபாகு, சவுலு விஜயபாகு ஆகிய அரசர்கள் இருவர் ஆண்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

**செயற்பாடு :**

★ *குருணாகல் இராச்சியத்தின் மிகச் சிறந்த ஆட்சியாளன் 4ஆம் பராக்கிரமபாகு ஆவான். இவனுடைய செயற்கரிய செயல் தொடர்பான வரலாற்றுத் தகவல்களைத் தேடித் தொகுக்க.*

## யாழ்ப்பாண இராச்சியம்.

யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான தகவல்களைப் பெறும் மூலங்களாக யாழ்ப்பாண வைபவமாலை, செகராஜசேகரமாலை என்னும் நூல்கள் காணப்படுகின்றன.


உரு 5.3 நல்லூரர் கோவில்

தம்பதெனிய இராசதானியை 2 ஆம் பராக்கிரமபாகு ஆட்சி செய்யும்போது மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பிற்குப் பின் சந்திரபானு என்னும் ஒருவன் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் ஆட்சியாளனாக நியமிக்கப்பட்டதாக வரலாற்று மூலாதாரங்கள் குறிப்பிடுகின்றன.

யாழ்ப்பாணத்தில் விஜயகூழங்கை என்ற ஆட்சியாளரைப் பற்றியும் வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. எல்லா அரசர்களும் 'சிங்கை ஆரியன்' என்ற பெயரைத் தமது பெயருடன் இணைத்துக் கொண்டனர். யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகள் 12 பேர் ஆட்சி செய்ததாக யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலில்



இலவச விநியோகத்திற்காக

குறிப்பிடப்பட்டுள்ளது. விஜய கூழங்கை, குலசேகர ஆரியன், விக்கிரமசிங்க ஆரியன், வரோதயன், மார்த்தாண்டன், குணபூசணன், விரோதயன், ஜயவீரன், குணவீரன், கனகசூரியன், பரராஜசேகரன், சங்கிலி என்போரே அப்பன்னிரு ஆட்சியாளர்களுமாவார்.

இவர்களுள் வரோதய மன்னன் தமிழர்கள், சிங்களவர்கள் இடையே நல்லுறவுடன் செயற்பட்டமையால் மக்கள் மத்தியில் பிரசித்தி பெற்றிருந்தான். கி.பி 1347 இல் கம்பளை இராசதானி காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த ஆரியச் சக்கரவர்த்திகள் இரண்டு சந்தரப்பங்களில் படையெடுத்ததாக ''நிகாய சங்கிரஹய, ராஜாவலிய'' என்னும் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. கி.பி 1360 களில் புத்தளத்தில் இருந்து பாணந்துறை வரையான கடற்கரையோரத் துறைமுகங்களை ஆரியச்சக்கர்வரத்திகள் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். இச்சந்தர்ப்பத்தில் நிஸங்க அழகக்கோனார் என்ற படைத் தளபதி ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டையில் அமைந்துள்ள காவல் அரணைப் பலப்படுத்திக் கொண்டு பாணந்துறை தொடக்கம் வடக்கு வரையான துறைமுகங்களை மீண்டும் கைப்பற்றிக் கொண்டான்.

கி.பி 1390 இல் ஆரியச் சக்கரவர்த்தி வடக்கின் தரைப்பகுதியினூடாக ஒரு படையையும், மேற்கின் வத்தளை கொழும்பு வரையான கடல் வழியாக இன்னொரு படையையும், அனுப்பி வைத்தான். கம்பளை அரசனின் படை தரைவழியாக வந்த படையையும் அழகக்கோனாரின் படை கடல்வழியாக வந்த படையினரையும் தோற்கடித்தன.

15 ஆம் நூற்றாண்டு ஆரம்பமாகும்போது தென்னிந்தியாவின் விஜயநகர பேரரசின் கீழ் யாழ்ப்பாண இராச்சியம் இருந்ததாக வரலாற்று மூலாதாரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. விஜயநகரப் பேரரசின் 2ஆம் ஹரிஹர அரசனுடைய காலத்தில் இலங்கை உட்பட பல இராச்சியங்களை அவன் கைப்பற்றியதாக ஆலம்புரி சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் வடபிரதேசம் இவனின் படையெடுப்பிற்குப்பின் விஜய நகரப் பேரரசுக்குக் கீழ் கொண்டு வரப்பட்டது.

விஜய நகரப் படை வீரர்களின் உதவியுடன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்து கொண்டிருந்த ஆரியச் சக்கரவர்த்திக்கு எதிராக கோட்டை அரசனானான். 6ஆம் பராக்கிரமபாகு சப்புமல் குமார என்பவனை அனுப்பி ஆக்கிரமிப்புச் செய்தான். கி.பி 1449 இல் இடம் பெற்ற இப்படையெடுப்பின்போது கனகசூரிய சிங்கன் என்ற ஆரியச் சக்கரவர்த்தி தென்னிந்தியாவிற்குத் தப்பியோடினான். அத்துடன் யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் வடபகுதி கோட்டை இராச்சியத்திற்கு உரித்தாகியது. இதன் பின்னர் யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளனாக சப்புமல் குமாரன் நியமிக்கப்பட்டான். தென்னிந்தியாவிற்குத் தப்பியோடிய கனக சூரியன் மீண்டும் ஒரு சேனையுடன் வந்து யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டதாக யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கனகசூரியனுக்குப் பின் பரராஜசேகரமும் அதன் பின் சங்கிலியும் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தனர். கி.பி 1621 இல் யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயர் வசமாகியது.

## கம்பளை இராசதானி (கி.பி1341 - 1415)

கம்பளையை இராசதானியாகத் தெரிவு செய்தமைக்கான காரணங்கள்.

- ★ தலைநகராகுவதற்கு முன்பு, உபநகரமாக விளங்கியமை.
- ★ பல மலைகளால் சூழப்பட்ட சமவெளிப்பிரதேசத்தில் அமைந்திருந்தமை.
- ★ சிவனொளி பாத மலைக்குச் செல்லும் சந்தியில் அமைந்திருந்தமை.
- ★ மகாவலி கங்கைக் கரையில் அமைந்திருந்தமை.

கி.பி 1341இல் 4ஆம் புவனேகபாகு அரசன் கம்பளையை தலைநகரமாக்கி ஆட்சிக்கு வந்தான். அக்காலத்தில் அவரது சகோதரரான 5 ஆம் பராக்கிரமபாகு கேகாலை மாவட்டத்தில் டெடிகமையில் இருந்து ஆட்சி நடத்தினார். இக்காலத்தில் பிரபுக்கள் பரம்பரையைச் சேர்ந்த அழகேஸ்வரன் என்ற பெயருடையவர் களுத்துறை மாவட்டத்திலுள்ள ரைகமவில் பலமுடையவராகக் காணப்பட்டார். கம்பளை அரச குடும்பத்துடன் தொடர்புடைய இன்னொரு பிரபுக்கள் குடும்பம் சேனாலங்காதிகார செனவிரத் எனக் குறிப்பிடலாம்.

கம்பளையின் ஒவ்வொரு அரசனும் அரசபதவிக்கு நியமனம் பெறும் முன்பு 'யுவராஜா' என்ற பதவியை வகித்தனர். 4ஆம் புவனேகபாகு அரசனுக்கு சேனாலங்காதிகார செனவிரத் என்ற பெயரில் பிரபலமான அமைச்சர் ஒருவன் இருந்தான்.

4ஆம் புவனேகபாகுவின் பின் 5 ஆம் பராக்கிரமபாகு கம்பளையின் அரசனானான். அவருடைய பிரதம அமைச்சராக சேனாலங்காதிகார செனவிரத் நியமிக்கப்பட்டதுடன் அவன் தெற்கில் சமய நிகழ்வுகளை நடத்தி பராக்கிரமபாகு மன்னனுக்கும் உதவியாக இருந்தான்.

கி.பி 1358 இல் விக்கிரமபாகு எனும் இளவரசன் நிஸங்க அழகக்கோனாரின் உதவியுடன் கிளர்ச்சியை ஏற்படுத்தி கம்பளை சிம்மாசனத்தைக் கைப்பற்றி 3ஆம் விக்கிரமபாகு என்ற பெயரில் அரசனானான்.

இக்கிளர்ச்சிக்கு வடக்கின் ஆரியச்சக்கரவர்த்தியும் உதவியதாகக் கூறப்படுகிறது. 3ஆம் விக்கிரமபாகு அரசனுடைய பிரதம அமைச்சராக விளங்கிய சேனாலங்காதிகாரவை அகற்றிவிட்டு நிஸங்க அழகக்கோனாரை அப்பதவிக்கு நியமித்துக் கொண்டான். பிரதம அமைச்சராகி, குறுகிய காலத்துக்குள்ளேயே நாட்டின் அரசியலைக் கொண்டு நடத்தும் ஒருவராக நிசங்க அழகக்கோனார் காணப்பட்டார். யாழ்ப்பாண ஆட்சியாளரான ஆரியச்சக்கரவர்த்தி மன்னார் தொடக்கம் பாணந்துறை வரையான துறைமுகங்களில் வரிஅறவிடும் உரிமையைத் தனதாக்கிக் கொண்டான். இதனால் ஸ்ரீ ஜயவர்தனபுரவில் கோட்டையை அமைத்த அழகக்கோனார் ஆரியச் சக்கரவர்த்தியைத் தோற்கடித்து மேற்கின் துறைமுகங்களைத் தனதாக்கிக் கொண்டான்.


இலவச விநியோகத்திற்காக

தப்பியோடிய ஆரியச் சக்கரவர்த்தி மீண்டும் கம்பளையைத் தாக்கினார். வெற்றிரகமாக இவற்றுக்கு முகம்கொடுத்த அழகக்கோனார் ஆரியச் சக்கரவர்த்தியை மீண்டும் தோற்கடித்தான்.

5ஆம் புவனேகபாகுவின் பின் கி.பி 1391 இல் வீரபாகு கம்பளையின் அரசனானான். அத்துடன் வீரஅழகேஸ்வர என்பவன் ரைகமவின் அரசனானான். வீரபாகு வீர அழகேஸ்வரனை தமக்குக் கீழ் கொண்டு வருவதற்காக முயற்சித்தபோது அழகேஸ்வரன் தோல்வியடைந்து இந்தியாவிற்குத் தப்பியோடினான். அதன் பின்னர் மீண்டும் இந்தியாவின் உதவியுடன் வீரபாகுவைத் தோற்கடித்து ரைகமவின் அரசனானான். இருப்பினும் வீரஅழகேஸ்வரனின் ஆட்சியை ஏற்றுக்கொள்வதற்கு கம்பளை சேனாலங்காதிகார தளபதி உட்படப் பலர் விரும்பாமையினால் சேனாலங்காதீரவின் பேரனாகிய பராக்கிரம ஏப்பாவை கம்பளை அரசனாக்கியதாக அஸ்கிரிய ஓலைச்சுவடியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அக்காலத்தில் சீனாவின் யுங்லோ பேரரசனின் செங்கோ என்ற தளபதியின் கீழ் பாரிய கடற்படை இந்து சமுத்திரப்பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டதுடன் கி.பி 1405 இல் அவன் இலங்கைக்கும் வருகை தந்தான். வீரஅழகேஸ்வரன் அவனுக்கு உரிய மரியாதை வழங்காமையால் அவன் திரும்பிச் சென்று கி.பி 1411 இல் மீண்டும் இலங்கைக்கு வந்தான். இச்சந்தர்ப்பத்தில் செங்கோ வீர அழகேஸ்வரனைத் தோற்கடித்து அவனைச் சிறைப்பிடித்து கைதியாகச் சீனாவுக்குக் கொண்டு சென்றதாகக் கூறப்படுகிறது. சீனப் பேரரசன் தனது பிரதிநிதியாக பாராக்கிரம ஏப்பாவை நியமித்தான்.

**செயற்பாடு :**

★ *கம்பளை இராசதானியின் அரசியல் வரலாற்றில் இடம் பெற்ற பிரதான நிகழ்வுகளை ஒழுங்கு முறையாகத் தொகுக்குக.*

## கோட்டை இராச்சியம் கி.பி 1367-1593

கோட்டை நகரின் வரைபடத்தைத் தயாரித்தவர் நிஸங்க அழகக்கோனாராவார். கோட்டை இராச்சியத்தின் சிறந்த ஆட்சியாளனாக 6ஆம் பராக்கிரமபாகு விளங்குகின்றான். கி.பி 1415 தொடக்கம் 1467 வரை 53 வருடங்கள் ஆட்சி செய்த 6ஆம் பராக்கிரமபாகு முழு இலங்கையையும் ஐக்கியப்படுத்தி ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்த இறுதி மன்னனாவான்.




தேசப்படம் 5.2 கோட்டை இராச்சியம்.

## 6 ஆம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகள்.

★ யாழ்ப்பாண இராச்சியம், வன்னிப் பிரதேசம் என்பவற்றை இணைத்துக் கொண்டமை.
★ மலையரட்டையில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்கியமை.
★ வன்னிப் பிரதேசம் சுயமாக எழுந்து நிற்பதற்கு உதவிய தலைவர்களை அடக்கியமை
★ யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளனாக சப்புமல்குமாரனை நியமித்தமை.
★ விஜயநகரப் பேரரசின் துறைமுகம் ஒன்றை ஆக்கிரமித்தமை.
★ கி.பி 1462 மலைநாட்டில் ஜோதிய இளவரசன் ஏற்படுத்திய கிளர்ச்சியை அடக்குவதற்கு அம்புலுகல இளவரசனை அனுப்பியமை.
★ வியாபாரக் கொடுக்கல் வாங்கலை அடிப்படையாகக் கொண்டு தென்னிந்தியாவின் அதி-வீரராமபட்டினத்தை ஆக்கிரமித்தமை.

கி.பி. 1467 இல் 6ஆம் பராக்கிரமபாகு மன்னன் இறந்தபின் அவனுடைய மகளின் மகனாகிய ஜயபாகு இளவரசன் கோட்டையின் அரசனானான். தனக்கு அரசாட்சி கிடைக்காமையால் கோபமடைந்த யாழ்ப்பாண ஆட்சியாளனான சப்புமல் குமாரன் கோட்டைக்கு வந்து ஜயபாகுவைக் கொன்றுவிட்டு கி.பி. 1469 இல் 6ஆம் புவனேகபாகு என்ற பெயருடன் அரசனானான்.

6 ஆம் புவனேகபாகு அரசனுடைய ஆட்சிக்கு எதிராக பஸ்துன் கோரளையில் கெக்குலத்தோல ஸ்ரீவர்த்தன பதிராஜ இளவரசனும் கேரகம பிக்கு போன்ற மக்கள் தலைவர்களும் கிளர்ச்சி செய்தனர். இது சிறு சிங்கள புரட்சி ''சிங்கள சங்கய'' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. 6 ஆம் புவனேகபாகு இப்புரட்சியை அடக்கி கிளர்ச்சியாளர்களை சிறையிலடைத்தான்.

6ஆம் புவனோகபாகுவின் பின் அவனது மகன் 7ஆம் பராக்கிரமபாகு அரசனானான். இதனால் ஆத்திரமடைந்த அம்புலுகல இளவரசன் கோட்டைக்கு வந்து 7ஆம் பராக்கிரமபாகுவைக் கொன்றுவிட்டு 8ஆம் வீரபராக்கிரமபாகு என்ற பெயரில் கி.பி. 1490 இல் கோட்டையின் அரசனானான்.

**செயற்பாடு :**

★ *"கோட்டை இராச்சியத்தின் சிறந்த ஆட்சியாளன் 6ஆம் பராக்கிரமபாகு ஆவான்". இது தொடர்பாக உமது கருத்தைத் தருக.*



இலவச விநியோகத்திற்காக

## பொருளாதார முறையில் ஏற்பட்ட மாற்றங்கள்.

இராசரட்டை பிரதேசத்தில் வசித்த மக்கள் இராசதானிகள் இடம் மாறியதுடன் வெவ்வேறு பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்தனர். இதனால் புதிய புவியியல் சூழலுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. குன்றுப் பிரதேசங்களைத் தமது இராசதானியாகத் தெரிவு செய்து கொண்டமையால் பெரிய குளங்கள், நீர்ப்பாசனக் கால்வாய்கள் என்பவற்றை அமைப்பதற்கு முயற்சி செய்யவில்லை. இதனால் விவசாய நடவடிக்கைகளுக்காக மழையை நம்பி இருக்க வேண்டி ஏற்பட்டது. பிரதான பயிர்ச்செய்கை நெற்பயிராகும். நீர் பற்றாக்குறையான பிரதேசத்தில் சேனைப் பயிர்ச்செய்கையும் சற்றுஉயரமான பிரதேசத்தில் தெங்கு, பலா, பாக்கு, வெற்றிலை, மிளகு ஆகிய பயிர்களும் பயிரிடப்பட்டன.

ஈரவலயத்தின் கரையோரத்தில் தெங்குச்செய்கை பரம்பிக் காணப்பட்டது. உதாரணமாக களுத்துறை பெந்தோட்டை, தொட்டகமுவ, மொரட்டுவை, களனி, கேரலை ஆகிய பிரதேசங்களில் தென்னை பயிரிடப்பட்டது.

ஈரவலயத்தில் கறுவா வர்த்தகப் பயிர்செய்கையாகப் பிரசித்தி பெற்றது. பாக்கு, மிளகு, சாதிக்காய், ஏலம் போன்ற பயிர்கள் ஈரவலயத்தின் மேலதிக ஏற்றுமதிப் பயிர்களாகக் காணப்பட்டன. யானை, யானைத்தந்தம், முத்து, இரத்தினக்கற்கள் என்பன இந்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ஏனைய பொருட்களாகும்.படிப்படியாக நீர்வள நாகரிகத்தில் காணப்பட்ட விவசாயப்பொருளாதாரம் வர்த்தகப் பொருளாதாரமாக மாற்றம் பெறுவதைக் காணக்கூடியதாயிருந்தது. இந்தியா, அராபியா சீனா பாரசீகம், எகிப்து ஆகிய நாடுகள் வர்த்தகத்தில் தொடர்பு கொண்ட நாடுகளாகும்.

வெளிநாட்டு வியாபாரம் அரசனின் ஏகபோக உரித்தாக இருந்தது. சீனாவில் இருந்து இலங்கைக்கு பீங்கான் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதாக டெடிகம பிரசேத்தில் பெறப்பட்ட தொல்பொருள் ஆய்வுகளிலிருந்து தெரியவருகிறது. இந்தியாவிலிருந்து காசி சால்வையும் இறக்குமதி செய்யப்பட்டன. உள்நாட்டு வியாபாரத்துடன் தொடர்புடைய கடைவீதிகள் இருந்ததாக குருணாகலின் 'விபரம்' என்ற ஓலைச்சுவடியில் குறிப்பிடப்படுகின்றது. தம்பதெனிய் காலத்தில் நாணயங்கள் பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. உள்நாட்டு வியாபாரத்துடன் தொடர்புடைய வீதித் தொகுதிகளும் இருந்ததாக அறிய முடிகிறது.

## மக்கள் வாழ்க்கையின் தனித்துவமான பண்புகள்

★ தொழில் அடிப்படையிலான சாதி முறைகள் காணப்பட்டன.
★ திருமணச் சடங்குகளும் மரணச்சடங்குகளும் சாதிமுறையின் அடிப்படையில் இடம் பெற்றன.
★ சமூகத்தில் தந்தை பிரதான இடத்தைப் பெற்றார்.

★ ஒவ்வொருவரினதும் சமூக நிலைக்கு ஏற்ப வீட்டின் அளவு தீர்மானிக்கப்பட்டது
★ சமயம், கல்வி ஆகிய நடவடிக்கைகளில் பெண்களும் ஈடுபட்டனர். உதாரணம் உலகுடையதேவி, பத்மாவதி தேவி.
★ மக்கள் பல்வேறு கிராமிய விளையாட்டுக்களிலும் வினோத விளையாட்டுக்களிலும் ஈடுபட்டனர். பந்தாட்டம், ஊஞ்சல் போன்றன இவற்றுள் சிலவாகும்.
★ பல்வேறு சமய விழாக்கள், பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. வெசாக், பொசன், எசல என்பன இவற்றுள் சிலவாகும்.
★ பாரம்பரிய பழக்கவழக்கங்கள் கடைப்பிடிக்கப்பட்டன. உ-ம் : பெயர் சூட்டும் வைபவம், சோறூட்டுதல், திருமணம், மரணம் என்பன நிகழும் சந்தர்ப்பங்கள்.

## சமயம், இலக்கியம், கலைகள்

கலிங்க மாகனுடைய படையெடுப்பினால் இராசரட்டையில் இருந்த பிக்குமார் உருகுணு, மாயாரட்டை ஆகிய பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்தனர் தம்பதெனியா காலத்தில் 3ஆம் விஜயபாகு அரசன், தம்பதெனியா விஜய சுந்தரராமய பெலிகல்லை தலதா மாளிகை என்பவற்றை அமைத்ததுடன் களனி விகாரையை புனருத்தாரணம் செய்தான். பாதுகாப்புக் கருதி வெளிநாடுகளுக்குச் சென்ற பிக்குகளை அழைத்து பிக்குகளுக்கான ஒழுக்கநெறிக்கோவைகளை ஒழுங்கு செய்தான்.


உரு 5.4 லங்காதிலக விகாரை

விசுத்தி மார்க்க சன்னய, கவ்சிலுமின, சத்தர் மரத்னாவலிய, ஹேசஜ்ஜ மஞ்ஜுசாவ சமந்தக்கூட வர்ணணை ஆகிய நூல்கள் இக்காலத்தில் எழுதப்பட்டன. புகழ் பெற்ற இலக்கியவாதியான இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன். கலிகால சாகித்திய சர்வக்ஞ பண்டிதன்' என்ற பட்டப்பெயரைப் பெற்றது இதற்குச் சிறந்த உதாரணமாகும். கம்பளை கால இலக்கிய எழுச்சியினால் தூது (சந்தேச) இலக்கியங்கள் ஆரம்பமாகின. மயூர சந்தேசய, திசர சந்தேசய எலு அத்தனகலு, வங்சய சத்தர்மாலங்காரய, நிக்காய சங்கிரகய ஆகிய நூல்கள் கம்பளைக் காலத்தில் எழுதப்பட்ட நூல்களாகும்.


உரு 5.5 யாப்பஹூவ புத்தர்சிலை

கோட்டைக்காலத்தில் தொட்டகமுவ ஸ்ரீ ராகுல தேரர், விதாகம மைத்திரி தேரர் கேரகல வனரத்தின தேரர் 6 ஆம் பராக்கிரமபாகு அரசன். நன்னருத் துணைவர் போன்ற கல்வியலாளர்கள் உருவாகினர். பரவி சந்தேசய ஹிராசந்தேசய செலலிஹினி சந்தேசய, ஹன்ச சந்தேசய குத்தில காவிய, காவிய சேகர, புதுகுண அலங்கார, லோவெட சங்கராவ, பெரகும்பா சிரித்த என்பன கோட்டைக் காலத்தில் எழுதப்பட்ட பிரதான நூல்களாகும். கோட்டை யுகத்தில் இலக்கியத்தின் பல்வகைத் தன்மையை


இலவச விநியோகத்திற்காக

அவதானிக்க முடியும். தூதுகாவியம், பக்தி இலக்கியம் போர் இலக்கியம், புகழ்பாடும் இலக்கியம் ஆலோசனை நூல்கள், அகராதி நூல்கள் ஆகியதுறைகளில் நூல்கள் எழுந்தன. எனவே கோட்டைக்காலம் இலக்கியத்தின் பொற்காலமாகக் கருதப்படுகிறது. 6ஆம் பராக்கிரமபாகு இலக்கியவாதியாக காணப்பட்டமையால் அரச அனுசரணை இலக்கியத்துக்குக் கிடைத்தமை. நாட்டின் அரசியல், பொருளாதார வளர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் ஏதுவாயமைந்தது.

குருணாகல் காலத்தில் 4ஆம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின்போது வீதாகம ஸ்ரீ கணானந்த பிரிவெனா அமைக்கப்பட்டு சோழ நாட்டில் இருந்து வந்த பிக்குகளுக்கு வழங்கப்பட்டது. 6ஆம் பராக்கிரமபாகு தனது தாயாரின் நினைவாக பெப்பிலியான சுனேத்ரா தேவி பிரிவெனாவை அமைத்தான். பிரிவெனாவாகவும் வெதாகம ஸ்ரீ கணானந்த பிரிவெனா, கேரகல பத்மாவதி பிரிவெனா, தெவிநுவர இருகல் குலதிலக பிரிவெனா ஆகிய கல்வி மத்திய நிலையங்களின் வளர்ச்சிக்கு அரசஅனுசரணை கிடைத்தமையால் பிரிவேனாக்கல்வி வளர்ச்சியடைந்தது.

கட்டடக்கலையை எடுத்துநோக்கும்போது யாப்பகூவ இராச்சியக் காலத்தில் தென்னிந்தியக் கட்டடக் கலை அமைப்பின் தாக்கத்தை அவதானிக்கலாம். யாப்பகூவ குன்றின் அடிவாரத்தில் அரச மாளிகை எனக் கருதப்படும் அமைப்பின் சிதைவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றின் படிவரிசைகள் கருங்கல்லால் அமைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் காணப்படும் சிங்கவடிவங்கள் சிறந்த கலைப்படைப்பாகக் கருதப்படுகின்றன. யாப்பகூவ தலதா மாளிகை அருகில் தியானநிலையில் உள்ள புத்தர் சிலை காணப்படுகிறது.

கம்பளை இராச்சிய காலத்தில் கட்டடக் கலையின் விசேட பண்பாக காணப்படுவது, பௌத்த, இந்து கட்டடக்கலை அம்சங்கள் இணைந்த கட்டடங்கள் காணப்படுகின்றமையாகும். கடலாதெனிய விகாரை, அம்பக்கே தேவாலயம், லங்காதிலக்க விகாரை என்பன இதற்கு உதாரணங்கள் ஆகும். விகாரைக்கருகில் கோவில்கள் அமைத்தல், இங்கு காணப்படும் விசேட இலட்சணமாகும். கட்டடக் கலையுடன் இணைந்து செதுக்கற் கலையும் நன்கு வளர்ச்சியடைந்ததற்கு அம்பக்கே மரச்செதுக்கல் சிறந்த உதாரணமாகும்.

பௌத்த விழாக்களுள் தலதா பெரகர நடாத்துதல், இந்து சமய உற்சவங்களை நடாத்துதல் தொடர்பாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. ஒவ்வொரு அரசனும், தலதா பெரகரா நடாத்தி பௌத்த சமயத்திற்கு சேவையாற்றினர். இந்துக்களின் தீபாவளி, தைப்பொங்கல் ஆகிய விழாக்களை நடாத்தினர். சிற்பக்கலையின் கீழ் உலோகங்களினால் சிலைகள் அமைத்தமையைக் காண முடிந்தது.

### சாராம்சம்

- ★ கலிங்க மாகன் இராசரட்டையை ஆட்சிசெய்யும் காலத்தில் பிரதேச இராச்சியங்கள் உருவாகின.
- ★ 3ஆம் விஜயபாகு தம்பதெனியாவைத் தனது தலைநகராகத் தேர்ந்தெடுத்து ஆட்சி செய்தான்.
- ★ 2 ஆம் பராக்கிரமபாகு கலிங்க மாகனிடம் இருந்து நாட்டை மீட்டு சிறந்த ஆட்சியாளனாக விளங்கினான்.
- ★ 1ஆம் புவனேகபாகுவின் கீழ் யாப்பகூவ இராச்சியம் ஆரம்பமானது.
- ★ 4ஆம் பராக்கிரமபாகு குருணாகல் இராசதானியின் மிகச்சிறந்த அரசனாவான்.
- ★ யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆரம்ப கர்த்தா விஜயகூழங்கை மன்னன் ஆவான்.
- ★ ஆரியச்சக்கரவர்த்தி பரம்பரையில் 12 அரசர்கள் ஆட்சி செய்தனர்.
- ★ கம்பளை இராசதானியின் முதலாவது ஆட்சியாளன் 4 ஆம் புவனேகபாகு ஆவான்.
- ★ இக்காலத்தில் சேனாதிலங்கார, அழகக்கோனார் என்ற இரு பிரதானிகளின் குடும்பங்கள் அரசருடன் நெருங்கிய தொடர்பும் கொண்டிருந்தனர்.
- ★ கோட்டை இராச்சியத்தின் சிறந்தஆட்சியாளனாக விளங்கியவன் இறுதியாக இலங்கையை ஐக்கியப்படுத்தியவனான 6ஆம் பராக்கிரமபாகு ஆவான்.
- ★ இக்காலத்தில் விவசாயமும் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகமும் நிலவியது.
- ★ பௌத்த சமயமும் இந்துசமயமும் பரவிக்காணப்பட்டன.
- ★ கட்டடக்கலை, சிற்பக்கலை என்பவற்றில் பௌத்த, இந்து சமயச் செல்வாக்கும் காணப்பட்டது.
- ★ பௌத்த சமயம் இந்து சமயம் சார்ந்த பூஜைகளும் விழாக்களும் இடம் பெற்றன.

### செயற்பாடு :

- ★ 13ஆம் நூற்றாண்டு முதல் 15ஆம் நூற்றாண்டு வரையில் இலங்கை வரலாற்றுடன் தொடர்புடைய கட்டடக் கலை செதுக்கல், சிற்பம் ஆகியவற்றின் படங்களைச் சேகரித்து புத்தகம் ஒன்றைத் தயாரிக்குக. உரிய விளக்கத்தை அதன் கீழ் குறிப்பிடுக.
- ★ தம்பதெனியா காலம் தொடக்கம் கம்பளைக் காலம் வரையான காலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப்படுத்தி அட்டவணைப்படுத்துக.



இலவச விநியோகத்திற்காக

**பயிற்சி :**

1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அரசர்களினால் ஆற்றப்பட்ட 5 பணிகளைத் தருக.
   i) 3ஆம் விஜயபாகு அரசன்
   ii) 2ஆம் பராக்கிரமபாகு அரசன்
   iii) 4ஆம் பராக்கிரமபாகு அரசன்
2. கம்பளை இராசதானியை ஆட்சி செய்த அரசர்களின் பெயர்களைப் பட்டியற் படுத்துக.
3. யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய மூலாதாரங்கள் 4 இனை எழுதுக.
4. 13 ஆம் நூற்றாண்டிலிருந்து 15ஆம் நூற்றாண்டு வரை இந்நாட்டு மக்களின் வாழ்க்கை முறையில் காணப்பட்ட சிறப்பியல்புகள் 5 எழுதுக.
5. ஒவ்வொரு இராச்சிய காலத்திலும் எழுதப்பட்ட இலக்கியங்களையும் அவற்றை எழுதிய ஆசிரியர்களையும் குறிப்பிட்டு கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| இராச்சிய காலம் | நூல்கள் | ஆசிரியர்கள் |
|---|---|---|
| | | |



# 6 மத்திய கால ஆசியா

**இவ்வத்தியாயத்தில் இஸ்லாம் சமயம் பரவிய விதம், இந்தியா மீது மேற்கொள்ளப்பட்ட இஸ்லாமியப் படையெடுப்பு, டில்லி சுல்தானிய இஸ்லாமிய அரச பரம்பரை தொடர்பாகவும், சீனா, பர்மா, கம்போடியா ஆகிய நாடுகளுடன் இலங்கை கொண்டிருந்த சமய, கலாசாரத் தொடர்புகள் பற்றியும் கற்கலாம்.**

## இஸ்லாமிய சமயத்தின் ஆரம்பமும் பரம்பலும்

இஸ்லாமிய சமயத்தின் ஆரம்ப கர்த்தாவாக முகம்மது நபி அவர்கள் விளங்குகின்றார். இவர் கி.பி. 570 ஆம் ஆண்டு பிறந்தார். வர்த்தகத்தில் ஈடுபட்ட இவர், மக்காவில் வசித்து வந்தார். கதீஜா என்ற பணக்கார விதவையைத் திருமணம் செய்தார். தான் இறைவனின் இறுதித் தூதுவர் என அவர் குறிப்பிட்டார். இறை வார்த்தையை அவர் போதனை செய்ததுடன் அவ்வாக்கியங்கள் அடங்கிய நூல் புனித திருக்குர்ஆன் எனப்படுகின்றது. அவர் சிலைகள், உருவங்கள் வைத்து வழிபடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன் சாதி முறைமையையும் முற்றாக ஆட்சேபித்தார். அனைத்து இஸ்லாமியர்களையும் சகோதரர்களாகக் கருதினார். ''அனைத்து வல்லமையும் பொருந்திய அல்லாஹ்'' மீது இஸ்லாமியர் நம்பிக்கை வைத்தனர். பிற்காலத்தில் இஸ்லாம் சமயத்தில் ''சியா'', ''சுன்னி'' என்ற இரு பிரிவுகள் தோன்றின.

முகம்மது நபியின் பின் இஸ்லாம் சமயத்தின் பாதுகாவலராக இருந்தவர்கள் கலிபா அபூபக்கரும் அவரின் பின் உமர் என்ற கலிபாவுமாவர். இஸ்லாமியர்களின் அரசியல், சமயத் தலைவர்களாக கலிபாக்கள் கருதப்படுகின்றனர். இஸ்லாமிய சமயம் கலிபாக்களின் கண்காணிப்புடன் பரவியது. ஐரோப்பிய ஆட்சி கி.பி. 16-19 ஆம் நூற்றாண்டுகளில் உலகம் பூராகவும் பரவியதைப் போன்று இஸ்லாமிய ஆட்சியும், உலகின் வெவ்வேறு பிரதேசங்களில் பரவிச்சென்றிருந்தது.

முகம்மது நபி அவர்கள் காலமாகி 10 வருடங்கள் செல்வதற்குள் சிரியா, ஈராக், எகிப்து (மிசிர்) என்பன இஸ்லாமிய ஆட்சிக்கு உட்பட்டன. அதன் பின் பாரசீகம், எனடோலியா, சின்னாசியா ஆகிய பிரதேசங்களும் இஸ்லாமிய ஆட்சிக்கு உட்பட்டன. 8 ஆம் நூற்றாண்டில் வட ஆபிரிக்காவிலும் ஐரோப்பாவின் கிழக்கிலும், ஸ்பானியா, தென் பிரான்ஸ் பகுதிகளிலும் இஸ்லாமிய ஆட்சி பரவியது. மத்திய ஆசியா, ஆப்கானிஸ்தான், இந்தியா என்பனவும் இஸ்லாமிய ஆட்சிக்கு உட்பட்டன.



உரு 6.1 புனித கா:பதுல்லா



இலவச விநியோகத்திற்காக

அதன் பின் இந்தோனேசியா, மலேசியா, மாலைதீவு ஆகிய நாடுகளிலும் இஸ்லாமிய ஆட்சி பரவியது.

## இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சியின் பரம்பல்

இந்தியாவின் மீது முதன் முறையாக இஸ்லாமிய படையெடுப்பு 8ஆம் நூற்றாண்டில் முல்தான் - சிந்து பிரதேசங்களின் மீது மேற்கொள்ளப்பட்டது. ஆதிகாலம் தொட்டே அராபியர்கள் வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வந்துள்ளனர். கி.பி 636 இல் பாருகச்சை துறைமுகத்தில் தங்கியிருந்த முஸ்லிம்கள் விரட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. கி.பி 636 தொடக்கம் 664 வரை அராபியர்களின் தாக்குதல்கள் பல இந்தியாவில் இடம்பெற்றன. அப்போது சில பிரதேசங்கள் அவர்கள் வசமாகின.

கி.பி. 700 களில் இந்தியாவில் இடம்பெற்ற முஸ்லிம் தாக்குதல் அரசியல் வடிவத்தைப் பெற்றது. கி.பி. 711-712 க்கிடையில் இந்தியாவை ஆக்கிரமித்தது ஈராக் பிரதேசத்தைச் சேர்ந்த இஸ்லாமிய ஆட்சியாளர் அல்ஹஜ்ஜாஜ் ஆவார். அவரின் கட்டளைப்படி இந்தியாவிற்கு முகம்மது பின் காசிம் வருகை தந்தார். இவ்வாக்கிரமிப்பின் போது காசிம் பாரிய செல்வத்தை எடுத்துச் சென்றார்.

காசிமின் ஆக்கிரமிப்பின் பின் சிந்து, முல்தான் நகரங்களில் படைகளை நிறுத்தி அந் நகரங்களை முஸ்லிம்கள் தங்கள் கைகளிலேயே வைத்துக் கொண்டனர். முஸ்லிம்களின் சமயக் கொள்கையின் படி உண்மையான ஒரே சமயம் இஸ்லாம் ஆகும். யூத, கிறிஸ்தவ சமயங்கள் இறை வேதமாகக் கருதப்பட்டதால் அவற்றைக் கடைப்பிடிப்பவர்களிடம் ''ஜெசியா'' என்ற வரி அறவிடப்பட்டது. இந்து, பௌத்த சமயத்தைக் கடைப்பிடிப்பவர்கள் சிலை வழிபாட்டைக் கொண்டிருப்பதனால் அவற்றை அழிக்கும் கொள்கையைக் கொண்டிருந்தனர். இதனால் காசிமுடைய படை விகாரை, கோவில்கள் என்பவற்றை அழித்துப் பொருட்களைச் சூறையாடியது.

## இஸ்லாமியரின் இந்திய ஆக்கிரமிப்பு

கி.பி. 11 ஆம் நூற்றாண்டில், இந்தியாவில் உள்ளார்ந்த அரசியல் பலவீனமடைந்து காணப்பட்டது. அப்போது மக்ரான், கைபர் கணவாய்களை இஸ்லாமியர் கைப்பற்றியிருந்தனர்.


### கஜனி முகம்மது (கி.பி 998-1028)

கி.பி. 998 இல் ஆப்கானிஸ்தானின் கஸ்னி பிரதேச ஆட்சியாளராக முகம்மது விளங்கினான். இவன் கி.பி 999-1027 வரை 17 முறை இந்தியாவைத் தாக்கினான். இவன் ஸாகி கோட்டையிலிருந்து ஆக்கிரமிப்பை மேற்கொண்டான். இவனது தாக்குதலின் நோக்கம் தமது இராச்சியத்தைப் பலப்படுத்துவதற்கு இந்தியாவில் இருந்து தேவையான செல்வங்களைப் பெற்றுக் கொள்வதாகும். சோமநாதர் கோவிலை

அழித்து சூரையாடிய பின் அவனது ஆக்கிரமிப்பு நிறைவு பெற்றது.

### கோரி முகம்மது (கி.பி. 1173 - 1206)

இவன் முதன் முறையாக இந்தியாவை ஆக்கிரமித்தது கி.பி. 1175 இல் ஆகும். போலன் கணவாய் ஊடாக வந்த இவன் முல்தானை அழித்தான். இவனது இவ்வாக்கிரமிப்பு இஸ்லாமிய ஆதிக்கம் இந்தியாவில் நிலைபெற ஏதுவாகியது. பக்தியார் கல்ஜி, ஐபெக் என்பவர்கள் இவ்வாக்கிரமிப்பின்போது முக்கிய இடம் பெற்ற இருவராவர்.



தேசப்படம் 6.1 கோரி முகமதுவின் ஆக்கிரமிப்பு

### டில்லி சுல்தானிய இராச்சியம்

13ஆம் நூற்றாண்டின் பின் டில்லியை மையமாகக் கொண்டு இஸ்லாமிய இராச்சியம் உருவாகியது. இது ''டில்லி சுல்தானியப் பேரரசு'' எனப்பட்டது.

**டில்லி சுல்தானிய இராச்சியம்**

- அடிமை அரச வம்சம் கி.பி 1206-1290
- கில்ஜி அரச வம்சம் கி.பி 1290-1320
- துக்ளக் அரச வம்சம் கி.பி1320-1413
- செய்யது அரச வம்சம் கி.பி 1414-1451
- லோதி அரச வம்சம் கி.பி 1451-1526

### அடிமை அரச வம்சம்

கோரி முகம்மதுவின் அடிமையாக இருந்து விடுதலை பெற்ற ஐபெக்கினால் டில்லி சுல்தானிய அரச வம்சம் ஆரம்பமாகியது. இதன் பின் இரு அரசர்களும் ஒரு அரசியும் சில பலவீனமான ஆட்சியாளர்களும் ஆட்சி செய்தனர்.

### கில்ஜி அரச வம்சம்

ஆப்கான் பரம்பரையைச் சேர்ந்த சிறந்த ஆட்சியாளராக அலாவுதீன் கில்ஜி காணப்படுகின்றார். இவர் தன்னை அலெக்சாண்டரின் பிரதிபிம்பம் எனக் கூறிக் கொண்டார். அவரது நாணயத்திலும் இது தொடர்பாகக் குறிப்பிடப்படுகின்றது. இந்தியாவிற்கு பொதுவான சமயம் ஒன்றை அறிமுகப்படுத்த அவர் முயற்சித்தார். மிகச் சிறந்த படைத்தளபதியாக மாலிக் கபூர் விளங்கினார்.


### துக்ளக் அரச வம்சம்

கில்ஜி பரம்பரையால் கட்டியெழுப்பப்பட்ட பேரரசு, துக்ளக் அரச பரம்பரையினர் காலத்தில் அழிவுறத் தொடங்கியது. துக்ளக்குகள் 93 ஆண்டுகள் டில்லியை ஆட்சி புரிந்தனர். இக்காலத்தில் இந்து, முஸ்லிம் ஆட்சிப் பிரிவுகள் தோன்றின. இந்தியாவில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு முயற்சித்தமை இவ்வரச வம்சத்தின் விசேட பண்பாகும். விஜயநகர் போன்ற இந்து தென்னிந்திய இராச்சியங்கள்



இலவச விநியோகத்திற்காக

இக்காலத்தில் ஆரம்பமாகின. துக்ளக் அரச வம்சத்தின் பிரதான ஆட்சியாளன் முகம்மது பின் துக்ளக் ஆவான்.



தேசப்படம் 6.2 முகமது பின் துள்ளக்கின் இந்தியா

### செய்யது அரச வம்சம்

அராபியாவில் இருந்து வந்த இந்த அரச வம்சம் 37 வருடம் டில்லியை ஆட்சி செய்தது. இவ்வரசவம்சம் அரசியலில் பலம் வாய்ந்ததாக இருக்கவில்லை.

### லோதி அரச வம்சம்

75 வருடம் ஆட்சியில் இருந்த இவ்வரச வம்சத்தின் பின் மொஹலாயர் டில்லி சுல்தானின் ஆட்சியைக் கைப்பற்றினர்.

| அடிமை அரச வம்சம் | கில்ஜி அரச வம்சம் | துக்ளக் அரச வம்சம் |
|---|---|---|
| ஐபெக்<br>இல்துத்மிஷ்<br>பிரோஸ் ஷா<br>ரஷியா (அரசி) | ஜலாலுத்தீன்<br>பிரோஷ் கில்ஜி<br>அலாவுதீன் கில்ஜி<br>முபாரக் ஷா கில்ஜி | கியாஸுத்தீன் துக்ளக்<br>முகம்மது பின் துக்ளக்<br>பிருஷ் துக்ளக்<br>2ஆம் கியாஸுத்தின் துக்ளக் |

| செய்யது அரச வம்சம் | லோதி அரச வம்சம் |
|---|---|
| கிசர் கான்<br>முபாரக் ஷா<br>மகமுத் ஷா<br>அலாம் ஷா | பகலோல் லோதி<br>சிக்கந்தர் லோதி<br>இப்ராஹிம் லோதி |

## மொகலாய அரச வம்சம்

டில்லியை ஆட்சி செய்த லோதி வம்சத்தின் ஒற்றுமையின்மையால் மொகலாயப் பேரரசு இந்தியாவில் அமையப் பெற்றது. அலாம் லோதி, பாபருக்கு இந்தியா வரும்படி அழைப்பு விடுத்தார்.

பாபரினால் தனது தந்தையிடம் இருந்து கிடைத்த சிறிய பர்கானா இராச்சியத்தை பாதுகாக்க முடியாது போயினும் செல்வ வளம், ஆட்பலம், ஆயுத பலம் பாரிய நிலப்பரப்பை உடைய டில்லி சுல்தானியப் பேரரசைத் தோற்கடிக்க முடிந்தது. இப்ராஹீம் லோதியிடம் காணப்பட்ட பலவீனத்தை இவன் பயன்படுத்திக் கொண்டமையே இதற்கான காரணமாகும்.

கி.பி 1526 இல் ''பனி பட்'' போர் மொகலாய ஆட்சியை இந்தியாவில் ஸ்தாபிப்பதற்குப் பிரதான காரணமாகியது.


உரு 6.2 அக்பரின் அரசசபை

| மொகலாய சாம்ராஜ்ஜியத்தின் முக்கிய ஆட்சியாளர்கள் | | |
|---|---|---|
| 1. பாபர் | 2. ஹுமாயுன் | 3. அக்பர் |
| 4. ஜஹங்கீர் | 5. சாஜஹான் | 6. அவுரங்கஷீப் |

## மாமன்னர் அக்பர்

மொகலாய அரச வம்சத்தின் சிரேஷ்ட ஆட்சியாளர் அக்பர் மன்னராவார். இவர் தனது பேரரசை சிறந்த முறையில் நிர்வகித்தார். இஸ்லாமிய ஆட்சியாளராக இருந்த போதிலும் ஏனைய சமயங்களையும் ஆதரித்து சமய சகிப்புத்தன்மையைக் கடைப்பிடித்தமை இவரது சிறப்பம்சமாகும். அவர் இராஜபுத்திரர்கள் மீது கடைப்பிடித்த கொள்கையிலிருந்து இது தெளிவாகிறது.


உரு 6.3 மாமன்னர் அக்பர்

1. ராஜபுத்திரப் பெண்களை அந்தப்புரத்திற்குக் கொண்டு வருவதை நிறுத்தினார்.
2. ஏனைய சமயத்தவர்களிடம் இருந்து அறவிட்ட ஜெசியா என்ற வரியை ஒழித்தார்.
3. சமயங்களைக் கடைப்பிடிக்கும் உரிமையை வழங்கினார்.

சிறந்த வீரனாக ஆட்சி செய்த அவர், ராஜபுத்திரர்களிடம் கடைப்பிடித்த கொள்கை அவரை அரசியலில் மதிநுட்பம் மிக்கவர் எனக் காட்டுகின்றது.

> *"நான் மாமிசம் சாப்பிடாதது எனது இரைப்பை ஏனைய உயிரினங்களின் புதைகுழியாக மாறாமல் இருப்பதற்காகும்"*
>
> *- மாமன்னர் அக்பர்*

மகா அக்பர் வரி அறவிடுவதையும் நிர்வாகத்தையும் சிறந்த முறையில் நடாத்திச் சென்றார். இதில் "மன்சத்தார்" முறையை அறிமுகப்படுத்தினார். இதில் எல்லா அரச ஊழியரும் வேறுபாடின்றி இராணுவ வீரராகக் கடமையாற்ற வேண்டும். உதாரணம் அரசமாளிகையில் சமையல் செய்பவர் 10 போர் வீரர்களுக்குப் பொறுப்பான அதிகாரியாவார். அரசனின் செயலாளர் 1000 படைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தராவார்.

அக்பருக்குப் பின் ஆட்சிக்கு வந்த ஜஹாங்கீர் பேரரசை ஆட்சி செய்தார். இந்த அரசரின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வந்து சூரத் எனுமிடத்தில் கோட்டை ஒன்றை அமைத்தனர்.



இலவச விநியோகத்திற்காக



உரு 6.4 தாஜ்மஹால்

ஜஹாங்கீருக்குப் பின் ஆட்சிக்கு வந்த ஷாஜஹான் சாதாரண ஆட்சியாளராகக் காணப்பட்டார். அவரால் தனது மனைவியின் ஞாபகார்த்தமாக ஆக்ராவில் தாஜ்மஹால் அமைக்கப்பட்டது.

ஔரங்கசீப்பின் காலத்தில் மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு ஏதுவான காரணிகள் உருவாயின. இவர் அக்பர் மேற்கொண்ட சீர்திருத்தங்களைக் கவனத்தில் கொள்ளாது விட்டதுடன் இந்து அரச வம்சத்தவர்களான மராட்டியருடனும் ராஜபுத்திரருடனும் தொடர்ந்து போரில் ஈடுபட்டமையால் ஆட்சி பலவீனம் அடைந்தது.

**செயற்பாடு :**

★ *மகா அக்பர் ஏன் சிறந்த மன்னனாகத் திகழ்ந்தான் என்பது பற்றிக் கலந்துரையாடுக.*

## இந்தியாவில் பிரதேச முஸ்லிம் அரசுகள்

காஷ்மீர், சிந்து (மன்சுரா), முல்த்தான், குஜராத், ஜோத்பூர், வங்காளம், மாள்வா, காண் தேசம், பாமினி (பகமனி), அகமதுநகர், பிஜாபூர், பீஹார், கொல்கொண்டா, பிஹார் ஆகிய இஸ்லாமிய இராச்சியங்கள் காணப்பட்டன. இஸ்லாமிய கட்டடக் கலைகளை இந்தியாவில் காணலாம். தாஜ்மஹால் குதுப்மினார் உட்பட பல்வேறு கட்டடங்கள் அவற்றில் அடங்குகின்றன.



உரு 6.5 குதுப்மினார்

## பாமினி இராச்சியம் கி.பி. 1347- கி.பி. 1526

முகம்மது பின் துக்ளக்கின் பல்வேறு இன்னல்கள், அச்சுறுத்தல்கள் என்பவற்றைப் பொறுக்க முடியாத தென் இந்திய இஸ்லாமிய பிரபுக்கள் கி.பி. 1347 இல் கிளர்ச்சியை ஏற்படுத்தி தௌலதாபாத்தைக் கைப்பற்றி "இஸ்மாயில் முக" என்ற ஆட்சியாளரை நியமித்தனர். இவர் மிகத் திறமையும் இளமையுமுடைய அபுல் முசாபர் அலாவுதீன் பகமன் ஷாவிடம் ஆட்சியை ஒப்படைத்தார். பாமினி இராச்சியத்தின் தலைநகர் குல்பர்க்காவாகும். அகமது ஷா தலைநகராக பீஹாரைத் தெரிவு செய்தார். பீரூத் ஷா பாமினியின் திறமையும் பலமும் வாய்ந்த ஆட்சியாளராவார்.

பஹமன் ஷா பாமினி இராச்சியத்தின் தெற்கில் அமைந்துள்ள வரங்கல், விஜயநகர் ஆகிய இந்து இராச்சியங்களுடன் தனது ஆட்சிக்காலம் முழுவதும் மோதிக்கொண்டிருந்தார். தென் இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி நிலைத்திருந்தமைக்கு பாமினி இராச்சியமே காரணமாகும்.

**பாமினி அரசர்கள்**

| | |
|---|---|
| 1. பஹமன் ஷா | 5 ஹஜ் - உத் - தீன் பீருஷ்ஷா |
| 2. முகம்மது ஷா | 6. அகமது ஷா |
| 3. அலாவுத்தீன் முஜாகித் | 7 அலாவுதீன் அஹமத் ஷா |
| 4. முகம்மது II | 8 ஹுமாயுன் |

### விஜயநகரப் பேரரசு கி.பி 1336-1576


தென் இந்தியாவில் துங்கபத்திரா நதிக்கரையில் தோன்றிய சுதந்திர இந்து இராச்சியமாகும். ஹரிஹரன், புக்கான் என்பவர்களால் இவ்வரசு தோற்றுவிக்கப்பட்டது. மூன்று நூற்றாண்டு காலம் தென் இந்தியா இஸ்லாமியரின் ஆட்சிக்கு உட்படாது தடுத்தமை இப்பேரரசினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பணியாகும். இப் பேரரசை கி.பி 1501-1530 வரையில் ஆட்சிசெய்த கிருஷ்ண தேவராயரே பலம் வாய்ந்த அரசராவார்.

விஜய நகரப் பேரரசு காலத்தில் தெலுங்கு இலக்கியங்கள் உயர் நிலையை அடைந்தன. விஜய நகர அரசில் கட்டட நிர்மாணக் கலை விசேட இடத்தைப் பெற்றது. தென் இந்தியாவில் வரதராஜர் கோயில், கல் இரதக் கோயில் என்பன இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

இவ்விராச்சியம் பாமினி என்ற இஸ்லாமியப் பேரரசுடன் அடிக்கடி பிரச்சினைகளுக்கு உட்பட்டது. இலங்கையின் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் இவ்விராச்சியத்துடன் தொடர்புகளை வைத்திருந்தனர்.

## ஆசியாவின் பௌத்த இந்து சமயங்களின் செல்வாக்கு

### மத்திய ஆசியாப் பிரதேசம்



உரு 6.6 புத்தர் சிலை



உரு 6.7 இந்து ஆலயம்



உரு 6.8 சிவன்



இலவச விநியோகத்திற்காக

பௌத்தம், இந்து ஆகிய இரண்டு சமயங்களுமே இந்தியாவில் உருவாகியவையாகும். தொல்பொருளியலாளரின் சான்றுகளின் படி மத்திய ஆசியப் பிரதேசத்தில் பௌத்த சமயம் காணப்பட்டது. இஸ்லாமிய சமயப் பரம்பல் இடம் பெறுவதற்கு முன்பு சமர்கண்ட், போகோஸ்கோய் ஆகிய பிரதேசங்களில் பௌத்த சமயம் நிலவியது.

### பௌத்த மதம் ஆசியாவில் ஏற்படுத்திய தாக்கம்

மத்திய ஆசியாவில் காணப்படும் பாமியன் புத்தர் சிலை அசோக சக்கரவர்த்தியின் ஆட்சிக் காலத்துக்கு உரியது எனவும், அது கனிஷ்க அரசனுடைய காலத்தில் கூட்டப்பட்ட 4ஆம் பௌத்த பேரவையின் பின்னர் அமைக்கப்பட்டது எனவும் இரண்டு கருத்துக்கள் நிலவுகின்றன. சிவ வழிபாடு, விஷ்ணு வழிபாடு என்பன மத்திய ஆசியப் பிரதேசத்தில் நிலவியமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இந்தியாவுக்கு வருகை தந்த வர்த்தகர்கள் மூலம் மத்திய ஆசியாவில் இந்து சமயமும் பௌத்த சமயமும் பரவியிருக்கலாம்.

### சீனா

சீனாவில் பிரதானமாக 3 சமயங்கள் காணப்பட்டன. அவை

- கொன்பியூசியஸ் சமயம்
- தாவோவின் சமயம்
- பௌத்த சமயம் என்பனவாகும்.

சீனாவில் பௌத்தம் பரவியது தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. காசியப்ப மாதங்க தேரர் அல்லது சூ பாலன் என்ற மத்திய ஆசிய பௌத்த பிக்குவானவர் பௌத்த சமயத்தை சீனாவிற்கு அறிமுகம் செய்ததாகக் கருத்துக்கள் நிலவுகின்றன. காசியப்ப மாதங்க தேரர் பௌத்த சமயத்தை சீனாவிற்குக் கொண்டு சென்றதாக இன்று அதிகமானவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

கி.பி. 1ஆம் நூற்றாண்டில் சீனாவிற்கு பௌத்த சமயத்தைக் கொண்டு செல்லும்போது சீனாவை ஹங் அரச வம்சம் ஆட்சி செய்தது. அப்போது கொன்பியூசியஸ் சமயம் நன்கு வேரூன்றியிருந்தமையால் பௌத்த சமயம் கவனத்தில் கொள்ளப்படவில்லை. கி.பி 4ஆம் நூற்றாண்டில் ஆட்சிக்கு வந்த 'செய்' அரச வம்சத்தினர் பௌத்தராகையால் பௌத்த சமயத்திற்கு ஆதரவு கிடைத்தது.


உரு 6.9 கொன்பியூசியஸ்

கி.பி. 429 இலும் 433 இலும் நந்தி என்ற கப்பல் உரிமையாளர், தேவராசா பிக்குணி தலைமையில் பிக்குணிகளின் குழுக்கள் இரண்டை சீனாவிற்கு அழைத்துச் சென்று அங்கு பிக்குணி சாசனத்தை ஆரம்பித்தார்.

புண்ணிய சார, தர்மருசி, புத்த யசஸ், சங்கபத்ர ஆகிய தேரர்கள் சீனாவிற்குச் சென்று தர்ம சாஸ்திர நூல்களை சீன மொழியில் மொழி பெயர்த்தனர்.

பாகியன், ஹியுங்சான், இத்சிங் ஆகிய சீனப் பிக்குகள் இலங்கை, இந்தியா போன்ற ஏனைய பௌத்த நாடுகளுடன் தொடர்புகளை வைத்திருந்தனர்.

கோட்டைக் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த செங்கோ என்ற பெயருடைய சேனாதிபதி சமய நடவடிக்கைகளில் பங்கு பற்றியதாக குறிப்பிடப்படுகின்றது. சீனாவில் இன்றுவரை பௌத்த சமயம் நிலவுகின்றது.

### பர்மா

இந்தியாவின் அசோகச் சக்கரவர்த்தி 'சுவர்ண பூமி' என்ற பிரதேசத்திற்கு சமய தூதர்களாக பிக்குகளை அனுப்பினார். அப்பிரதேசம் பர்மா என ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பர்மா தூய்மையான தேரவாத பௌத்த நாடாகும். சோன, உத்தர எனும் தேரர்கள் பர்மாவிற்கு சமயச் செய்தியைக் கொண்டு சென்றுள்ளனர்.

தற்கால போம், ஹமவ்சா நகரங்களில் கிடைக்கப்பெற்ற தொல்பொருள்களில் இருந்து பர்மா பிரபல்யமான பௌத்த நாடு என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. தென் பர்மாவில் 'சீஹல சங்க நிக்காய' என்ற பிரிவும் காணப்பட்டது.

மகா விஜயபாகு மன்னனுக்கு கப்பல் நிறைய பொருட்களை அனுப்பிய நாடு பர்மாவாகும். அவருடைய காலத்தில் உபசம்பதா சடங்கினை நடாத்த பர்மாவில் இருந்து பிக்குகள் வந்ததாக வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிடப்படுகின்றது.



*உரு 6.10 பர்மிய சம்பிரதாயத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட விகாரை (புத்தகாயா)*

பர்மாவின் கல்யாண என்ற கல்வெட்டுக்கு ஏற்ப, இலங்கைக்கு வருகை தந்த பர்மிய தேரர் அந்நாட்டு அரசனின் ஆலோசனைப்படி பிக்குமார் சங்கத்தில் சீர்த்திருத்தத்தை மேற்கொண்டார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி 1527 இல் ஆவா நகரில் இருந்து வந்த தோஹன்பவா அரசன் 3000 பிக்குகளைக் கொலை செய்தமையால் அமைச்சர் ஒருவர் அவ்வரசனைக் கொலை செய்தான். கி.பி 1605இல் மகா தர்மராஜ அரசன், விகாரைகளை அழித்த போர்த்துக்கேயரைக் கொன்றொழித்தான். பர்மாவிற்கு சென்ற இந்நாட்டின் பிக்குகள் கி.பி 1807 இல் அமரபுர கல்யாண வங்ஸநிக்காயவையும் கி.பி 1810இல் அமரபுர ஸ்ரீ தர்மரக்கித்த நிக்காயவையும் நிறுவினர்.

### தாய்லாந்து (சீயம்)

பர்மா தேசத்தில் இருந்து தாய்லாந்திற்கு பௌத்த சமயம் பரவியதாகக் கருத்து நிலவுகின்றது. ''ஜினகாலமாலிய'' என்ற நூலிற்கு ஏற்ப இங்கிருந்து கொண்டு சென்ற புத்தர் சிலை சீஹல பட்மா எனும் பெயரில் அந்நாட்டில் காணப்படுகின்றது.

இலங்கையிலிருந்து சென்ற சுமண தேரர், ஆனந்த தேரர் ஆகிய இருவராலும் தாய்லாந்தில் பௌத்த சமயத்திற்கு சேவைகள் ஆற்றப்பட்டன. இலங்கையில் இருந்து வெள்ளரசு மரக்கிளை கொண்டு சென்று அங்கு நடப்பட்டது.

ஜினகாலமாலியில் குறிப்பிடப்பட்டதற்கு ஏற்ப கி.பி 1425இல் களனியில் இடம்பெற்ற உபசம்பதா சடங்கிற்கு தாய்லாந்து தேரர்கள் வருகை தந்துள்ளனர். கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனுடைய காலத்தில் கி.பி 1753இல் தாய்லாந்தில் இருந்து வருகை தந்த உபாலி தேரர் உட்பட பிக்குகள், வெலிவிட்ட சரணங்கரா தேரர் உட்பட இலங்கைப் பிக்குகளுக்கு உபசம்பதா சடங்கினை நடத்துவித்தனர். தாய்லாந்தில் தற்போதும் சங்கராஜ பதவி நிலவுகின்றது.

### ஜாவா, சுமாத்திரா

கி.பி 7 நூற்றாண்டில் தேரவாத பௌத்தம் இங்கு பிரபல்யம் அடைந்து காணப்பட்டது. இத்சிங் தேரரின் அறிக்கையில் இது தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. சுமாத்திராவில் பெலன்காகே எனும் இடத்திலும் போரோபுதூர், கேது போன்ற பௌத்த வழிபாட்டு இடங்களிலும் பௌத்தம் தொடர்பான இடிபாடுகள் காணப்படுகின்றன.

### கம்பூச்சியா

அங்கோர் அரசர்களின் காலத்தில் மகாயான பௌத்தம், இந்து சமயம் என்பன பரம்பியிருந்தன. கற்களைக் குடைந்து கோவில்களை அமைத்துள்ளனர். அந்நாட்டில் அமைந்துள்ள கி.பி 12 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த அங்கோர்வட் முக்கியமான இந்து வழிபாட்டுத் தலமாகும்.



உரு 6.11 அங்கோர்வட் கோவில்

### இலங்கை தென்கிழக்கு ஆசியாவுடன் கொண்டிருந்த தொடர்புகள்.

★ மகா விஜயபாகு அரசனின் காலத்தில் பர்மாவிற்கு கப்பலில் பொருட்களை அனுப்பியதாகக் கூறப்படுகின்றது. உபசம்பதா சடங்கிற்காக பிக்குகள் பர்மாவிலிருந்து வருகை தந்தனர்.

★ மகா பராக்கிரமபாகு, மகா விஜயபாகு ஆகிய அரசர்கள் தென்கிழக்கு ஆசியாவுடன் தொடர்புகளை வைத்திருந்தனர். தெவனகல கல்வெட்டில் பர்மாவை ஆக்கிரமிக்கச் சென்ற நகரகிரி கீர்த்தி என்ற படை வீரனுக்கு நிலம் அன்பளிப்பு செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.



உரு 6.12 போரோ புதூர் விகாரை

★ சுமாத்திராவில் பலென்கே என்ற இடத்தில் பெறப்பட்ட அவலோகிதேஸ்வர சிலை, சித்துல் பவ்வ சிலையை ஒத்ததாகக் காணப்பட்டது.
★ போரோபுதுர் என்ற விகாரையை அமைக்கும் போது இலங்கையின் கலைச் செல்வாக்குப் பெறப்பட்டிருக்கலாம்.
★ ஜாவா நாட்டின் கல்வெட்டுக்கு ஏற்ப இந்நாட்டின் அபயகிரி விகாரையின் கிளை அந்நாட்டில் நிறுவப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது.
★ கி.பி 13 ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆக்கிரமித்த சந்திரபானு அரசன் தென்கிழக்கு ஆசியாவின் மலாயா தீபகற்பத்தில் இருந்து வந்ததாக நம்பப்படுகின்றது.

**சாராம்சம்**

★ இஸ்லாமிய சமயம் கலிபாக்களின் காலத்தில் பரவியதுடன் கஜினி முகம்மது, கோரி முகம்மது ஆகியோர் இந்தியாவை ஆக்கிரமித்தனர்.
★ டில்லி சுல்தான் இராச்சியம் பல அரச வம்சங்களினால் ஆட்சி செய்யப்பட்டது.
★ மொகலாய சாம்ராஜ்ஜியத்தின் மிகச் சிறந்த மன்னன் மகா மன்னன் அக்பர் ஆவான்.
★ தென் இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சியின் செல்வாக்கைக் காண்பிக்கும் பிரதான சந்தர்ப்பம் பாமினி இராச்சிய காலமாகும்.
★ தென் இந்தியாவில் விஜய நகரப் பேரரசினால் இந்துக் கலாசாரம் பாதுகாக்கப்பட்டது.
★ இந்தியாவில் ஆரம்பமான பௌத்த சமயம், இந்து சமயம் என்பன மத்திய ஆசியாவில் பரம்பி இருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன.
★ ஆரம்ப காலத்தில் அனேக தென்கிழக்கு ஆசிய நாடுகள் பௌத்த மதத்தைப் பின்பற்றியுள்ளமையை அறியக்கூடியதாகவுள்ளது.
★ இலங்கை பௌத்த நாடாகையால் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் ஆரம்ப காலம் முதல் தொடர்புகளைப் பேணி வந்திருக்கின்றது.

**செயற்பாடு :**

1. தென்கிழக்கு ஆசியாவின் பௌத்த நாடுகளைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுக.
2. அந்நாடுகளில் காணப்படும் பௌத்த வரலாற்று இடங்களை வரிசைப்படுத்துக.

**பயிற்சி :**

1. இஸ்லாம் சமயத்தின் ஆரம்பம் மற்றும் அந்த சமயம் தொடர்பாக சுருக்கமாக விளக்குக.
2. டில்லி சுல்தான் ஆட்சியில் காணப்பட்ட அரச வம்சங்கள் எவை?
3. பாமினி பேரரசின் சிறந்த ஆட்சியாளராகக் கருதப்படுபவர் யார்?
4. விஜயநகர பேரரசினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சேவைகள் யாவை?
5. தாஜ்மகாலைக் கட்டுவித்த அரசன் யார்?
6. சீனாவில் காணப்பட்ட முக்கிய 3 சமயப் பிரிவுகளும் யாவை?
7. தாய்லாந்து, பர்மா என்பன முன்னர் எவ்வாறு அழைக்கப்பட்டன?

# 7 மத்தியகால ஐரோப்பாவின் அரசியல், பொருளாதார, கலாசார வளர்ச்சி

**பலம் பொருந்திய பிரிவினராக எழுச்சியுற்ற துருக்கிய இஸ்லாமியர்களால் ஐரோப்பாவின் பொருளாதார மத்திய நிலையமாகத் திகழ்ந்த கொன்ஸ்தாந்திநோபிள் கைப்பற்றிக் கொள்ளப்பட்டதுடன் தொழிலை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களைப் பிணைத்து வைத்திருந்த மானிய முறையானது வீழ்ச்சியுற்றது. இதன் விளைவாக ஐரோப்பாவிற்கு ஒளியைத் தந்த மறுமலர்ச்சி, தேசிய அரசுகளின் தோற்றம், நாடுகாண் பயணங்கள், மதச்சீர்திருத்தம் என்பன இடம்பெற்றன. இது ஐரோப்பாவை மட்டுமன்றி, முழு உலகையுமே பாதித்த சம்பவங்களின் தொகுப்பாகும்.உலகையே மாற்றங்களுக்கு உட்படுத்திய இச்சம்பவங்களைப்பற்றி இவ்வத்தியாயத்தின் மூலமாக உங்கள் கவனத்தை செலுத்துவதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது.**

ஐரோப்பாவின் மத்திய காலமாக கி.பி 500 ஆம் ஆண்டிலிருந்து 1500 ஆம் ஆண்டு வரை கருதப்படுகிறது.

## மானிய முறை

''மன்னர் தொடங்கி கீழ்மட்ட நில உடைமையாளர் வரை எல்லோராலும் நில உரிமைக்காக நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கள் அனைத்தையும் ஒன்றிணைத்த சமூக அமைப்பே மானிய முறையாகும்'' -ஸ்டப்ஸ்



*உரு 7.1 மானிய முறையில் பிரபுக்களின் நிலத்தில் ஒன்றுபட்டு உழைக்கும் அடிமைகள்*

மானிய முறையானது வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வடிவங்களில் செயற்பட்டு வந்துள்ளது. ஆகையால் அதற்கு திட்டவட்டமான வரைவிலக்கணம் வகுப்பது சிரமமானதாகும். எனினும் எல்லா நாடுகளிலும் செயற்பட்ட மானிய முறையில் சில பொது அம்சங்கள் காணப்பட்டன. அதற்கமைய மானியமுறை என்பது நிலத்தை அனுபவிப்பதற்காக சேவையை வழங்குவதனை அடிப்படையாகக் கொண்ட அரசியல், சமூக, பொருளாதார, கலாசார அமைப்புமுறை ஒன்றெனக் குறிப்பிடலாம்.



இலவச விநியோகத்திற்காக

**மானிய முறையின் பொதுப் பண்புகள்.**

- ★ நில உடைமையாளனுக்கும் பண்ணை அடிமைகளுக்கும் இடையிலுள்ள தொடர்புகள்.
- ★ தனிநபர்களை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறை
- ★ நிலத்தை அனுபவிப்பதற்காக சேவைகளை வழங்குதல்
- ★ பிரதேச ஆட்சியாளர்களிடம் காணப்பட்ட தனிப்பட்ட படைப்பிரிவினர்.
- ★ நில அடிமைகளுக்காக ஆற்றப்பட வேண்டிய ஏராளமான பொறுப்புக்கள் நில உடைமையாளர்களுக்கு இருந்தமை.

## மானிய முறையின் ஆரம்பம்

கிறிஸ்துவுக்குப்பின் ஒன்பதாம் நூற்றாண்டளவில் மேற்கு உரோமானியப் பேரரசில் பரவலான அதிகாரத்தைக் கொண்டிருந்த கரோலிஞ்ஜியப் பேரரசு வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கையில் அதன்மீது அந்நிய ஆக்கிரமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. வடக்கிலிருந்து வைகிங்குகளும் கிழக்கிலிருந்து ஹன்களும் தெற்கிலிருந்து முஸ்லிம்களும் இவ்வாக்கிரமிப்புகளை மேற்கொண்டனர். இக்காலகட்டத்தில் அரசர்கள் இவ்வாக்கிரமிப்புக்களை எதிர்கொள்ளும் அளவுக்குப் பலசாலிகளாக இராமையால், அப்போது சமூகத்தின் மேல்மட்டத்தில் இருந்த பிரபுக்களின் உதவியை எதிர்பார்த்தனர். முஸ்லிம்களினது பரவலாலும் வைகிங்குகளின் ஆக்கிரமிப்புகளாலும் ஐரோப்பா வெளியுலகுடன் கொண்டிருந்த வர்த்தக நடவடிக்கைகள் பூரணமாக ஸ்தம்பித்த நிலை அடைந்தமையால் அரசரின் வருமான வழிகளும் வீழ்ச்சியடைந்தன. அரசன் பிரபுக்களிடம் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக, அவர்களின் பிரதான வருமான மார்க்கமான நிலத்தைப் பேரளவில் பிரபுக்களுக்கு வழங்க நேர்ந்தது. மேலும் அப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் மீதான நீதி அதிகாரங்களும் அவர்களுக்கே வழங்கப்பட்டது. இவற்றிற்கு மேலாக அம்மக்களின் பாதுகாப்பும் பிரபுக்கள் வசமே ஒப்படைக்கப்பட்டது.

அந்நிய ஆக்கிரமிப்புகளின் போது அரசின் பாதுகாப்புக் கிட்டாமையால் பொதுமக்களும் தமது சொந்த நிலங்களையும் செல்வந்தப் பிரபுக்களிடம் ஒப்படைத்துத் தமக்குப் பாதுகாப்பைக் கோரினர். இவ்வாறு பிரபுக்களுக்குச் சொந்தமான நிலங்களை அனுபவிப்பதற்காக அவர்களிடமே வேலை பார்க்கும் நிலைக்கு இம்மக்கள் ஆளாயினர். இவர்களைப் பாதுகாப்பது அப்பிரபுக்களின் பொறுப்பானது அரசருக்கும், பிரபுக்களுக்கும் பிரஜைகளுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட இக்கொடுக்கல் வாங்கல் எழுத்துருவிலான சட்டமாக இடம்பெறவில்லை. குடிமக்களும் தொலைவில் இருக்கும் அரசனைவிட அருகில் இருக்கும் பிரபுக்களுடன் நெருக்கமாயினர். இதனால் அரசனுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நிலவிய தொடர்பு குன்றியது, பிரபுக்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்பு வலுப்பெற்றது.

ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து மேற்கு ஐரோப்பாவின் மீது இனக்குழுக்கள் ஆக்கிரமிப்பை மேற்கொண்ட போது, அதனை எதிர்கொள்ளக்கூடிய அரசியல், பொருளியல் அல்லது தாபன ரீதியான அமைப்புகள் இல்லாமையால் அதற்குப் பொருத்தமான சமூக அமைப்பு ஒன்றாக மானிய முறை உருவானது.

## மானிய முறையின் பண்புகள்

### அரசியல்

- ★ சமூகத்தில் எல்லா நபர்களும் ஏதோ ஒரு விதத்தில் அதிகாரி ஒருவருக்குக் கட்டுப்பட்டவராயிருத்தல்.
  உதாரணமாக அரசனுக்குக் கீழே பிரபுக்களும் அவர்களுக்கு கீழே நைட்டுகளும் நைட்டுகளுக்குக் கீழ் குடிமக்களும் கட்டுப்பட்டு இருத்தல்.
- ★ இதனடிப்படையில் அதிகாரப் பரவலாக்கல் இடம் பெற்றிருந்தது.
- ★ பிரபுக்களுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்பட்டிருந்த அதிகாரத்திற்கு முன்னால் அரசரும் அதிகாரம் குறைந்த ஒருவராகக் காணப்படல்.
- ★ அரசருக்குரிய வருமானம், அவருக்குரிய நிலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வரியுடன் பிரபுக்களின் அன்பளிப்புகளுமாகக் காணப்பட்டமை.
- ★ அரசாங்கத்திற்கு என்று இராணுவப்படை ஒன்று இல்லாமை.
- ★ பிரபுக்களும் பிரதேச ஆட்சியாளர்களும் சுதந்திரமாகச் செயற்பட்டமை.
- ★ நீதி அதிகாரங்களும் பிரபுக்களிடமே காணப்பட்டமை.
- ★ பிராந்திய ஆட்சியாளர்களிடம் சொந்த இராணுவப்படை காணப்பட்டமை.
- ★ தமது பிரதேசங்களைப் பெருக்கிக்கொள்வதற்காக பிரபுக்களிடையே ஆதிக்கப் போட்டி நிலவியமை.

### பொருளியல்

- ★ விவசாயத்தின் மூலம் கிடைப்பதே பிரதான வருமானமாகும்.
- ★ நிலத்துடன் பிணைக்கப்பட்ட பொருளாதார முறை
- ★ அரசரிடம் பெரும் அளவு நிலத்தைப் பெற்ற பெரும் பிரபுக்கள் அவற்றைப் பிரித்து சிறு பிரபுக்களிடம் ஒப்படைத்தனர். இது மானிய நிலம் எனப்பட்டது.
- ★ மானிய நிலங்கள் நில அடிமைகள் மூலம் பயிரிடப்பட்டமை.
- ★ மானிய நிலத்தைக் கூறுகளாக்கி நில அடிமைகளிடம் பகிர்ந்தளிக்கப்பட்டமை.
- ★ பண்ணை அடிமைகள் தமக்கு வழங்கப்பட்ட நிலத்தில் சீவனோபாயத்தில் ஈடுபட்டதோடு, அதற்குப் பிரதியுபகாரமாக பிரபுக்களின் நிலத்தில் இலவசமாகச் சேவையாற்றியமை.
- ★ பிரபுக்களின் நிலத்தில் நில அடிமைகள் மூன்று நாட்கள் சேவையில் ஈடுபடவேண்டும்.
- ★ விவசாயத்தில் நிலமாற்று முறையையும் பயிர்மாற்று முறையையும் மேற்கொள்ளல்.
- ★ சிற்றளவில் கைத்தொழில்கள் காணப்பட்டன.
  உதாரணமாக: தானியங்களைக் குற்றும் ஆலைகள், பட்டறைகள், பேக்கரிகள் (வெதுப்பகங்கள்), வைன் வடிசாலைகள்.
- ★ சுயதேவைப் பூர்த்திப் பொருளாதார முறை நிலவியமை.

★ வியாபாரம் சொற்பஅளவில் பண்டமாற்று முறையில் மேற்கொள்ளளப்பட்டமை. உதாரணமாக: வாசனைத் திரவியங்கள், உப்பு.
★ பண்ணை அடிமைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலத்தை அவர்கள் சேவைமாற்று முறையில் பயிரிட்டுக்கொண்டனர்.
★ மிருகங்கள், விவசாய உபகரணங்கள் என்பன குழு முறையிலேயே கையாளப்பட்டன.
★ சுயதேவைப் பூர்த்திப் பொருளாதாரத்தால் நகரங்கள் தோன்றாமை.
★ மிகையான உற்பத்தி மேற்கொள்ளப்படாமை.

| பயிர் மாற்று முறைமை | நிலமாற்று முறைமை |
|---|---|
| ஒவ்வொரு போகத்தின்போதும் வெவ்வேறு பயிர்வகைகளைப் பயிரிடல் பயிர்மாற்று முறைமை எனப்படும். | நிலத்தை மூன்றாகப் பிரித்து, அதில் ஒரு பகுதியில் பிரதான பயிரையும், அடுத்த பகுதியில் நிலத்தை வளப்படுத்தும் பயிரையும் பயிரிட்டுவிட்டு, அடுத்த பகுதியைப் பயிரிடாமல் விடல் |

## சமூகம்

★ பிறப்பை அடிப்படையாகக் கொண்ட சமூக அந்தஸ்து.
★ சமூகத்தில் உயர்ந்த, தாழ்ந்த வகுப்பினர் என இரு பிரிவினர் காணப்பட்டமை. உதாரணமாக பிரபுக்கள் உயர்ந்தவர்கள், அடிமைகள் தாழ்ந்தவர்கள்.
★ சாதாரண மக்களுக்கு நில உரிமை இருக்கவில்லை.
★ நிலத்தை அனுபவிப்பதற்கு மாற்றாக பிரபுக்களுக்கு காணிக்கை செலுத்த வேண்டியிருந்தமை.
★ தமது குடும்பத்தினர் பசியுடன் இருக்கையிலும் பிரபுக்களுக்குக் காணிக்கை செலுத்த வேண்டியிருந் தமை.
★ பிரபுக்கள் சுகபோக வாழ்க்கை வாழ்ந்ததோடு, குடிமக்கள் அரை அடிமைகளாக வாழ்ந்தமை.
★ பிரபுக்கள் தமது நிலபுலன்களைப் பெருக்கிக் கொள்ளப் போட்டிகளில் ஈடுபட்ட அதே வேளை குடிமக்கள் ஒற்றுமையாக வாழ்ந்தமை

### நைட்டுகள் என்போர்

அரசனுக்குப் படையினரை வழங்கிய பிரபுக்களைக் குறிக்கும்.
இவர்களுக்கு அரசன் ஏராளமான நிலங்களை வழங்கினான். நைட்டுகள் தேவைப்படும்போது அரசனுக்குப் படைகளை வழங்கியதோடு, ஏனைய சந்தர்ப்பங்களில் தமக்குத் தேவையான முறையில் தனிப்பட்ட சேவைகளில் அமர்த்தினர். இதனால் அரசனை விட நைட்டுகள் கூடிய அதிகாரத்தைக் கொண்டிருந்தனர்.


உரு 7.2 மானியமுறைக் காலத்து கலைப்படைப்பு

★ அக்கால ஐரோப்பாவில் இருந்த ஒரே அமைப்பு ரீதியான சமய தாபனமான கத்தோலிக்கத் திருச்சபைக்கு அரசியல், சமூக விடயங்களில் பெரும் செல்வாக்குகள் காணப்பட்டன.
★ ஐரோப்பாவில் அரசியல் ரீதியாக வேறுபட்ட அரசுகள் இருந்த போதிலும் அவற்றை ஒற்றுமைப்படுத்தி வைத்திருக்கும் ஆற்றல் கத்தோலிக்கத் திருச்சபையிடம் இருந்தது.
★ துறவியர் மடங்களையும் தேவாலயங்களையும் மையமாகக் கொண்டு கல்வி வளர்ச்சியடைந்தது.
★ சகல கலைகளும் சமயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

## மானிய முறையின் வீழ்ச்சி

சிலுவை யுத்தம், வர்த்தக விருத்தி, கொள்ளைநோய், மறுமலர்ச்சியால் ஏற்பட்ட சமூக மாற்றம் ஆகிய காரணிகளால் நில அடிமை முறை வீழ்ச்சியுற்றது. இதனால் அடிமைகளாக வாழ்ந்தவர்களுக்கு சுதந்திரம் கிடைத்தது. பெருமளவுக்கு வியாபார விடயங்களில் அனுபவம் பெற்றிருந்த அவர்கள், தமது சொந்த இடங்களுக்குச் செல்லாது, புதிதாக வளர்ந்து வந்த வணிக நகரங்களில் குடியேறினர். யுத்தத்தில் இறந்த அடிமைகளின் நிலங்கள் விடுவிக்கப்பட்டமை, மற்றும் சில அடிமைகள் வேலை செய்து சம்பாதித்த பணத்தைக்கொண்டு நிலத்தைக் கொள்வனவு செய்தலும் இடம்பெற்றது. அதுபோன்றே பிரபுக்களும் சம்பளம் கொடுத்து தமது நிலங்களில் வேலை வாங்கவும் பழகிக் கொண்டனர். இதனால் பன்னிரெண்டாம் நூற்றாண்டளவில் நில மானிய முறைக்கு அடிப்படையாயிருந்த பண்ணை முறை வீழ்ச்சியடையத் தொடங்கியது.

**செயற்பாடு :**

★ *மானியமுறை என்றால் என்ன என்று அறிமுகப்படுத்தி, அதன் அடிப்படை அம்சங்களை விளக்கி கட்டுரை ஒன்று வரைக.*

## சிலுவை யுத்தங்களும் வர்த்தக விருத்தியும்

ஏழாம் நூற்றாண்டில் அராபிய முஸ்லிம்களால் கிறிஸ்தவர்களின் புனித நகரான ஜெருசலம் கைப்பற்றப்பட்டது. ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு ஜெருசலேமில் வணக்க வழிபாடுகளை மேற்கொள்ள அராபிய முஸ்லிம்கள் அனுமதித்தனர். ஆனால் பிற்காலத்தில் இவற்றைக் கைப்பற்றிக் கொண்ட துருக்கிய முஸ்லிம்களிடம் அவர்களுடைய ஆட்சிப் பிரதேசங்களில் கிறிஸ்தவர்கள் புனிதப்பயணங்களை மேற்கொள்வதற்கு விரோதமான ஒரு போக்குக் காணப்பட்டது. புனித யாத்திரை செய்த கிறிஸ்தவர்களுக்கு தொல்லைகளும் இடைஞ்சல்களும் விளைவித்ததோடு மட்டும் நில்லாது அவர்களைக் கொலையும் செய்தனர்.


இலவச விநியோகத்திற்காக




உரு 7.3 சிலுவை யுத்தம்



உரு 7.4 கொன்ஸ்தாந்திநோபிள் துறைமுகம்.

இதன் தொடர்ச்சியாகக் கொன்ஸ்தாந்திநோபிள் நகரும் துருக்கியர்களால் கைப்பற்றப்பட்டது. இதனால் கிறிஸ்தவர்களுக்கு புனித யாத்திரை மேற்கொள்வது மேலும் சிரமமானது. எனவே புனித நகரான ஜெருஸலமைத் தமதாக்கிக் கொள்ள பாப்பாண்டவர் தலைமையில் ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் துருக்கியர்களுடன் யுத்தத்திற்குத் தயாராகினர். யுத்தத்திற்குச் சென்றோர் சிலுவையை அணிந்திருந்தபடியால், இது சிலுவை யுத்தம் எனப் பெயர் பெற்றது.




தேசப்படம் 7.1 கொன்ஸ்தாந்திநோபிளின் முக்கியத்துவம்.

முதலாவது சிலுவை யுத்தத்தின் போது ஜெருஸலமைக் கிறிஸ்தவர்கள் தம்வசப்படுத்திக்கொண்ட போதிலும் அவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்களால் மீண்டும் ஜெருஸலம் துருக்கியர் வசமானது.

இந்நிலையில் சிலுவை யுத்தங்கள் என்ற பெயரில் பல யுத்தங்கள் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிங்களுக்குமிடையே ஏற்பட்டன. கிறிஸ்தவர்களிடையே ஏற்பட்ட அபிப்பிராய பேதங்கள், யுத்த ஏற்பாடுகளில் காணப்பட்ட பலவீனங்கள், யுத்தத்திற்கு வந்தோர் கொள்ளைகளில் ஈடுபட்டமை போன்ற காரணங்களால் துருக்கியர்கள் இந்த யுத்தங்களில் வெற்றிபெற்றதோடு கி.பி 1453 ஆம் ஆண்டில் கொன்ஸ்தாந்திநோபிள் நகரையும் தமதாக்கிக் கொண்டனர்.

கிழக்குமேற்கு வர்த்தக நடவடிக்கைகளில் பிரதான மத்திய நிலையமானபடியால் கொன்ஸ்தாந்திநோபிள் முக்கியத்துவமானதாகும்.

கொன்ஸ்தாந்திநோபிள் நகரம் துருக்கியர் வசமானதால், ஐரோப்பியர்களுக்கு கீழை நாடுகளுக்கு வருவதற்கான வர்த்தகப்பாதை பூரணமாகத் தடைபட்டுப்போனது.

மானிய முறைக் காலத்தில் சுயதேவைப்பூர்த்திப் பொருளாதாரத்திற்குப் பழக்கப்பட்டிருந்த ஐரோப்பியர் சிலுவை யுத்தக் காலத்தில் வந்த முஸ்லிம் வியாபாரிகளின் மூலம் தங்கம், வெள்ளி, முத்து, மாணிக்கம், வாசனைத் திரவியங்கள், பலசரக்குகள், ஆடையணிகள் ஆகிய ஆசியப்பொருட்களுக்குப் பழக்கப்பட்டனர். ஐரோப்பிய வர்த்தகர்கள் கொன்ஸ்தாந்திநோபிள் போன்ற வர்த்தக நகரங்களுக்குச் சென்று முஸ்லிம் வியாபாரிகளிடம் ஆசியப் பொருட்களைக் கொள்வனவு செய்து, ஐரோப்பா முழுதும் விற்பனை செய்தனர்.

சிலுவை யுத்தங்களால் ஐரோப்பிய வர்த்தகத்திற்குப் புத்தொளி கிடைத்தது என்பது தெளிவாகும். அதனால் மானிய முறைமை வீழ்ச்சியடைந்த போது, அதுவரை நிலவிய அதிகாரப் பரவலாக்கல் முறைக்குப் பதிலாக மீளவும் மைய அதிகாரத்தைக் கொண்ட முடியாட்சிமுறை தோன்ற ஆரம்பித்தது. முடியாட்சி முறையின் கீழ் ஐரோப்பிய நாடுகளில் தேசிய வர்த்தகக் கொள்கை, தேசிய வரிக் கொள்கை என்பன செயற்படுத்தப்பட்டன. வியாபாரிகளின் வர்த்தகத்திற்குக் கொள்ளையர்களால் ஏற்படும் இடர்களைப் போக்குவதற்கும் பாதைகளை சீர்திருத்துவதற்கும் சட்டதிட்டங்கள் பிறப்பிக்கப்பட்டுப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இக்காலகட்டத்தில் ஐரோப்பாவின் புதிய முடியரசுகளின் மன்னர்கள், வியாபாரத்தினூடாகப் பெரும் இலாபத்தை ஈட்ட முடியும் என்பதை அறிந்து அதற்கு உதவ முன் வந்தனர். மன்னர்கள் மானிய முறைக்காலம் போல பிரபுக்களுடன் அல்லாது புதிதாக வளர்ந்துவரும் வர்த்தக வகுப்பாளருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். இது வர்த்தக வளர்ச்சிக்குப் பெருந்தூண்டுகோலாயிருந்தது.

வர்த்தகத்தை விருத்தியடையச் செய்வதற்கு அரச உதவி நேரடியாகக் கிடைத்தது. மன்னர்கள் சுய புகழ்ச்சிக்கும் அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்கும் பணத்தை சம்பாதித்துக்கொள்ளும் ஒரு வழிமுறையாகவும் நாடுகாண் பயணங்களுக்கும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் உதவ முன்வந்தனர்.



உரு 7.5 நாணயங்கள்



உரு 7.6 இத்தாலியின் முதலாவது வங்கி




உரு 7.7 ஐரோப்பிய தாள் நாணயங்கள்.

வர்த்தகம் விருத்தியடைந்து செல்வம் குவிந்தமையால், வர்த்தக நடவடிக்கைகளை இலகுவாக நடத்திச் செல்வதற்காக செலாவணிமூலம் ஒன்றின் தேவை தோன்றியது. அதற்காக நாணயங்கள் வெளியிடப்பட்டன. அதே போல பணத்தைக் கையாள்வதற்கு வங்கி முறைமை தோன்றியது. இன்னுமொரு முக்கியமான நிதிமுறையாக செலாவணி உண்டியல்கள் கையாளப்பட்டன.

வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை வெளிநாடுகளுடன் மேற்கொள்ளும்போது, பெரும் காசுப்பொதிகளைக் கொண்டு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. செலாவணி உண்டியல்கள், வங்கி முறைமைகள் என்பவற்றால் பெருந்தொகைக் கொடுக்கல் வாங்கல்களை மிக இலகுவாக மேற்கொள்ளக் கூடியதாயிருந்தது.

செலாவணி உண்டியல்கள், வங்கிமுறைமை என்பவற்றால் ஆபத்துக்கள் தவிர்க்கப்பட்டதால் வியாபாரமும் நாடுகாண் பயணங்களும் விருத்தியடைவதற்கு வழியேற்றப்பட்டன.

தனியார் வர்த்தக முயற்சிகள் இடர்பாடுகளுடன் கூடியபடியால் ஒன்றிணைந்த வர்த்தக முயற்சிகள் தோன்றின.

உதாரணமாக

★ 1600 ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி.

★ 1602 டச்சு கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி.

காலப் போக்கில் இவ்வாறான ஒன்றிணைந்த வர்த்தகக் கம்பனிகள் பலவும் உருவாயின.

**செயற்பாடு :**

★ சிலுவை யுத்தங்களுடன் வர்த்தகம் விருத்தியடைந்த விதத்தை விளக்குக.

## மறுமலர்ச்சி

மறுமலர்ச்சி என்பது மீண்டும் மலர்தலாகும். ஐரோப்பாவின் கலாசாரம், அரசியல், சமூகம், பொருளாதார, விஞ்ஞானம் ஆகிய சகல துறைகளிலும் ஏற்பட்ட புத்துணர்ச்சியும் வளர்ச்சியுமே மறுமலர்ச்சி அல்லது மீண்டும் மலர்தல் எனப்படும்.

மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக கி.பி 1453 ஆம் ஆண்டில் ஒட்டோமன் துருக்கியர்கள் கிழக்குரோமப் பேரரசின் தலைநகரான கொன்ஸ்தாந்திநோபிள் நகரைக் கைப்பற்றிக் கொண்டமையைக் குறிப்பிடலாம். மத்திய காலத்துப் புராதன உரோம - கிரேக்க இலக்கிய, தத்துவ நூல்கள் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தது கொன்ஸ்தாந்திநோபிள் நகரிலாகும். இந்நகர் துருக்கியர் வசமானபடியால், கிறிஸ்தவ அறிஞர்கள் அந்நூல்களை எடுத்துக்கொண்டு மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குத் தப்பியோடினர். அதனைத் தொடர்ந்து ஐரோப்பா முழுவதிலும் இந்த கிரேக்க - உரோம ஆக்கங்கள் பெருமளவிக்குப் பரிசீலிக்கப்பட்டமையால், கிரேக்க உரோம நாகரிகத்தில் மீளவும் எழுச்சி ஒன்று உருவானது.



*உரு 7.8. மத்திய கால சித்திரமொன்று; சமய எண்ணக்கருத்துக்களுக்கும், சுயசரிதைக்கும் முன்னுரிமை வழங்கலும் இதன் சிறப்பம்சமாகும். கலைஞர்களின் ஒன்றுபட்ட செயற்பாடு காரணமாக இக்கலைப்படைப்பில் கலைஞர்களின் பெயர் குறிப்பிடப்படவில்லை.*

இவற்றுடன் மறுமலர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த இன்னும் பல காரணிகள் உள்ளன. இவற்றுள் பிரதானமான காரணிகளுள் ஒன்றாக, பன்னிரெண்டாம் நூற்றாண்டளவில் ஐரோப்பாவில் வியாபாரத்தில் ஏற்பட்ட அபிவிருத்தியைக் குறிப்பிடலாம். வர்த்தகம் காரணமாக இத்தாலியின் நகரங்களில் பணக்கார வகுப்பொன்று உருவானது. அவர்களுக்குக் கலைத்துறைகளில் கவனத்தைச் செலுத்துவதற்கு ஓய்வு கிட்டியதுடன் அவற்றிற்கு உதவுவதற்குத் தேவையான செல்வமும் இருந்தது.

உதாரணமாக: மிலானில் ஸ்பேஸா, புளோரன்ஸில் மெடிசி, பூராவில் எஸ்டே, மாண்டுவாவில் கொன்ஸாகா போன்ற பணக்காரக் குடும்பத்தினர்கள் இதற்கு உதவி வழங்கியமை, மனிதாபிமான பாப்பரசராகக் கருதப்படும் V ஆம் நிக்கலஸ் அவர்கள் வத்திக்கானில் நூல்நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு ஆதரவளித்தமை, இவரோடு V1ஆம் அலெக்ஸாண்டர், II ஆம் ஜுலியஸ், X ஆம் லியோ ஆகிய பாப்பரசரகளும், இத்தாலியை கலைகளின் நகரமாக்குவதற்கு புகழ்பெற்ற கலைஞர்களுக்கு ஆதரவு வழங்கியமை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.



இலவச விநியோகத்திற்காக

இத்தாலியில் பன்னிரெண்டாம் நூற்றாண்டளவில் பல்கலைக்கழகங்கள் தோன்றியிருந்தன. அப்பல்கலைக்கழகங்கள், கலைகளின் நவீனத்துவத்திற்குத் தேவையான அறிவுபூர்வமான சூழலைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான சுதந்திரச் சிந்தனைக்கு வழிகோலின.

## மறுமலர்ச்சியின் பிரதான பண்புகள்

மத்திய காலத்தில் சமயத்தன்மையுடன் கூடிய கலைகளும் இலக்கியமும் மறுமலர்ச்சிக் காலத்தில் உலகியல் தன்மையைப் பெறத் தொடங்கியது. இக்காலத்தில் சமயப் படிப்பினைகள் பூரணமாக ஒதுக்கப்படாத அதேவேளை, இடைஞ்சலான சமயத் தலையீடுகளுக்கு இடமிருக்கவுமில்லை. உலகியல் தன்மை பெருமளவுக்குக் காணப்பட்டது. கலைத்துறையில் உலகியல் சுகங்களையும் செல்வங்களையும் மதித்து, உலகியல் ரசனையை எதிர்பார்த்த தனவந்தர்கள் மறுமலர்ச்சிக் காலக் கலைஞர்களுக்கு ஆதரவு வழங்க முன்வந்தனர். இதனால் ஆற்றல்மிகு கலைஞர்களுக்குத் தமது தனித்துவம் மிளிரும் வண்ணம் ஆக்கங்களைப் படைக்கவும் சந்தர்ப்பம் கிட்டியது.




*உரு 7.9 மறுமலர்ச்சிக் காலம். கலாரசனைக்கும் தனி நபர் வாதத்திற்கும் இயற்கைத் தன்மைக்கும் முதலிடம் வழங்குவது தொடர்பானது.*

தனிநபர்களுக்கு முக்கியத்துவமளித்தல் இக் காலத்தில் காணப்பட்ட இன்னுமொரு முக்கிய பண்பாகும். இதனால் போட்டி முறையில் தனிநபர் ஆற்றலைக் காண்பித்து, சுய விருப்பங்களை நிலைநாட்டிக்கொள்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதனால் மத்திய காலத்தில் நிலவிய கூட்டுத்தன்மை இல்லாமற் போனது.

## மானிடவாதத்தின் தோற்றம்

மானிட வாதம் என்பது எல்லாவற்றையும்விட மனிதன் முக்கியமானவன் எனும் கொள்கை யாகும். மானிய முறையின் முடிவில் மானிடவாதக் கொள்கை மிகவும் வலுப்பெற்றது. இக்காலத்தில் மனிதன் அறிவு, விவாதம், இரசனை என்பவற்றிற்கு முதலிடமளித்து கலை, வரலாறு, சட்டம், வானியல் விஞ்ஞானம் எனும் விடயங்களைக் கற்கத் தூண்டப்பட்டான்.




*உரு 7.10 தெய்வஉருவங்கள்*

கிரேக்க, இலத்தீன் மொழிகள் புத்துயிர் பெற்றன. மத்திய காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் இனக்குழுக்களின் மொழியே கையாளப்பட்டு வந்ததோடு சமயவிடயங்கள், சட்டம் ஆகிய கற்கைகளின் போது இலத்தீன் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதனால் கிரேக்க மொழிவழக்கிழந்து காணப்பட்டது. மறுமலர்ச்சிக் காலத்தில் இம்மொழிகள் இரண்டிற்கும் புதிய உயிர்ப்புக் கிடைத்ததோடு இம்மொழிகளிலான நூல்களையும் படிக்கத் தொடங்கினர். இதனால் விசேடமாக கிரேக்க நாடகங்கள், இலக்கியங்களில் புத்தெழுச்சி ஏற்பட்டது. அத்தோடு கிரேக்க மொழியைக் கற்பது புதிய போக்காகக் காணப்பட்டமையால் பிரதேசமொழிகள் செயலிழந்து போயின. கிரேக்க, இலத்தீன் மொழிகள் கற்கப்பட்டமையால் மொழி இலக்கியங்களில் புத்துணர்ச்சி பிறந்தது. இக்கால இத்தாலியில் வாழ்ந்த முக்கியமான எழுத்தாளர்களாக தாந்தே, பொக்காஷியோ, பெட்ராக் என்போரைக் குறிப்பிடலாம். இதே போன்று இங்கிலாந்தில் தோமஸ் மூர், பிரான்சிஸ் பேகன், வில்லியம் ஷேக்ஸ்பியர் என்போரும் ஒல்லாந்தில் இராஸ்மசும் முக்கிய இடத்தைப் பெற்றனர்.

மறுமலர்ச்சிக் கால கலைப் படைப்புகளில் சித்திரத்திற்கும் விசேட இடமொன்று உரித்தானது. இக்காலத்தில் ஏனைய எல்லா விடயங்களைப் போலவே சித்திரத்திற்கும் மத்திய நிலையமாக இத்தாலியின் புளோரன்ஸ் நகரம் திகழ்ந்தது. மெஸக்சியோ பொட்டி ஷெல்லி, லியானாடோ டாவின்ஸி, ரபாயல், மைக்கல் ஆஞ்சலோ போன்ற படைப்பாளிகள் இந்த யுகத்தில் முக்கியத்துவத்துக்குரியோராயிருந்தனர்.



*உரு 7.11 மொனாலிஸா*



*உரு 7.12 இறுதி இராப்போசனம்*

இவர்களுள் லியானாடோ டாவின்சி சித்திரக்கலையில் மட்டுமின்றி சகல கலைகளிலும் வல்லுனராகக் காணப்பட்டார். கவிஞராக, இசைக்கலைஞராக, பிரயோகப் பொறியியலாளராக மட்டுமன்றி விஞ்ஞானியாகவும் திகழ்ந்தார். அவருடைய மொனாலிஸா, இறுதி இராப்போசனம் எனும் சித்திரங்கள் இன்றும் கூட சிறப்பான படைப்புக்களாக மக்கள் மத்தியில் புகழ்பெற்றுத் திகழ்கின்றன.

உரோமாபுரியின் சிஸ்டைன் ஆலயத்தின் பாவுகையில் மைக்கல் ஆஞ்சலோவால் வரையப்பட்டுள்ள சித்திரங்கள் மிகவும் முக்கியத்துவத்துக்குரியனவாகும்.



உரு 7.13 பியெட்டா சிலை



உரு 7.14 உரோமின் சிஸ்டைன் ஆலயப் பாவுகையில் மைக்கல் ஆஞ்சலோவால் வரையப்பட்ட சித்திரங்கள்



உரு 7.17 மைக்கல் ஆஞ்சலோவால் நிர்மாணிக்கப்பட்ட பூங்காவனம்



உரு: 7.15 கோதிக் மரபு உயர் கூரிய நுனிக் கோபுரங்களுடனான ஆலயங்கள்

மறுமலர்ச்சிக்காலக் கலைப் படைப்புகளில் சிற்பங்களும் முக்கியத்துவத்துக்குரியன வாகும். உன்னதமான சிற்பக் கலைஞனான மைக்கல் ஆஞ்சலோவின் சிற்பங்களுள் வெள்ளைப் பளிங்கில் செதுக்கப்பட்டுள்ள டேவிட்டின் சிலையும் பியெட்டா சிலையும் பிரதானமானவைகளாகும்.



உரு 7.16 ரோமாபுரியின் சென் பீட்டர் தேவாலயம்

மத்திய காலத்தில் கட்டடக் கலையில் கோதிக் கலை மரபே கையாளப்பட்டு வந்தது. ரோமானிய கட்டட நிர்மாணத்திற்கு இயைவாக, கூர்நுனிக் கோபுரங்களுடன் கூடிய சரிவான கூரைகளுடனான பெரிய கட்டடங்களை மறுமலர்ச்சிக் காலத்தில் நிர்மாணித்தனர். இவற்றுள் தேவாலயங்கள் பிரதானமானவைகளாகும். இந்தக் கட்டடம் கி.பி 1506 ஆம் ஆண்டில் 2 ஆம் ஜூலியஸ் பாப்பரசரின் அனுசரணையுடன் ரபாயல், மைக்கல் ஆஞ்சலோ எனும் சிறந்த கலைஞர்களின் கைவண்ணத்தில் உருவான சிற்பங்களாலும் சித்திரங்களாலும் அலங்கரிக்கப்பட்டன.

## விஞ்ஞானத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி

★ போலந்து நாட்டவரான நிக்கலஸ் கொபர்நிகஸ் அவர்கள், உலகம் கோள வடிவினது என்றும் எல்லாக் கோள்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன என்றும் கண்டறிந்தார். இதனால் இவர் ''வானியலின் தந்தை'' எனப் போற்றப்படுகிறார்.



உரு 7:8 கலீலியோ கலீலியும் அவரது தொலைநோக்கியும்

★ இத்தாலியரான கலீலியோ கலீலி தொலைநோக்கியைக் கண்டறிந்தார். இதனால் விண்வெளியைப் பரீசிலனை செய்து, வியாழன் கிரகத்தின் உப கிரகங்களைப் பற்றிய தகவல்கள் கண்டறியப்பட்டன. இவர் நடத்திக் காட்டிய ஆய்வுகளுக்காக ''செய்முறை விஞ்ஞானத்தின் தந்தை'' எனப் போற்றப்படுகிறார்.

★ ஜொஹன்ஸ் கெப்லர் அவர்கள், கோள்கள் சூரியனைச் சுற்றி நீள்வட்டப் பாதையில் சுற்றி வருவதாகக் கண்டறிந்தார்.



உரு 7.18 நீள்வட்டப் பாதை

★ சேர். ஐஸாக் நியூட்டன் "ஈர்ப்பு விசையைக்" கண்டறிந்தார்.

★ இக்காலகட்டத்தில் வைத்திய விஞ்ஞானத்திலும் புதுயுகம் ஒன்று தோன்றியது. ஆங்கிலேயரான வில்லியம் ஹார்வே மனித உடலில் குருதிச் சுற்றோட்டம் இடம் பெறும் முறையைக் கண்டறிந்தார்.

★ சுவிற்சலாந்தைச் சேர்ந்த வைத்தியரான பெரசல்சஸ் அவர்கள், நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்களையும் அவற்றை சுகப்படுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் ஆய்வுகளை மேற்கொண்டார். அவர் நவீன மருந்துகள் தொடர்பாகவும் சிகிச்சை முறைகளிலும் பெருஞ் செல்வாக்கைக் கொண்டிருந்தார்.


★ வைத்தியர் மைக்கல் சர்டெஸ், குருதி இதயத்தின் இடது பக்க அறையிலிருந்து வெளியேறி சுவாசப் பையை அடைந்து அங்கு சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் இதயத்தை அடைந்து உடல் முழுதும் ஓடிச் செல்வது தொடர்பான தகவல்களை முன்வைத்தார்.



இலவச விநியோகத்திற்காக

★ சீனர்களிடம் இருந்து ஐரோப்பாவுக்குக் கொண்டுசெல்லப்பட்ட அச்சிடும் முறையை அடிப்படையாகக்கொண்டு கி.பி 1447 ஆம் ஆண்டில் ஜேர்மனியரான ஜோஹன்னஸ் கூட்டன்பர்க் அவர்களால் அச்சியந்திரம் கண்டறியப்பட்டது.

மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட இம்முன்னேற்றங்களும் அறிவொளியும் கிரேக்க உரோம நாகரிகங்களின் பண்புகளை மீளவும் உயிர்ப்பித்ததுடன் எட்டாம் நூற்றாண்டிலிருந்து உருவாகிவந்த ஆசிய, அராபிய நாகரிகங்களிலிருந்து முக்கியமான அம்சங்கள் பலவற்றின் செல்வாக்கிற்கும் உட்பட்டுள்ளது. விசேடமாக அட்சர கணிதம், கேத்திர கணிதம், நில அளவையியல், வானியல், வைத்தியசாலை முறைகள் போன்ற ஏராளமான விடயங்களை ஐரோப்பியர்கள் அராபியரிடமிருந்தே பெற்றுக்கொண்டனர்.



உரு 7.20 அச்சு இயந்திரம்

**செயற்பாடு :**

★ *மறுமலர்ச்சிக் காலத்தில் கலை, கட்டட நிர்மாணம், விஞ்ஞானம் என்பவற்றில் ஏற்பட்ட முன்னேற்றம் தொடர்பாக பத்திரிகைக்குக் கட்டுரை ஒன்று எழுதுக.*

## ஐரோப்பாவில் தேசிய அரசுகளின் தோற்றம்.

மானியமுறைக் காலத்தில் பிராந்திய ஆட்சியாளர்களிடையே அதிகாரம் பரவலாக்கப்பட்டிருந்தது. இதனால் நாம் வாழும் பிரதேசத்தின் அல்லது நகரத்தின் பிரஜைகளாகத் தம்மைக் கருதினார்களேயன்றி, ஒரே தேசத்தவர்கள் என்ற உணர்வு உருவாகவில்லை. என்றாலும் மானியமுறை அழிவுற்று நவீன யுகம் ஆரம்பமாகையில் 12 ஆம் நூற்றாண்டில் பல்வேறு துறைகளிலும் ஏற்பட்ட மாற்றங்களுக்கேற்ப ''தேசிய அரசு" அல்லது ''புதிய முடியாட்சி முறை" உருவாகியது. இதற்கமைய முன்பு காணப்பட்ட பிராந்திய அரசுகள் அனைத்தையும் ஒன்றிணைப்பதற்காக யுத்தங்கள், திருமண சம்பந்தங்கள், பாரம்பரியங்கள் ஆகிய பல்வேறு முறைகளைக் கையாண்டு ஒரே ஆட்சியாளனின் கீழ் ஐக்கியப்படுத்தும் செயற்பாடு ஐரோப்பாவில் தோன்ற ஆரம்பித்தது.

வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள் வாழ்ந்த ஒரே மொழியைப் பேசுகின்ற, ஒரே கலாசாரத்தைக் கொண்ட மக்கள் குழுக்கள், அரசன் ஒருவனின் தலைமையின் கீழ் ஐக்கியப்படுத்தலின் மூலம் உருவாக்கப்பட்டதே ''தேசிய அரசு"களாகும்.

## தேசிய அரசுகளின் பண்புகள்

- ★ அரசரை மையமாகக் கொண்டு சகல அதிகாரங்களையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்ட ஆட்சி முறை.
- ★ அரசரின் ஆலோசகர்கள், அரச உத்தியோகத்தர்கள் என்போரில் ஏற்பட்ட அதிகரிப்பு.
- ★ அரசர்கள் தமது ஆலோசகர்களையும் உத்தியோகத்தர்களையும் செல்வாக்குமிக்க பிரபுக்களிடையே இருந்து தெரிவு செய்யாது புதிதாக வளர்ச்சியடைந்து வந்த மத்தியதர வர்க்கத்தினரிடையே தெரிவு செய்தனர். இவர்களிலிருந்தே புதிய உத்தியோகத்தர்கள் வர்க்கம் ஒன்று தோற்றம் பெற்று வளர்ச்சியுறத் தொடங்கியது.
- ★ அரச ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கும் முறையினால், மானியமுறைக்கால ஆலோசகர்களுக்குப் போன்று கடமைப்பட்டிருக்க வேண்டிய நிலைமை அரசர்களுக்கு இல்லாமற் போனது.
- ★ புதிய சமூக விருப்புகள் தோற்றம் பெற்றன.
- ★ அரசருக்கு நிரந்தரமான இராணுவப்படை ஒன்று இருந்தது.
- ★ கிறிஸ்தவ திருச்சபையின் ஆதிக்கம் வீழ்ச்சியடைந்தமை.
- ★ ஐரோப்பாவில் கிறிஸ்தவ சமயம் பிளவுண்டு புரட்டஸ்தாந்து சமயம் தோற்றம் பெற்றது. சில அரசுகள் இம்மதப்பிரிவை ஆதரித்தன.
- ★ தேசிய அரசுகளின் நிர்வாக, வர்த்தக நடவடிக்கைகளை இலகுவாக முன்னெடுத்துச் செல்வதற்கு நாடு முழுவதற்கும் ஒரே சட்டமும் வரிமுறையும் உருவாக்கப்பட்டமை.
- ★ வணிகவாதம் எனும் பொருளாதாரத் தத்துவம் முன்வைக்கப்பட்டமை. ''பொன் இருப்பு'' வர்த்தக நிலுவை, பொருளாதாரத்தில் அரச தலையீடும் நிர்வாகமும் சுய தேவைப் பூர்த்தி அடைதல் என்பன வணிகவாதத்தின் பண்புகளாகும். பொன் இருப்பு என்பது ஒரு நாட்டில் ஒன்று சேரும் சொத்து அல்லது பொன், வெள்ளியில் இருப்பு என்பவற்றை அளவு கருவியாகக் கொண்டு செல்வத்தைக் கணக்கிடலாகும். இதற்கமைய ஒவ்வொரு நாடும் பணம், பொன், வெள்ளி என்பவற்றைப் பெருக்கிக்கொள்ள முயன்றன.
- ★ சுயதேவைப் பூர்த்தியை உருவாக்குதல்.
  நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்திக்கொள்வதற்காக ஐரோப்பாவுக்கு வெளியே சந்தைகளைப் பெற்றுக்கொள்வதற்காகக் குடியேற்றங்களைத் தோற்றுவித்துக் கொள்ளல்.
- ★ பரவலாகி இருந்த அதிகாரங்களை ஒன்றுதிரட்டி பலம் வாய்ந்த முடியாட்சியைக் கட்டியெழுப்புதல். இவற்றிற்கு ஏற்ப ஐரோப்பாவில் இங்கிலாந்து, ஸ்பானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இவ்வாறான பண்புகளைக்கொண்ட முடியாட்சிகள் உருவாகின.

**செயற்பாடு :**

★ தேசிய அரசு என்றால் என்ன என்று விளக்கமாகக் குறிப்பிட்டு, அதன் பண்புகளைத் தருக.

## நாடுகாண் பயணங்கள்:


கி.பி 1453 ஆம் ஆண்டில் கிழக்கு - மேற்கு வர்த்தகத்தின் மத்திய நிலையமான கொன்ஸ்தாந்திநோபிள் நகரம் துருக்கிய முஸ்லிம்களின் கைவசமானமையால், அவர்கள் வர்த்தகப் பொருட்களின் விலையை அதிகரித்தனர்.
தீர்வைகளை அதிகரித்தல், உரிய காலத்தில் பொருட்களை வழங்காமை போன்ற இடையூறுகளை விளைவித்தனர். வர்த்தகத்தால் தம்மைப் பலப்படுத்திக் கொண்டிருந்தமையால் முஸ்லிம்களுக்கு ஐரோப்பிய கிறிஸ்தவ தாபனங்களைத் தோற்கடிக்கும் வல்லமை கிட்டியது. இவற்றை விளங்கிக் கொண்ட ஐரோப்பியர், தாமே ஆசியப் பிரதேசங்களில் வர்த்தகத்தை மேற்கொள்ளவும் அதன் வாயிலாக முஸ்லிம்களின் வர்த்தகத்தைத் தகர்க்கவும் ஆசியாவுக்குள் பிரவேசிப்பதற்கான புதிய கடல் வழிகளைத் தேடுவதற்கு முயற்சித்தனர்.

இக்காலத்தில், பெஸ்டர் ஜோன் எனும் அரசர் ஒருவர் பிரமாண்டமான கிறிஸ்தவ அரசு ஒன்றைக் கீழைத்தேசத்தில் அமைத்திருப்பதாக கிறிஸ்தவர்களிடையே வாய்மொழிக் கதைகள் வாயிலான நம்பிக்கை ஒன்று நிலவி வந்தது. அந்தக் கிறிஸ்தவ இராச்சியத்தைக் கண்டறிவதும், கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதும், இஸ்லாமியர்களின் பரவலைத்தடுத்து நிறுத்துவதும் ஐரோப்பியர்கள் கீழை நாடுகளுக்கு வருகை புரிந்ததற்கான பிரதான காரணங்களாகும்.

நாடுகாண் பயணங்களுக்கான பொருத்தமான சூழ்நிலைகள் ஐரோப்பாவில் காணப்பட்டன. அவற்றுள் சில வருமாறு

★ தொலமியின் உலகப் படத்தின் மூலம் உலகம் பற்றிய அறிவைப் பெற்றிருந்தமை
★ மறுமலர்ச்சியின் போது உலகம் கோளவடிவினது எனக் கண்டறியப்பட்டமை
★ கடற் பயணங்களைப் பாதுகாப்பாக மேற்கொள்ளத்தக்க திசையறி கருவி, வட நட்சத்திரமாணி என்பவை பயன்படுத்தப்பட்டமை.

தனிப்பட்ட முயற்சியாண்மையாளர்கள் ஆபத்துடன் கூடிய நிச்சயமற்ற விடயங்களில் முதலீடுகளைச் செய்ய முன்வராதபோது, இக்காலகட்டத்தில் உருவான தேசிய அரசுகள் இவ்விடயங்களுக்கு உதவ முன்வந்தன.




தேசப்படம் 7.2 நாடுகாண் பயணங்களைக் காட்டும் உலக வரைபடம்.



உரு 7.21 கடலோடிஹென்றி



உரு 7.22 வஸ்கொட காமா



உரு 7.23 கிறிஸ்டோபர் கொலம்பஸ்

போர்த்துக்கல் நாடு கி.பி 1453 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே நாடுகாண் பயணங்களில் ஈடுபட ஆரம்பித்திருந்தது. இடைத்தரகர்களான வியாபாரிகளிடம் இருந்து பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது அவற்றிற்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருந்தது. எனவே இப்பொருட்களை நேரடியாக ஆசியாவிலிருந்தே கொள்வனவு செய்வதற்காகப் புதிய கடல் வழிகள் கண்டறியப்பட வேண்டியிருந்தது.

போர்த்துக்கலின் ஹென்றி அரசன் (கி.பி 1394 -1460) பொருளாதார, விஞ்ஞான உண்மைகளைத் தெரிந்து கொள்ளும் ஆசை, ஆர்வம், சமயம், தேசிய உணர்வுகள் என்பவற்றால் உந்தப்பட்டு நாற்பது ஆண்டுகளாகக் கப்பலோட்டும் துறையை மேம்படுத்துவதற்குப் பாடுபட்டுள்ளான். ஆகையால் அவன் ''கடலோடி



இலவச விநியோகத்திற்காக

ஹென்றி" என்று குறிப்பிடப்படுகிறான். அவன் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு வானியல் பரிசோதனைக் கூடம் ஒன்றை நடத்தி வந்துள்ளான். போர்த்துக்கேயர்கள், ஆபிரிக்காவின் மேற்குக்கரை வழியே தென்திசை நோக்கிப் பயணித்தனர்.

ஸ்பானியாவிலும் கடலோடும் துறைக்கு அரசி இஸபெலாவும் அரசன் பேர்டினன்டும் ஆதரவு நல்கினர். இதனால் கிறிஸ்தோபர் கொலம்பஸ் மேற்கு இந்தியத் தீவுகளையும் அமெரிக்கோ வெஸ்புஷி அமெரிக்காவையும் கண்டறிந்தமை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

பார்த்தலோமியஸ் டயஸின் தலைமையில் ஆபிரிக்காவின் தென்முனைக்கு வந்த கப்பல் புயலில் சிக்கியபடியால், அவ்விடத்திற்கு 'புயல்முனை' எனப் பெயரிட்டு அவன் திரும்பி நாட்டை வந்தடைந்தான். போர்த்துக்கேயர் இதற்கு நன்னம்பிக்கை முனை எனப் பெயரிட்டனர். கி.பி 1498 இல் வஸ்கொடகாமா இதன் வழியாக இந்தியாவின் கள்ளிக்கோட்டை நகரை வந்தடைந்தான். அது ஐரோப்பியர்கள் ஆசியாவுக்கு வருவதற்காகக் கண்டறியப்பட்ட முதலாவது கடல்வழியாகும்.

**நாடுகாண் பயணிகளும் அடைந்த இடங்களும்**

| | |
|---|---|
| பார்த்தலோமியஸ் டயஸ் | - புயல்முனை |
| கிறிஸ்தோபர் கொலம்பஸ் | - ஸ்பானியோலா |
| அமெரிக்கோ வெஷ்புஷி | - அமெரிக்கா |
| வஸ்கொடகாமா | - இந்தியா |
| பேர்டினன் மகலன் | - பிலிப்பைன்ஸ் |

இதற்கமைய போர்த்துக்கல், ஸ்பானியா, இங்கிலாந்து, ஒல்லாந்து, பிரான்ஸ் எனும் நாடுகள் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டன.

**நாடுகாண் பயணங்களின் விளைவுகள்**

★ ஆசிய, ஆபிரிக்க அமெரிக்க கண்டங்களில் ஐரோப்பியரின் ஆதிக்கம் பரவியமை.
★ நாடுகளைக் கைப்பற்றலும் குடியேற்றவாதம் தோற்றம் பெறலும்.
★ சமயப்பிரசார நடவடிக்கைகள் பரவலடைந்தமை.
★ வர்த்தகம் விருத்தியடைந்தமை.
★ கைத்தொழில் புரட்சிக்கு இட்டுச் சென்றமை.
★ ஐரோப்பிய நாகரிகம் பரவலடைந்தமை.

**செயற்பாடு :**

★ *நாடுகாண் பயணிகள் கண்டறிந்த நாடுகள், இடங்கள் தொடர்பான அட்டவணை ஒன்றைத் தயாரிக்க*

## மதச்சீர்திருத்தம்

மத்திய காலத்தில் சமயமானது மனிதனது எல்லாவிடயங்களிலும் செல்வாக்குப் பெற்றிருந்தது. திருமணப் பதிவு, பிறப்பு - இறப்புப் பதிவுகள் என்பவற்றால் சமூகத்தில் அமைப்பு ரீதியான மாற்றம் ஒன்று ஏற்பட்டதோடு ஒழுக்கவரையறைகளும் சமயத்தால் உருவாயின. கல்வியைக் கற்பித்தலும் கத்தோலிக்க சபையின் கடமையாயின. எவ்வாறெனினும் அதுவரை நிலவிவந்த முறை மறுமலர்ச்சியால் ஏற்பட்ட சிந்தனைப்புரட்சியால் விஞ்ஞான முன்னேற்றம், புதிய கண்டுபிடிப்புகள் என்பவற்றால் மாற்றங்களுக்கு முகம் கொடுத்தது. தம்மைச் சூழவுள்ளவற்றை தர்க்க ரீதியாக நோக்குவதற்கு மக்கள் பழகிக் கொண்டனர். இதற்கியைய மத்திய காலத்தில் சமயக் கற்கைகளையும் தாபனங்களையும் தர்க்க ரீதியாக நோக்குவோர் உருவாகினர்.

சமயச் சீர்திருத்தத்தால் உருவான புரட்டஸ்தாந்து இயக்கத்திற்கு சமயம், பொருளாதாரம், அரசியல் என்ற பல்வேறு விடயங்கள் பங்களிப்புச் செய்துள்ளன.

மத்திய காலத்தின் இறுதிக்கட்டத்தில் கத்தோலிக்கத் திருச்சபை ஓரளவுக்கு உலகியல் வாதத்தின்பால் திரும்பியிருந்தது. பேரரசர்களும் அரசர்களும் தமது அரசியல் அதிகாரங்களையும் சொத்துக்களையும் பாதுகாத்துக்கொள்வதற்காக சமயத் தலைமைத்துவத்தை பெற்றுக்கொண்டமை இதற்கு காரணமாயமைந்தது. இவ்வாறு சமய தலைமைத்துவத்தை பெற்ற அதிகமான தலைவர்கள் கூடிய கவனத்தை செலுத்தியது ஆன்மீக வளர்ச்சியைவிட தமது உலகியல் செல்வங்களைப் பாதுகாத்துக் கொள்வதிலாகும்.

இதனைத் தவிர எழுச்சியுற்று வந்த தேசிய அரசுகளின் ஆட்சியாளர்கள் தமது அரசியல் பலத்திற்கு மேலாக சமய குருமார்களின் ஆதிக்கம் மேலோங்கி இருந்தமையைக் கண்டு கிறிஸ்தவ சபையின் பலத்தைக் கட்டுப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தனர். கிறிஸ்தவ திருச்சபையிடம் காணப்பட்ட சொத்துக்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அரசர்களிடமும் எழுச்சியுற்று வந்த மத்திய வகுப்பாரிடமும் காணப்பட்ட எதிர்பார்ப்புக்கள் சமய சீர்த்திருத்தத்திற்குக் காரணமாயின.

இந்நிலையில் முதலாவதாகக் கிறிஸ்தவ திருச்சபையை விமர்சனத்திற்கு உட்படுத்தியவர் விட்டன் பேர்க் பல்கலைக்கழக பேராசிரியரான மாட்டின் லூதராவார். மாட்டின் லூதர், ஒகஸ்டின் சபையைச் சேர்ந்த குருவானவராவார். உண்மையில் கிறிஸ்தவ சபையிலிருந்து விலகி புதிய சமயப் பிரிவொன்றை உருவாக்குவது

அவரது நோக்கமாக இருக்கவில்லை, மாறாக அப்போது நிலவி வந்த குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி அவற்றை களைவதே அவரது நோக்கமாக இருந்தது. அவர் தனது எதிர்ப்பைத் தெரிவித்தது "பாவமன்னிப்புப் பத்திர" விற்பனைக்காகும். மாட்டின் லூதர் திருச்சபையில் நிலவிய குறைகள் தொண்ணூற்று ஐந்தைப் பட்டியலிட்டு கி.பி 1517 நவம்பர் 1ஆம் திகதி விற்றன் பேர்க் ஆலயக் கதவில் ஒட்டி விட்டார். இவ்விடயங்கள் கிறிஸ்தவ சமயத்தில் சீர்திருத்தம் கோரிய சிலரின் ஆதரவுக்கு வழிகோலியது. இந்த நிபந்தனைகளில் தவறான சிலவற்றை தவிர்த்துக் கொள்வதற்கு பாப்பரசரின் கட்டளை ஒன்று கிடைக்கப்பெற்ற போதிலும் அதற்கு அவர் இணங்கவில்லை. இதன் பிரதிபலனாக மாட்டின் லூதரை திருச்சபையிலிருந்து வெளியேற்ற வேண்டி ஏற்பட்டது. அது புதிய திருச்சபை தோன்றுவதற்கு வழியமைத்ததோடு பாப்பரசரை முதன்மையாகக் கொண்ட பழைய திருச்சபை "கத்தோலிக்க திருச்சபை" எனவும் அறிமுகமானது.



*உரு 7.24 பைபிளை வாசித்தல்*

மாட்டின் லூதரின் பின்னர் புதிய சபையை தோற்றுவிப்பதில் முன்னிடம் வகித்தோர் பிரான்ஸியரான கல்வினும் சுவிங்ளி என்போருமாவர். இவர்கள் இருவரும் கிறிஸ்தவ குருமாராவர். இவ்விருவரதும் சீர்த்திருத்த இயக்கத்தின் தலைமைப் பீடம் சுவிற்சர்லாந்தில் அமைந்திருந்தது. கிறிஸ்தவ திருச்சபையின் குற்றங்குறைகளை சுட்டிக்காட்டி எழுதியவர்களுள் ஜோன் வைக்ளிப், செக் இனத்தவரான ஜோன் ஹஸ், ஒல்லாந்தரான இராஸ்மஸ் என்போரும் முக்கிய இடம் பெறுகின்றனர். பைபிளை முதன்முறையாக ஜோன் வைக்கிளிப் ஆங்கிலத்திலும் மாட்டின் லூதர் ஜேர்மன் மொழியிலும் மொழிபெயர்த்தனர்.

இச்சீர்த்திருத்தவாதிகள் புனித பாப்பரசரின் அதிகாரத்தை நிராகரித்ததோடு தமது கொள்கைகளைப் பெருமளவுக்கு பைபிளை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கிக் கொண்டனர்.

பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தின் போது புனித உரோமப் பேரரசு பாப்பரசரின் நிர்வாகத்திலிருந்து விலகி சுதந்திரமான அரசொன்றாக உருவாவதற்கான தேவையொன்று ஏற்பட்டுக் கொண்டிருந்தது. மாட்டின் லூதர் எடுத்த முயற்சிக்கு விசேடமாக ஜேர்மனிய சிற்றரசர்களின் ஆதரவு கிட்டியது.

மாட்டின் லூதர், ஜோன் கல்வின், உல்ரிச் சுவிங்ளி என்போரது சீர்த்திருத்தங்கள் புரட்டஸ்தாந்து இயக்கம் எனப்பட்டது. இப்புரட்டஸ்தாந்து இயக்கம் வெற்றி பெறுவதற்குக் காரணமாயமைந்தது ஜேர்மனியில் சிற்றரசர்களினதும் இங்கிலாந்தில் அரசர்களினதும் ஆதரவாகும்.

### சமய சீர்திருத்தத்தின் விளைவுகள்

★ ஐரோப்பாவின் சமய ஒருமைப்பாடு குலைந்து புதிய சமயக் கொள்கைகள் தோன்றியமை.
★ கிறிஸ்தவ திருச்சபை பிளவுபட்டமை.
★ புனித உரோமப் பேரரசின் செல்வாக்கு குன்றியமை.
★ பிராந்திய சிற்றரசர்களின் பலம் அதிகரித்தமை.
★ மிஷனரி (மறை பரப்பாளர்) இயக்கங்கள் தோற்றம் பெற்றமை.

**செயற்பாடு :**

★ *சமய சீர்திருத்தம் இடம்பெற்ற விதம்பற்றி விளக்குக.*

**சாராம்சம்**

★ *ஐரோப்பாவின் மத்திய காலம் ஆண்டான் அடிமைச் சமூகமாக உருவாகியிருந்தது. இக்காலத்தில் பிரபுக்கள் பலமடைந்திருந்ததோடு, அரசரின் பலம் குறைந்திருந்தது. குடிகள் அடிமைகளாயிருந்தனர்.*

★ *மத்திய காலத்தில் சமூகத்தின் மீது கிறிஸ்தவ திருச்சபை பெரும் செல்வாக்கைக் கொண்டிருந்தது.*

★ *சுயதேவைப் பூர்த்திப் பொருளாதார முறை இக்காலத்தில் காணப்பட்டதோடு அதிகாரம் பரவலாக்கப்பட்டிருந்தது.*

★ *சிலுவை யுத்தங்கள் மானியமுறை வீழ்ச்சியடைவதற்கு காரணமா யிருந்தது.*

★ *துருக்கியர்கள் கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப்பற்றியதனால் ஏற்பட்ட விளைவால் ஐரோப்பாவில் நவயுகம் ஒன்று தோன்றியது.*

★ *கலைகளின் எழுச்சி, சமய சீர்திருத்தம், விஞ்ஞான முன்னேற்றம்,நாடுகாண் பயணங்கள், வணிக விருத்தி போன்ற ஐரோப்பாவை ஒளிமயப்படுத்திய நிகழ்ச்சிகள் பலவும் மறுமலர்ச்சிக் காலத்தில் இடம்பெற்றன.*



இலவச விநியோகத்திற்காக

**பயிற்சி :**

**1. விடையளிக்க.**

1. ஐரோப்பாவில் மத்திய காலம் எனக் கருதப்படுவது எக்காலகட்டத்தையாகும்.
2. மானிய முறையின் பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக
3. சிலுவை யுத்தம் என்றால் என்ன?
4. கொன்ஸ்தாந்திநோபிளை துருக்கியர் எப்போது கைப்பற்றினர்?
5. வர்த்தகர்கள் ஒன்றிணைந்து செயற்படத் தொடங்கியமைக்கானகாரணத்தைத் தருக
6. மறுமலர்ச்சி என்றால் என்ன?
7. மறுமலர்ச்சியின் மூன்று பண்புகளைக் குறிப்பிடுக.
8. மறுமலர்ச்சிக் காலத்து கலைஞர்கள் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
9. தேசிய அரசுகள் என்றால் என்ன?
10. தேசிய அரசுகளின் பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக.
11. நாடுகாண் பயணிகள் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
12. ஆரம்பக்கால மதச் சீர்திருத்தத்திற்கான காரணங்கள் மூன்றை எழுதுக.
13. சமய சீர்திருத்தத்தின் பின்னர் தோன்றிய கிறிஸ்தவ சபைகள் எவை?

**2. கீறிட்ட இடங்களை நிரப்புக.**

1. மானிய முறையில் அரசரை விட.................. பலம் பொருந்தியவர்களாயிருந்தனர்.
2. மானிய முறையில் ...................... பொருளாதாரமுறை நிலவியது.
3. கிறிஸ்தவர்களின் புனித பூமி ..................... ஆகும்.
4. மத்திய காலம் ...................... வாதத்தை அடிப்படையாகக் கொண்டும் மறுமலர்ச்சிக் காலம் ........................... வாதத்தை அடிப்படையாகக் கொண்டும் இருந்தது.
5. தொலை நோக்கி ......................... என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
6. வில்லியம் ஹாவே மனிதனின் ....................... பற்றிய தகவல்களைத் தெளிவுபடுத்தினார்.
7. தேசிய அரசுகளின் உச்ச அதிகாரம் ................... காணப்பட்டது.
8. கொன்ஸ்தாந்திநோபிள் ..................... வர்த்தகப் பாதையில் அமைந்திருந்தமையால் முக்கியத்துவம் பெற்ற நகராயிருந்தது.
9. பார்த்தலோமியஸ் டயஸின் கடற்பயணம் முடிவடைந்த இடம் ..................... ஆகும்.
10. கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக உருவான இயக்கம் ..................... எனப்பட்டது.



# 8 ஐரோப்பியரின் ஆதிக்கப் பரம்பல்

**இவ்வலகின் மூலம் ஐரோப்பியர்கள் குடியேற்றங்களை அமைத்தல், அங்கு அவர்கள் செயற்பட்ட விதம், சமயத்தைப் பரப்புதல் என்பன பற்றிக் கற்போம்.**

இங்கு நாம் முதலில் ஐரோப்பியர்கள் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்ப்போம். கி.பி. 1453 ஆம் ஆண்டில் கிழக்கு உரோமப் பேரரசின் தலைநகரான கொன்ஸ்தாந்திநோபிள், முஸ்லிம்களான ஒட்டோமன் துருக்கியரின் பேரரசுக்கு அடிமைப்பட்டது. கொன்ஸ்தாந்திநோபிள் இதுவரை காலமாக கிழக்கு - மேற்கு வர்த்தகத் தொடர்புகளுக்கான மத்திய நிலையமாகத் திகழ்ந்தமையால் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

15ஆம் நூற்றாண்டளவில் ஐரோப்பா மத்திய காலத்திலிருந்து நவீன காலத்திற்குள் பிரவேசிக்கும்போது, சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களால் படிப்படியாக அங்கு தேசிய அரசுகள் தோற்றம் பெற்றன. அவ்வாறு ஆரம்பத்தில் தோன்றிய தேசிய அரசுகளாக ஸ்பானியா, போர்த்துக்கல், இங்கிலாந்து, பிரான்ஸ், ஒல்லாந்து ஆகிய நாடுகளைக் குறிப்பிடலாம். தேசிய அரசுகள் தமது பலத்தையும் அதிகாரத்தையும் பெருக்கிக்கொள்வதற்காக கடற்பயணங்களுக்கு ஆதரவு வழங்கினர்.

கடற் பயணங்களை மேற்கொள்வதற்குப் போர்த்துக்கலின் ஹென்றி அரசன் வழங்கிய உதவிகளுக்காக அவன் "கடலோடி ஹென்றி" என்று குறிப்பிடப்படுகிறான். அம்மன்னனால் ஆற்றப்பட்ட பணிகள் வருமாறு:

- கடலில் ஆய்வுப் பயணங்களுக்காக கப்பல்களைக் கட்டிக் கொடுத்ததோடு தேவைப்பட்ட ஏனைய உதவிகளையும் புரிந்தமை.
- சென்.வின்ஸன்ட் முனையின் அருகில் வானியல் ஆய்வு நிலையம் ஒன்றை நிறுவியதோடு அதனை நடத்துவதற்கும் உதவிகளைப் புரிந்தமை.

16 ஆம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பாவில் ஏற்பட்ட சமயப் பிணக்குகளும் ஒருவிதத்தில் ஐரோப்பாவின் அதிகாரப் பரவலுக்கான பின்னணியாக அமைந்தது. கிறிஸ்தவ திருச்சபை கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து என இரண்டாகப் பிளவுறத் தொடங்கியது. இந்நிலையில் ஏற்பட்ட சமய உத்வேகத்தை ஐரோப்பாவின் அதிகாரப் பரவலிலும் காணமுடிந்தது.


இலவச விநியோகத்திற்காக

ஐரோப்பாவில் மறுமலர்ச்சியால் ஏற்பட்ட விஞ்ஞானப் புரட்சியும் நாடுகாண் பயணங்களுக்கு பக்கத் துணையாய் அமைந்தது. வானியல் அறிவு வளர்ச்சி, தொலைநோக்கி, சூரிய மையக்கொள்கை, பூமி கோள வடிவானது ஆகிய கண்டுபிடிப்புகள் நாடுகாண் பயணங்களால் செல்வாக்குப் பெற்றன.

இதற்கமைய தேசிய அரசுகளின் தோற்றம், வர்த்தகம், சமயம், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் என்பன ஐரோப்பாவின் அதிகாரப் பரவலுக்கான முக்கிய காரணங்களாக அமைந்தன.

## ஸ்பானியா

ஐரோப்பியர்களுள் நாடுகாண் பயணங்களில் முதலில் ஈடுபட்டவர்கள் போர்த்துக்கேய ஸ்பானிய நாட்டவர்களாவர். ஸ்பானியர்கள் அத்திலாந்திக் சமுத்திரத்தினூடே மேற்குத் திசையில் பயணித்து மத்திய, தென் அமெரிக்காவின் பல பிரதேசங்களைக் கண்டறிந்தனர். கி.பி 1492 இல் கிறிஸ்தோபர் கொலம்பஸால் மேற்கிந்தியத் தீவுகள் கண்டறியப்பட்டன. அதற்கு ஸ்பானிய மன்னனின் உதவி கிடைத்தது.



*உரு 8.1*
*கிறிஸ்தோபர் கொலம்பஸின் கப்பல்*

பெர்ணாண்டோ கோட்டேஸ் என்பவன், கி.பி. 1519 இல் எஸ்டெக்ஸ் அரசை அழித்தொழித்து மெக்சிகோவைக் கைப்பற்றிக் கொண்டமை ஸ்பானியர்களின் மற்றுமொரு முன்னேற்றமான நடவடிக்கையாகும். அரசனின் ஆதரவுடன் பிரான்சிஸ்கோ பிஸாரோ பேருவைக் கைப்பற்றிக் கொண்டதன் மூலம் ஸ்பானியரின் அதிகாரப் பரவலாக்கம் மேலும் விஸ்தீரணமடைந்தது.

குடியேற்றங்களை நிறுவிக்கொள்வதில் ஐரோப்பியரிடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டியால் கி.பி 1493 ஆம் ஆண்டில் பாப்பரசரின் தீர்மானத்திற்கமைய ஸ்பானியாவுக்கும் போர்த்துக்கலுக்கும் இடையே பிரதேசங்கள் வேறுபடுத்திக் கொடுக்கப்பட்டன. இப்பிரிவின் எல்லை கேப்வேர்ட் தீவிற்கு மேற்கில் 370 லீக் (அளவு வகை ஒன்று) வடக்கிலிருந்து தெற்காக நீளும் கோடு ஒன்றின் மூலம் நிர்ணயிக்கப்பட்டது. இதற்கமைய போர்த்துக்கேயர் கீழை நாடுகளின் இந்து சமுத்திரப் பிரதேசத்திலும் ஸ்பானியர் அமெரிக்கக் கண்டத்திலும் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

குடியேற்றவாத நடவடிக்கைகளில் ஏனைய ஐரோப்பியரைவிட ஸ்பானியர்கள் வேறுபட்ட கொள்கை ஒன்றைப் பின்பற்றினார்கள். குடியேற்றங்களில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் நில்லாது, அங்கிருந்து பெறுமதி மிக்க வளங்களைத் தாய்நாட்டிற்குக் கவர்ந்து செல்வதும் அவர்களுடைய நோக்கமாயிருந்தது.

தங்கம், வெள்ளி உலோகக் கனியங்கள் நிறைந்த அமெரிக்கக் கண்டத்தைத் தமதாக்கிக் கொண்டு பெருஞ் செல்வத்தை தமது நாட்டிற்குக் கொண்டு சென்றனர்.

இவ்வாதிக்கத்தைக் கட்டியெழுப்பும்போது ஸ்பானியர்கள் மிகவும் கொடூரமாகவும் பயங்கரமாகவும் ஆயுத பலத்தைப் பயன்படுத்தியுள்ளார்கள். அமெரிக்காவின் சில பிரதேசங்களைக் கைப்பற்றுவது இலகுவாக இருந்தாலும் மெக்ஸிகோ, பேரு போன்ற உயர் நாகரிகங்களைக் கொண்ட நாடுகளைக் கைப்பற்றுவது இலகுவானதாக இருக்கவில்லை. ஆகையால் அந்நாகரிகங்களை முற்றாக அழித்தனர். பின்னர் வந்த சமயத் தூதுவர்கள், ஆக்கிரமிப்பாளர்களின் கொடூரத்திற்கு ஆட்பட்டிருந்த மக்களுக்குச் செய்த சேவைகளால் திருப்திப்பட்ட மக்கள் விருப்புடன் கத்தோலிக்க சமயத்தைத் தழுவிக் கொண்டனர். இதனால் குடியேற்றங்களில் கத்தோலிக்க சமயம் பரவியது.

ஸ்பானியா, ஐரோப்பாவில் நெதர்லாந்தையும் இத்தாலியின் சில பிரதேசங்களையும் தமது ஆதிக்கத்தில் வைத்திருந்தது.

என்றாலும் 17 ஆம் நூற்றாண்டாகும்போது ஐரோப்பாவின் ஆதிக்க நிலை ஒல்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் எனும் நாடுகளுக்குச் சார்பாக மாறவே ஸ்பானியாவின் ஆதிக்கம் வீழ்ச்சியுறத் தொடங்கியது.

## போர்த்துக்கல்

பாப்பரசரின் எல்லைக்கு அமைவாக போர்த்துக்கேயர் பெருமளவுக்கு கீழை நாடுகளில் இந்து சமுத்திரத்தை சூழவுள்ள பிரதேசங்களிலேயே தமது கவனத்தைச் செலுத்தினர். இதற்கமைவாக கி.பி. 1498 ஆம் ஆண்டில் வஸ்கொடகாமா இந்தியாவின் மேற்குக் கரையில் அமைந்துள்ள கள்ளிக்கோட்டைக்கு வந்தான். அவன் கள்ளிக்கோட்டைக்கு வந்தது பார்த்தலோமியஸ் டயஸால் கண்டறியப்பட்ட புயல் (நன்னம்பிக்கை) முனையைக் கடந்தாகும். போர்த்துக்கேயர் சொகொத்ரா, ஓமஸ், கோவா, மலாக்கா ஆகிய பிரதேசங்களைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து இந்து சமுத்திரத்தின் வர்த்தக ஆதிக்கத்தைத் தமதாக்கிக்கொள்ள முயற்சித்தனர்.


உரு 8.2
வஸ்கொட காமா

போர்த்துக்கேயர் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட இடங்களில் வர்த்தக நிலையங்களையும் கோட்டைகளையும் அமைத்துக்கொண்டு கடற்படைப் பலத்தை உபயோகித்து இந்து சமுத்திரத்திலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அவர்கள் இந்தியா உட்பட்ட கீழை நாடுகளிலிருந்து வர்த்தக நடவடிக்கையாக யானைத் தந்தம், வாசனைத் திரவியம், மாணிக்கம் என்பவற்றைப் பெற்று, அவற்றை ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்றனர். இந்நடவடிக்கையின் போது போர்த்துக்கேயர்


இலவச விநியோகத்திற்காக

இப்பிரதேச ஆட்சியாளர்களுடன் செய்து கொண்ட நட்புறவு உடன்பாடுகளுடனும் சிலவேளைகளில் ஆயுத மோதல்களுடனும் தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்து கொண்டனர்.

போர்த்துக்கேயர் இந்தியாவில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டது சிறுஅளவு பிரதேசத்திலேயாகும். என்றாலும் இலங்கையில் கோட்டை இராச்சியத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டும், தாழ்நாட்டில் சில பிரதேசங்களில் தமது ஆயுத பலத்தைப் பிரயோகித்தும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டனர்.

## ஒல்லாந்து

பதினேழாம் நூற்றாண்டாகும்போது ஒல்லாந்து ஐரோப்பாவின் பலம் வாய்ந்த நாடொன்றாக எழுச்சியுற்று வந்தது. ஒல்லாந்தர் (பறங்கியர்), கீழை நாடுகளில் இந்து சமுத்திரத்தை சூழவுள்ள பிரதேசங்களில் வர்த்தக நிலையங்களையும் தலைமை நிலையங்களையும் உருவாக்கிக் கொண்டனர். அவர்கள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு சுதேச ஆட்சியாளர்களின் உதவி ஒத்தாசைகளைப் பெற்றுக் கொண்டு செயற்பட்டனர். அதேபோன்று சில சந்தர்ப்பங்களில் சுதேசிகளுடன் மோதலிலும் ஈடுபட்டுள்ளனர்.

கி.பி. 1602 இல் ஒல்லாந்தர்களால் டச்சு கிழக்கிந்திய வர்த்தக நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய கிழக்கிந்தியத் தீவுகளான சுமாத்ரா, ஜாவா, போர்ணியோவில் அவர்களுடைய கவனஞ் சென்றது. அவர்களுடைய கீழைத்தேய தலைமை இடமாக பட்டேவியா அமைந்தது. இப்பிரதேசங்களின் ஆதிக்கம் ஓரளவுக்கு ஒல்லாந்தர் கைவசமானது.

அவர்கள் இந்து சமுத்திரத்திலுள்ள மொரிஷியஸ் தீவிலும் ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையிலும் தமது வர்த்தக நிலையங்களை நிறுவிக் கொண்டனர்.

ஒல்லாந்தர்களால் வட அமெரிக்காவின் சில பிரதேசங்களிலும் மேற்கிந்தியத் தீவுகளிலும் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. வட அமெரிக்காவில் நியூ நெதர்லண்ட் குடியேற்றத்தையும் உருவாக்கிக் கொண்டனர். அதன் தலைநகரான நியூ அம்ஸ்டடாம், இன்று நியூயோர்க் என்று அழைக்கப்படுகிறது.

பதினேழாம் நூற்றாண்டில் பிற்பகுதியில் ஒல்லாந்தரை முந்திக் கொண்டு பிரான்ஸூம் இங்கிலாந்தும் எழுச்சியுற்று வந்ததால் ஒல்லாந்தரின் பரவல் தடைப்பட்டுப் போனது.

## இங்கிலாந்து

பதினேழாம் நூற்றாண்டாகும்போது ஆங்கிலேயரும் தமது வர்த்தக நடவடிக்கைகளையும் குடியேற்றங்களை நிறுவுதலையும் ஆரம்பித்திருந்தனர். அவர்கள் இந்தியாவில் வர்த்தக நிலையங்கள் பலவற்றை நிறுவிக் கொண்டனர். வடஅமெரிக்காவில் வர்ஜீனியா, நியூ இங்லண்ட், மேரிலண்ட், கெரோலினா, நியூயோர்க், நியூஜர்ஸி, டெலவெயார் எனும் குடியேற்றங்களையும் நிறுவிக் கொண்டனர்.

பதினேழாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இங்கிலாந்து, ஒல்லாந்தரின் வர்த்தக நிறுவனத்தை வீழ்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இங்கிலாந்தில் கப்பற் சட்டம் ஒன்றை இயற்றிக் கொண்டு, ஒல்லாந்தர் வர்த்தகத்தில் அடையும் இலாபத்தைத் தடுப்பதற்கு அது முயற்சிகளை மேற்கொண்டது. ஆங்கிலேயர் இலங்கையிலும் இந்தியாவிலும் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டனர். ஐரோப்பாவின் ஆதிக்கப் பரம்பலின்போது இந்தியாவிலும் அமெரிக்காவிலும் தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு பிரான்ஸியருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே அதிகாரப் போட்டி ஒன்று ஏற்பட்டதுடன், இதில் பிரான்ஸை முந்திக் கொண்டு செல்வதற்கு ஆங்கிலேயரால் முடியுமாயிருந்தது.

## பிரான்ஸ்

பிரான்ஸியர்கள் வட அமெரிக்காவில் 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே ஆய்வுப் பயணங்களிலும் குடியேற்றங்களை நிறுவுவதிலும் ஈடுபட்டிருந்தனர். இதில் ஒரு குடியேற்றம் கனடாவில் அமைக்கப்பட்டது. செம்பலேன் எனும் நாடுகாண் பயணி ஐம்பெரும் வாவிகளினூடாக வடஅமெரிக்காவின் உட்பிரதேசத்தினுள் பிரவேசித்தான். இங்கு பிரான்ஸியர், வர்த்தக ஆதிக்க நடவடிக்கைகளுடன் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதிலும் கவனஞ் செலுத்தினர். 14 ஆம் லூயி மன்னரின் நிதி அமைச்சரான கோல்பே என்பவனின் வழிகாட்டலில், பிரான்ஸியர் வர்த்தக நிறுவனம் ஒன்றைக் கட்டியெழுப்பத் தூண்டப்பட்டனர். தாய் நாட்டின் ஆதரவுடன் பிரான்ஸிய கிழக்கிந்திய வர்த்தக நிறுவனம், இந்தியாவில் வர்த்தக நடவடிக்கைகளை உயிர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டது. மேலும் மேற்கு ஆபிரிக்காவில் அடிமை வியாபாரத்தையும் ஏனைய வர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஆரம்பித்தது.

பிரான்ஸியர் கனடாவிலும் குடியேற்றங்களை ஏற்படுத்தினர். மிஸிஸிப்பி நதிக் கழிமுகத்தில் நியூஓலியன்ஸ் எனும் இடத்தில் குடியேறியவர்களால் லூசியானா குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது.

பிரான்ஸியர்களுக்கும் தமது தாய்நாட்டிலிருந்து, இவ்வதிகாரப் பரம்பலுக்கு அனுசரணை கிடைத்தது. என்றாலும் கி.பி 1683 இல் கோல்பேட்டின் மரணத்துடன் பிரான்ஸியரின் ஆதிக்கப் பரம்பலில் வீழ்ச்சியை அவதானிக்க முடிந்தது.



இலவச விநியோகத்திற்காக

## பெல்ஜியமும் டென்மார்க்கும்

வியாபாரத்தையும் தமது ஆதிக்கத்தையும் விஸ்தரிப்பதில் பெல்ஜியமும் டென்மார்க்கும் முயற்சித்தாலும் அது வெற்றிபெறவில்லை. பெல்ஜியத்தால் கொங்கோ கைப்பற்றிக் கொள்ளப்பட்டாலும் டென்மார்க்கின் இத்துறையிலான எத்தனம் கைகூடி வரவில்லை

## கிறிஸ்தவ சமயத்தின் பரம்பல்

பல்வேறு நாடுகளுக்கும் சென்ற ஐரோப்பியர்கள் அந்நாடுகளில் தமது சமயமான கிறிஸ்தவத்தைப் பரப்புவது தமது கடமையும் பொறுப்பும் எனக் கருதினர். ஐரோப்பாவில் கிறிஸ்தவ திருச்சபை கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து எனப் பிளவுண்டு போனமையால் தாங்கள் கொண்டிருக்கும் கருத்தை மேல்நிலைப்படுத்தும் போக்கொன்றும் காணப்பட்டது. இதனால் புதிய சமய உத்வேகமும் பிறந்தது. புதிய மலர்ச்சியும் உருவானது. இதனால் சமயம் பரவியது.

உரோமன் கத்தோலிக்க சமயத்தைவிட புரட்டஸ்தாந்து சமயம் வேகமாகப் பரவியது. குடியேற்றங்களை நிறுவிக்கொண்ட ஒவ்வொரு ஐரோப்பிய இனத்தவரும் தத்தமது குடியேற்றங்களில் சமயத்தைப் பரப்புவதில் கூடிய கவனத்தைச் செலுத்தியுள்ளனர். சமயத்தைப் பரப்பும் முக்கிய வழியாகக் கல்வியைக் கையாண்டதைக் காணக்கூடியதாய் உள்ளது. சில சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியவர்களுக்கு பதவி, பட்டங்கள், பொருளாதார சலுகைகள் என்பனவும் வழங்கப்பட்டன.

### சாராம்சம்

- *ஐரோப்பியரின் அதிகாரப் பரம்பலுக்கும் வர்த்தக விருத்திக்கும் தேசிய அரசுகளின் தோற்றத்திற்கும், சமயத்தைப் பரப்பும் நடவடிக்கை பின்னணியாக அமைந்தது.*
- *நாடுகாண் பயணங்களில் முதலில் ஈடுபட்ட நாடுகள் போர்த்துக்கல்லும் ஸ்பானியாவும் ஆகும்.*
- *பதினேழாம் நூற்றாண்டாகும்போது ஒல்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஆதிக்கப் பரம்பலில் முன்னணியில் திகழ்ந்தன.*
- *பெல்ஜியமும் டென்மார்க்கும் ஆதிக்கப் பரம்பலில் ஈடுபட்டாலும் அந்நாடுகளின் முயற்சி கைகூடவில்லை.*
- *ஐரோப்பியரின் ஆதிக்கப் பரம்பலுடன் ரோமன் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து சமயங்கள் உலகம் முழுவதும் பரவின.*

**செயற்பாடு :**

போர்த்துக்கேய, ஸ்பானிய, பிரித்தானிய, பிரான்ஸிய, ஒல்லாந்தக் குடியேற்றங்கள் இவ்விரண்டை உலகப் புறவுருவப் படம் ஒன்றில் குறித்துப் பெயரிடுக.

**பயிற்சி :**


1. ஐரோப்பியர்கள் தமது ஆதிக்கத்தை உலகெங்கும் பரப்பியதன் நோக்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
2. 16 ஆம் நூற்றாண்டு குடியேற்றவாதத்திற்கும் 17 ஆம் நூற்றாண்டின் குடியேற்றவாதத்திற்குமிடையே துலக்கமாகக் காணப்படும் பிரதான வேறுபாடு யாது?



# 9 இலங்கையும் மேற்கத்தியரும்

**இவ்வலகின் மூலம் உங்களுக்கு 16ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கைக்கு வந்த மேற்கத்தியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்போர் அக்காலத்தில் இருந்த ஆட்சியாளருடன் கொண்டிருந்த தொடர்புகள் பற்றிக் கற்பதற்கும் இத்தொடர்புகள் எவ்வாறு நட்பாகவும் பகைமையாகவும் அமைந்திருந்தன எனும் சந்தர்ப்பங்களை நீங்கள் அறியவும் உதவும்.**

கி.பி. 1453 ஆம் ஆண்டில் கொன்ஸ்தாந்திநோபிள் நகரம் ஒட்டோமன் துருக்கியர் கைவசமானமையால் ஐரோப்பியர் அதுவரை கொடுக்கல் வாங்கல் செய்த கிழக்கு மேற்கு கடல், தரை வழிப்போக்குவரத்துக்கள் முற்றாகத் தடைப்பட்டுப் போயின. இதனால் ஐரோப்பியர்கள் கீழைத்தேச நாடுகளுக்கு வருவதற்கு புதிய பாதைகளைத் கண்டறிய வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்கேற்ப இலங்கைக்குப் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் அவர்கள் கண்டுபிடித்த பாதையினூடாக வருகை தந்தனர். அவர்கள் கீழை நாடுகளுக்கு வந்தது வாசனைத் திரவியங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கான வர்த்தகத்திற்கும் தமது சமயத்தைப் பரப்புவதற்குமான நோக்கங் களுடனுமாகும். இவர்கள் இந்நோக்கத்தை அடைந்து கொள்வதற்காகக் கீழை நாடு களுடன் நட்பாகவும் சில சந்தர்ப்பங்களில் ஆக்கிரமிப்பாகவும் நடந்து கொண்டனர்.




தேசப்படம் *9.1* போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது காணப்பட்ட இலங்கையின் அமைப்பு

அவ்வாறு இலங்கைக்கு வந்த முதலாவது மேற்கத்தியர் போர்த்துக்கேயராவார். கி.பி 1505 ஆம் ஆண்டில் லோரன்ஸோ த அல்மேடா தலைமையிலான குழுவொன்று இலங்கையின் காலித்துறைமுகத்தை வந்தடைந்தது. அவர்களுடைய வருகை எதிர்பாராது நிகழ்ந்தாலும் போர்த்துக்கேய மன்னன் இலங்கை வளமான கறுவா விளையும் பூமி என்பது பற்றி அறிந்திருந்தான். ஆகையால் போர்த்துக்கேயரிடம் கீழைநாடுகளுக்கு வருகையிலே இலங்கையைப் பற்றிய அறிமுகம் ஒன்றிருந்தது.

என்றாலும் காலித்துறைமுகத்தில் தரையிறங்கும்போது அது இலங்கை என்று அவர்கள் அறியாதிருந்தார்கள். காலித் துறைமுகத்திலிருந்து கொழும்புத் துறைமுகத்திற்கு வருகைதந்தபோது முஸ்லிம்கள் அத்துறைமுகத்தை மையமாகக் கொண்டு வர்த்தகம் புரிவதை அவர்களால் அவதானிக்க முடிந்தது.

வெள்ளைத் தோலுடைய வித்தியாசமான ஆடை அணிந்த இவர்களைக் கண்டு அச்சமடைந்த மக்கள் அவர்களைக் கொழும்புத் துறைமுகத்திலிருந்து அரண்மனைக்கு மிகவும் நீண்ட பாதையின் வழியாக அழைத்துச் சென்றனர். அது அரசனின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்ட உபாயமாகும்.

இதனால் ''பறங்கியன் கோட்டைக்குப் போனது போல'' என்ற பழமொழி உருவானது.

## போர்த்துக்கேயரின் வருகை

இலங்கையில் வர்த்தகத்தை மேற்கொண்டிருந்த முஸ்லிம்களுக்கு போர்த்துக்கேயர் அச்சுறுத்தலாக அமைந்தனர். முஸ்லிம்கள் சிங்களவரினது உதவியுடன் போர்த்துக்கேயரைத் துரத்தியடிப்பதற்கு முனைந்தாலும் அது பலனளிக்கவில்லை.

பம்பாய்க்குத் தெற்காக அமைந்திருந்த கோவாவைத் தமது கீழைத்தேய மத்திய நிலையமாகக் கொண்ட போர்த்துக்கேயர், இந்து சமுத்திரத்தினுள் பிரவேசிக்கும் நுழைவாயில் போன்று பராசீகக் குடாவுக்கு அருகாமையில் அமைந்திருந்த ஓம ஸிலும் மலாயக் குடாநாட்டின் மலாக்காவிலும் கோட்டைகளை நிறுவிக்கொண்டனர். இலங்கையிலும் தமது கவனத்தைச் செலுத்தி கொழும்புத் துறைமுகத்தில் தமது ஆதிக்கத்தை ஸ்தாபித்துக்கொள்ள கொழும்பிலும் கி.பி 1518 இல் கோட்டை ஒன்றைக் கட்டிக்கொள்ள முயன்றாலும் முஸ்லிம்கள் சிங்களவரின் உதவியுடன் அம்முயற்சியைத் தடுத்து விட்டனர். என்றாலும் பண்டகசாலை ஒன்றைக் கட்டிக் கொள்வதற்குப் போர்த்துக்கேயரால் முடியுமாயிருந்தது.


## கோட்டையுடனான தொடர்புகள்

கி.பி 1521 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 'விஜயபாகு கொள்ளை' எனும் சம்பவம் கோட்டை இராச்சியத்தில் தலையீடு செய்வதற்குப் போர்த்துக்கேயருக்கு நல்லதொரு சந்தர்ப்பமாக அமைந்தது. இதன் பிறகு கோட்டை மூன்று இராச்சியங்களாகப் பிளவுண்டது. அவை கோட்டை, றைகம, சீதாவாக்கை என்பன ஆகும்.

கோட்டைப் பகுதிக்கு ஏழாம் புவனேகபாகு மன்னனாக முடிசூட்டப்பட்டான். றைகமையைத் தலைநகராகக் கொண்டு றைகம பண்டார முடிசூடப்பட்டான். ஆற்றல் மிக்கவனான மாயதுன்னைக்கு சீதாவாக்கைப் பகுதி கிடைக்கப் பெற்றது. ''விஜயபாகு


இலவச விநியோகத்திற்காக

கொள்ளை" நிகழ்வை நடத்தியவன் மாயாதுன்னை ஆவான். இதனால் புவனேகபாகு மன்னன் தனது சகோதரனான மாயதுன்னை மீது அச்சம் கொண்டிருந்தான். இதனால் ஆரம்பித்திலிருந்தே அவன் போர்த்துக்கேயரின் உதவியை நாடினான். போர்த்துக்கேயரும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கோட்டை இராச்சிய முஸ்லிம்களைத் துரத் தியடிக்கும்படி புவனேகபாகுவைத் தூண்டி விட்டனர். மாயாதுன்னை இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தான். இதனால் சகோதரர் இருவருக்கும் இடையில் எழுந்த பிரச்சினையில் புவனேகபாகு போர்த்துக்கேயரின் ஆதரவைப் பெற, போர்த்துக்கேயரின் எதிரியான கள்ளிக்கோட்டை மன்னன் சாமோரினின் உதவியை மாயாதுன்னை பெற்றுக் கொண்டான்.



தேசப்படம் 9.2 கோட்டை இராச்சிய பிரிவு

போர்த்துக்கேயர் போர்களின்போது வழங்கிய படை உதவிக்கான போர்ச் செலவாக கோட்டை மன்னனிடமிருந்து கறுவா உட்பட வர்த்தகப் பொருட்களைப் பெருந்தொகையாகப் பெற்றுக் கொண்டனர்.

தனக்குப் பின் முடிசூட மகன் ஒருவன் இல்லாமையால், தனது மகளான சமுத்திராதேவியின் மகனான தர்மபால இளவரசனை மன்னனாக்கப் புவனேகபாகு தீர்மானித்தான். அவனுக்குக் கல்வி புகட்டும் பொறுப்பை போர்த்துக்கேய மதகுருமாரிடம் ஒப்படைத்தான். புவனேகபாகு மன்னன் இளவரசன் தர்மபாலனின் உருவச்சிலை ஒன்றை செய்வித்து போர்த்துக்கல் மன்னனின் கையால் முடிசூடுவித்தான். அவ்வாறு செய்ததன் மூலம் தரம்பால இளவரசன் அரசனானான பின்னர் அவனது அரசிற்கு போர்த்துக்கல் மன்னன் ஆதரவு வழங்குவான் என்பதே புவனேகபாகுவின் எதிர்பார்ப்பாக இருந்தது. இவ்வாறு போர்த்துக்கேயருக்கும் புவனேகபாகுவிற்கும் இடையே வளர்ச்சியுற்று வந்த தொடர்புகளால், கோட்டை - சீதாவாக்கை பகைமை மேலும் அதிகரித்தது.

தர்மபாலனது சிலைக்கு முடிசூட்டுவதற்காகப் போர்த்துக்கல் சென்ற தூதுக்குழுவினர் திரும்பி வருகையில் அவர்களுடன் மன்னனின் வேண்டுகோளுக்கமைய பிரான்சிஸ்கன் சபையைச் சார்ந்த குருமார் நால்வரும் இலங்கைக்கு வந்தனர். கோட்டை இராச்சியத்தில் இக்குருமார் தமது சமய நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். அவ்வாறு பார்க்கையில் இலங்கையில் காணப்பட்ட அரசியல் பிரச்சினைகளிலிருந்து உச்ச பயனை பெற்றுக் கொள்வதன் மூலம் போர்த்துக்கேயர் கீழைத்தேசங்களுக்கு

வந்த நோக்கங்களான வர்த்தகத்தை மேற்கொள்வதிலும் சமயத்தைப் பரப்புவதிலும் தமது எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்து கொண்டனர்.

தமது நோக்கத்தை மேலும் அடைந்து கொள்வதற்காக மாயாதுன்னையை கொன்றுவிடுவதற்குப் போர்த்துக்கேயரால் முன்வைக்கப்பட்ட ஆலோசனையை புவனேகபாகு மன்னன் நிராகரித்தான். இதனால் போர்த்துக்கேயருக்கும் புவனேகபாகுவிற்குமிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கின. அத்தோடு மன்னன் கத்தோலிக்க சமயத்தை தழுவாதிருந்தமையும் இவர்களிடையே பேதத்தை வளர்த்தது. இந்நிலையில் புவனேகபாகு மன்னன் தனது மாளிகையின் மேல் மாடியில் உலாவிக் கொண்டிருக்கும்போது போர்த்துக்கேய போர்வீரன் ஒருவனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியானான். இது போர்த்துக்கேய மேலிடத்தாரின் ஏற்பாட்டிலேயே இடம்பெற்றிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதனை அடுத்து சிறுவனான தர்மபாலன் அரசனாக்கப்பட்டான். இதன் மூலம் கோட்டை இராச்சியத்தைத் தமது விருப்பம் போல் ஆள போர்த்துக்கேயருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இது கத்தோலிக்க சமயப் பிரசாரத்துக்கான சிறந்த வாய்ப்பாகவும் அமைந்தது.

இந்நிலைக்கு எதிர்ப்புத் தெரிவித்த தர்மபால மன்னனின் தந்தையான விதிய பண்டார போர்த்துக்கேயருக்கு எதிரான இயக்கம் ஒன்றை ஆரம்பித்தான். கரையோரப் பிரதேசங்களில் கட்டப்பட்டிருந்த சிறிய கிறிஸ்தவ ஆலயங்களை உடைத்தான். அவன் கிளர்ச்சி ஒன்றைத் திட்டமிட்டிருந்தாலும் அது தோல்வியுற்றது. இதனால் போர்த்துக்கேயர் தர்மபாலனின் பாதுகாவலர் என்ற நிலை மேலும் பலப்பட்டது. இறுதியாக தர்மபாலன் டொன் ஜுவான் எனும் பெயருடன் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியமை போர்த்துக்கேயர் பெற்ற மற்றுமொரு பெருவெற்றியாகும்.

தர்மபாலன் கிறிஸ்தவனானமையால் அதுவரை இலங்கையில் நிலவி வந்த மன்னருக்கான பாரம்பரியங்களும் சம்பிரதாயங்களும் வீழ்ச்சியுற்றன. இதனால் பௌத்த பிக்குகளும் பொதுமக்களும் மலைநாட்டு, சீதாவாக்கை அரசுகளுக்குத் தமது ஆதரவை நல்கத் தலைப்பட்டனர். அரச உரிமையின் குறியீடான புனித தந்ததாது சீதாவாக்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டதன் மூலம், மக்களின் ஆதரவு மாயாதுன்னையைச் சார்ந்தது. தர்மபால மன்னன் போர்த்துக்கேயரின் கைப்பாவை யானான். இவை கோட்டை இராச்சியத்தின் வீழ்ச்சிக்குக் காரணங்களாயின.

றைகமை இராச்சியத்தையும் தன்னுடன் இணைத்துக் கொண்டு எழுச்சியுற்று வந்த சீதாவாக்கை இராச்சியத்திற்குப் போர்த்துக்கேயரைத் துரத்தியடிக்கும் பொறுப்பு ஏற்பட்டது. சிறந்த வீரனான மாயாதுன்னையின் மகனான டிகிரி பண்டார இளவரசன் கி.பி 1562 இல் முல்லேரியாப் போரில் போர்த்துக்கேயரைத் தோற்கடித்தான்.



இலவச விநியோகத்திற்காக

**முல்லேரியாப் போர்**

தர்மபால மன்னனைத் தூண்டி, சீதாவாக்கை இராச்சியத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும் தேவை போர்த்துக்கேயருக்கு இருந்தது. அதற்காக அபோன்சு பெரெய்ரா த லஸர்தா எனும் போர்த்துக்கேயத் தளபதியின் கீழ் பெரும்படையொன்று சீதாவாக்கையை ஆக்கிரமிக்கச் சென்றது. இச்செய்தியினால் ஆடிப்போன மாயாதுன்னை மன்னன், தனது மகனான டிகிரிபண்டார இளவரசனின் தலைமையில் படையொன்றை அனுப்பி வைத்தான். இப்படை போர்த்துக்கேயரை நேருக்கு நேராக எதிர்கொண்டு மோதி படுதோல்வியடையச் செய்தது. கீழை நாடுகளில் போர்த்துக்கேயர் அடைந்த மிக மோசமான தோல்வியாக இது வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்தும் சீதாவாக்கையின் எதிர்ப்புகள் எழவே, போர்த்துக்கேயர் தர்மபால மன்னனுடன் கோட்டையைக் கைவிட்டு கொழும்புக் கோட்டைக்குத் தப்பி ஓடினர். மாயாதுன்னை மன்னனின் மரணத்தின் பின்னர் டிகிரி பண்டார, முதலாம் இராஜசிங்க என்னும் பெயருடன் முடி சூடிக் கொண்டான். அவனால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட போர்த்துக்கேய எதிர்ப்பு நடவடிக்கையால் போர்த்துக்கேயரின் பலம் கொழும்புக் கோட்டைக்குள் முடக்கப்பட்டது.

எனினும் கோவாவிலிருந்து கிடைக்கப் பெற்ற உதவிகளைத் தடுப்பதற்கான கடற்படைப்பலம் இராஜசிங்க மன்னனிடம் காணப்படாமையால் போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து முற்றாகத் துரத்தியடிப்பதற்கு அவனால் இயலாமற்போனது.

தர்மபால மன்னனுக்குப் பின்னர் ஆட்சிசெய்ய மகன் ஒருவன் இன்மையால் போர்த்துக்கேயரின் வற்புறுத்தலால் கி.பி 1580 ஆம் ஆண்டில் நன்கொடைப் பத்திரம் ஒன்றின் மூலம் தர்மபாலன் போர்த்துக்கேயரிடம் கோட்டை இராச்சியத்தை ஒப்படைத்தான். கி.பி 1597 இல் மன்னன் மரணமானதை அடுத்து, போர்த்துக்கேயர் அந்நன்கொடைப் பத்திரத்தைப் பிரதானிகளிடம் காண்பித்து அன்றிலிருந்து போர்த்துக்கேய மன்னரே இந்நாட்டினதும் மன்னராவார் எனப் பிரகடனப்படுத்தினர். அத்தோடு, இந்நாட்டு வழக்கப்படி ஆட்சியை மேற்கொள்வதற்காக அவர்கள் வழங்கிய வாக்குறுதியால் சிங்களப் பிரதானிகளும் போர்த்துக்கேய மன்னனுக்கு ஆதரவு வழங்குவதாக உறுதி கூறினர். மல்வானையில் அஸவேதுவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இது இடம் பெற்றமையால் 'மல்வானை ஒப்பந்தம்' எனக் குறிப்பிடப்படுகின்றது. இவ் ஒப்பந்தத்தின்படி நிலவும் சட்ட திட்டங்களுக்கு அமைவாக ஆள்வதற்குப் போர்த்துக்கேயர் இணக்கம் தெரிவித்திருந்தபடியால் சிங்களப் பிரதானிகளும் அதற்கு இணங்கினர். இதன்படி போர்த்துக்கல் மன்னனின் பிரதிநிதியாக இருந்து கோட்டை இராச்சியத்தை நிர்வகிக்க 'கெப்டன் ஜெனரல்' (பிரதம தளபதி) ஒருவன் நியமனம் பெற்றான்.

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது யாழ்ப்பாணத்தை ஆரியச் சக்கரவர்த்தியின் பரம்பரையைச் சேர்ந்த பரராஜசேகரன் எனும் மன்னன் ஆட்சிபுரிந்து வந்தான். கி.பி 1519 இல் சங்கிலி எனும் இளவரசன் பரராஜசேகர மன்னனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். இதனால் பட்டத்திற்குரிய இளவரசன்,

தனது ஆட்சியை மீட்டுக் கொள்ள போர்த்துக்கேயரின் உதவியை நாடினான். யாழ்ப்பாண இராச்சியத்தில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பவும் திறைசெலுத்தவும் இளவரசன் இணங்கியபடியால் கி.பி 1543 இல் போர்த்துக்கேயப் படை ஒன்று யாழ்ப்பாணத்திற்கு வந்தது. ஆனால் சங்கிலி மன்னன் இவ்விரு நிபந்தனைகளுக்கும் இணக்கம் தெரிவிக்கவே, போர்த்துக்கேயர் இளவரசனின் கோரிக்கையை மறந்துபோயினர்.



தேசப்படம் 9.3 போர்த்துக்கேயர் கால இலங்கை

சங்கிலி மன்னனுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்ட பின்னர் போர்த்துக்கேய குருமார்கள் தமது சமயத்தைப் பரப்பும் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். இதனை இந்து சமயக் குருமார் விரும்பாமையால் சங்கிலி மன்னன் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புதலுக்கு எதிராக, செயற்பட நேரிட்டது. இதனால் மன்னனுக்கு எதிராகப் போர்த்துக்கேயர் படை ஒன்றை அனுப்பி வைத்தனர். இதனை எதிர்கொள்ள முடியாத சங்கிலி மன்னன் தப்பி ஓடவே, யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய நகரங்களைப் போர்த்துக்கேயர் கொள்ளையிட்டனர்.

போர்த்துக்கேயருடன் நட்பாக இருப்பதன் அவசியத்தைப் புரிந்துகொண்ட மன்னன் சங்கிலி மீளவும் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த இணக்கம் தெரிவித்தான். இதற்கமைய போர்த்துக்கேயர் மன்னாரில் கோட்டை ஒன்றைக் கட்டுவித்தனர். சங்கிலி மன்னனின் நடத்தையால் கோபமுற்ற மக்கள் அவனை வெளியேற்றிவிட்டு அவனது மகனான புவிராஜ பண்டாரனை அரசனாக்கினர். அவன் போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்பட்டதோடு போர்த்துக்கேயரின் எதிரியான கள்ளிக்கோட்டை மன்னன் சமோரினிடம் படையுதவியும் கோரினான். இதனைத் தெரிந்து கொண்ட கோவாவிலிருந்த போர்த்துக்கேய பதிலரசன் கி.பி 1591 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்குப் படை ஒன்றை அனுப்பினான். அப்படை மன்னனைக் கொன்று, நல்லூர் நகரைக் கொள்ளையிட்டு அங்கிருந்த கோயிலையும் அழித்தொழித்தது.

அதன் பின் போர்த்துக்கேயருக்கு ஆதரவான ஒருவன் மன்னனாக்கப்பட்டான். கி.பி 1615 ஆம் ஆண்டில் அம்மன்னனின் மரணத்தை அடுத்து, சங்கிலி என்ற இன்னுமொருவன் யாழ்ப்பாணத்தின் ஆட்சியைக் கைப்பற்றிய போதிலும் கி.பி 1621 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயரின் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டது.

## சீதாவாக்கையுடனான தொடர்புகள்

போர்த்துக்கேயருக்கு கோட்டை, யாழ்ப்பாண இராச்சியங்களின் உள்ளகப் பிரச்சினைகளால் தமது ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்ள முடிந்தது போல


இலவச விநியோகத்திற்காக

சீதாவாக்கை இராச்சியத்தையும் தம்முடன் இணைத்துக் கொள்வதற்கு அந்நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினைகள் காரணமாக அமைந்தன.

சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாயமைந்ததும் முதலாம் இராஜசிங்க மன்னனின் தூரநோக்கற்ற செயற்பாடாகும். இம்மன்னனுக்கு மலையக இராச்சியத்தைக் கைப்பற்றுவற்கு உதவிய வீர சுந்தர பண்டார எனும் பிரதானியை சந்தேகித்து அவனைப் பொறிக்கிடங்கில் வீழ்த்திக் கொன்றமையால் மலைநாட்டு மக்கள் மன்னனை எதிர்க்கத் தொடங்கினர். இவ்வேளையில் வீரசுந்தர பண்டாரனின் மகனான கோணப்பு பண்டார போர்த்துக்கேயரிடம் தஞ்சமடைந்து டொன் ஜுவான் என்ற பெயரில் ஞானஸ்நானம் பெற்றான். 1592 இல் முதலாம் விமலதர்ம சூரியன் எனும் பெயருடன் கண்டியின் மன்னனானான். விமலதர்ம சூரிய மன்னனின் சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் மலைநாட்டு இராச்சியம் பலம் வாய்ந்த சுதந்திர அரசொன்றாக எழுச்சியுற்றது.

I ஆம் இராஜசிங்க மன்னனின் மரணத்தை அடுத்து ஆட்சிக்குப் பொருத்தமான ஒருவன் இன்மையால் சீதாவாக்கை இராச்சியத்துக்குச் சொந்தமான பிரதேசங்கள் மலைநாட்டுடனும் கோட்டையுடனும் இணைத்துக் கொள்ளப்பட்டன.

I ஆம் இராஜசிங்க மன்னன், மலைநாட்டை ஆக்கிரமித்தபோது அதனை மன்னன் கரலியத்த பண்டார ஆண்டு கொண்டிருந்தான். அவன் இராஜசிங்க மன்னனால் தோற்கடிக்கப்படவே தனது மகளான குசுமாசனதேவியுடனும் மருமகனான யமசிங்க பண்டாரவுடனும் போர்த்துக்கேயரிடம் தஞ்சமடைந்தான். சிறிது காலத்தின் பின்னர் கரலியத்த பண்டார மரணமடையவே, போர்த்துக்கேயரின் ஆதரவில் வாழ்ந்த குசுமாசனதேவி டோனா கதறினா என்றும் அவளது கணவரான யமசிங்க பண்டார டொன் பிலிப் என்றும் ஞானஸ்நானம் பெற்றனர். இது மலைநாட்டின் மீது குறி வைத்திருந்த போர்த்துக்கேயருக்கு நல்லதொரு சந்தர்ப்பமாகியது.

போர்த்துக்கேயர் டொன்பிலிப்பை மலைநாட்டின் அரசனாக்குவதற்கு கொணப்பு பண்டாரனின் கீழ் படையொன்றை அனுப்பி வைத்தனர். I ஆம் இராஜசிங்க மன்னன் இந்த யுத்தத்தில் தோல்வியுற்றமையால் டொன் பிலிப் மலைநாட்டின் மன்னனானான். என்றாலும் சிறந்த வீரனான டொன் ஜுவான் கொணப்பு பண்டார தந்திரமாக Iஆம் விமலதர்மசூரியன் எனும் பெயருடன் அரசனாகி டோனா கதறினாவை மணந்து சட்டபூர்வமாக அரசனானான். இதனால் போர்த்துக்கேயரைப் பகைத்துக் கொண்டான். மன்னனைத் தோற்கடிக்க போர்த்துக்கேயர் காலத்திற்குக் காலம் படையெடுப்புகளை மேற்கொண்டாலும் இறுதியில் அவர்கள் இதில் முற்றாகத் தோல்வியுற்றனர்.

I ஆம் விமலதர்ம சூரிய மன்னன் ஆற்றல் மிகு மன்னனாக இருந்தபோதிலும் போர்த்துக்கேயர்கள் மலைநாட்டின் எல்லையிலுள்ள கிராமப்பகுதிகளை வருடத்தில் சில முறையாவது வந்து தாக்கி அழிவை விளைவித்துச் செல்வது இம்மன்னன் எதிர்நோக்கிய பெருஞ் சவாலாயிருந்தது.

போர்த்துக்கேயர்கள் தொடர்பில் அடுத்து குறிப்பிடத்தக்க மன்னன் இரண்டாம் ஆம் இராஜசிங்கனாவான். இவன் போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து முற்றாகத் துரத்தியடிக்கத் திடசங்கற்பம் பூண்டான். இதற்காக அவன் ஒல்லாந்தரின் உதவியை நாடியதோடு அவர்கள் மூலம் போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேறும் ஆற்றல் பெற்றான். மலைநாட்டுடனான போர்த்துக்கேயரின் தொடர்பு முற்று முழுதான ஆக்கிரமிப்புக் கொள்கையாகவே இருந்து வந்தது.

**செயற்பாடு :**

★ *"கோட்டை, யாழ்ப்பாண இராச்சியங்கள் போர்த்துக்கேயரது ஆதிக்கத்தின் கீழ் வருவதற்கு உள்நாட்டுப் பிரச்சினைகளே காரணமாயிருந்தன." ஒரு நாட்டின் ஒற்றுமையீனம் அந்நாட்டின் அழிவுக்கே வழிவகுக்கும் என்பதனை இதன் வாயிலாக நிறுவுக.*

## ஒல்லாந்தரும் மலைநாட்டுடனான தொடர்புகளும்

கி.பி 1602ஆம் ஆண்டில் ஜொரிஸ் ஸ்பில் பேர்கன் எனும் ஒல்லாந்து நாட்டுத் தூதுவன் முதலாம் விமலதர்மசூரிய மன்னனின் காலத்தில் முதல்முறையாக கண்டி இராச்சியத்திற்கு வருகை தந்தான். இதன் பின்னர் சீ போல்ட்த வாட் என்பவனின் தலைமையில் வந்த படையினர் மட்டக்களப்பில் இருந்த போர்த்துக்கேயக் கப்பல்களை மன்னனின் அனுமதியின்றித் தாக்கியமையால் அவனின் அதிருப்திக்கு ஆளாயினர்.

2ஆம் இராஜசிங்க மன்னன் போர்த்துக்கேயரைத் துரத்தியடிப்பதற்குப் கடற்படைபலம் மிக்க அந்நியரின் உதவியை எதிர்ப்பார்த்திருந்தான். கி.பி 1638ஆம் ஆண்டில் அதற்காக ஒல்லாந்தருடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டான்.

கி.பி 1638 ஆண்டு ஒப்பந்தத்தின் வாசகங்களில் சில...

★ போர்த்துக்கேயரை விரட்டியடிப்பதற்கு ஒல்லாந்தர் உதவ வேண்டும்.

★ யுத்தத்திற்கான சகல செலவுகளையும் கண்டி மன்னன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

★ ஒல்லாந்தருக்கு வர்த்தகத் தனியுரிமையையும் துறைமுகங்களையும் தந்துதவ வேண்டும்.



இலவச விநியோகத்திற்காக

இவ்வொப்பந்தப்படி போர்த்துக்கேயர் வசமிருந்த மட்டக்களப்பு, திருகோணமலை, நீர்கொழும்பு, காலி கோட்டைகள் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டாலும் அவற்றுள் காலி, நீர்கொழும்பு கோட்டைகளை மன்னனிடம் கையளிக்காது ஒல்லாந்தர் தம் வசமே வைத்துக்கொண்டனர். இதனால் மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

கி.பி 1640 இலிருந்து ஐரோப்பாவில் ஒல்லாந்தர் போர்த்துக்கேயர் நட்புறவு நிலவியபடியால் இலங்கையிலும் இரு சாராரிடையேயும் சமாதானம் நிலவியது. மீண்டும் கி.பி 1652 முதல் சண்டைகள் மூண்டன. அங்குருவாதொட்ட, களுத்துறைக் கோட்டைகள் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டன. கி.பி 1656இல் கொழும்பும் கி.பி 1658இல் மன்னாரும், யாழ்ப்பாணமும் கைப்பற்றப்பட்டன. கி.பி 1658 ஆம் ஆண்டு கரையோரத்தில் நிலவிய போர்த்துக்கேயரின் ஆதிக்கம் முழுமையாக ஒழிக்கப்பட்டு அவை ஒல்லாந்தர் வசமாயின.

கைப்பற்றப்பட்டக் கோட்டைகளைத் தம்மிடம் ஒப்படைக்காமையால் அரசன் ஒல்லாந்தர் மீது பெருந்தாக்குதலை மேற்கொண்டான். போர்த்துக்கேயருக்குப் பதிலாக இன்னுமொரு பலம் வாய்ந்த அந்நியர்கள் கரையோரத்தை கைப்பற்றிக் கொண்டமையால் ''இஞ்சியைக் கொடுத்து மிளகாயை வாங்கியது போல'' என்ற சொல் வழக்கு உருவானது.

அரசன் ஒல்லாந்தருக்கு அனுப்பிய கடிதங்களில் ''திறீ சிங்களாதீஸ்வர'' என்று குறிப்பிடுவதன் மூலம் அவர்களைத் தான் பொருட்படுத்தவில்லை என்பதைக் காட்டிக்கொண்டான். ஒல்லாந்தத் தலைவனும் மன்னனுக்குச் சார்பானவன் என்பதைக் காண்பிக்கும் வண்ணம் ''உங்களுடைய கொழும்புக் கோட்டையின் தலைவன்'' என்ற வகையில் தன்னைக் குறிப்பிட்டுக் கொண்டான். ஒல்லாந்த ஆளுநர் ரைக்கிளப் பன் ஹு"ன்ஸ், 2ஆம் இராஜசிங்க மன்னனுடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்தாலும் லோரன்ஸ் பீல் போன்ற ஆளுநர்கள் மன்னனை மகிழ்விப்பதற்காகப் பரிசுப் பொருட்களை வழங்கி மன்னனுடன் சமாதானமாக செயற்பட்டுள்ளனர். 2ஆம் இராஜசிங்க மன்னன் போர்த்துக்கேயருடனும் ஒல்லாந்தருடனும் துணிகரமாக சண்டையிட்ட தலைவன் என்பது புலப்படுகிறது.



உரு 9.1 :-
2ம் இராஜசிங்க மன்னன்

2ஆம் இராஜசிங்கனின் மகனான 2ஆம் விமலதர்ம சூரிய மன்னன் அமைதியான ஆட்சியாளனாவான். எனினும் ஒல்லாந்தர் மலைநாட்டுக்குச் சொந்தமான துறைமுகங்களை ஒப்படைக்காமையினால் உறவு சீரானதாக இருக்கவில்லை.

2ஆம் விமலதர்மசூரிய மன்னன்

- ★ அமைதியான ஆட்சியாளன்.
- ★ ஒல்லாந்தருடன் நட்புறவுடன் செயற்பட்டவன்.
- ★ ஒல்லாந்தரின் உதவியுடன் சீயம் நாட்டிலிருந்து உபசம்பதாவுக்கான பிக்குகளை வரவழைத்தான்.
- ★ தலதாமாளிகையை மும்மாடிகள் கொண்டதாக விஸ்தரித்தவன்.

அடுத்து அவனது மகனான ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்க கி.பி 1707இல் மலைநாட்டுக்கு மன்னனானான் இவன் திறமையற்ற அரசன். அவனுக்கெதிராக அரசவையில் சதிகளும் இடம்பெற்றன. மலைநாட்டின் வியாபாரத்திற்காகக் கற்பிட்டி, புத்தளம் துறைமுகங்களைத் திறந்துவிடும்படி ஒல்லாந்தரிடம் இவன் கோரிய போதிலும் அது நிறைவேற்றப்படாமையால் மன்னன் ஒல்லாந்தருடனான வர்த்தகத்தைத் தடைசெய்து கடவைகளை மூடிவிட்டான். இதனால் ஒல்லாந்தருக்குத் தேவைப்பட்ட பாக்கு, மிளகு, ஏலம் என்பவற்றோடு யானைகளையும் பெற்றுக்கொள்வதில் சிரமமேற்பட்டது. மேலும் இக்காலத்தில் கரைநாட்டவர்கள் ஒல்லாந்தருக்கெதிராக கலவரம் புரிந்த போது அதற்கு மன்னன் ஆதரவு வழங்கினான் என்று குற்றஞ்சாட்டப்பட்டான்.

இம்மன்னனின் தாயும் மனைவியும் தென்னிந்தியாவின் நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். இம்மன்னனுக்குப் பிள்ளைகள் இன்மையால் கி.பி 1739இல் மன்னன் மரணமானதுடன், மகாராணியின் சகோதரனான ஸ்ரீ விஜயஇராஜசிங்கனுக்கு மலைநாட்டு அரியாசனம் சொந்தமானது.

நாயக்கர் வம்ச மன்னர்கள் பௌத்த சமயத்தைத் தழுவி ஆட்சியை மேற்கொள்ள முயன்றாலும் பிரதானிகளும் பொதுமக்களும் அவ்வளவு தூரத்திற்கு அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை.

கி.பி 1739இலிருந்து கி.பி 1747வரை ஆட்சி செய்த ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னன் ஒல்லாந்தருக்கு எதிரான கடும் போக்கைக் கையாண்டான். இக்காலத்தில் தென்னிந்தியாவுக்கும் மலைநாட்டுக்கும் இடையிலான வர்த்தகத்தில் நாயக்க வம்சத்தவர்களும் ஈடுபடத்தொடங்கியிருந்தமையால் ஒல்லாந்தர் துறைமுகங்களைப் பெற்றுக்கொடுக்காமை பிரச்சினைக்கான காரணமாக இருந்தது.

ஸ்ரீ விஜயஇராஜசிங்க மன்னனுக்குப் பின்னர் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் கி.பி (1747-1782) மன்னனானான். இம்மன்னன் நாயக்க வம்சத்தவரின் ஆலோசனைகளுக்கு செவி கொடுத்தமையானது மலைநாட்டுப் பிரதானிகளுடன் பிரச்சினை ஏற்படுவதற்கு வழி வகுத்தது இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒல்லாந்த ஆளுநர் பன் எக் கி.பி 1765ஆம் ஆண்டு மலையகத்தை ஆக்கிரமித்தான். மலைநாட்டு மன்னன் தமக்கு திறை செலுத்த வேண்டும் எனக் கோரினான். இதனை நிராகரித்த மன்னன் தலைநகரைக் கைவிட்டு பின் வாங்கிச் சென்றான். எனினும் மன்னனுக்குப் பிரதானிகளின் ஒத்துழைப்புக் கிட்டாமையால் ஒல்லாந்தருடன் சமாதான ஒப்பந்தம்


இலவச விநியோகத்திற்காக

ஒன்றை மேற்கொள்ள நேரிட்டது. வில்லியம் பல்க் ஆளுனர் தயாரித்த கி.பி 1766ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஒல்லாந்தருக்குச் சார்பாயிருந்தது.

கி.பி 1766 ஒப்பந்தத்தின் சில அம்சங்கள்...
- ★ கொழும்பு, காலி, மாத்தறை, யாழ்ப்பாண பிரதேசங்களும் திருகோணமலை, மன்னார், கற்பிட்டி துறைமுகங்களும் ஒல்லாந்தருக்கு வழங்கப்பட வேண்டும்.
- ★ கடற்கரையில் 4மைல் (ஒரு கவ்வ) அகலப் பிரதேசம் ஒல்லாந்தரிடம் கையளிக்கப்பட வேண்டும்
- ★ மலைநாட்டு வர்த்தகத்திற்கும் கறுவா புடைத்தலுக்கும், மரங்களை வெட்டிக்கொள்வதற்கும் மன்னன் அனுமதியளிக்க வேண்டும்.
- ★ உப்பளங்களின் உரிமை மலைநாட்டுக்கு உரியதாகும்.
- ★ ஒல்லாந்தரிடம் கரையோரத்தை இழப்பதனால் ஏதாவது நட்டம் ஏற்படின் வருடாந்தம் ஒருதொகைப் பணம் மன்னனுக்கு வழங்கப்பட வேண்டும்.
- ★ மலை நாட்டிலிருந்து கரைநாட்டிற்கும் கரைநாட்டிலிருந்து மலைநாட்டிற்கும் சென்ற சிங்களவர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டும்.

இவ்வொப்பந்தத்தால் கண்டி இராச்சிய துறைமுகங்களை இழந்ததுடன், பொருளாதாரமும் முடங்கிப் போனது. இது இவ்விராச்சியத்தை பொருத்த வரையில் மிக மோசமான ஓர் ஒப்பந்தமாகும்.

கீர்த்தி ஸ்ரீஇராஜசிங்க மன்னன் ஒல்லாந்தரின் உதவியுடன் பௌத்த சமயத்தின் விருத்திக்காக சீய நாட்டிலிருந்து உபசம்பதா சடங்கிற்கு குருமாரை வரவழைத்துள்ளான்.

கீர்த்தி ஸ்ரீஇராஜசிங்க மன்னனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த இராஜாதி ராஜசிங்க மன்னனும் ஒருமுறை சமாதானமான முறையில் பேச்சுவார்த்தை நடத்தினாலும் இன்னுமொருமுறை கடவைகளை மூடி ஒல்லாந்தரது வர்த்தகத்திற்குத் தடைவிதித்த போது, ஒல்லாந்தரும் உப்பளத்திற்கும் கரைநாட்டிற்குமான பாதைகளை மூடிவிட்டனர்.

எவ்வாறெனினும் 1796ஆம் ஆண்டாகும் போது ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டபடியால் ஒல்லாந்தரினதும் மலையகத்தினதும் தொடர்புகள் இத்துடன் முற்றுப்பெற்றன. இதன் பின்னர் ஆங்கிலேயருக்கும் மலைநாட்டிற்கும் இடையிலான தொடர்புகள் ஆரம்பமாகின.

**மலைநாட்டு மன்னர்களுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தங்கள்.**
- ★ கி.பி - 1638 2ஆம் இராஜசிங்க மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம்.
- ★ கி.பி - 1766 கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம்.

**செயற்பாடு :**

1. மலைநாட்டு மன்னர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்று தயாரிக்குக.
2. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனால் ஆற்றப்பட்ட சமயப் பணிகள் பற்றிக் கட்டுரை ஒன்று எழுதுக.

## மலைநாட்டு அரசனுடன் ஆங்கிலேயரின் தொடர்புகள்

பிரித்தானியரின் கவனம் இலங்கை மீது திரும்பியதற்கான காரணங்கள்:

★ கிழக்கு மேற்குக் கப்பற் பாதையின் முக்கியமான பாதையில் அமைந்திருந்தமை.

★ வடகிழக்குப் பருவக் காற்றுக் காலங்களில் பாதுகாப்பாகக் கப்பல்களை நிறுத்தி வைக்கக்கூடிய இயற்கைத் துறைமுகமாக திருகோணமலை அமைந்திருந்தமை.

★ இந்தியாவின் கிழக்கு மேற்கு கரைகளின் கப்பற் பாதையை இலங்கையிலிருந்து நிர்வகிக்க முடிந்தமை.

இலங்கையின் கடற்கரைப் பிரதேசங்களை ஆண்ட ஒல்லாந்தரைத் துரத்துவதற்காக அப்போதைய கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க ஆங்கிலேயரின் உதவியை நாடினான். பின்னர் திருகோணமலை, யாழ்பாணம், மன்னார், கற்பிட்டி என்பவற்றைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் கி.பி 1796இல் கொழும்பையும் கைப்பற்றிக் கொண்டனர். இக்கரையோரப் பிரதேசங்களைக் பெற்றுக்கொண்டது பிரித்தானிய மன்னரின் பெயரால் இடம்பெற்றாலும் அவற்றின் நிர்வாக நடவடிக்கைகள் ஆங்கிலேயக்கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியால் நடத்தப்பட்டன. அவர்களால் அமுல் நடத்தப்பட்ட வரிக்கொள்கைக்கு (தெங்கு, கள், மீன், உப்பு வரிகள்) எதிர்ப்புத் தெரிவித்த இலங்கையர்கள் ஆங்கில வர்த்தக நிறுவனத்திற்கு எதிராக கி.பி 1797இல் கிளர்ச்சி ஒன்றை மேற்கொண்டனர். இக்கிளர்ச்சியை அடக்கிய பின்னர் அது தொடர்பாக விசாரிக்க "மியூறன்" குழுவை நியமித்தனர்.

இதன் பிறகு இலங்கையில் வர்த்தக நிறுவனத்தினால் ஆளப்பட்ட பிரதேசங்கள் கி.பி 1802ஆம் ஆண்டில் பிரித்தானிய முடிக்குரிய குடியேற்றமாக்கப்பட்டது. இதற்கு ஆளுநரான சார் பிரட்றிக் நோத் கி.பி 1803இல் மலைநாட்டைக் கைப்பற்றுவதற்காகப் படையெடுப்பு ஒன்றை மேற்கொண்டான்.

### ஆங்கிலேயர் மலைநாட்டின் மீது கவனம் செலுத்தியமைக்கான காரணங்கள்

★ வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது மலைநாட்டிற்கும் கரைநாட்டிற்கும் இடையே அமைந்திருந்த எல்லையில் அமைக்கப்பட்டிருந்த கடவைகளில் மன்னனுக்கு வரி செலுத்த வேண்டியிருந்தமை.

★ கொழும்புக்கும் திருகோணமலைக்கும் இடையே தொடர்புகளை மேற்கொள்வதற்கு மலைநாடு தடையாக இருந்தமை.
★ நாட்டின் மத்தியில் சுதந்திரமான அரசு ஒன்று இருப்பது பிரித்தானிய நிர்வாகத்திற்கு இடையூறாக இருந்தமை.
★ கரையோரத்திலும் மலைநாட்டு எல்லையிலும் காவல் நிலையங்களை வைத்திருப்பதனால் யுத்தச் செலவுகள் அதிகரித்தமை.

இப்படைக்கு முகங்கொடுக்க முடியாத மன்னன் தனது படையுடன் ஹங்குராங்கெத்தை பிரதேசத்திற்குப் பின்வாங்கிச் சென்றான். இச்சந்தர்ப்பத்தில் ஆங்கிலேயப்படை பல்வேறு இன்னல்களை எதிர்நோக்க நேர்ந்தது.

**எதிர்நோக்கிய இன்னல்கள்**

★ நோய்கள் ஏற்பட்டமை
★ மழைக்காலம் ஆரம்பமானவை
★ உணவு, குடிபானங்களைப் பெற்றுக்கொள்வது சிரமமாகவிருந்தமை.
★ மருந்துகளை பெற்றுக்கொள்வதில் சிரமமாகவிருந்தமை.
★ கொழும்புடன் தொடர்புகளை மேற்கொள்ள முடியாமை.

இன்னல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்த ஆங்கிலப் படையை மன்னன் தாக்கி தோல்வியுறச் செய்தமையால் இப்படையெடுப்பு வெற்றி பெறவில்லை.
அடுத்து வந்த ஆளுநரான தோமஸ் மெயிட்லண்ட் கண்டி மன்னனுடன் சமாதானமான கொள்கை ஒன்றை அனுசரித்தான்.

**சேர் தோமஸ் மெயிட்லண்ட்**

★ பிரட்றிக் நோர்த் ஆளுநரால் அகற்றப்பட்டிருந்த இராஜகாரிய (அரசகரும) முறையை மீளவும் அமுல் செய்தான்
★ சிவில் (குடியியல்) உத்தியோகத்தர்கள் சிங்கள தமிழ் மொழிகளைக் கற்றுக் கொள்வதற்கு ஊக்குவித்தான்.
★ கி.பி 1810இல் குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கு ஜுரி சபைமுறையை அறிமுகப்படுத்தினான்.

எவ்வாறாவது கண்டியைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்த ஆளுநர் பிரௌவுன்றிக் மலைநாட்டுக்கெதிராக யுத்த பிரகடனஞ் செய்தான். இந்நேரத்தில் ஸ்ரீ விக்கிரமராஜசிங்க மன்னனுக்கு எதிராக எஹலபொல மஹா அதிகாரத்தின் (பிரதம அமைச்சர்) கீழ் சப்ரகமுவ பிரதேசத்தில் கலவரம் ஒன்று ஏற்பட்டது. அதனை அடக்கிய மன்னன் எஹலபொலையின் மனைவியையும் பிள்ளைகளையும் கொடூரமான முறையில் தண்டித்தான். இந்நிகழ்வின் பின்னர் மன்னருக்கிருந்த மக்கள் ஆதரவும் பிரதானிகளின் ஒத்துழைப்பும் இல்லாமற் போயின.

இதனை நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்ட ஆங்கிலேயர் படையெடுப்பை மேற்கொண்டு கண்டி இராச்சிய மன்னனான ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனைக் கைது செய்து கி.பி 1815 இல் மலைநாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். கி.பி 1815இல் மார்ச் 2ஆம் திகதி கண்டி அரச சபையில் (மகுல் மடுவ) ரொபட் பிரௌன்றிக்கும் பிரதானிகளும் கையொப்பமிட்ட ஒப்பந்தத்தின் மூலம் கண்டி அரசு பிரித்தானியரிடம் ஒப்படைக்கப்பட்டது.

எனினும் ஆங்கிலேயரின் ஆட்சி மீது மலைநாட்டு மக்கள் கொண்ட எதிர்ப்புணர்வால் கி.பி 1818இல் சுதந்திரப் போராட்டம் ஒன்று ஏற்பட்டது.

வெல்லஸ்ஸ பிரதேசத்திலிருந்து ஆரம்பமான இக்கிளர்ச்சிக்கான காரணங்கள் வருமாறு:-

★ பழைய சட்டதிட்டங்களின் படி ஆட்சியை நடத்துவதற்கு ஆங்கிலேயர் ஒப்புக்கொண்டிருந்தாலும் அவை செயற்படுத்தபடாமை.
★ மலைநாட்டின் பழக்கவழக்கங்களைப் பின்பற்றாமையும் அவற்றைக் கைவிட்டமையும்.
★ சமய வழிபாட்டிடங்கள், பௌத்த குருமார்கள் தொடர்பான கடப்பாடுகளை நிறைவேற்றாமை.
★ மலைநாட்டுப் பிரதானிகளுக்கு உரியதாயிருந்த வருமான வழிகள், சலுகைகள் ஒழிக்கப்பட்டமை.
★ சிங்களவர் பெரும்பான்மையாக வாழ்ந்த வெல்லஸ்ஸ பிரதேசத்தில் ஹஜ்ஜி மரிக்கார் என்ற முஸ்லிம் முகாந்திரம் பதவியில் அமர்த்தப்பட்டமை.

வெல்லஸ்ஸ பிரதேசத்தில் ஆரம்பமான போர் மலைநாடு முழுவதும் பரவிச் சென்றது. கிளர்ச்சியை அடக்குவதற்காக, ஆங்கிலேயரால் அனுப்பப்பட்ட கெப்பட்டிபொல கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்துக் கொண்டு அவர்களுக்குத் தலைமை தாங்கினான். இவனை பின்பற்றி பிலிமதலாவையும் மடுகல்லையும் சேர்ந்து கொண்டனர். அரச உரிமையின் குறியீடான புனித தந்ததாது ஆங்கிலேயர் வசப்பட்டது. ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிரான இரண்டாவது சுதந்திரக் கிளர்ச்சி கி.பி 1848 ஆம் ஆண்டில் ஆரம்பமானது.

கி.பி 1848 ஆண்டு கிளர்ச்சிக்கான காரணங்கள்

★ கிராம சபைகளுக்கு உரித்தாயிருந்த நீதி அதிகாரங்களை நீதிமன்றங்களுக்கு ஒப்படைத்தமையால் சிறிய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவும் நீதிமன்றங்களுக்குச் செல்ல நேரிட்டமை.
★ கி.பி 1840 தரிசு நிலச் சட்டத்தால் விளைவிக்கப்படாத நிலங்கள் அனைத்தும் அரசால் சுவீகரித்துக் கொள்ளப்பட்டமை.
★ பொதுநிலங்களான புல்நிலங்கள் கோப்பிச் செய்கைக்காகப் பெறப்பட்டமையால் மந்தை வளர்ப்பிற்கான வாய்ப்புகளை மக்கள் இழந்தமை.



இலவச விநியோகத்திற்காக

★ பெருந்தோட்டச் செய்கையால் கிராமிய வாழ்க்கை முறை சிக்கலுக்குள்ளானமை.
★ மதுபான சாலைகள் பெருகியமையால் சமூக வாழ்க்கை சீர்குலைந்தமை.
★ ஆங்கிலேயரின் ஆட்சியை ஏற்றுக்கொள்வதில் மக்களிடையே காணப்பட்ட வெறுப்புணர்ச்சி
★ ஆளுநர் டொரிங்டனால் புதிய வரிகள் விதிக்கப்பட்டமை.

மக்களைத் தூண்டிவிட்ட நியாயமற்ற வரிகளுக்கு ஏற்பட்ட எதிர்ப்பால் கலவரம் ஆரம்பமானது. எதிர்ப்பு இயக்கத்திற்குத் தலைமை தாங்கியவர்கள் கடஹபொல தேரர் (குடாபொல தேரர்), கொங்காலேகொட பண்டா, வீரபுரன் அப்பு என்போராவார். மலைநாட்டில் குறிப்பிட்ட பிரதேசங்களில் ஆரம்பித்த இக்கலவரத்தைக் கட்டுப்படுத்தி அதன் தலைவர்களைக் கொன்று விடுவதற்கு ஆங்கிலேயரால் கூடுமானதாக இருந்தது.

### சாராம்சம்

★ ஐரோப்பியர் இலங்கைக்கு வந்தது வர்த்தகத்திற்கும் மதப்பிரசாரத்திற்குமாகும்.
★ மேலைத்தேயத்தவர்கள் இலங்கையில் காணப்பட்ட பிரச்சினைகளைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொண்டு தமது நோக்கை அடைந்து கொண்டனர்.

### செயற்பாடு :

★ கி.பி 1815ஆம் ஆண்டு கண்டி அரச மண்டபத்தில் (மகுல் மடுவ) கைச்சாத்திடப்பட்ட கண்டிய ஒப்பந்தத்தின் விடயங்களைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துக.

### பயிற்சி :

01. முதலில் இலங்கைக்கு வந்த ஐரோப்பிய இனத்தவர் யார்?
02. "மல்வானை ஒப்பந்தம்" என்றால் என்ன?
03. இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தர் எவ்வளவு காலம் ஆட்சி செய்தனர்?
04. இந்நாட்டின் கடைசி சிங்கள மன்னன் யார்?



# 10 கைத்தொழிற் புரட்சி

**உலகம் அது வரையில் சென்ற பாதையை மாற்றிய கைத்தொழில் புரட்சி பற்றி இந்த அலகில் கற்கலாம்.கைத்தொழிற் புரட்சியின் ஆரம்பம், வளர்ச்சி, புதிய உற்பத்தி, அதனால் ஏற்பட்ட விளைவுகள் என்பவற்றில் உங்கள் கவனம் திருப்பப்படுகிறது.**

மத்திய காலத்தில் பொருட்கள் குறைந்த அளவிலேயே உற்பத்தி செய்யப்பட்டன. இவை குடிசைத் தொழிலாகவே செய்யப்பட்டன. மனிதன் தன் கைகளால் வேலை செய்வதை விட்டு இயந்திரங்களின் உதவியுடன் பொருட்களை உற்பத்தி செய்வதில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியமையே கைத்தொழில் புரட்சியாகும். கி.பி 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் ஆரம்பமான கைத்தொழில் புரட்சி அரை நூற்றாண்டு கழியும் வரை இங்கிலாந்திற்கே மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தபோதிலும், அடுத்த நூற்றாண்டில் அது ஐரோப்பாவின் ஏனைய நாடுகளுக்கும் அதன் பின்னர் உலகின் ஏனைய நாடுகளுக்கும் பரவியது.

## கைத்தொழிற் புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பமாதல்

நவீன காலத்தில் வர்த்தக செயற்பாடுகள் காரணமாக ஐரோப்பியர் உலகில் செல்வந்தர்களாக இருந்தனர். இவர்களில் ஆங்கிலேயர் முன்னணியில் இருந்தனர். இதனால் கைத்தொழிலின் பொருட்டு பெருமளவு முதலீடு செய்யக்கூடிய செல்வந்தர்களை இங்கிலாந்து கொண்டிருந்தது.

இங்கிலாந்தில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் இக்காலத்தில் வளர்ச்சி யடைந்து காணப்பட்டது. 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் தொடக்கம் ஐரோப்பியர் ஆசியா, ஆபிரிக்கா, இலத்தின் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் குடியேற்றங்களை அமைத்திருந்ததால் இந்தப் பிரதேசங்களில் வர்த்தகத்திற்கான புதிய சந்தை காணப்பட்டது.

அவ்வாறே பல நூற்றாண்டுகளாக ஐரோப்பாவைத் துன்பத்திற்கு உள்ளாக்கிய போர்கள் முடிவுற்றதால் இறப்புத் தொகை குறைந்தது. இதனால் மக்கள் தொகை அதிகரிக்கவே உள்நாட்டு வர்த்தகச் சந்தை பரவலானது.

மக்கள் தொகை அதிகரித்ததால் பொருட்களின் தேவையும் அதிகரித்தது. எனினும் குடிசைக் கைத்தொழிலின் மூலம் பொருட்கள் கையால் செய்யப்பட்டதால் தேவைக்கேற்ப பொருட்களை வழங்க முடியாது இருந்தது. இதுவும் கைத்தொழில் புரட்சிக்கான பின்னணிகளுள் ஒன்றாகும்.



இலவச விநியோகத்திற்காக

அவ்வாறே, குடியேற்ற நாடுகளிலிருந்து கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தமையும் இயந்திரங்களை இயக்கக்கூடிய நிலக்கரி மற்றும் கைத்தொழில்களுக்குத் தேவையான இரும்பு இங்கிலாந்திலேயே கிடைக்கக்கூடியதாக இருந்தமையும் அங்கு கைத்தொழில் புரட்சி ஏற்படக் காரணமாயின.

இக்காலகட்டத்தில் (15ஆம், 16ஆம் நூற்றண்டுகள்) ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியால் விஞ்ஞான அறிவு வளர்ச்சி அடைந்ததால் இயந்திரங்களை உற்பத்தி செய்யும் அறிவும் பெருகியது. அவ்வாறே இலண்டன் அரச சங்கத்தால் விஞ்ஞான ஆய்விற்கான ஊக்கமும் அளிக்கப்பட்டது.

நிலத்தை பாரிய உற்பத்தித் தாபனமாக்கிய விவசாயப் புரட்சியானது ஏனைய நாடுகளை விட இங்கிலாந்தில் பெருமளவில் இடம்பெற்றது. விற்பனையின் பொருட்டுப் பெருந்தொகையான உணவுப் பயிர்செய்கையும் கால்நடை வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டன. பரந்த அளவில் விவசாய நிலங்களில் பயனைப் பெறும் பொருட்டுப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சிறு நிலங்களை இணைத்து பாரிய பண்ணைகள் உருவாக்கப்பட்டு அவற்றில் விவசாயம் செய்யப்பட்டது. இதனால் சிறு நிலங்களையுடைய விவசாயிகள் தமது நிலத்தை இழந்ததுடன், அவர்களது ஜீவனோபாயமும் பாதிக்கப்பட்டது. இதனால் அவர்கள் வேலை தேடி நகரை நோக்கி இடம்பெயரவே அவர்களது உழைப்பு இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்பட வழிவகுத்தது.

இங்கிலாந்தை ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும்போது அது சிறிய நாடாகவும் தீவாகவும் இருந்தமையால் நாடு முழுவதும் பரந்த பொது வர்த்தகச் சந்தையொன்றை ஏற்படுத்த வேண்டிய தேவை இருந்தது. உள்நாட்டு இறைவரி முறை இல்லாதிருந்ததால் சுதந்திரமாகப் பொருட்களைக் கையாளுவதற்கு இடம் ஏற்பட்டது. இதனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அனைத்திற்கும் உயர்ந்த விலையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தை கிடைத்தது. பொருளாதார வளர்ச்சியின் பொருட்டு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சுதந்திரமும் உதவியும் இங்கிலாந்து பாராளுமன்றத்திலிருந்து கிடைத்தது.

உதாரணம்: பொருட்களை எடுத்துச் செல்வதற்குக் கால்வாய்கள் அமைக்கப்பட்டமை, வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டமை, வேலியடைப்பு தொடர்பான சட்டத்தை நிறைவேற்றியமை.

''வேலியடைப்பு'' என்பது சிறு விவசாய நிலங்களை இணைத்துப் பாரிய விவசாயப் பண்ணைகளை அமைத்தல் ஆகும்.

இங்கிலாந்தில் இயற்கையாகவே அமைந்துள்ள ஆறுகள் காரணமாக உள்நாட்டில் கால்வாய்ப் போக்குவரத்தினை ஏற்படுத்துவது சுலபமாக இருந்தது.

உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் பொருட்களைக் கொண்டு செல்லக் கூடிய கப்பல் போக்குவரத்தும், அவ்வாறே அவற்றைப் பாதுகாக்கக் கூடிய கடற்படைப் பலமும் இங்கிலாந்திடம் இருந்தது. அக்காலத்தில் உலகின் பிரதான வர்த்தக நிலையமாக இலண்டன் விளங்கியதுடன், மூலப்பொருட்கள், மூலதனம் என்பனவற்றுடன் உற்பத்திப் பொருட்களை விநியோகிக்கும் மத்திய நிலையமாகவும் அது விளங்கியது. கி.பி 1780 ஆம் ஆண்டளவில் இங்கிலாந்திடமிருந்த கடற்படையும் உலக வர்த்தக நடவடிக்கைகளில் அந்நாடு பெற்றிருந்த சிறப்பிடமும் அங்கு கைத்தொழில் புரட்சி ஆரம்பமாக வழிவகுத்தது.



*உரு 10.1 கால்வாய் மூலம் நாட்டின் உட் பகுதியில் போக்குவரத்து நடைபெறுதல்*

**செயற்பாடு :**

★ *கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பமாவதற்கான பின்னணி தொடர்பாக அறிக்கையொன்று தயாரிக்குக.*

## பரம்பல்

இங்கிலாந்தில் ஆரம்பித்த கைத்தொழில் புரட்சி விரைவில் உலகின் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவியது. 18ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் மூலப் பொருட்கள் பெருமளவில் கிடைக்கக் கூடியதாக இருந்த வர்த்தக சந்தைகளை அண்மித்த பிரதேசங்களில் கைத் தொழில்மத்திய நிலையங்கள் தோன்றின. பிரான்சிற்கு உரிய பிளான்டர்ஸ், நோமண்டி பிரதேசமும் ஜேர்மனியில் சாக்சனியும் கம்பளிப் புடைவை உற்பத்தி செய்த மத்திய நிலையங்களாகப் பிரசித்தி பெற்றன. பெல்ஜியத்தில் வொல்னியா, ஜேர்மனியில் சைலீஷியா ஆகிய பிரதேசங்கள் இரும்பு உற்பத்திக்குப் பிரசித்தி பெற்றவையாகும். எனினும் இங்கிலாந்தைப் போன்று ஆரம்பத்தில் கைத்தொழில் புரட்சியின் பொருட்டு இந்நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி கண்டன.




*தேசப்படம் 10.1 19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் கைத்தொழில் புரட்சி பரவிய பிரதேசங்கள்.*



இலவச விநியோகத்திற்காக

**தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்:**

★ பிரான்சில் இயந்திரங்களின் மூலம் செய்யப்படும் பொருட்களை விட கைகளால் செய்யப்படும் பொருட்களை மக்கள் விரும்பியமை. (குடிசைக் கைத்தொழில் மூலம் செய்யப்படும் சிறந்த அலங்காரப் பொருட்கள்)
★ பிரான்சில் காணப்பட்ட உள்நாட்டு இறைவரி முறைகள்.
★ ஒல்லாந்தில் இயற்கை வளங்கள் இல்லாமை.
★ பிரான்சில் இங்கிலாந்தைப் போல் நில அடைப்பு நிகழாமை. சிறு நில உரிமையாளர் அதிகரித்துக் காணப்பட்டமை.
★ பிரான்சியப் புரட்சியால் ஏற்பட்ட பயங்கர யுத்தங் காரணமாகத் தொழிற்சாலைகள் அழிவுற்றமை.
★ நெப்போலிய யுத்தம் முடிவடைந்த போதிலும் போரினால் களைப்படைந்த முயற்சியாளர்கள் புது வழிகளைக் கண்டுபிடிக்க முன்வராமை.
★ இங்கிலாந்தின் சுய உற்பத்திகள் வெளியுலகிற்கு வழங்கப்படாமை.
★ கி.பி 1825 ஆம் ஆண்டு வரை இங்கிலாந்து தன் தொழில் நிபுணர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்காமை.
★ கி.பி 1842 ஆம் ஆண்டு வரை இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஆக்கங்கள் ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டமை.

எனினும் 19ஆம் நூற்றாண்டில் உலக சனத்தொகை அதிகரித்ததுடன் பொருட்களுக்கான தேவையும் அதிகரித்ததால் ஏனைய நாடுகளும் இங்கிலாந்தைப் போல் இயந்திரங்களின் மூலம் உற்பத்தியை அதிகரிக்க முன் வந்தன.

இதன்படி பிரான்ஸ், ஜேர்மனி (பிரஷ்யா), பெல்ஜியம், ஆஸ்திரியா, ஹங்கேரி போன்ற ஐரோப்பிய நாடுகளில் மட்டுமன்றி அமெரிக்காவிலும் கைத்தொழில் புரட்சி விரைவில் பரவியது. இந்த நாடுகளால் இங்கிலாந்தைப்போல முன்னேற முடியாது போயினும், 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாக் கண்டத்தில் அனைத்துத் துறைகளிலும் இங்கிலாந்திற்கு இணையாக இந்நாடுகள் முன்னேற்றம் அடைந்தன. தேவைக்கும் வளத்திற்கும் ஏற்ப உற்பத்தித் துறையில் கைத்தொழில்மயம் ஏற்பட்டதுடன் அது இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

**19ஆம் நூற்றாண்டில் ஏனைய நாடுகளில் கைத்தொழில் புரட்சி பரவுவதற்கான காரணங்கள்**

★ ஐரோப்பாக் கண்டத்தில் மட்டுமன்றி குடியேற்ற நாடுகளிலும் சனத்தொகை அதிகரித்தல்.
★ ஐரோப்பாக் கண்டத்தில் போக்குவரத்து அதிகரித்தல்.
  - ஆஸ்திரியப் பேரரசில் 30,000 மைல் தூரத்திற்குப் பாதைகள் அமைக்கப்படல்.
  - பெல்ஜியத்தின் வீதிக் கட்டமைப்பு இரு மடங்காக அதிகரிக்கப்படல்.
  - பிரான்சில் தெருப் போக்குவரத்துடன் கால்வாய்ப் போக்குவரத்தும் ஆரம்பிக்கப்படல்.

- கி.பி. 1840 ஆம் ஆண்டாகும் போது எல்லா நாடுகளிலும் புகையிரத வீதி அமைக்கப்படல்.

★ வர்த்தக வளர்ச்சியின் பொருட்டு சட்டங்களும் நிருவாக சீர்திருத்தங்களும் ஏற்படல்.

★ கைத்தொழில்களுக்கும் வீதி அமைத்தலுக்கும் அரச அனுசரணை கிடைத்தல்.

★ யுத்த காலத்தில் இங்கிலாந்தில் ஏற்பட்ட வர்த்தகத் தடை காரணமாகப் பஞ்சு ஏற்றுமதி தேக்க நிலை அடைந்ததால் ஐரோப்பாவில் கம்பளி உடைக்குக் கேள்வி அதிகரித்தல்.

★ வரிகள் நீக்கப்பட்டதால் எளிதாக மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.

★ பிரான்சிலும் ஜேர்மனியிலும் நிலக்கரி கண்டுபிடிக்கப்படல்.

**செயற்பாடு :**

★ *19 ஆம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சி பரவிய நாடுகளை உலகப் புற உருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.*


★ *ஐரோப்பாவில் ஏனைய நாடுகளுக்கும் கைத்தொழில் புரட்சி பரவிய விதம் தொடர்பாகக் கட்டுரை ஒன்று எழுதுக.*

## புதிய கண்டுபிடிப்புக்கள்

இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி மூன்று முக்கிய தொழில்களை மையமாகக் கொண்டு நிகழ்ந்தது. புடைவைக் கைத்தொழில், இரும்புக் கைத்தொழில், நிலக்கரிக் கைத்தொழில் என்பனவே அவைகளாகும். இத்துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாயிருந்தன. இது காலப்போக்கில் போக்குவரத்து, தொடர்பாடல் துறைகளிலும் அபிவிருத்தி ஏற்படுவதற்குக் காரணமாயமைந்தது.

## புடைவைக் கைத்தொழில்


கைத்தொழில் புரட்சிக்கு முன்னர் நெசவுத் தொழில் குடிசைக் கைத்தொழிலாக நடைபெற்றது. ஆனால் கைத்தொழில் புரட்சி ஆரம்பமானதும் இந்நிலை மாற்றமடைந்து நீராவியால் அல்லது எரிபொருளால் இயங்கும் இயந்திரங்களின் உதவியுடன் புடைவை உற்பத்தி செய்யப்பட்டது.



உரு 10.2 கம்பளி நெசவிற்கான ஜெனி இயந்திரம்

★ கி.பி 1733 இல் ஜோன்கே என்பவரால் நூனாழி (பறக்கும் தறி ஓடம்)கண்டுபிடிக்கப்படல்.

★ தோமஸ் பெல், என்பவரால் சிலிண்டர் அச்சிட்டு முறை கண்டுபிடிக்கப்படல்.
★ அமெரிக்கரான எலியஸ் கோவே என்பவரால் கி.பி 1846 இல் தையல் இயந்திரம் கண்டுப்பிடிக்கப்படல்.
★ கி.பி 1790 இல் காட்ரைட் என்பவரால் விசைத்தறி கண்டுபிடிக்கப்படல்.
★ கம்பளி நெசவுக்காக கையால் இயக்கக் கூடிய ஜெனி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமை.



உரு 10.3 கம்பளி நெசவு இயந்திரம்

★ கி.பி 1824 இல் மின் வலுவால் இயங்கும் கம்பளி நெசவு இயந்திரம் கண்டுபிடிக்கப்படல்.
★ தொடர்ந்தும் புதியகண்டுபிடிப்புகள் இன்று வரை நடைப்பெற்றுக் கொண்டிருக் கின்றன.

**சிலிண்டர் மூலம் அச்சிடல்**

உலோக சிலிண்டரில் அலங்கார வேலைப்பாட்டை பதித்து, அதற்கு சாயமூட்டி அதன் மீது துணியைச் சுழலவிட்டு அச்சிடுதல். இதனை மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம் துணி முழுவதிலும் அலங்காரம் படியும்.

## இரும்புருக்குத் தொழில்

கைத்தொழில் புரட்சிக்கு முன்னர், பெருமளவுக்கு ஆயுத உற்பத்திக்குப் பயன்பட்ட இரும்பு, கைத்தொழில் புரட்சி இடம்பெற்ற காலத்தில் இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது. இங்கிலாந்து இரும்பு, நிலக்கரித் தாதுக்கள் என்பவற்றை அதிகளவில் வளமாகப் பெற்ற ஒரு நாடாகும்.



உரு 10.4 பேஸ்மரின் உருக்குச் சூளை

★ கி.பி 1730 ஆம் ஆண்டு ஆபிரகாம் டர்பி நிலக்கரியைப் பயன்படுத்தி இரும்பை உருக்கும் முறையைக் கண்டறிதல்.
★ கட்டடங்கள் அமைக்கும் போது மரத்திற்குப் பதிலாக இரும்புருக்கு பயன்படுத்தப்படல்.
★ கி.பி 1784 இல் ஹென்றி கோட் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட ரோலர் எனும் இயந்திரத்தால் பதப்படுத்தப்பட்ட இரும்பு உருவாக்கப்படல்.
★ கி.பி 1856 இல் ஹென்றி பேஸ்மரால் இரும்பிலுள்ள கழிவுகளை அகற்றி உலோகங்கள் செய்வதற்கான புது வழிமுறைகள் கண்டறியப்படல்.
★ கி.பி 1860 இல் வில்லியம் சீமன்ஸ், எமலி - பெரி மார்ட்டின் தம்பதி இணைந்து மேற்கூறப்பட்ட முறையை மேலும் விருத்தி செய்தல்.
★ கி.பி 1878 இல் வில்லியம் சீமன்ஸ் என்பவரால் இரும்புத்தாது உருக்குவதற்கு மின்சார சூளை தயாரிக்கப்படல்.

கலவை செய்யப்பட்ட இரும்புத்தாதிலும் நிலக்கரியிலும் கழிவுகளை அகற்றிய பின்னர் தயாரிக்கப்பட்ட இரும்பினை தேவையான கனவளவில் தாயாரித்துக் கொள்ளலாம்.

திறந்த சூளை முறையானது ஒரே முறையில் இரும்பை சுத்திகரிக்கக் கூடியதாக இருந்ததால் இலாபகரமாகவும், விரைவாகவும் உருக்கினைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. இரும்பை விடப் பலம் வாய்ந்ததாகவும் நீண்ட நாள் நிலைத்திருக்கக் கூடியதாகவும் துருப்பிடிக்காமலும் இருந்ததால் உருக்கின் பாவனை விரைவில் வளர்ச்சியடைந்தது.

## நிலக்கரித் தொழில்



உரு 10.5 நிலக்கரித் தொழில்

இங்கிலாந்து ஏராளமான நிலக்கரிச் சுரங்கங்களைக் கொண்ட நாடாகும். நோதம் பர்லண்ட், டர்ஹாம், யோக்ஷயர், லங்காஷயர், சவுத்வேல்ஸ் ஆகிய பகுதிகளில் நிலக்கரியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருந்தது. இரும்புத்தாதை உருக்குவதற்கும் பல்வேறு இயந்திரங்களை இயக்குவதற்கும் வீட்டுத் தேவைகளுக்கும் நிலக்கரி பெருமளவில் தேவைப்பட்டது. இதனால் நிலக்கரியின் தேவை அதிகரித்தது. நிலக்கரி உபயோகிப்பது இலாபகரமானதாக இருந்தபோதிலும், அதனை அகழும் போது பாதுகாப்பாக செயற்பட வேண்டியிருந்தது. அகழும் போது ஒன்று சேரும் நீரை அகற்றவும் பூமியை ஆழமாக அகழும்போது அடியில் வெப்பம் அதிகரிப்பதால் சுரங்கத்தினுள் செயற்கையாக குளிரூட்டப்பட்ட வாயுவை வழங்கவும் வேண்டி இருந்தது.

- ★ கி.பி 1736 இல் நியுகொமனால் நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கபட்டதன் விளைவாக சுரங்கத்தின் உள்ளேயுள்ள நீரைக் குழாய் மூலம் வெளியேற்றவும் செயற்கையாக வாயுவைக் குளிரூட்டி அனுப்பக்கூடியதாகவும் இருந்தது.
- ★ ஜேம்ஸ் வோட் என்பவரால் நீராவி இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டமை.
- ★ கி.பி 1812 இல் ஹம்ரி டேவி என்பவரால் பாதுகாப்பு விளக்கு கண்டு பிடிக்கப்பட்டது.
- ★ கி.பி 1839 இல் இரும்பினாலான கேபிள் கம்பி கண்டுபிடிக்கப்படல்.
- ★ நிலக்கரியை எரிப்பதன் மூலம் பெறப்படும் தாரைக்கொண்டு பெருந் தெருக்கள் அமைக்கப்படல்.
- ★ நிலக்கரியின் மூலம் சாயம், மருந்து வாசனைப் பொருட்கள், எண்ணெய், உரம் என்பன உற்பத்தி செய்யும் முறை கண்டுபிடிக்கப்படல்.
- ★ கி.பி 1811 இல் ஜோன் மெக்கடம் என்பவரால் பெருந்தெருக்கள் அமைக்கும் பொருட்டு ''மெக்கடம் முறை'' அறிமுகம் செய்யப்படல்.
- ★ கி.பி 1820 இல் புகையிரதப்பாதை அமைக்கப்படல். (கால்வாய், பெருந்தெருக்கள் இல்லாத பிரதேசங்களில்)
- ★ கி. பி 1814 இல் ஜோர்ஜ் ஸ்டீவன்சன் என்பவரால் நீராவியால் இயங்கும் புகையிரத என்ஜின் கண்டுபிடிக்கப்படல்.



இலவச விநியோகத்திற்காக


### நீராவி இயந்திரம்



உரு 10.6 நீராவியால் இயங்கும் புகையிரத என்ஜின்

நிலக்கரி போக்குவரத்து குதிரை வண்டியின் மூலம் நடைபெற்றது. ஆதலால் நிலக்கரி போன்ற பாரமான பொருட்களைக் கொண்டு செல்வதற்காகவும் தொலை தூரப் பிரதேசங்களுக்கு உற்பத்திப் பொருட்களை இலாபகரமாகவும் விரைவாகவும் கொண்டு செல்வதற்காக ஜோர்ஜ் ஸ்டீவன்சனால் புகையிரத என்ஜின் கண்டுப்பிடிக்கப்பட்டது. இந்த என்ஜின் ஏனைய கைத்தொழில்களின் பொருட்டும் பயன்படுத்தப்பட்டது. பாதுகாப்பு விளக்கு நிலக்கரி சுரங்கங்களினுள் செல்லும் போது ஒளியை வழங்கியது. முன்னர் நிலக்கரி சுரங்கத்தினுள் உள்ளே மீதேன் வாயு காரணமாக நெருப்புச் சுடரை ஏற்றுவது ஆபத்தானதாக இருந்தது. பாதுகாப்பு விளக்கு மூலம் இந்த சிக்கல் தீர்க்கப்பட்டது.

**மெக்கடம் முறை**
பெரிய கல், மண் என்பனவற்றை இட்டு அழுத்தி பலம் வாய்ந்த உறுதியான அத்திவாரத்தின் மேல் சிறு கற்களைப் பரப்பி மீண்டும் அழுத்தி மட்டமாக்கி பெருந்தெருக்கள் அமைத்தல். உறுதியான இந்த வீதிகளில் பெரிய வாகனங்கள் கூட எளிதாகவும் விரைவாகவும் பயணஞ் செய்யக்கூடியதாக இருந்தது.



படம் 10.7 ஜேம்ஸ் வோட்டின் நீராவி இயந்திரம்

## போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி

- ★ கி.பி 1807 இல் அமெரிக்கரான ரொபட் புல்டன் 'கிளேர் மோன்ட்' எனும் புகைப் படகை நீராவியை உபயோகித்து நிர்மாணித்தமை.
- ★ கி.பி 1811 இல் ஹென்றி பெல் என்பவர் முதலாவது புகைக் கப்பலை நிர்மாணித்தமை.
- ★ கி.பி 1885 இல் ஜேர்மனியின் டெம்ளர் என்பவர் மோட்டார் வண்டியை நிர்மாணித்தமை.
- ★ கி.பி 1903 இல் அமெரிக்கரான ரைட் சகோதர்களால் விமானம் நிர்மாணிக்கப்பட்டமை.
- ★ இவைகளின் மூலம் நீர், தரை,ஆகாயம் ஆகிய மூன்று வழிகளிலும் போக்குவரத்து நடைபெற்றமை.



உரு 10.8 டெம்ளரின் மோட்டார் வண்டி



உரு 10.9 ரைட் சகோதர்களின் விமானம்

## தொலைத் தொடர்புகளில் ஏற்பட்ட முன்னேற்றம்

- ★ கி.பி 1840 இல் இங்கிலாந்தில் 'பெனி' தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது. அதாவது முன்னர் இருந்த அதிக செலவான தபால் சேவைக்குப் பதிலாக நாட்டின் எந்த இடத்திற்கும் ஒரு 'பென்ஸில்' கடிதங்கள் அனுப்பக் கூடியதாக இருந்தமை.
- ★ கி.பி 1844 இல் அமெரிக்கரான சாமுவேல் மோர்ஸ் என்பவரால் 'தந்தி' முறை அறிமுகமாதல்.
- ★ கி.பி 1876 இல் அமெரிக்கரான அலெக்சாண்டர் கிரகம் பெல்லினால் தொலைபேசி கண்டு பிடிக்கப்படல்.
- ★ கி.பி 1895 இல் இத்தாலிய இனத்தவரான மார்க்கோனியால் வானொலி கண்டுபிடிக்கப்படல்.

உலகில் காணப்படும் புதிய கண்டுபிடிப்புக்களை நோக்கின் இங்கிலாந்தில் ஆரம்பமான கைத்தொழில் புரட்சி உலகம் முழுவதும் பரவிய விதம் தெளிவாகின்றது.



*உரு 10.10*
*கிரகம்பெல்லின் தொலைபேசி*



*உரு 10.11 வானொலிப்பெட்டி*
*(மார்க்கோனி)*

**செயற்பாடு :**

★ *கைத்தொழில் புரட்சியின் விளைவாக மேற்கொள்ளப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளை சேகரித்து வகுப்பில் காட்சிப்படுத்துக.*

## கைத்தொழில் புரட்சியின் விளைவுகள்

உலகில் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்கள் பலவற்றிற்கு கைத்தொழில் புரட்சி காரணமாகியது. இப்புரட்சியினால் நன்மையான விளைவுகளும் தீமையான விளைவுகளும் ஏற்பட்டன.

### அரசியல் விளைவுகள்

செல்வந்தர் முதலீடுகளைச் செய்து கைத்தொழில்களை ஆரம்பித்தனர். தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் பணிபுரிந்தனர். இதனால் சமுதாயம் செல்வந்தர், ஏழை என்ற இரு பிரிவுகளாகப் பிரிந்தது. இதன்படி உச்ச இலாபத்தைப் பெறும் நோக்குடன் பணத்தை முதலீடு செய்த முதலாளி வர்க்கமும் உழைப்பை விற்று வாழ்ந்த தொழிலாளர் வர்க்கமும் தோற்றம் பெற்றன.

இருபதாம் நூற்றாண்டாகும் போது ஐரோப்பாவில் அநேகமாக எல்லா நாடுகளிலும் பொருளாதார செயற்பாடுகள் முறையாக ஒழுங்கமைக்கப்பட்டு வர்த்தகத்தில் ஈடுபட்ட தனிப்பட்டோரின் கைகளுக்கு மாறி இருந்தன.



இலவச விநியோகத்திற்காக

இதன் விளைவாக சிறு குழுவினரின் கையில் செல்வம் குவிந்தது. பெரும்பான்மையினர் தமது வாழ்வாதாரத்தின் பொருட்டு ஊழியத்தை விற்று வாழ்ந்தனர். செல்வந்தர் ஏழைகளின் உழைப்பைச் சுரண்டி பெரும் இலாபம் அடைந்தனர்.

தொழிலாளரின் வாழ்வு சிறப்பாக இருக்கவில்லை. சேரிகளில் வரிசையாக அமைக்கப்பட்ட வீடுகளில் அவர்கள் வாழ்ந்ததுடன் சுத்தமான நீரோ அடிப்படை சுகாதார வசதிகளோ இருக்கவில்லை. நளொன்றுக்கு 12-14 மணித்தியாலங்கள் என்ற நீண்ட நேரம் வேலைசெய்ததுடன் மிகக்குறைந்த சம்பளத்தையே பெற்றனர். பெண்களும் பிள்ளைகளும் வேலை செய்தனர். தொழிலாளர்களின் வாழ்க்கையில் தாக்கம் ஏற்படுத்திய செல்வந்தரால் அவர்கள் மீது பலாத்காரமாகத் திணிக்கப்பட்ட வேலை செய்யும் நிபந்தனை மட்டுமன்றி அரசாங்கத்தின் செயல்களும் அவர்களுக்குச் சாதகமாக இருக்கவில்லை. இதனால் செல்வந்தரான முதலாளி வர்க்கத்திற்கும், ஏழைகளான தொழிலாளர் வர்க்கத்திற்கும் இடையே மோதல் ஏற்பட்டது. தொழிற் சங்கங்கள் தோற்றம் பெற்றன. ஊழியர் வேலை நிறுத்தம், உரிமைகளுக்காகப் போராடுதல் போன்ற செயற்பாடுகள் ஆரம்பமாகின.


உரு 10.12 சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படல்

சமவுடைமைக் கோட்பாடு இச்சூழ்நிலையிலேயே தோற்றம் பெற்றது. ஜேர்மனைச் சேர்ந்த கார்ள்மாக்ஸ் இதனடிப்படையில் சமவுடைமைத் தத்துவத்தை முன்வைத்தார். அவ்வாறே ஜெரம் பென்தம், ஜோன் ஸ்டுவட் மில், டேவிட் றீகாடோ, தோமஸ் மோல்தஸ் போன்றோரின் தத்துவக் கருத்துக்கள் பொருளாதாரத் துறையில் செல்வந்தர்கள் தனியுரிமை செலுத்துவதற்கு இடமளிக்கக் கூடாதென்றும், உற்பத்தியில் மூலதனத்தைப் போன்று உழைப்பும் முக்கியம் என்றும் வலியுறுத்தின. இதற்காகத் தொழிலாளரின் ஆர்ப்பாட்டங்களும் நிகழ்ந்தன. இதனால் சகல நாடுகளும் வறியவர்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காகச் செயலாற்றின.

அடம் ஸ்மித் என்ற பொருளியல் வல்லுனர் எழுச்சி பெறும் செல்வந்த முறைக்கு நியாயங்கள் காட்டி தர்க்க ரீதியாக விடயங்களை முன் வைத்தார். பொருளியல் செயற்பாடுகளில் தடையின்றி சுதந்திரமாக ஈடுபடுவதற்கு மக்களுக்கு இடமளிப்பதன் மூலம் உச்ச முன்னேற்றத்தை, அடையலாம் என்ற கருத்தை "தலையிடாமைக் கொள்கை" மூலம் அவர் முன்வைத்தார். 'தேசங்களின் செல்வம்' என்ற அவரது நூல் செல்வந்தர்கள் சுதந்திரமாக வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கான கைநூலாக விளங்கியது.

கைத்தொழில் புரட்சி ஐரோப்பா எங்கும் பரவியதோடு குறைந்த விலையில் மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளுதல், முடிவுப் பொருட்களைக் கூடுதலான விலையில் விற்றல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு ஐரோப்பியர் தமது பேரரசை

விரிவாக்கவும் குடியேற்றங்களை அமைக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனால் ஐரோப்பாவில் கி.பி 1850 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட பேரரசுவாதம் புதிய பேரரசுவாதம் எனப்பட்டது.

இதன்படி சமவுடைமைவாதம், தாராண்மை (லிபரல்) வாதம், முதலாளித்துவ வாதம், புதிய பேரரசுவாதம் என்பன கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களாகும்.

### பொருளாதார மாற்றங்கள்



உரு 10.13 பாரிய பயிர்ச்செய்கை நிலம்

கைத்தொழில் நடவடிக்கைகள் விரிவடைந்தமையால் வர்த்தக நடவடிக்கைகள் பொருளாதாரத்தில் முன்னிடம் பெற்றமை கைத்தொழிற் புரட்சியின் முக்கியமான விளைவுகளில் ஒன்றாகும். இதனால் ஏற்றுமதி இறக்குமதி பொருளாதாரத்தைக் கொண்ட வர்த்தக ஆதிக்கம் முன்னிலைக்கு வந்தது. விவசாயத் துறையிலும் இயந்திர உபகரணங்கள் பிரயோகிக்கப்பட்டமையால் பேரளவிலான உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டன. இதனால் சிறு நிலச் சொந்தக்காரர்களான விவசாயிகளுக்குத் தமது பொருளாதார நடவடிக்கைகளை நடத்திச் செல்ல முடியாமற் போக தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்காக நகரங்களை நோக்கிப் படையெடுத்தனர்.

விரிவடைந்த வர்த்தக நடவடிக்கைகளுக்காகப் பணம் முதலீடு செய்தல் தனியார் வர்த்தகர்களுக்குத் தனித்து செய்ய முடியாது போனமையால் வர்த்தக நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. இந்த ஒன்றிணைந்த வர்த்தக நிறுவனங்கள் தமது குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு ஆசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா போன்ற பிரதேசங்களில் அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றி பேரரசைக் கட்டியெழுப்பின.

உதாரணம்:

ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக சங்கம்.
ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கம்.
பிரான்சிய கிழக்கிந்திய வரத்தக சங்கம்.

ஆரம்பத்தில் உள்நாட்டு வர்த்தகர்களை மட்டும் கொண்டிருந்த இந்த வர்த்தக சங்கங்கள் 19 ஆம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதியில் பலரும் முதலீடு செய்யும் வர்த்தக நிறுவனங்களாக மாறின. பொருட்களை உற்பத்தி செய்தலிலும் விற்பனை செய்தலிலும் ஈடுபட்ட அந்த நிறுவனங்கள் அதற்கு இணையாகப் பணம், வங்கி செயற்பாடுகளிலும் ஈடுபட்டன. அதன் மூலம் வர்த்தகர்களுக்குக், கடன் வசதியளித்தல், கொடுக்கல் வாங்கல் என்பனவற்றிற்கு வசதியளித்தல் போன்றவை இடம்பெற்றன.



இலவச விநியோகத்திற்காக

## சமூக விளைவுகள்

நகரங்களின் எண்ணிக்கையும் அளவும் வேகமாக வளர்ச்சியடைந்ததை ஐரோப்பிய நாடுகளில் காணக்கூடியதாக இருந்தது. தொழிற்சாலைகள் தோன்றியதால் அவைகளில் பணியாற்றும் பொருட்டு வந்த பெண்கள், ஆண்கள், பிள்ளைகள் உட்பட சகல உழைப்பாளிகளும், வர்த்தகர்களும் தொழிற்சாலைகளுக்கு அருகில் குடியேறினர். தொழிற்சாலைகள் வளர்ச்சியுற்றதும் அதனைச் சூழ்ந்த பிரதேசம் மக்கள் நிரம்பிய நகரங்களாக மாறின. இவ்வாறு நகரங்கள் தோன்றியமையானது மிக கூடுதலான மக்கள் தொகையை இங்கு உருவாக்கிய போதிலும் அடிப்படைத் தேவைகள் மிக குறைந்த வேகத்திலேயே வளர்ச்சியடைந்தன.

உதாரணம்:
கி.பி 1847 ஆம் ஆண்டிற்கு முன்னர் 20 ஆண்டு காலத்தில் மக்கள் தொகை 20% வேகத்தில் வளர்ச்சியடைந்தாலும் வீடுகள் கட்டுவது 11.5% திலேயே வளர்ச்சியடைந்தது.

தொழிற்புரட்சியின் விளைவால் ஏற்பட்ட மற்றொரு விளைவாக செல்வந்தர், ஏழை என்ற பிரிவினர் தோன்றியதைக் குறிப்பிடலாம். தொழிற்சாலைகளையுடையோர் செல்வந்தராக இருந்தனர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பாவில் அனைத்து நாடுகளிலும் பொருளாதார நடவடிக்கைகள் இவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டன. செல்வந்தர் தொழிலாளர்களைக் குறைந்த சம்பளத்திற்கு வேலைக்கமர்த்தி அதன் மூலம் பெரும் இலாபம் அடைந்தனர். தமது சமூக நிலையைப் போலவே, வாழ்க்கை முறையும் தொழிலாளர்களது நிலையை விட உயர்ந்ததெனக் கருதினர். நாட்டின் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமையும் செல்வந்தர் கையில் இருந்ததன் மூலம் தமது தேவைகளைப் பெற்றுக்கொள்ளும் செல்வாக்கும் அவர்களுக்கு இருந்தது. எனினும் பெரும்பான்மையான தொழிலாளர்களுக்கு எவ்வித உரிமையோ, செல்வாக்கோ இருக்கவில்லை.

இந்த செல்வந்த வகுப்பினர் பிரபுக்கள், மத்திய வகுப்பினர் என்ற இரு பிரிவினைக் கொண்டதாக இருந்ததுடன், அவர்களில் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டவர்கள் பிறப்பிலேயே பிரபுக்களான நிலச்சொந்தக்காரர்களாவர். வங்கியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், சாதாரண சிறு வியாபாரிகள், தொழினுட்பவியலாளர்கள் என்போர் மத்திய வகுப்பினராகக் கருதப்பட்டனர். இவர்கள் கல்வியின் மூலமும், செல்வத்தின் மூலமும் மத்திய வகுப்பிலிருந்து உயர்நிலையை அடைய வாய்ப்பு இருந்தது, மத்திய வகுப்பினர் சுத்தமான சுற்றாடலில் வாழ்ந்தனர். அவர்கள் கலைப்படைப்பான நகரமண்டபம், உணவகம் என்பன அமைத்து நகரை அழகு செய்தனர். அவர்களது குடும்பங்களில் ஆண்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டதுடன், பிள்ளைகளைக் கவனித்தல், உணவு தயாரித்தல் போன்ற வீட்டு வேலைகளுக்குப் பணிப்பெண்களை அமர்த்துவதும் ஆடம்பரச் செயலாக இக்கால சமுதாயத்தில் கணிக்கப்பட்டது.

தொழிற்சாலைகளில் வேலை செய்தோர் ஏழைகளாக இருந்தனர். அவர்கள் மிகவும் குறைந்த வருமானம் பெற்றனர். இந்தக் குடும்பங்களிலுள்ள ஆண்களும் பெண்களும் வேலை செய்தனர். பிள்ளைகளுக்குக் கல்வி கற்பதற்கு வாய்ப்பை அளிப்பதை விட அவர்களை வேலையில் அமர்த்துவதைப் பெற்றோர் விரும்பினர். அநேகமான குடும்பங்களில் பெற்றோர் வேலைக்குச் சென்றதால் பிள்ளைகள் தவறான வழியில் செல்வதற்கும் தவறாக வழி நடத்தப்படுவதற்கும் சந்தர்ப்பங்கள் இருந்தன. தொழிலாளர்களின் வேலைத்தலங்களிலும் சுகாதாரத்திற்கேற்ற சுற்றாடல் இருக்கவில்லை. இயந்திரங்களோடு இயங்குவதால் அவர்கள் விபத்தையும் எதிர்நோக்க வேண்டிய நிலைமை இருந்தது. நகரங்களில் வாழ்ந்த தொழிலாளர்களது வீடுகளும் திருப்தியான நிலையில் இருக்கவில்லை. அவை அசுத்தமாகவும் சுகாதாரமற்றதாகவும் இருந்தன. அந்த வீடுகளில் ஒரே அறையில் குடும்ப அங்கத்தினர் அனைவரும் வாழ்ந்தனர். இவ்வாறான சூழ்நிலையால் குடும்பங்களில் மது அருந்துதல், ஒழுக்கமற்ற நடத்தை, வழிபிறழ்தல் போன்ற தீயபழக்கங்கள் உண்டாகின. இவ்வாறான செயல்கள் குடும்பப் பிணைப்பு அற்றுப் போக வழியாக அமைந்தன.


உரு 10.14 நகரமயமாதல்


உரு 10.15 தொழிலாளர் வீடு

மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் முடிவுப் பொருட்களை விற்பனை செய்யவும் கைத்தொழில் நாடுகள் போட்டியிட்டமையானது முதலாம் உலகப் போர் ஏற்படுவதற்கும் காரண மாகியது. அவ்வாறே புதிய பேரரசுகளுக்குக் கீழ்ப்பட்ட நாடுகள் ஐரோப்பியரின் பொருளாதார சுரண்டலுக்கு உள்ளானதுடன் அந்த நாடுகள் முன்னேற்றம் அடையாத நாடுகள் என்ற நிலைக்கும் உள்ளாகியது.



கைத்தொழில் புரட்சியின் மற்றுமொரு பாதகமான விளைவாகக் கருதப்படுவது சுற்றாடல் மாசடைவதாகும். தொழிற்சாலைகளின் கழிவுகள்


உரு 10.16 கைத்தொழில் மயமாதலால் ஏற்பட்ட புகை மண்டலம்



இலவச விநியோகத்திற்காக

ஆறுகளிலும் கால்வாய்களிலும் வீசப்பட்டதால் அவற்றின் நீர் அசுத்தம் அடைந்தது. மனிதருக்கும் மிருகங்களுக்கும் அது பாதகமாக அமைந்தது. மேலும் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் புகை சுகாதாரத்துக்குத் தீங்கு விளைவிப்பதாக இருந்ததோடு அது வளிமண்டலத்தில் நிலைத்து விடுவதானது மனிதனுக்கு அச்சுறுத்தலாக அமைந்தது.

### சாராம்சம்

★ கைகளால் செய்யப்பட்ட பொருட்கள் இயந்திரத்தின் உதவியால் செய்யப்பட்டமை கைத்தொழில் புரட்சியாகும்.

★ கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பமானது. ஏராளமான செல்வந்தர்களும் இயற்கை வளங்களும் இங்கிலாந்தில் இருந்தமையால் அங்கு கைத்தொழில் புரட்சி ஆரம்பமானது.

★ 19ம் நூற்றாண்டில் ஐரோப்பா முழுவதிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கைத்தொழில் புரட்சி பரவியது

★ கைத்தொழில் புரட்சி புடைவை, நிலக்கரி, இரும்புருக்கு ஆகிய கைத்தொழில்களின் அடிப்படையில் ஆரம்பமானது.

★ கைத்தொழில் புரட்சியால் உலகம் பல கண்டுபிடிப்புகளைப் பெற்றது.

★ கைத்தொழில் புரட்சியால் நன்மைகள் ஏற்பட்ட அதேவேளையில் தீமைகளும் ஏற்பட்டன.

★ கைத்தொழிற்புரட்சி இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது.

### செயற்பாடு :

★ கைத்தொழிற் புரட்சியின் நன்மைகள், தீமைகள் தொடர்பாக உமது வகுப்பில் விவாதம் ஒன்றை நடத்துக.

### பயிற்சி :

1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
   (i) கைத்தொழில் புரட்சி என்றால் என்ன?
   (ii) கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
   (iii) கைத்தொழில் புரட்சி பரவிய 3 நாடுகளைக் குறிப்பிடுக.

(iv) கைத்தொழில் புரட்சியானது 3 முக்கிய கைத்தொழில்களின் அடிப்படையில் ஏற்பட்டது.அந்த மூன்று கைத்தொழில்களும் யாவை?

(v) கைத்தொழில் புரட்சியின் விளைவுகள் மூன்றினை எழுதுக.

2. கைத்தொழில் புரட்சியின் போது கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டோரது பெயர்கள் முதலாவது நிரலிலும் அவர்களது கண்டுபிடிப்புகள் இரண்டாவது நிரலிலும் காணப்படுகின்றன. அவற்றைச் பொருத்தமான முறையில் இணைக்க.

(1)

| நிரல் 1 | நிரல் 2 |
|---|---|
| 1. ஜோன் கே | 1. பறக்கும் நூனாழி |
| 2. ஜேம்ஸ் வோட் | 2. பாதுகாப்பு விளக்கு |
| 3. ஹம்ரி டேவி | 3. நீராவி இயந்திரம் |

(2)

| நிரல் 1 | நிரல் 2 |
|---|---|
| 1. கிரகம் பெல் | 1. புகையிரதம் |
| 2. டெம்ளர் | 2. தொலைபேசி |
| 3. மார்க்கோணி | 3. விமானம் |
| 4. ரைட் சகோதரர்கள் | 4. மோட்டார்வண்டி |
| 5. ஜோர்ஜ் ஸ்டீவன்சன் | 5. வானொலி |



இலவச விநியோகத்திற்காக

# 11 ஐரோப்பாவில் புதிய அரசியல் சிந்தனையில் ஏற்பட்ட வளர்ச்சி

இந்த அலகில் நவீன யுகத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மானிடவாதம், தேசிய வாதம், லிபரல்வாதம், சமூகவாதம் போன்ற பல்வேறு எண்ணக்கருக்கள் தொடர்பாகவும், அவற்றின் நடைமுறை நிகழ்வுகளான பிரான்சியப்புரட்சி, இத்தாலிய ஐக்கியம், ஜேர்மனிய ஐக்கியம், ரஷ்யப்புரட்சி போன்றவை தொடர்பான விபரங்களையும் கற்கலாம்.

## மானிடவாதம் என்றால் என்ன?

ஐரோப்பாவில் இடையிடையே பல்வேறு எண்ணக்கருக்கள் தோற்றம் பெற்றன. உதாரணமாக அதிக பயனுடையவைகள் உயர்வானவையாகக் கருதப்பட்டது. அது பயன்பாட்டுவாதம் எனப்பட்டது. அனைத்திற்கும் மேலாகப் பணம் முக்கியமெனக் கருதப்பட்டது. அது வணிகவாதமாகும். இவை அனைத்தையும் கீழ்ப்படுத்தி அனைத்துக்கும் மேலாக மனிதன் மேலானவன் என்ற எண்ணக்கரு தோன்றியது. அது மானிடவாதமாகும். மானியமுறைக் காலத்தின் இறுதியில் மனிதன் மனிதனை மேலாகக் கருதியதால் மானிடவாதம் தோற்றம் பெற்றது. அது நிகழ்காலம் வரை ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். பிரான்சியப் புரட்சி மானிடவாதத்தை வெளிப்படுத்திய முக்கிய சந்தர்ப்பமாக அமைந்ததுடன் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தற்கால மக்களுக்கு அது துணையாகவும் அமைந்தது.

புத்த பெருமானின் படிப்பினைக்கு அமையவும் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற உலகின் முக்கிய மதங்களின் படிப்பினைகளுக்கு அமையவும் மனிதனுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளதுடன் இப்பழைய எண்ணக்கருவின் மறுபிறப்பாக ஐரோப்பாவில் ஏற்பட்ட மானிடவாதத்தைக் குறிப்பிடலாம்.

## பிரான்சியப்புரட்சி - 1789

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு மனிதன் மேலானவன் என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் பிரான்சியப் புரட்சி ஆரம்பமானது.

கி.பி. 1789 ஆம் ஆண்டில் பிரான்சை ஆட்சி செய்த 16 ஆம் லூயி மன்னனுக்கு எதிராக ஏற்பட்ட அரசியல் கிளர்ச்சி பிரான்சியப் புரட்சி எனப்படும். இது 16 ஆம் லூயி மன்னனுக்கு முன்னர் ஆட்சி செய்த 14 ஆம், 15ஆம் லூயி மன்னர்களின்

காலத்திலேயே பிரான்சியப் புரட்சி ஏற்படுவதற்கான காரணங்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்தன.

## அரசியல் காரணங்கள்

பிரான்சில் ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போன்று அரசியல் சீர்திருத்தங்கள் நடைபெறவில்லை. உதாரணமாக இங்கிலாந்தில் பாராளுமன்ற முறை தோன்றியபொழுதிலும் , பிரான்சில் தொடர்ந்து முடியாட்சி முறையே நிலவி வந்தது.


14 ஆம் லூயி மன்னன் திறமையான ஆட்சியாளனாக இருந்ததால் எல்லையற்ற சர்வாதிகார முறையை ஏற்படுத்தினான். 'நானே அரசு' என அவன் கூறினான். உதாரணமாக அரசனின் அரச சபை எனும் ஆலோசனைச் சபைக்கு அமைச்சர்கள் நீதிபதிகள், தூதுவர்கள் போன்ற அதிகாரிகளை நியமிப்பதும், அகற்றுவதும் அரசனின் கையிலேயே இருந்தது.


உரு 11:1 14 ஆம் லூயி மன்னன்.

15 ஆம் லூயி மன்னனும், 16 ஆம் லூயி மன்னனும் இதனையே முன்னெடுத்துச் செல்ல முயன்றனர். எனினும் கீழ்மட்ட அதிகாரிகள் அரசனுக்குச் சார்பாக இருக்கவில்லை.

பிரான்சின் முடியாட்சி சர்வாதிகாரமாக உருவெடுத்ததுடன் பழங்காலம் முதல் இருந்து வந்த மக்கள் பிரதிநிதிகள் நிறுவனமான ஸ்டேட் ஜெனரல் கூட்டப்படவில்லை. இவைகளும் பிரான்சியப் புரட்சிக்குக் காரணங்களாயின. ஸ்டேட் ஜெனரல் என்ற பிரான்சிய பாராளுமன்றம் குருமார், பிரபுக்கள், சாதாரண மக்கள் என்போரைக் கொண்டதாக இருந்தது. இந்தச் சபை கி.பி 1614 ஆம் ஆண்டின் பின்னர் கூட்டப்படாமையானது அரசன் இதனைப் புறக்கணித்தமையைக் காட்டுகிறது. முடியாட்சி, அதிகாரத்தைக் குவித்துக் கொண்டதால் பிரதேச நிர்வாக நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்தன. இதனால் எழுந்த சீர்கெட்ட நிர்வாகம், பிரான்சியப் புரட்சிக்குக் காரணமாகியது.

பிரான்சின் நீதித்துறையும் மோசமான நிலையில் இருந்தது. பிரதேசங்களுக்குப் பிரதேசம் வேறுபட்ட 360 சட்ட முறைகள் காணப்பட்டன. மேலும் எவரையும் எந்த நேரத்திலும் கைது செய்ய ஆணை பிறப்பிக்கக் கூடியதாக இருந்ததுடன் சிறையில் அடைக்கக் கூடியதாகவும் இருந்தது. அவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பஸ்டீல் சிறைக்கூடத்தில் சிறை வைக்கப்பட்டனர். சர்வாதிகாரத்தின் அடையாளமாக விளங்கிய பஸ்டீல் சிறைச்சாலை ஆத்திரமுற்ற மக்களால் தாக்கப்பட்டதுடன் அங்கிருந்த சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இது பிரான்சியப் புரட்சியின் ஆரம்பமாகக் கருதப்படுகிறது.


உரு 11:2
பஸ்டீல் சிறைக்கூடம்.



இலவச விநியோகத்திற்காக

16 ஆம் லூயி மன்னனின் காலத்தில் நிலவிய பொருளாதார சீர்கேடும் புரட்சிக்குக் காரணமாகியது. 14 ஆம் லூயி மன்னனின் காலம் முதற்கொண்டு வெளிநாட்டு யுத்தங்களில் பிரான்ஸ் ஏராளமான பணத்தைச் செலவிட்டிருந்தது. இதனால் 16 ஆம் லூயி மன்னனின் காலத்தில் பிரான்ஸ் வரிச்சுமையால் இன்னலுற்றது.

14 ஆம் லூயி மன்னன் சிறந்த செயற்றிறமை உள்ளவனாக இருந்ததுடன் அனைத்து விடயங்களையும் பற்றிக் கவனிக்கும் ஆட்சியாளனாக இருந்தான். எனினும் 16 ஆம் லூயி மன்னன் தனது ஆட்சிக்காலத்தில் எதனைப்பற்றியும் கவனிப்பதில் அக்கறை காட்டவில்லை. இதுவும் பிரான்சியப் புரட்சிக்குக் காரணமாகியது. ஆட்சியாளருக்கும் சாதாரண மக்களுக்கும் இடையிலான தொடர்பு விரிசலடைந்திருந்தது.

16 ஆம் லூயி மன்னனின் ஆலோசகராக இருந்தவர் பழமையான சிந்தனையுடைய 74 வயதான மொரிபா என்பவராவார். வயோதிபரான இவர் தமது பதவியினால் சலுகைகளை அனுபவித்தாரே தவிர முக்கிய சீர்திருத்தத்தின் பொருட்டு எதனையும் செய்யவில்லை. டர்கோ, நெக்கர் போன்ற சிறந்த அமைச்சர்கள் நிர்வாகத்தில் சீர்திருத்தங்களை முன்வைத்த போது அரசனால் அவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

16 ஆம் லூயி மன்னனின் மனைவி ஆஸ்திரியாவைச் சேர்ந்த மேரி அன்டோயினட் ஆவாள். அவள் வெளிநாட்டுப் பெண்ணாக இருந்ததால் பிரான்ஸ் பற்றிய எவ்வித தெளிவும் கொண்டவளாக இருக்கவில்லை. மேலும் அவள் தேவையற்ற விதத்தில் பிரான்சிய நிர்வாகத்தில் தலையிட்டதால் மக்கள் அவள் மீது வெறுப்புக் கொண்டிருந்தனர்.

## பொருளாதார நிலைமை

1. பிரான்சில் சலுகை பெற்றிருந்த பிரபுக்களும் உயர் பதவிகளில் இருந்த சிறுதொகையினரான குருமாரும் வரி செலுத்துவதிலிருந்து விலக்குப் பெற்றிருந்தனர். பிரபுக்களினதும் திருச்சபையினதும் நிலங்களில் இருந்த விவசாயிகளுக்கு நிலமானிய வரி உட்பட அரசாங்கத்திற்குப் பெருந்தொகையாக வரி செலுத்த வேண்டியிருந்தது. ‘வேலி’ எனும் முக்கிய வரி நகரங்களில் அறவிடப்படவில்லை. கிராமிய மக்களிடமிருந்து அறவிடப்பட்டது. உப்புவரி (கெபேஸ்) அறவிடப்பட்டமையாலும் மக்கள் இன்னல்களுக்கு ஆளானார்கள். இதற்கிடையில் கெப்பிடேஷன் எனும் புதிய வரியை அனைவரும் செலுத்த வேண்டுமென அரசாங்கம் விதித்தது. பொருட்களைக் கொண்டு செல்லும் போது ஒரே பொருளுக்குப் பல இடங்களில் வரி செலுத்த வேண்டி இருந்தது. நீருக்கும் வரி செலுத்த வேண்டி இருந்தது. புரட்சி ஆரம்பமாகும் போது சாதாரண பொதுமக்கள் தமது வருமானத்தின் 50% - 60% வீதத்தை வரியாக செலுத்துவதில் செலவிட்டனர்.

2. ஐரோப்பாவில் மறுமலர்ச்சியுடன் வர்த்தகத்தின் மூலம் செல்வந்தர்களாகிய மத்திய வகுப்பினர் தோன்றினர். பிரான்சிலிருந்த இந்த மத்திய வகுப்பினரால் அரசியல் செயற்பாடுகளில் பங்குபற்ற முடியவில்லை. இதுவும் புரட்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

3. கி.பி 1786 ஆம் ஆண்டு இங்கிலாந்துடன் செய்து கொள்ளப்பட்ட ஈடன் உடன்படிக்கையின் காரணமாகப் புடைவை இறக்குமதி மீதான இறைவரி நீக்கப்பட்டது. இங்கிலாந்தில் உற்பத்தியின் பொருட்டு இயந்திரம் உபயோகப்படுத்தப்பட்டதால் உற்பத்திச் செலவு குறைந்தது. எனவே பிரான்சின் சிறு கைத்தொழில் உற்பத்திகள் அவற்றுடன் போட்டியிட முடியவில்லை. இதனால் பிரான்சின் உற்பத்தி ஸ்தம்பிதம் அடைந்தது.



உரு 11.3 வரிச்சுமை

4. வெளிநாட்டு யுத்தங்கள் காரணமாக அரச திறைச்சேரி வெறுமையடைந்தமை புரட்சிக்கு மற்றுமொரு காரணமாகும்.

5. செல்வந்தர், ஏழை என்ற காரணத்தாலும் பிரபுக்களிடையேயும் மோதல்கள் ஏற்பட்டன.

6. பிரான்சிய மக்களில் 90 வீத்தினர் விவசாயிகளாய் இருந்ததுடன் அவர்கள் பிரபுக்களின் நிலங்களில் பயிர் செய்தனர். பிரபுக்களின் திராட்சை ஆலைகள், கோதுமை ஆலைகள் என்பனவற்றையே அவர்கள் பயன்படுத்த வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்பட்டதோடு இதன் பொருட்டு வரி செலுத்தவும் வேண்டி இருந்தது. மேலும் பிரபுக்கள் வேட்டையாடும் போது விவசாயிகளின் வயல் நிலங்களுக்கூடாகத் தமது குதிரைகளைக் கொண்டு சென்றனர். இதற்கு எதிராக மக்களால் செயற்பட சந்தர்ப்பம் இருக்கவில்லை.

7. பிரபுக்கள் வேலியடைப்புச் செய்ததால் விவசாயிகளுக்கு அவர்களின் கால் நடைகளுக்கான புற்றரை இல்லாமல் போனமையும் புரட்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

## ஏனைய காரணங்கள்

1) 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ரூசோ, வோல்டேயர், மொன்டஸ்கியூ போன்ற தத்துவஞானிகள் முன்வைத்த மானிடவாதக் கொள்கையும் பிரான்சியப் புரட்சிக்கு வழிவகுத்தது.
2) இங்கிலாந்தில் இருந்த பாராளுமன்ற ஜனநாயக முறையும் பிரான்சின் முடியாட்சி வீழ்ச்சியுறக் காரணமாக அமைந்தது.
3) கி.பி 1776 ஆம் ஆண்டில் நிகழ்ந்த ஐக்கிய அமெரிக்க சுதந்திரப் போரும் இதில் தாக்கம் செலுத்தியது.



இலவச விநியோகத்திற்காக

## புரட்சியின் ஆரம்பம்

சலுகைகளை இழந்தவர்கள் டெனிஸ் மைதானத்தில் ஒன்றுகூடிப் புதிய அரசியலமைப்பினை அறிமுகம் செய்வதாக உறுதியளித்தனர். இது 'டெனிஸ் மைதான சத்தியப்பிரமாணம்' என வரலாற்றில் இடம்பெறுகிறது. கி.பி 1788 ஸ்டேட் ஜெனரல் மீண்டும் கூட்டப்பட்டதுடன், அதிலும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் அறிமுகம் செய்வதற்கு முடிவு செய்யப்பட்டது. கி.பி 1789 ஆம் ஆண்டு பிரான்சில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாகப் பொதுமக்கள் வீதியில் இறங்கி அரசனுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ததுடன் பஸ்டீல் சிறைச்சாலையைத் தாக்கினர். இது பிரான்சியப் புரட்சியின் அடையாளமாகும். கி.பி 1789 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி மனித உரிமை தொடர்பான சாசனம் வெளியிடப்பட்டது. ''அனைத்து மனிதர்களும் சமமானவர்கள். அவர்கள் சட்டங்கள் இயற்றுவதில் பங்கேற்க வேண்டும். கருத்து வெளியிட அவர்களுக்கு உரிமையுண்டு' என அதில் வெளியிடப்பட்டது. பிரபுக்களின் அதிகாரம் நீக்கப்பட்டது. உயர் வகுப்பைச் சேர்ந்த குருமாரிடம் இருந்த அதிகாரங்கள் நீக்கப்பட்டுத் திருச்சபை மீதும் பல சட்டங்கள் விதிக்கப்பட்டன. கி.பி 1791 ஆம் ஆண்டு புதிய யாப்பை உருவாக்கியதுடன் அதன் மூலம் சட்டமியற்ற 750 பேரைக் கொண்ட சபையை அமைத்து அரசனின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டது. பொதுமக்களை அரசன் விரும்பியவாறு சிறைப்படுத்த முடியாது. போனது கி.பி. 1793 ஆம் ஆண்டு விசாரணை நடாத்தி 16 ஆம் லூயி மன்னனும் அவனது மனைவியான மேரி அன்டடோயினட்டும் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பிரான்சியப் புரட்சி பல ஆண்டுகளாக நிகழ்ந்த சீர்திருத்தங்களின் தொடர் விளைவாகும். ஆசிரியர்கள், நீதிபதிகள், பேராசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், குருமார், விவசாயிகள் ஆகியோர் அதன் பங்காளிகளாவர். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற எண்ணக்கரு பிரான்சிலும் அதற்கு வெளியிலும் இதனால் பரவியது. அது மனிதனின் உரிமையைப் பாதுகாத்த புரட்சியாகும்.

**செயற்பாடு :**

★ பிரான்சியப் புரட்சியின் மூலம் மானிடவாதம் வெளிப்பட்ட விதத்தை விபரிக்குக

**தேசிய வாதம்**

குறிப்பிட்ட நிலப்பரப்பில் குறிப்பிட்ட ஒரே இயல்புகளைக் கொண்ட மக்கள் பொது நோக்கை அடிப்படையாகக் கொண்டு ஒரே குழுவாகத் தனது நிலையைக் கட்டி யெழுப்புவதாகும். மொழி, இனம், மதம், பழக்கவழக்கங்கள், உரிமை என்பனவே பெரும்பாலும் தேசியவாதத்திற்கு அடிப்படையாக அமைகிறது.

**லிபரல் (தாரண்மை)வாதம்**

மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபையின் துணையுடன் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பின் மூலம் மக்களுக்கு சிறந்த ஆட்சியை அமைத்துக் கொடுப்பதே லிபரல் வாதத்தின் எண்ணக்கருவாகும்.

## இத்தாலிய ஐக்கியத்தின் முக்கிய கட்டங்கள்

### இத்தாலியில் வெளிநாட்டு ஆதிபத்தியம்

மத்திய காலத்தில் இத்தாலி பல சிற்றரசுகளாகச் சிதறிக் கிடந்தது. அந்த அரசுகளிடையே அதிகாரப் போட்டி நிலவியது. அவ்வாறே ஐரோப்பாவில் இருந்த பலம் வாய்ந்த அரசுகள் இத்தாலியின் பிரதேசங்களைத் தமது ஆட்சியின் கீழ் வைத்திருந்தன. உதாரணமாக சிசிலி, நேப்பிள்ஸ் என்பன ஸ்பானியாவின் கீழ் இருந்தன. பர்மா, மொடினா, டஸ்கனி, வெனிஸ் முதலான நகரங்கள் ஆஸ்திரியாவின் கீழும் மத்திய இத்தாலி பாப்பரசரின் கீழும், வேறு சில பகுதிகள் பிரபுக்களின் கீழும் இருந்தன.




தேசப்படம் 11.1 இத்தாலிய ஐக்கியம்

வெளிநாட்டவரின் ஆதிக்கமும், பாப்பரசரின் அரசும் (திருச்சபை அரசு) இத்தாலியை இணைப்பதற்குத் தடையாக இருந்தன. ஆஸ்திரியப் பேரரசு பலம் வாய்ந்ததாக இருந்ததால் அதனைத் தோற்கடிப்பது மிகவும் கடினமான செயல் என்பது தெளிவாகத் தெரிந்தது. பாப்பரசரின் அரசியல் அதிகாரமான திருச்சபை அரசை நீக்குவதற்கு செயற்பட்டால் ஐரோப்பாவிலிருந்த ஏனைய கிறிஸ்தவ அரசுகள் இத்தாலிக்கு எதிராக செயற்படுவதற்கு இடமிருந்தது.

பிளவுபட்டிருந்த இத்தாலிய மக்களிடையே தேசிய உணர்வை ஏற்படுத்தி அதனை ஒன்றிணைக்க முடியும் என்று வழிகாட்டியவன் நெப்போலியன் பொனபாட் ஆவான். ஜோசப் மசினி அதனை செயலில் முன்னெடுத்துச் சென்றதுடன், அதனைத் திட்டமிட்டவர் கவுன்ட் கவூர் ஆவார். கரிபால்டி இதன் பொருட்டுப் படையைத் திரட்டினார்.



இலவச விநியோகத்திற்காக

## நெப்போலியனின் கீழ் இத்தாலி


உரு 11.4 நெப்போலியன் பொனபாட்

நெப்போலியன் கி.பி. 1797 ஆம் ஆண்டு வட இத்தாலியில் லொம்பாடி, ஜெனோவா, நேப்பிள்ஸ் ஆகிய பிரதேசங்களை அங்கிருந்த ஆட்சியாளர்களைத் துரத்தியே கைப்பற்றிக் கொண்டார். கி.பி 1807 ஆம் ஆண்டு பாப்பரசரின் கீழ் இருந்த இத்தாலியப் பிரதேசத்தைப் பெற்று ''வட இத்தாலி'' என்ற அரசை ஆரம்பித்து அதன் அரசனாக முடி சூடிக்கொண்டான். அவனது தலைநகராக மிலான் விளங்கியது. பின்னர் சிசிலிப் பிரதேசத்தையும் இணைத்துக் கொண்டான்.

நெப்போலியன் பொனபாட் இத்தாலிக்கு நெப்போலிய சட்டத்தை அறிமுகம் செய்ததுடன் பிரபுக்களின் அதிகாரத்தை இல்லாதொழித்தான். திறமையானவர்களுக்குப் பதவிகள் வழங்கியதுடன் வீதிகளும் பாலங்களும் அமைத்தான்.

## வியன்னா மகாநாட்டின் பின்னர் இத்தாலி

நெப்போலியன் யுத்தத்தில் தோல்வியடைந்ததுடன் கி.பி 1815 இல் வியன்னா மகாநாட்டின் மூலம் இத்தாலியப் பிரதேசம் மீண்டும் கி.பி 1798 ற்கு முன் ஆட்சி செய்தவர்களுக்கு வழங்கப்பட்டது. அதன்படி உரோமை மையமாகக் கொண்ட மத்திய இத்தாலி பாப்பரசருக்கும் ஏனைய பிரதேசங்கள் அந்தந்த அரச வம்சத்தினருக்கும் கிடைத்தன.

இதன் பின்னர் அதாவது கி.பி. 1815 ஆம் ஆண்டின் பின் ஆஸ்திரியா, ஸ்பானியா ஆகிய நாடுகள் இத்தாலியின் மூலம் பயன் அடைந்தன. இத்தாலிய ஆட்சியாளர் என்று கூறக்கூடியதாக இருந்தது பாப்பரசரும் சார்டீனியா மன்னரும் மாத்திரமேயாவர். நெப்போலியனின் விதவை மனைவியாகிய மேரி லூயியின் கீழிருந்த தஸ்கனிப் பிரதேசத்தில் சிறந்த ஆட்சி நிலவியது. ஆஸ்திரியா தனது பேரரசிற்குத் தேவையான வருமானத்தில் 25% இத்தாலியப் பகுதியிலிருந்தே பெற்றது. ஆட்சியை நடாத்துவதற்குக் கடுமையான சட்டதிட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. சார்டீனியாவின் மன்னன் விக்டர் இம்மானுவேலும் மக்களை இன்னல்களுக்கு உள்ளாக்கிய ஆட்சியாளன் ஆவான்.

## காபொனாரி இயக்கம்

இந்தக் கொடூர அநீதி ஆட்சிகளால் மீண்டும் இத்தாலிய மக்களிடம் தேசிய உணர்வு எழுச்சி பெற்றது. இரகசியமாக இணைவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் பொருட்டு 'காபொனாரி' என்ற இரகசிய இயக்கம் தோற்றம் பெற்றது. அதன் தலைவர் ஜோசப் மசினியாவார். ''கருஞ்சட்டை வீரர்'' என்ற பெயரால் அவர்கள் அறிமுகமாகினர். கி.பி 1825 ஆம் ஆண்டளவில் காபொனாரி

இயக்கத்தை அடக்கி, மசினியைப் பிரான்சிற்கு நாடு கடத்துவதில் ஆஸ்திரிய அரசு வெற்றி கண்டது.

## இளம் இத்தாலி இயக்கம்

கி.பி 1830 ஆம் ஆண்டு மீண்டும் இத்தாலியை இணைப்பதற்குக் குரல் எழுப்பப்பட்ட போதிலும் அது தோற்கடிக்கப்பட்டது. கி.பி 1831 ஆம் ஆண்டு பீட்மண்ட்டில் ஆட்சியதிகாரம் பெற்ற மன்னன் அல்பர்ட் சார்ள்ஸ் அதற்குத் துணையாக இருப்பான் என நம்பிய போதிலும் அது அவ்வாறு நடைபெறாததால் ''இளம் இத்தாலி இயக்கம்'' உருவானது. ''ஒற்றுமையும் சுதந்திரமும்'' அவர்களது தாரக மந்திரமாகும்.

## கவுன்ட் கவூரின் பங்களிப்பு

திறமையான சேனாதிபதியான அவன் இங்கிலாந்தின் பாராளுமன்றத்தை மதித்தான். அவன் கி.பி 1852 ஆம் ஆண்டு இத்தாலியில் பீட்மண்ட் அரசின் பிரதம மந்திரியானான். ''மறு பிறப்பு'' எனும் நூலை எழுதி இத்தாலிய மக்களுக்கு உற்சாக மூட்டிய அவன், பீட்மண்ட் அரசில் புதிய அரசியலமைப்பை ஏற்படுத்தி, பொது வசதிகள், உற்பத்தி என்பனவற்றை அதிகரித்து பீட்மண்ட் அரசை வலுப்படுத்தி இத்தாலிய இணைவிற்கு தலைமைத்துவம் வழங்கும் பொருட்டாகும். அவ்வாறே மூன்றாம் நெப்போலியன் என்ற பிரான்சியப் பேரரசனுடன் புளொம்பியஸ் உடன்படிக்கை செய்து ஆஸ்திரியாவுக்கு எதிராகப் போரை மேற்கொள்ள கவுன்ட் கவூரால் முடியுமாக இருந்த போதிலும், மூன்றாம் நெப்போலியன் திடீரென படை உதவியை நிறுத்திக்கொண்டதால் அந்த முயற்சி தோல்வியடைந்தது. மூன்றாம் நெப்போலியன் அந்தப் போரைக் கைவிட்டது ஆஸ்திரியாவுடன் விலாபிராங்கா என்ற உடன்படிக்கையைச் செய்து கொண்டதினாலாகும்.

## கரிபால்டியின் செயற்பாடு

சவோயில் பிறந்த கரிபால்டி வெளிநாட்டு கெரில்லாப் போரினை மேற்கொண்ட தலைவனாவான். அவன் கி.பி 1860 ஆம் ஆண்டின் பின்னர் தனது செஞ்சட்டை வீரர் 1000 பேருடன் சிசிலிக்குச் சென்று மெசினா நகரைத் தவிர ஏனைய பிரதேசங்களைக் கைப்பற்றினான். அதன் பின்னர் நேப்பிள்சை தன் கீழ் கொண்டு வந்தான். கரிபால்டியின் செல்வாக்குக் காரணமாக மெசினா நகரும் அவனுடன் இணைந்தது. இப்பிரதேசத்தின் தலைமைப் பதவியைக் கரிபால்டி வகித்த போதிலும் அப்பிரதேசங்கள் அனைத்தையும் இரண்டாம் விக்டர் இம்மானுவேலுக்கு வழங்கியமையானது அவனது உயர்ந்த தியாகத்தை வெளிப்படுத்துகிறது. வெனீஸ் ஆஸ்திரியாவின் கீழும், உரோம் பாப்பரசரின் கீழும் இருந்தமை இத்தாலிய ஐக்கியத்துக்குத் தடையாக இருந்தது. ஆதலால் ஜேர்மனியின் பிஸ்மார்க்குடன் உடன்படிக்கை செய்துகொண்டதால் கரிபால்டி ஜேர்மன் - ஆஸ்திரியப் போரில் ஜேர்மனுக்கு உதவி, வெனீசைத்தான் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை எடுத்தான். கி.பி 1870 ஆம் ஆண்டு



இலவச விநியோகத்திற்காக

பிரான்சிற்கும் ஜேர்மனிக்கும் இடையில் போர் மூண்டதால் உரோமில் பாப்பரசருக்கு ஆதரவாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படையைத் திருப்பி அழைக்க வேண்டிய நிலை பிரான்சிற்கு ஏற்பட்டது. அதன் விளைவாகப் பாப்பரசரின் அரசினைப் போரின்றி இத்தாலியுடன் இணைத்துக்கொள்ள முடியும் என்பது தெளிவானதால் பாப்பரசர் தம் விருப்பப்படி உரோமை விட்டு வத்திக்கானில் தன் மாளிகையில் தங்கினார்.

ஐரோப்பிய வரலாற்றைப் பல வழிகளிலும் மாற்றியமைக்க நீண்ட காலமாகப் பங்களிப்புச் செய்த பாப்பரசரின் அரசு இதன் மூலம் முடிவுற்ற போதிலும் பாப்பரசரின் அரசியல் அதிகாரத்தை அடையாளப்படுத்தும் முகமாகப் பாப்பரசர் பதினோராம் பத்திநாதரால் (பியுஸ்) கி.பி 1929 ஆம் ஆண்டு இத்தாலியின் முசோலினியுடன் உடன்படிக்கை செய்யப்பட்டது. இதன்படி ஒன்றரை சதுர மைலைக் கொண்ட தற்கால வத்திக்கான் அரசு அமைக்கப்பட்டது. அது இன்று உலகிலேயே சகல ஆதிக்கமுமுடைய சிறிய அரசாக விளங்குகிறது.

**செயற்பாடு :**

1. *இத்தாலிய ஐக்கியத்தில் முக்கிய கட்டங்களை உமது வகுப்பில் கலந்துரையாடுக*
2. *மசினி, கவூர், கரிபால்டி ஆகியோர் இத்தாலிய ஐக்கியத்திற்கு ஆற்றிய சேவையைப் பற்றிக் கட்டுரை எழுதுக.*
3. *இத்தாலிய ஐக்கியம் தொடர்பான செயற்பாட்டின் அடிப்படை தேசிய வாதக் கொள்கையாகும். கட்டுரை எழுதுக.*

## ஜேர்மனிய ஐக்கியம்

இங்கு நாம் ஜேர்மனிய ஐக்கியத்தின் முக்கிய கட்டங்களை ஆராய்ந்து பார்ப்போம். கி.பி 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜேர்மன் என்ற பெயரில் ஒரு நாடு இருக்கவில்லை. அப் பிரதேசத்தில் ஜேர்மன் மொழி பேசும் மக்களைக் கொண்ட 369 நாடுகள் இருந்தன. அவைகளில் பிரஷ்யா, ஆஸ்திரியா என்பவை முக்கியமானவைகளாகும்.

நெப்போலியன் கி.பி 1805 இல் ஆஸ்திரியாவையும் 1806 இல் பிரஷ்யாவையும் தோற்கடித்துத் தனது அதிகாரத்தைப் பரப்பினான். அவ்வாறே அதுவரை பெயரளவில் ஜேர்மன் பகுதியில் செயற்பட்ட புனித உரோமப் பேரரசை ஒழித்து அவன் கி.பி 1806 இல் பவேரியா, வர்டெம்பர்க், பெமன், டார்ம்ஸ்டாட், சாக்சனி போன்ற 12 பிரதேசங்களை ஒன்றிணைத்து றைன் கூட்டமைப்பினை ஆரம்பித்தான்.

அதன் பின்னர் றைன் கூட்டமைப்பினுள் இருந்த மானிய முறையை நீக்கி, நெப்போலிய சட்டக்கோவையை அறிமுகப்படுத்தினான். மேலும் பொது வரிக் கொள்கையை அறிமுகப்படுத்திய போது அது அந்நாட்டின் வர்த்தக முன்னேற்றத்தில்

தாக்கத்தை ஏற்படுத்தியது. அப் பிரதேசம் நெப்போலியனின் கீழ் வெளிநாட்டு ஆதிக்கத்திற்கு உட்பட்டதால் அதிலிருந்து விடுபடுவதற்கு ஜேர்மன் மக்கள் ஒன்றுபட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது.

நெப்போலியனின் தோல்வியின் பின்னர் வியன்னா மகாநாட்டில் மீண்டும் உரியவர்களுக்கே நாடுகள் கொடுக்கப்பட்ட போதிலும் ஜேர்மன் பிரதேசம் மீண்டும் 39 பிரிவுகளாகப் பிரிந்தது. ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் அவற்றில் பலம் வாய்ந்ததாகத் திகழ்ந்தன. வியன்னா அதிகாரிகளால் அந்த 39 அரசுகளும் ஒன்றிணைக்கப்பட்டு ஜேர்மன் கூட்டமைப்பு ஒன்றை அமைத்தமை ஜேர்மனிய ஐக்கியத்தின் முக்கிய கட்டமாகும்.

ஆஸ்திரியாவின் சான்சலர் பதவி வகித்த மெட்டநிக், தமது பிரதேசங்களில் மக்களிடையே எழுச்சி பெற்ற லிபரல்வாதக் கருத்துக்களைக் கட்டுப்படுத்தியமையும், ஜேர்மன் ஐக்கியத்தில் முக்கியம் பெறுகிறது. அவன் ''கால்ஸ்பாட்'' (Carlsbad Decrees) எனும் ஆணையை ஜேர்மன் கூட்டமைப்பைக்கொண்டு நிறைவேற்றிக் கொண்டான். பின்னர் அப்பிரதேசங்களில் லிபரல் வாதக் கருத்துக்கள் எழுவதைத் தவிர்த்தான். அது ஜேர்மன் ஐக்கியத்தில் முக்கியத்துவம் பெற்றது. மெட்டர்நிக்கின் இந்தத் தடைகள் காரணமாக ஆஸ்திரியாவுக்குப் பணிந்திட ஜேர்மனியப் பகுதிகள் விரும்பவில்லை.

இந்நிலையில் மற்றைய முக்கிய அரசான பிரஷ்யா எழுச்சி பெற்று வந்தது. பிரஷ்யாவில் மானிய அடிமை முறை ஒழிக்கப்பட்டு, மத்திய வகுப்பினரைக் கூடுதலாக நிர்வாகத்தில் பங்கு கொள்ளச் செய்து, விரிவான கல்விக் கொள்கையை செயற்படுத்தியதோடு பலம் வாய்ந்த போர்ப்படை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. கி.பி 1843 இல் பிரஷ்யாவை மையமாகக் கொண்டு ஜேர்மன் பிரதேசத்தில் சொல்வரின் (Zollverein)எனும் தீர்வையற்ற வர்த்தக சங்கம் ஆரம்பமானது. இதனால் வர்த்தகம் வளர்ச்சியடைந்தது. இந்த தீர்வையற்ற வர்த்தக சங்கத்தில் இணைந்த அரசுகளிடம் தீர்வை அறவிடப்படாததால் பல ஜேர்மன் அரசுகள் இதில் சேர்ந்து கொண்டன.

கி.பி 1843 ஆம் ஆண்டாகும்போது தென் ஜேர்மன் அரசுகளிடையே இவ்வாறான சங்கம் ஏற்பட்டது. அதற்கு மேலதிகமாக ஹனோவர், சாக்சன், வடஜேர்மன் அரசுகளிடையேயும் இவ்வாறான சங்கங்கள் தோன்றின. பின்னர் அவை அனைத்தும் சொல்வரின் சங்கத்துடன் இணைந்தன. அரசியல் இணைவு பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாகிறது எனக் கருதப்பட்டமையே இதற்கான காரணமாகும்.


கி.பி 1848 ஆம் ஆண்டில் பிரான்சில் ஏற்பட்ட புரட்சி காரணமாக, ஜேர்மன் பிரதேசங்களிலும் புரட்சியின் நோக்கமாக இருந்தது, ஜேர்மன் கூட்டமைப்பை முடிவுக்கு கொண்டு வந்து ஒன்றிணைந்த ஆட்சியின் பொருட்டு அரசியல் அமைப்பை உருவாக்கிக் கொள்வதன் மூலம் லிபரல் வாத ஆட்சியை ஏற்படுத்துவதாகும். ஆஸ்திரியாவில் மெட்டர்நிக் பதவி விலகி சீர்திருத்தங்களுக்கு இணங்கினான். பிரஷ்யாவிலும் புரட்சி வெற்றியளித்தது.

இதனால் லிபரல்வாத ஐக்கிய ஜேர்மனியின் பொருட்டு தேசிய சபையொன்று அனைத்து ஜேர்மன் அரசுகளினதும் பிரதிநிதிகள் 500 பேரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றதுடன் அது பிராங்பாட் பாராளுமன்றம் எனப்பட்டது. பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், சட்டத்தரணிகள், நீதிபதிகள், குருமார் ஆகியோர் அதில் பிரதிநிதித்துவம் வகித்தனர். ஆஸ்திரியா உட்பட ஜேர்மன் அரசுகள் மகாஜேர்மனி (Great Germany)என அறிமுகமானது. பிரஷ்யா உள்ளடங்கிய பகுதி சிறிய ஜேர்மனி (Little Germany)எனப்பட்டதுடன், சிறிய ஜேர்மனி என்ற எண்ணக்கரு பிராங்பார்ட் பாராளுமன்றத்தில் கலந்துரையாடலில் இடம் பெற்று தடைப்பட்டுப்போனது.



உரு 11.5 பிஸ்மார்க்

இதற்கிடையில் பிரஷ்யாவின் மன்னன் பிரடரிக் வில்லியம் தனது படையை நடாத்திச் சென்று சிறிய ஜேர்மன் அரசைத் தன் ஆட்சியின் கீழ் ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்தான். அதுவும் தோல்வியில் முடிவடைந்தது. இதன் பின்னர் ஒட்டோவான் பிஸ்மார்க் பிரஷ்யாவின் கீழ் ஐக்கிய ஜேர்மனியை நிறுவுதற்கு நடவடிக்கை எடுத்தான். பிரஷ்யாவின் சான்சலர் பதவியில் அமர்ந்த அவன் லிபரல் வாதத்தை அடக்கிப் படையைப் பலப்படுத்தினான். கி.பி 1862இல் போலாந்தில் கிளர்ச்சி ஏற்பட்டபோது பிஸ்மார்க் ரஷ்யா தொடர்பாகப் பின்பற்றிய கொள்கை காரணமாக




தேசப்படம் 11.2 ஜேர்மன் ஒன்றிணைக்கப்படல்

ரஷ்யா, பிரஷ்யாவுடன் கூட்டுச் சேர்ந்தது. டென்மார்க் பகுதியையும் தன்னடிப்படுத்திய பிஸ்மார்க் எதிர்காலத்தில் ஆஸ்திரியாவுடன் யுத்தம் ஏற்பட்டால் அவர்களுக்கு ஏனைய நாடுகளின் உதவி கிடைக்காவண்ணம் பிரான்ஸ் இத்தாலி ஆகிய நாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டான்.

கி.பி 1866 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் ஜுலை மாதம் 3ஆந் திகதி வரை பிரஷ்யாவுக்கும் ஆஸ்திரியாவுக்கும் இடையே நடைபெற்ற யுத்தத்தில் ஆஸ்திரியா தோல்வியடைந்தது. அதன் பின்னர் ஜேர்மன் கூட்டமைப்பைக் கலைத்துப் புதிய கூட்டமைப்பு அரசை அறிமுகம் செய்து அரசியல் முறையையும் முன் வைத்தது. இந்தப் புதிய கூட்டமைப்பின் முக்கிய அமைச்சராக விளங்கியவர் பிஸ்மார்க் ஆவார். பின்னர் அது வட ஜேர்மன் சமஷ்டி கூட்டமைப்பு எனப்பட்டது. அதன் சான்சலராகவும் விளங்கியவர் பிஸ்மார்க் ஆவார்.

ஜேர்மனியை ஐக்கியப்படுத்தும் இறுதிக்கட்டமாக விளங்கியது பவேரியா, வூடெம்பர்க், பேடின் ஆகிய தென் ஜேர்மன் நாடுகளை கூட்டமைப்பில் இணைத்துக் கொண்டமையாகும். இதற்கிடையில் பிரான்சுடன் ஏற்பட்ட யுத்தத்தில் பிஸ்மார்க் வெற்றி பெற்றதால் கி.பி.1871 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆந் திகதி வேர்சேல்ஸ் மாளிகையில் வட ஜேர்மன் கூட்டமைப்பையும் தென் ஜேர்மன் அரசுக்களையும் ஒன்றிணைத்து ஜேர்மன் பேரரசு உருவாக்கப்பட்டது. அத்துடன் ஜேர்மனியினை இணைப்பது தொடர்பான செயற்பாடு முடிவுற்றது.

**செயற்பாடு :**

★ ஜேர்மனை இணைப்பதில் இனவாத, லிபரல்வாத கருத்துக்கள் செயற்பட்ட விதம் பற்றிக் கலந்துரையாடுக.

## பொதுவுடமை வாதமும் ரஷ்யப் புரட்சியும்

### பொதுவுடைமை வாதம்:

செல்வம் தொடர்பாகப் பொது உரிமையை உறுதி செய்து, அனைத்து பிரசைகளும் தமது திறமையை வளர்த்துக் கொள்ளும் பொருட்டு சம அளவிலான சந்தர்ப்பத்தை உறுதி செய்து உற்பத்தியின் பலனை அனைவரிடையேயும் சமமாகப் பங்கீடு செய்யும் பொருளாதார அரசியல் முறையே பொது உடமையாகும்.

### ஏகாதிபத்திய ஆட்சியின் பின்னணி

ரஷ்யாவை மகா பீட்டர் மன்னனும், மகா கத்தரீன் அரசியும் பரந்த, சிறந்த அரசாக உருவாக்கினர். ஆனால் கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் ரஷ்யாவின் சனத்தொகை வளர்ச்சியடைந்ததுடன் பல்வேறு சமய பண்பாட்டு வேறுபாடுகளுடைய மக்கள் கூட்டம் ஒன்று ரஷ்யாவுக்கு உரிமையானது இந்த இரு ஆட்சியாளர்களுக்கும் ஆட்சி

செய்வதற்கு முறையான வேலைத்திட்டம் ஒன்று இருந்த போதிலும், அவர்களது பிற்கால ஆட்சியாளர்களுக்கு அவ்வாறான ஒன்று இருக்கவில்லை.

குறிப்பாக சார் மன்னர்கள் தமது அதிகாரத்தை அதிகரித்துக் கொள்வதற்கு சர்வாதிகார முறையைக் கடைப்பிடித்தனர். மக்கள் பிரபுக்களுக்கு அடிமையானதுடன், பிரபுக்களைப் போன்று ரஷ்ய ஒத்தடொக்ஸ் திருச்சபையும் போர்ப் படையினருக்கும், சார் மன்னர்களுக்கும் பணிந்து நடக்கும் நிறுவனமாக விளங்கியது. 97 % மான கிராம மக்கள் வறுமையில் வாடினர். விவசாயிகள் பல்வேறு அநீதிகளுக்கும், இன்னல்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. வர்த்தகம், கைத்தொழில், வங்கி ஆகிய துறைகளில் ஈடுபட்டோர் பணம் சேகரித்துக் கொண்டு படைகளிலும் நிர்வாகத்திலும் நீதித்துறையிலும் பதவி வகித்தனர்.

மொஸ்கோவை மையமாகக் கொண்டு உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகமும், கைத்தொழிலும் உருவாகின. 19 ஆம் நூற்றாண்டில் ரஷ்யாவில் அவ்வாறான கைத்தொழிற்சாலைகள் 3000 இருந்தன. தொழிலாளர் தொகை 8 இலட்சமாக இருந்தது. தொழிலாளர்களின் உழைப்பு சூறையாடப்படல், ஏழ்மை, சமூக வாழ்வு போன்ற பிரச்சினைகளையும் தொழிலாளர் எதிர்நோக்கினர்.

மகா பீட்டர் மன்னனின் ஆட்சிக்காலம் முதற்கொண்டு ரஷ்யாவில் சமூக பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் முதலாவது இரண்டாவது அலெக்சாண்டர் மன்னர்கள் சுகபோக வாழ்வில் ஈடுபட்டதுடன், அதிகாரிகளிடம் காணப்பட்ட சமகால அறிவு போதாமை காரணமாக அவைகளை செயற்படுத்த முடியாது போயின. எனினும் கி.பி. 1881 மார்ச் மாதம் இரண்டாம் அலெக்சாண்டர் மன்னன் மானிய அடிமை ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் ஒரு கோடி நிலமானிய அடிமைகள் ஐரோப்பாவைப் போன்று மோதல் இன்றி சுதந்திரம் பெற்றனர். கைத்தொழிலின் பொருட்டு ஊழியத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் இது வழியாக அமைந்தது. நிலமானிய அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெற்றோர், விவசாயத்திற்குத் தேவையான நிலம் இன்மையால் கிராமங்களில் விவசாய நிலங்களிலும் நகரங்களிலும் தொழிற்சாலைகளிலும் கூலி வேலை செய்தனர். அரசினால் கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு வரி அறவிடப்பட்டது.

இரண்டாம் அலெக்சாண்டர் மன்னன் கல்வி, சுகாதாரம், புகையிரதப் பாதை போன்ற பொது வசதிகளை உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட பொழுதிலும், அதன்மூலம் அதிக பலன் கிடைக்கவில்லை. இதனால் அவனும் சர்வாதிகார ஆட்சியாளனாகவே விளங்கினான். இதனால் கி.பி 1878 இல் 'கறுப்புப் பிரிவினர்' என்ற குழுவினரின் தாக்குதலால் அரசன் உயிரிழந்தான்.

அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த மூன்றாம் அலெக்சாண்டர், பயங்கர சர்வாதிகாரியாவான். சீர்திருத்தவாதிகளை அகற்றி கடும்போக்காளர்களைப் பதவிகளில் அமர்த்தினான். அரசை விமர்சித்தல் கூட்டங்கள் கூடுதல், கருத்து வெளியிடல் என்பன

தடைசெய்யப்பட்டன. கல்வி தொடர்பான செலவுகள் குறைக்கப்பட்டன. நீதிமன்ற அதிகாரங்கள், பிரதேச நிர்வாக அதிகாரங்கள் என்பன அரசனின் கீழ் கொண்டு வரப்பட்டுப் பிரபுக்களுக்குக் கொடுக்கப்பட்டது.

பின்னர் ஆட்சிக்கு வந்த முதலாம் நிக்லஸ் துன்பத்தை மேலும் தீவிரமாக்கினான். தொழிலாளர் மிகவும் துன்பத்துக்குள்ளாயினர். ரஷ்யாவுக்கு முதலில் பொது உடைமையை அறிமுகப்படுத்தியவர் பெலகானோவ் ஆவார். 'உழைப்பாளர் புரட்சிக் குழு' முதல் மார்க்ஸீய அமைப்பாகும். தொழிலாளரும் பல்கலைக்கழக மாணவரும் இதனை மிகவும் விரும்பினர். விஸிட்மீர் லெனின் இந்தக் குழுவின் அங்கத்தவராக இருந்தார். பருத்தித் தொழிற்சாலைத் தொழிலாளரின் வேலை நிறுத்தத்திற்கு அவர் தலைமை வகித்தார். தொழிலாளர் கட்சியாக ஒழுங்கமைக்கப்பட வேண்டுமென லெனின் சுட்டிக் காட்டினார். டிரொஸ்கி, மார்டொவ் என்போர் லெனினின் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அக்குழுவினர் 'மென்ஸவிக் எனப்பட்டதோடு லெனினின் கருத்தை ஏற்றுக் கொண்ட பெரும்பான்மையினர் போல்ஷவிக் எனப்பட்டனர்.

## 1905 ஆம் ஆண்டுப்புரட்சி

கி.பி 1900 ஆம் ஆண்டளவில் ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் நெருக்கடி ரஷ்யாவிலும் பரவியதால் 3000 தொழிற்சாலைகள் மூடப்பட்டன. விவசாயிகள், தொழிலாளர்கள், இளைஞர்கள் ஆகியோர் பேரரசுக்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். வேலை நிறுத்தும் உச்ச நிலையை அடைந்தது. கருங்கடலில் கடற்படையினரும் கிளர்ச்சியில் இணைந்து கொண்டனர். துருக்கியும், பிரான்சும் ரஷ்யாவுடன் நல்ல மன நிலையில் இருக்கவில்லை. கி.பி. 1905 ஆம் ஆண்டு ஜப்பான் -ரஷ்ய யுத்தத்தில் ரஷ்யா தோல்வியடைந்தமையும் பொது மக்களின் ஆர்ப்பாட்டம் அதிகரிக்கக் காரணமாகியது. மன்னரிடம் சென்ற ஊர்வலமொன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதுடன் டிரொஸ்கி உட்படத் தலைவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டுக் கிளர்ச்சி அடக்கப்பட்டது.




தேசப்படம் 11.3
ரஷ்யாவின் ஆதிக்கப் பரம்பல்

## டூமா தோல்வியுறல்

ஆர்ப்பாட்டத்தில் கேட்டுக்கொண்ட சீர்திருத்தத்திற்கு அமைய முதல் டூமா கி.பி. 1906 ஆம் ஆண்டு பீட்டர்ஸ்பர்க் நகரில் அமைக்கப்பட்டது. வாக்குறுதி முழுமையாக நிறைவேற்றப்படாமையால் போல்ஷவிக் பிரிவினர் பதவி விலகினர்.


இலவச விநியோகத்திற்காக

மீண்டும் கி.பி 1907 ஆம் ஆண்டு இரண்டாம் டூமா அமைக்கப்பட்டதுடன் அவர்களும் தொடர்ந்து பேரரசிற்கு எதிராக இருந்தனர். கி.பி 1912 -1917 வரையிலிருந்த மூன்றாம் டூமாவில் இருந்த பிரதிநிதிகளில் 410 பேரில் 310 பேர் பேரரசுக்கு சார்பான நிலச் சொந்தக்காரராவர். கி.பி 1912 -1917 வரை இருந்த நான்காம் டூமாவும் அவ்வாறே இருந்தது.

## சார் மன்னரின் ஆட்சி வீழ்ச்சியுறல்

கி.பி 1910 ஆம் ஆண்டாகும் போது தொழிலாளர் வேலை நிறுத்தம் மொஸ்கோவில் ஆரம்பமானதுடன் கி.பி 1913 ஆம் ஆண்டாகும் போது 12 இலட்சம் பேர் அதில் இணைந்தனர். முதலாம் உலக யுத்தத்தில் ரஷ்யா சம்மந்தப்பட்டதால் பிரச்சினை மேலும் அதிகரித்தது. உணவு, மருந்து, விவசாயப் பொருட்கள் என்பனவற்றிற்குத் தட்டுப்பாடு நிலவியது. பொருட்களின் விலை அதிகரித்தது. விவசாயிகள் பலவந்தமாக யுத்தத்திற்கு அனுப்பப்பட்டனர். பெண்கள் தொழிற்சாலைகளில் இன்னல்களுக்கு உள்ளாகினர். பாணின் விலை அதிகரித்தது. படையினருக்கு உணவு கிடைக்கவில்லை. இதனால் படையினர் கிளர்ச்சி செய்தனர்.

## 1917 ஆம் ஆண்டு மார்ச் மாதப் புரட்சி:

மக்கள் பாண் கேட்டு வீதியில் இறங்கினர். கலகத்தை அடக்க அனுப்பப்பட்ட படைவீரர் கலகக்காரருடன் இணைந்து கொண்டனர். இதனால் பீட்டர்ஸ் பேர்கில் சார் மன்னரின் ஆட்சிக்கு எதிராக ஆயுதந் தாங்கிய கலவரம் நிகழ்ந்தது. போல்செவிக் குழுவினர் குழப்பத்திற்குத் தலைமை தாங்கி 'சோவியட் சபை'யை நிறுவினர். அவற்றை அவர்களது தற்காலிக அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்து அரசனை முடிதுறக்கும்படி வற்புறுத்தினர். 1917 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆந் திகதி சார் மன்னரின் ஆட்சி முடிவுற்றது.

## 1917 ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சி

தற்காலிக அரசு தொடர்ந்தும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்ததுடன் பிரச்சினை மேலும் வலுவடைந்தது. லெனினும் ட்ரொஸ்கியும் இணைந்து நிலம், அமைதி, இனம், நிர்வாகம் தொடர்பாக அறிக்கையை வெளியிட்டுத் தொழிலாளரின் கிளர்ச்சிக்குத் தலைமை வகித்தனர். கி.பி. 1917 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் புகையிரதம், சுரங்கம், உலோகம், புடைவை ஆகிய தொழிற்சாலைகளில் வேலை செய்த 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்தக் கிளர்ச்சிகளுக்குத் தலைமைத்துவம் அளித்து, சோவியட் சபைகளில் தலைமைத்துவம் வகித்து, போல்ஷவிக் பிரிவினர் அன்றைய தினமே மாளிகையைச் சூழ்ந்து பீரங்கித் தாக்குதல் நடத்தினர். அன்றைய இரவில் சோவியட் தேசிய காங்கிரஸ் கூடி, லெனினின் பொதுமக்களின் ஆணையாளர் சபைக்கு அதிகாரத்தைக் கொடுத்து புரட்சியை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வந்தது.

இவ்வாறு நடைபெற்ற ரஷ்யப் புரட்சியால் பொதுவுடமைவாதம் செயல் ரீதியாக இடம் பெறலாயிற்று. அதிகமானோருக்கு நன்மை தரக்கூடிய உற்பத்தி முறையில் அமைந்த அரசியல், பொருளாதார அமைப்பு உருவானது.

**சாராம்சம்**

★ பிரான்சியப் புரட்சியின் மூலம் மானிடவாதக் கருத்துக்கள் சிறப்புற வழி ஏற்பட்டது.
★ தேசிய வாதக் கருத்துக்களால் இத்தாலி ஐக்கியம் அடைந்தது
★ லிபரல் வாதம், தேசியவாதம் என்பனவற்றால் ஜேர்மனி ஐக்கியம் அடைந்தது.
★ ரஷ்யப் புரட்சியில் பொதுவுடமை வாதத்தைக் காணக் கூடியதாக இருந்தது.

**செயற்பாடு :**

★ ரஷ்யப் புரட்சிக்கான காரணங்களைக் கலந்துரையாடுக

**பயிற்சி :**

01. சுருக்கமான விடை எழுதுக

(i) பிரான்சியப் புரட்சியை முன்னெடுத்துச் சென்றோர் யாவர்?
(ii) பிரான்சியப் புரட்சிக்கு வழிவகுத்த காரணங்கள் 3 எழுதுக?
(iii) இத்தாலிய ஐக்கியத்திற்கு முன்னின்று செயற்பட்ட மூவரைக் குறிப்பிடுக?
(iv) இத்தாலிய ஐக்கியத்தின் மூலம் ஒன்றிணைந்த 4 பிரதேசங்களைக் குறிப்பிடுக?
(v) பழைய ஜேர்மன் பிரதேசங்களில் ஆரம்பத்தில் எத்தனை முடியாட்சிகள் இருந்தன?


இலவச விநியோகத்திற்காக

(vi) ஜேர்மன் பிரதேசத்தில் இருந்த இரு பிரதான அரசுகளைத் தருக?

(vii) ரஷ்யப் புரட்சிக்கு வழிவகுத்த காரணங்கள் 5 எழுதுக?

(viii) போல்ஷவிக், மென்ஸவிக் என்போர் யாவர்?

**மிகவும் பொருத்தமான விடைகளைத் தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1) 16 ஆம் லூயி மன்னனின் மனைவி | 1) காபொனாரி இயக்கம் |
| 2 ) பிரான்சிய நடுத்தரவர்க்க மக்கள் | 2) பீட்மன்ட் அரசின் பிரதமர் |
| 3) கரிபால்டி | 3) ஆஸ்திரியாவின் சான்சலர் |
| 4) ஜோசப் மசினி | 4) பொல்ஷவிக் கட்சி |
| 5) கவுன்ட் கவூர் | 5) டெனிஸ் மைதானத்தில் உறுதியுரை |
| 6) மெட்டர்நிக் | 6) பிரஷ்யாவின் சான்சலர் பதவி |
| 7) லெனின் | 7) முதன்முதல் ரஷ்யாவில் பொதுவுடமையை அறிமுகம் செய்தனர். |
| 8) பிஸ்மார்க | 8) மேரி அன்டடோயினட் அரசி |
| 9) நெப்போலியன் பொனபாட் | 9) பிரான்சின் ஆதிக்கம் ஐரோப்பாவில் பரவுதல் |
| 10 பெலகானொவ் | 10) செஞ்சட்டை வீரர் |

## வரலாறு பாடத்திட்டம்
## 10ஆம் தரம்

பாட உள்ளடக்கம்

10.1 வரலாற்றுக்கு ஓர் அறிமுகம்

10.1.1 வரலாறு என்றால் என்ன?

10.1.2 வரலாற்றைக் கற்பதன் அனுகூலங்கள்

10.1.3 வரலாற்று மூலாதாரங்கள் * இலக்கிய மூலாதாரங்கள்
- உள்நாட்டு
- வெளிநாட்டு இலக்கியங்கள்

* தொல்பொருள் ஆதாரங்கள்
- நாணயங்கள்
- கல்வெட்டுக்கள்
- சிதைவுகள்

10.2 இந்தியாவின் வரலாற்று ரீதியான வளர்ச்சி

10.2.1 இந்தியாவின் ஆரியக் குடியேற்றங்கள்

10.2.2 பதினாறு பெருந்தேசங்கள் (மஹா ஜனபதங்கள்)

10.2.3 மௌரியப் பேரரசு

10.2.4 குப்தப் பேரரசு

10.3 வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து பொன்னறுவைக்கால இறுதிவரை இலங்கையின் வரலாறு

10.3.1 வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
* வரலாற்றுக்கு முற்பட்ட இடங்களை இனங்காணல்
* வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் வாழ்க்கைக் கோலம்

10.3.2 ஆரியக் குடியேற்றங்கள்
* விஜயனின் கதைகள் * குடியேற்றங்களின் பரவல்
* ஆரியர்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார முறைமைகள்

10.3.3 பொலனறுவை இராச்சியத்தின் இறுதிவரை அரசியல் வரலாறு
* ஆட்சியை நிலை நிறுத்தல் * அரசர்கள்
* பண்டுகாயன், தேவநம்பிய தீசன், எல்லாளன், துட்டகைமுனு, இரண்டாம் அக்போ, நான்காம் மஹிந்தன் ஐந்தாம் மஹிந்தன், மகா பராக்கிரமபாகு, நிஸ்ஸங்க மல்லன் தென்னிந்திய ஆக்கிரமிப்பு.

10.4 நீர்வள நாகரீகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்

10.4.1 நீர்ப்பாசன முறையும் தொழினுட்பமும்
* ஆரம்பமும் வளர்ச்சியும் * சிறிய குளங்கள் முதல் பாரிய குளங்கள் வரை
* குளங்களும் கால்வாய்த் தொகுதிகளும் * நீரியல் தொழில்நுட்பம் - குளத்தின் பிரதான கூறுகள்
* கால்வாய் தொடர்பான தொழினுட்பம்

10.4.2 நிர்வாக ஒழுங்கமைப்பு
* மத்திய ஆட்சி * உள்ளூராட்சி

10.4.3 பொருளாதாரக் கோலங்கள்
விவசாயம் கைத்தொழில் வர்த்தகம்

10.4.4 சமயமும் கலாசாரமும்
பௌத்தம் - அரசனும் சமயமும்
- பௌத்த கோட்பாடுகள்

இந்து சமயம் ஏனைய சமயங்கள், கலாசாரம், சமுதாய வாழ்க்கை, கலையும் கட்டட நிர்மாணமும், கல்வி, இலக்கியம்

10.4.5 வெளிநாடுகளுடனான தொடர்புகள்
* இராஜதந்திர உறவு * கலாசார உறவு

10.4.6 நீர்வள நாகரீகத்தின் வீழ்ச்சி

10.5 13 ஆம் நூற்றாண்டிலிருந்து 15 ஆம் நூற்றாண்டின் இறுதி வரை இலங்கை

10.5.1 அரசியல் வரலாறு

10.5.2 பொருளாதார மாற்றங்கள்

10.5.3 சமுதாய மாற்றங்கள்

10.5.4 சமய, இலக்கிய, கலை, கட்டடக்கலை

10.6 மத்திய கால ஆசியா

10.6.1 இஸ்லாமிய சமயத்தின் பரவலும் இந்தியாவில் அதன் தாக்கமும்

* வடமேல் மற்றும் மேற்கு இந்தியா * டில்லி சுல்தான் சாம்ராஜ்யம் * மோகலாய பேரரசு
* தக்கணத்தில் பகமன் அரச * விஜய நகரப் பேரரசு

10.6.2 ஆசியாவின் பௌத்த இந்து சமயங்களின் செல்வாக்கு

* மத்திய ஆசியா * சீனா * பர்மா (மியன்மார்) * சீயம் (தாய்லாந்து) * ஜாவா சுமாத்திரா
* கம்போடியா (கம்பூச்சியா)

10.6.3 இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான தொடர்புகள்

10.7 மத்திய கால ஐரோப்பாவின் அரசியல், பொருளாதார, கலாசார வளர்ச்சி

10.7.1 நில மானிய முறை

10.7.2 சிலுவை யுத்தமும் வர்த்தக விருத்தியும்

10.7.3 மறுமலர்ச்சி

10.7.4 ஐரோப்பிய தேசிய அரசுகள்

10.7.5 நாடுகாண் பயணங்கள்

10.7.6 மதச்சீர்திருத்தம்

10.8 ஐரோப்பியரின் ஆதிக்கப் பரம்பல்

10.8.1 ஸ்பானியா, போர்த்துக்கல், ஒல்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ். பெல்ஜியம், டென்மார்க்

10.8.2 கிறிஸ்தவ சமயத்தின் பரவல்

* றோமன் கத்தோலிக்க சமயம் புரட்டஸ்தாந்து * சமயம்

10.9 இலங்கையரும் மேற்கத்தியரும்.

10.9.1 கோட்டை, யாழ்ப்பாணம், சீதாவாக்கை, இராச்சியங்களுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையிலான தொடர்புகள்

10.9.2 கண்டி இராச்சியத்திற்கும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயருக்கு மிடையிலான தொடர்புகள்

10.10 கைத்தொழிற் புரட்சி

10.10.1 ஆரம்பமும் வளர்ச்சியும்

10.10.2 புதிய கண்டு பிடிப்புக்கள்

10.10.3 விளைவுகள்

* அரசியல் * பொருளாதாரம் * சமூகம்

10.11 ஐரோப்பாவின் புதிய அரசியல் சிந்தனையில் ஏற்பட்ட வளர்ச்சி

10.11.1 மானுட வாதம்

* பிரான்சியப் புரட்சி

10.11.2 தேசிய வாதம், தாராண்மை வாதம்

* இத்தாலிய ஐக்கிய இயக்கம் * ஜேர்மனிய ஐக்கிய இயக்கம்

10.11.3 சமவுடமை வாதம்

* இரஷ்யப் புரட்சி

# සිංහල වර්ණ මාලාව

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අ | ආ | ඇ | ඈ | ඉ | ඊ |
| උ | ඌ | ඍ | ඎ | ඏ | ඐ |
| එ | ඒ | ඓ | ඔ | ඕ | ඖ |
| (අ)ං | (අ)ඃ | | | | |
| ක | ඛ | ග | ඝ | ඞ | ඟ |
| ච | ඡ | ජ | ඣ | ඦ | ඤ |
| ට | ඨ | ඩ | ඪ | ණ | ඬ |
| ත | ථ | ද | ධ | න | ඳ |
| ප | ඵ | බ | භ | ම | ඹ |
| ය | ර | ල | ව | | |
| ශ | ෂ | ස | හ | ළ | ෆ |



ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
**கவிதையின் பெயர்ப்பு**

ඉතිහාසය 10 වන ශ්‍රේණිය (දෙමළ) 2014/T/10/205/76,000